
லக்ஷ்மி
உயர்வு
Anand...
பூங்கொடி பதிப்பகம்

# நூல் விவரப்பட்டியல்


நூலின் பெயர் : உயர்வு

நூலாசிரியர் :"லக்ஷ்மி"

நூல் வகை : நாவல்

வெளியிட்ட ஆண்டு : முதற்பதிப்பு : டிசம்பர், 1986
இரண்டாம் பதிப்பு: ஏப்ரல் 1989
மூன்றாம் பதிப்பு: ஜூன் 1994
நான்காம் பதிப்பு: ஜூன் 2002
ஐந்தாம் பதிப்பு: செப்டம்பர் 2009

நூல் உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

பக்கங்கள் : 208

அச்செழுத்து : 11.5 புள்ளிகள்

தாள் : 10.9 வெள்ளைத் தாள்

வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு
மயிலாப்பூர், சென்னை–600 004.

ஒளி அச்சுக் கோர்வை : எலிசா லேசர்
அச்சிட்டோர் : அமர் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை–5

விலை : ரூ.80.00


## பொருளடக்கம்


உயர்வு .... 3

மோகனா, மோகனா ... ... .... 75

# உயர்வு

# 1

"காலையில் இருந்து சாப்பிடாம கெடந்தா எபபடி? நீ பெரியவ சமாளிப்பே. பள்ளிக்கூடம் போவுதே, பச்சபுள்ளே அதை நினைச்சுப் பாத்தியா?" என்று அஞ்சலை அதட்டிய குரலில் கூறிக்கொண்டே உள்ளே வந்தாள்.

கிரிஜாவின் துயரம் தோய்ந்த முகம், அந்த அறுபது வயதுக் கிழவியை ஒரு கணம் நிலைகுலையச் செய்து விட்டது. அந்தப் பகுதியில் வாழ்பவர்கள் அனைவருமே கீழ் மட்டத்துவாசிகள். வாழ்வின் மேடுபள்ளங்களில் விழுந்து அனுபவப்பட்டவர்கள். வறுமை, துன்பம், பசி, பட்டினி என்பதெல்லாம் அவர்களது அன்றாட நிகழ்ச்சிகள். சண்டை, சச்சரவு, எல்லாமே சகஜமான விஷயங்கள். ஆனால் இந்தப் பெண் கிரிஜா...?ஒரு தடவை பெருமூச்சு விட்டாள் அஞ்சலை.

குறைந்த வாடகைக்கு என்று அந்த குடியிருப்புப் பகுதிக்கு கிரிஜாவின் கணவன் தினகரன் வந்தான். முதன் முதலில், அந்தத் தம்பதியினரையும், அவர்களது பெண் குழந்தை அரசியையும் பார்த்தபோது, அஞ்சலை அதிசயித்துப் போனாள்.

மூக்கும், விழியுமா செல்வச் சீமான் வீட்டுப் பெண்போல இருந்தாள் கிரிஜா. வரிசையாக மின்னிய பற்கள் - அகன்ற விழிகள் - கருகருவென்ற கூந்தல்–சுத்தமான அலங்காரம். மேனி முழுவதும் ஒரு பளபளப்பு. குழந்தை அரசியும் அம்மாவையே சாயலில் உரித்துக் கொண்டு வந்திருந்தாள்.

தினகரன் கறுப்பு நிறம்தான். ஆனால் நறுக்கு மீசையும் நல்ல உடற்கட்டுமாகப் பார்க்க வெகு 'டீக்' காகத் தோன்றினான். ஏதோ ஆபீஸில் வேலை என்றும் கூறினான். பக்கத்து வீட்டிலே இளம் தம்பதியர் என்று உற்சாகமாக இருந்தாள் அஞ்சலை. வயதாகிப் பிறந்த மகனை கண்ணும் கருத்துமாக அவள் வளர்த்தபோது, அவன் சொல்லாமல் ஒருநாள் ஓடிப் போனான். கணவனும் மித மிஞ்சிய குடியினால் இறந்து போன தும், அஞ்சலை தனி மரமாக அலுப்புடன் நாட்களை ஓட்டினாள். இட்டிலிக் கடை ஒன்றை அவர்கள் வீட்டு வாயிற்புரம் திறந்து வைத்திருந்தாள். வாழ்வில் ஏதோ ஒரு விதமாக வயிற்றைக் கழுவ வேண்டும் என்றிருந்த சமயம், கிரிஜா அங்கே வந்து சேர்ந்தாள்.

அஞ்சலையின் உடலில் இளமை புகுந்து கொண்ட வேகம். கிரிஜாவிற்கு ஓடிச்சென்று உதவினாள்.

முதன் முதல் அவள் சுடச்சுட இட்டிலிகளையும் சட்டினியையும் சுமந்து கொண்டு பக்கத்து வீட்டில் நுழைந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"ஏம்மா பொண்ணு! காலையில் 'நாஷ்டா' பண்ற தில்லையா? குழந்தைக்குப் பசிக்குமே?" என்றபடி உரிமையுடன் உள்ளே நுழைந்து இரண்டு அலுமி னியத் தட்டில் அவற்றைப் பரிமாறினாள்.

"இதுக்கு எவ்வளவும்மா?" என்று கிரிஜா மெல்லக் கேட்டாள்.

"துட்டா? நல்லாக் கேட்டியே கேள்வி? வாடிக்கையா வாங்கித் துன்ற பயலுகளே பணம் குடுக்கறதில்லே! இது, நீங்க புதுசா வந்ததுக்கு!" என்று தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தாள் அஞ்சலை.

அந்த சம்பவத்திற்குப்பிறகு அடிக்கடி அஞ்சலை யின் பலகாரக் கடையிலிருந்து இடியாப்பம், தோசை, ஊத்தப்பம், இட்டிலி என்று பெற்றுக்கொண்டு

தினகரன் குடும்பம் பசியாறியது. ஒரு சில சமயங்களில் பணத்தட்டுப்பாடும் ஏற்படுவது வாடிக்கையாயிற்று. கிழவி, ஏனோ அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. உள்ளூர அவளுக்கு கிரிஜா மீது ஒரு பற்று மிகுந்த எண்ணம் விழுந்து விட்டது.

'எந்த பணக்கார வீட்டு மவராசியோ, பாத்தாலே நல்லா வசதியா வளர்ந்த பொண்ணாட்டம் இருக்குது!' என்று நினைப்பாள். மனதினுள் அவளையுமறியாத சந்தேகம் அலைமோதியது.

ஒருநாள், நடு இரவில் கிரிஜாவின் அழுகையும் குழந்தையின் அலறலும் கேட்டு அஞ்சலை பதை பதைத்துப் போனாள். தினகரின் கோபமான குரல் மட்டும் அவளுக்குக் கேட்டது. ஆனால், கிழவிக்குச் சிறிது காது மட்டம், என்ன நடந்தது என்பதை மறுநாள் ஊகிக்க முயன்றாள்.

'பாவிப்பயல்' நல்லா குடிச்சுப்புட்டு வந்து இந்தப் பொண்ணை அடிச்சிருக்கான்! என்று அவள் மனம் ஆத்திரத்தால் குமுறியது.

"ஏம்மா! நெத்தியில் என்ன காயம்?" என்று கேட்டாள் அஞ்சலை. கிரிஜா ஒரு கணம் தடுமாறி விட்டு, "அதுவா பாட்டி? கீழே விழுந்திட்டேன்! ஆமாம்; கீழே விழுந்திட்டேன்...." என்றாள்.

"நீயெல்லாம் பெரிய வீட்டுல இருக்க வேண்டிய பொண்ணு. இந்த மாதிரி சின்ன எடத்துல வந்து உக்காந்தா அப்பிடித்தான்" என்றாள் அஞ்சலை.

"என்ன சொல்றீங்க பாட்டி?" -கிரிஜாவின் சிவந்த விழிகள் பயத்துடன் பார்த்தன.

அஞ்சலை பெருமூச்சு விட்டபடி, ஒண்ணுமில்லேம்மா பாத்து நடக்கணும்னு சொன்னேன்!" என்றாள்.

ஆரம்பத்தில் சந்தோஷமாக இருந்தது போலக் காணப்பட்ட குடித்தனத்தில், நாளாவட்டத்தில் சண்டையும் சச்சரவும் பெருகி இருப்பதை அஞ்சலையால் உணர முடிந்தது. அவர்கள் வாழும் பகுதியில் புருஷன் பெண்சாதி சண்டையும், குடித்துவிட்டு நடக்கும் சர்ச்சைகளும் சகஜம்தான். இருந்தாலும் கிரிஜாவைப் போன்ற அழகான தோகைமயிலைப் போன்ற பெண்ணுக்கு அதே வாழ்க்கை என்றால்... அஞ்சலை பரிதவித்துப் போனாள்.

தினகரின் வேஷம் முழுமையாகக் கலைந்த சமயம் கூட கிரிஜா தன் துயரத்தைக் கிழவியிடம் பங்கிட்டுக் கொள்ளவில்லை.

"ஏம்மா, இந்த மனுசன் இந்த அடி அடிக்கிறானே, உன்னைப் பார்த்தா படிச்சபொண்ணாட்டம் தெரியுது. உனக்கு அப்பா-அம்மா யாராச்சும் இருந்தா ஒரு கடுதாசி எழுதிக்குடு நான் தபால்ல சேத்திட்டு வரேன்" என்று கூறிப் பாகாய் கரைந்தாள் அஞ்சலை.

கண்ணீர் வழிய கிரிஜா அமர்ந்திருந்தாள். அத்தனை துயரிலும் அவள் தன்னைப்பற்றி எதையுமே சொல்ல முன்வராதது கிழவிக்கு வியப்பையே அளித்தது.

"ஏம்மா, இந்த மாதிரி எடத்துல, பொண்ணையும் வச்சுகிட்டு திண்டாடிக்கிட்டு இருக்கணும். இதெல்லாம் ஒரு மாதிரி மனுஷங்க நடமாடற எடம். பேசாம வேற வீடு பாத்துக்கிட்டுப் போயிடும்மா!" -எச்சரித்தாள் அஞ்சலை!

நாளுக்கு நாள் தினகரின் அட்டகாசம் அதிகரிக்கத் தலைப்பட்டது. ஒருநாள் மிதமிஞ்சிய குடியால்

வீட்டின் வாயிற்படியில் வந்து விழுந்தவன் எழுந்திராமல் அப்படியே அடங்கிப் போனான்.

"பாவி மனுஷா! தேவதைபோல பெண்டாட்டி. அவளை இம்சை செய்துகிட்டே இருந்தியே, இப்ப உன்னை எமலோகத்தில இம்சை பண்ணுவாண்டா பாவி" என்று அஞ்சலை உள்ளூர இறந்தவனை சபித்தாள்.

இளம் வயது விதவைக் கோலத்திலும் அழிக்க முடியாத எழில். கிரிஜாவைப் பார்க்கப் பார்க்க அவள் வயிற்றில் சங்கடம் புரண்டது.

தினகரன் மரணம், கிரிஜாவிற்கு ஒரு வகையில் விடுதலை. என்றாலும் மறுபுறம் வேறு தொல்லைகளும் ஆரம்பித்து விட்டிருந்தன.

"அம்மா, பள்ளிக்கூடத்திலே ஃபீஸ் கட்டணும்னு சொல்லிட்டாங்க"-குழந்தை அரசி தாயிடம் முறையிட்டபடி அழுதாள்.

"அழாதே கண்ணு, ஃபீஸ் கட்டிடலாம்!" என்று மகளை வாரி அணைத்துக் கண்ணீரைத் துடைத்தாள். நெஞ்சினுள் துயர் கவ்வ, இனி என்ன செய்வது?" என்ற பிரமையால் அப்படியே உறைந்து போனாள்.

"இத பாரும்மா, உன்னைத்தான் சொல்றேன். அந்த குழந்தை அம்மாந் தொலைவு போகணும். பள்ளிக்கூடம் போகணும்னா பசியோடவா போக முடியும்?" -அஞ்சலை அதட்டிவிட்டு, அருகே வந்து அமர்ந்தாள்.

பழைய நினைவுகளிலே மூழ்கிக் கொண்டிருந்த கிரிஜா, வறட்சியாக கிழவியிடம் முறுவலிக்க முயன்றாள்.

"பாட்டி! என்னால் உங்களுக்கு ரொம்பத் தொல்லை!"

"அக்கம் பக்கத்திலே இருக்கோம். ஒருத்தருக்

கொருத்தர் உதவணும். எனக்கும் யார் இருக்காங்க? அனாதைக் கிழவி!" -குரல் தழுதழுத்தது.

"என்னைப் போல....." -கிரிஜா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"கடையை ஆரம்பிக்கணும். நீ நடந்ததை நினைச்சுக்கிட்டு அழாம இரு, என்னமோ அந்த மனுஷன் உடம்பைக் கவனிச்சுக்கிட்டு ஒழுங்கா இருந்திருக்கலாம். ஹூம்! உன் போதாத காலம்...!" மேலே பேசப் பிடிக்காதவளாய் கிழவி எழுந்தாள்.

கிரிஜா, அரசியின் கையைப் பிடித்துக் கொண்டு உள்பக்கம் சென்றாள். அஞ்சலை, அன்புடன் கொணர்ந்து சமையலறை தரைமீது வைத்திருந்த இட்டிலிப் பொட்டலங்களைப் பிரித்தாள். அஞ்சலை யின் மனம் இளகியதுதான். ஆனால் அவள் செய்யும் இட்டிலிகள் பாறாங்கல் போல இறுகி இருந்தன. ஒருவேளை அவளது வாடிக்கையாளர் சிலர் 'ரவுடி'த் தனம் செய்தால் அடிப்பதற்காகக் கூட இருக்கலாம். அரசி ஒரு துண்டு இட்டிலியைச் சட்டினியில் தோய்த்து வாயில் போட்டவள். "போதும்மா, எனக்குப் பசிக்கலே" என்று சாப்பிட மறுத்தாள்.

பக்கத்திலிருந்த பள்ளிக்கூடத்தை நாடாமல் சற்றுத் தொலைவில் உள்ள கான்வெண்ட் பள்ளியில் மகளை சேர்த்திருந்தாள் கிரிஜா. மாதச் சம்பளம் சீருடை என்ற பல பிரச்சினைகளையும் தாண்டி அரசி நல்ல மதிப்பெண்களுடன் தாண்டி வந்து கொண்டிருந்தாள்.

கடந்த சில மாதங்களாகவே கிரிஜா மிக்க சிரமத் துடன் வாழ் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தாள். அடிக்கடி வேலையை விடுவது தினகரனுக்குப் பழக்கமான விஷயம். ஏதாவது காரணம் கூறி சண்டை பிடித்துக் கொண்டு வேலையை உதறி விடுவது வழக்கம். இந்த அழகில் குடிப்பழக்கம் வேறு.

கிரிஜா மெல்ல எழுந்து சென்று, அந்த கண்ணாடி மரப் பீரோவைத் திறந்தாள். குழந்தையின் ஒருசில உடைகள், அவளது இரு பட்டுச் சேலைகள், மற்றபடி பீரோ வெறுமையாகக் காட்சியளித்தது. கையை விட்டு வேகமாகத் துழாவினாள். ஊஹூம்! ஏதாவது இருந்தால்தானே கிடைப்பதற்கு. நகைப் பெட்டியில் ஆபத்துக்கு பயந்து ஒரு அரைப் பவுன் மோதிரம் அவளைப் பயத்துடன் பார்த்தது.

"நானே வந்து ஃபீஸ் கட்டிடறேண்டா கண்ணு, நீ போ"-மகளைத் தூக்கி கன்னத்தோடு சேர்த்து முத்தம் கொடுத்தாள் கிரிஜா. கண்களில் நீர் முட்டியது. மகளைப் பள்ளிக்கு அனுப்ப வெளியே வந்தவள் கண்ணில் அஞ்சலையின் பலகாரக் கடை தென்பட்டது.

"ஸ்கூலுக்குக் கிளம்பிட்டுதா பாப்பா?" -கிழவி அரசிக்கு திருஷ்டி சுற்றி விரல்களை சொடுக்கினாள். கிரிஜா தயங்கி நிற்பதைக் கண்டவள், "என்னம்மா தாயி? என்னா விஷயம்?" என்று கேட்டாள்.

"எனக்குக் கொஞ்சம் அவசரமா பணம் தேவை பாட்டி." தயக்கத்துடனும், ஏக்கத்துடனும் அவளைப் பார்த்தபடி ஆரம்பித்தாள் கிரிஜா.

"எத்தனை நாளைக்கி இப்படி தவிக்கப் போறேம்மா?" -சலிப்புடன் கேட்டாள் அஞ்சலை, கிரிஜாவின் மீது வைத்திருந்த அபிமானத்தால், அந்தக் கிழவி தன் கையிருப்புகளை பெரும்பாலும் கரைத்து விட்டிருந்தாள். அதற்கு மேல்...?

எங்கிட்ட ஒரு மோதிரம் இருக்குது. அதை வித்தா கொஞ்சம் பணம் கிடைக்கும்.

அஞ்சலை சட்டெனக் கூறினாள். "இத பாரு கிரிஜா! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இதை நான் எடுத்திட்டு விக்கப் போனா, எல்லாரும்

சந்தேகப்படுவாங்க. உன்னைப் போல பொண்ணு போனா, அதை சாதாரணமா நினைச்சுக்குவாங்க. நல்லா யோசிச்சுப் பாரு" என்றபோது கிரிஜா மவுனமாக ஒப்புக் கொண்டாள்.

வெளியே எரிக்கும் வெயில். அதைப் பொருட்படுத்தாது, கிரிஜா தெருவில் இறங்கினாள். கோட்டூர்புரத்தின் சமீபத்தில்தான் அவர்களது குடியிருப்புப் பகுதி. பஸ் நிலையத்திற்கு பொடி நடையாகப் போய் நின்றுவிட்டால் போதும்.

எதிரே கண்களைக் கூசியபடி கடந்து சென்ற படகுக் காரைப் பார்த்ததும் அவளது நினைவுகள் பழைய சம்பவத்தில் ஆழ்ந்தன. மனதை இழுத்துப் பிடித்தபடி பஸ் நிலையத்திற்கு வந்தாள். தோளிலிருந்த பையிலிருந்து முன்னதாக சில்லரையை எண்ணி, உள்ளங்கையில் அழுத்திப் பிடித்தபடி எதிர்பக்கம் கண்களை ஓடவிட்டாள்.

'ஸ்போர்ட்ஸ்வேர்' -பெரிய கொட்டை எழுத்துக்களில் காணப்பட்ட கடைப்பலகை அவள் கண்களை உறுத்திற்று. சற்றுமுன் அவளைத் தாண்டிச் சென்ற படகுக்கார், அந்தக் கடை வாயிலில் நின்றது. சீருடை அணிந்த டிரைவர், காரின் கதவைத் திறந்து வழிவிட, இளமங்கை ஒருத்தி அதிலிருந்து துள்ளிக் குதித்துக் கொண்டு இறங்கினாள், கிரிஜா மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தாள்.....

# 2

**அ**ன்று நடந்தது.....

மவுண்ட் ரோட்டில் பிரபலமான 'ஸ்போர்ட்ஸ் ஷாப்பிங் ஸ்டோர்ஸ்' கிரிஜா காரிலிருந்து துள்ளியபடி இறங்கினாள்.

"நான் போய் வாங்கிட்டு வந்திடறேன். டென்னிஸ் பந்து தானேம்மா?" என்று கேட்டான் டிரைவர்.

கிரிஜாவிற்குக் குழந்தை முதலே ஒரு பிடிவாத குணம் இருந்து வந்தது. அவள் நினைத்த காரியத்தை அவளே தான் செய்ய வேண்டும். பிறரைக் கொண்டு செய்ய விரும்பியதில்லை.

"நானே வாங்கிட்டு வந்திடறேன்" பதிலுக்குக் கூடக் காத்திராமல், அழகுப் பையுடன் வேகமாக இறங்கினாள். பாண்ட், ஷர்ட் சகிதம், தோளில் புரண்ட கூந்தலுடன் நின்ற அவளை பிரமிப்புடன் பார்த்தான் அந்த வாலிபன்.

"எஸ் மேடம்."

"எனக்கு நல்ல டென்னிஸ் பந்துகள் தேவை." கண்ணை மறைத்த கருப்புக் கண்ணாடியைக் கழற்றியபடி அவனை அலட்சியமாகப் பார்த்தாள் கிரிஜா.

'அழகான கண்கள். பெரிய இடத்துப் பெண்' -அந்த வாலிபன் மனதில் கணக்கிட்டபடி, பந்துகள் அடங்கிய பெட்டியை எடுத்து பில் போடத் தொடங்கினான்.

'பில்'லுக்குப் பணத்தை எடுத்து அசட்டையாக நீட்டி விட்டு பெட்டியுடன் வேகமாகச் சென்று காரில் எறிக் கொண்டு விட்டாள் கிரிஜா.

"மேடம்... மேடம்!" -கத்தியபடியே பின்னால் ஓடி வந்தவனின் குரலை அந்தக் காரின் ஓசை விழுங்கிக் கொண்டு புறப்பட்டது.

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள பங்களாவிற்குள் கார் விரைந்ததும்தான் கிரிஜா விற்குத் திடீரென ஞாபகம் வந்தது.

"ஓ காட்! சில்லரை வாங்காம வந்திட்டேன். டிரைவர் காரைத் திருப்பு!"

"என்னம்மா குழந்தே? உங்களுக்குக் கடைக்குப் போய் பழக்கமா, அதனால்தான் நானே போறேன்னு சொன்னேன். கேட்டீங்களா..." என்று அலுத்தபடி டிரைவர் வண்டியைத் திருப்பினான்.

"நீங்க வருவீங்கன்னு தெரியும் மேடம்." -கன்னங்குழியச் சிரித்தான், அந்த வாலிபன்.

"எப்படி?" என்று கிரிஜா சுவாரஸ்யத்துடன் கேட்டாள்.

"நான் பாக்கிப் பணத்தை எண்ணிக் குடுக்க வர்ற சமயம், மறந்து போய் புறப்பட்டீங்க. பின்னாலேயே நானும் ஓடி வந்தேன்."

"இப்ப நானே திருப்பி ஓடி வந்திட்டேன்" என்று சில்லரையைப் பெற்றுக் கொண்டபடி லேசாகச் சிரித்தாள் கிரிஜா.

"நீங்க ஓடி வர்றத்துக்கும் நான் வர்றதுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கே!" -குறும்பாகச் சிரித்தான் அவன்.

கிரிஜா வியப்புடன் அவனைப் பார்த்தாள். வரிசைப் பற்கள் தெரிய "நீங்க கார்ல ஓடிவரீங்க. நான் நடராஜா சர்வீஸ்ல ஓடிவருவேன்" என்றான்.

"களுக்"கென்று சிரிப்பை உதிர்த்துவிட்டு, "தாங்ஸ்" என்றபடி விடைபெற்றாள் கிரிஜா.

அதுதான் தினகரனை அவள் முதன் முதலாகச் சந்திக்க நேர்ந்த கதை. அதன் பிறகு ஏனோ அவள் பல காரணங்களை சாக்காக வைத்துக் கொண்டு பலமுறை அந்தக் கடைக்கு விஜயம் செய்தாள்.

கல்லூரியில் கடைசி வருடப் படிப்பு விளையாட்டுப் போட்டிகளில் அவளுக்கு அலாதி

விருப்பம் உண்டு. அவள் தங்கை நளினி இவளுக்கு நேர் எதிரான குணம் கொண்டவள். வீட்டில் அப்பாவும், அம்மாவும் சொன்ன பேச்சை அப்படியே கேட்கும் செல்லக் குழந்தை. சமையல் கலையில் அசாத்தியமான ஆர்வம் காட்டியதால் அவள் 'குடும்பவியல்' பட்டப்படிப்பில் சேர்ந்து விட்டிருந்தாள்.

"சமைக்கறதும், சாப்பிடறதும்தான் இருக்கவே இருக்குது. இதை காலேஜ்லே வேற போய் படிக்கணுமா? ஸ்டுப்பிட்" என்று கடிந்து கொள்வாள் கிரிஜா.

"எப்படியும் அப்பா-அம்மா நம்மளை ஒருத்தன் தலையில கட்டத்தான் போறாங்க. அதுக்குப் போயி உன்னாட்டம், டைப்பிங் கிளாஸ், ஷார்ட் ஹேண்ட் கிளாஸ், டென்னிஸ், பாட்மிண்டன்னு அலைவானேன்? நாளைக்கு சமையலறையில் இதையா நீ விளையாடப் போறே?" என்று அக்காவிற்கு அழகுகாட்டி விடுவாள் நளினி.

அவள் கிரிஜாவைவிட வயதில் சிறியவளானாலும், உலக நடப்பை அறிந்திருந்தாள். அதனால்தான் தாய் தந்தையின் அன்பான அரவணைப்பிற்குள்ளே, சொகுசாக வளைய வருகிறாள்.

பிடிவாதமும், முன்கோபமும் அவளுக்குத் தந்தையிடமிருந்து வந்த குணம். 'ராஜ் எக்ஸ் போர்ட்ஸ்' என்ற நிறுவனத்தின் முதலாளி செல்வராஜ் சுயமுயற்சியால் முன்னுக்கு வந்தவர். அவரது தொழிற்சாலையில் உருவான எலெக்ட்ரானிக் உபகரணங்கள் மலேஷியா, சிங்கப்பூர் என்று கிழக்கு நாடுகள் முதல் அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளிலும் வியாபார ரீதியாக வேரூன்றிக் கொண்டன.

அண்ணன் நந்தகுமார் வீட்டின் ஏக புதல்வன். என்ஜினீயரிங் படிப்பிற்குப் பிறகு, அமெரிக்காவில் ஒரு சில வருடங்கள் தங்கி நீண்டதொரு வாலைப் போல மேலும் பட்டங்களை ஒட்ட வைத்துக் கொண்டு திரும்பிய இளைஞன். தந்தையின் தொழிற் சாலை நிர்வாகத்தில் அவனும் பங்கேற்றிருந்தான்.

அம்மா பத்மாவதிதான் இத்தகைய பங்களா, கார்கள் ஆட்படைகள் ஆகிய அந்தஸ்தில் ஒட்டாத ஜீவன். "நாம் ஒரு காலத்தில் சாதாரணமா இருந் தோம்கிறதை மறக்கக்கூடாது" என்று கூறும் அம்மா வை நினைத்தபோது அவளுக்கு என்னவோ செய்தது.

தன் காதலனைப் பற்றி முதன் முதலாக அம்மாவிடம் வெளியிட்டபோது அவள் எப்படித் துடித்துப்போனாள். "வேண்டாம் கிரிஜா! இது உனக்கு நல்லதில்லே. அப்பாவுக்கும் அண்ணனுக்கும் தெரிஞ்சா வெட்டிப் போட்டிருவாங்கம்மா! வேணாம் அவன் நம்ம சாதிப் பையன் இல்லேங்கறே. தாழ்ந்த குலம்னு அவனே ஒப்புக் கொள்றதா வேறே சொல்றே. அப்பா, அம்மா யாருமில்லாத பையன்! உனக்கு இந்த சம்பந்தம் வேணாம்மா!" என்று கண்களில் கண்ணீர் பெருக ரகசியமாக மகளிடம் மன்றாடினாள்.

கிரிஜா அசைந்து கொடுக்கவில்லை. இளமையின் இனிய கனவுகளில் அவள் திளைத்துக் கொண்டிருந்தாள். அவள் மனத்தைக் கவர்ந்த தினகரனை, ஒருநாள் காணாவிட்டாலும் அவள் பதைத்துப் போவாள்.

அவனது கடையில் விளையாட்டுப் பந்தயங்களுக் காக சாமான்கள் வாங்குவதுபோல பல முறை விஜயம் செய்தாள். எனினும் மனம்விட்டு பேச முடியாமல் இருவரும் மருகிப் போனார்கள்.

அவள்தான் கடைசியாக ஒரு வழி கண்டு பிடித்தாள்.

"தினகர்! பீச்சுக்குப் போகலாமா? இங்கே சதா யாராச்சும் வந்துகிட்டே இருக்காங்க. என்ன சொல்றே" என்று கேட்டு விட்டாள். தான் பெரிய மனிதர் வீட்டுப் பெண் என்ற துணிவு அவளுக்கு.

ஆரம்பத்தில் அவனுக்கு அவளை நெருங்கவே ஒரு தயக்கம் இருந்தது. பிறகு, கடற்கரை, சினிமா என்று வளர்ந்து நெருக்கமானதும் துணிவு பிறந்துவிட்டது.

"என்னைப்பத்தி நீ எந்த விவரமும் கேக்கலையே கிரி!" என்றான் கொஞ்சலாக.

"ஐ லைக் யூ. அது போதும் எனக்கு!" என்று அழுத்தமாகப் பதிலிறுத்தாள் கிரிஜா.

ஒருமுறை கடற்கரை சாலையில் அவனுடன் நடந்து போகும் போதுதான் நந்தகுமார் அவர்களைப் பார்த்துவிட்டான். வீடு திரும்பியதும் அவள் முன் கோபாவேசமாய் நின்றான் அண்ணன்.

"யார் அந்த காலிப்பயல்? அவன் கூட உனக்கென்ன பேச்சு?"

நல்ல வேளையாக அது சமயம் அவள் தந்தை வெளிநாட்டு வியாபாரப் பயணத்திற்காகப் புறப்பட்டுப் போயிருந்தார். இல்லையேல் விஷயமே விபரீதமாகி இருக்கும்.

"ஏன் குமார்? எனக்கு அவனைப் பிடிச்சிருக்கு. அதனாலே பேசறேன்!"-கர்வமாகப் பதிலளித்த தங்கையை உறுத்து விழித்தான் அண்ணன்.

"பேஷ்! அந்தப் பொறுக்கிப் பயலோட ஊர் சுத்த உனக்கு வெட்கமாயில்லே? நம்ம மதிப்பு என்ன? வெறும் கடை எடுபிடி ஆள் அவன்" -உறுமியபடி கிரிஜாவை ஆத்திரத்துடன் நெருங்கினான் அவன்.

"அண்ணா! இது என்ன சொந்த விஷயம். இதில்

தலையிட உனக்கு எந்த உரிமையும் கிடையாது. தெரிஞ்சுக்கோ!"-அவள் பதிலுக்குச் சீறினாள்.

"எது சொந்த விஷயம்? குடிகெடுக்கற கோடாலிக் காம்பே! உனக்காக அப்பா எங்கேயெல்லாம் மாப்பிள்ளை தேடிக் கிட்டிருக்கார்? நீ இப்படித் திரிஞ்சு கொண்டிருந்தா எவன் கட்டுவான்?"

"மாப்பிள்ளையா? எனக்கா?ஹ்ூம்!அந்தக் கவலையே வேணாம். நீ பாத்தியே, அந்த தினகரனைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ளப் போறேன்!"

சமையற்கட்டிலிருந்து ஓடிவந்த நளினி அதிர்ந்து போய் நின்றாள். பூஜையறைக்குள் விளக்கேற்றிக் கொண்டிருந்த பத்மாவதி தூக்கி வாரிப்போட வெளியே வந்து நின்றாள். நல்ல வேளையாக அது சமயம் வீட்டில் வேலையாட்கள் எவரும் இருக்கவில்லை.

"கேட்டீங்களா! உங்க அருமை மகள் சொன்னதை? அந்த சாதி கெட்ட பயலைத்தான் கட்டிக்கிடப்போறாளாம். கூப்பிட்டு வச்சு ஆரத்தி சுத்துங்கோ!" கண்ணும் மூக்கும் சிவந்து போக வார்த்தைகளைக் கக்கினான் நந்தகுமார்.

"அப்பா வரட்டும் அப்போ பேசிக்கலாம். அதுவரை உன் ஆட்ட பாட்டம் எதுவும் செல்லாது. நினைப்பில வச்சுக்கோ!" அடிக்குரலில் மிரட்டினான் அண்ணன்.

"நீ என்ன செய்தாலும் எங்களைப் பிரிக்க முடியாது-எனக்கு அவர் அவருக்கு நான்!"-பதிலுக்கு தோளைக் குலுக்கிவிட்டு வேகமாக அவளது அறைக்குள் சென்றாள். அடுத்த கணம் கட்டிலில் விழுந்து 'ஹோ'வென அழத்தான் அவளால் முடிந்தது....

# 3

**ப**ழைய நினைவுகளிலிருந்து மீண்டாள் கிரிஜா.

அன்றைக்கு அண்ணனிடம் விட்ட சவாலில் அவள் தோற்றுத்தான் போனாள். இப்போது மரணதேவன் அவர்களை மனக்கசப்போடல்லவா பிரித்து விட்டான்! பஸ் 'கீரீச்' சென்ற ஒலியுடன் நின்றது. கிரிஜா தன்னை சமாளித்துக் கொண்டு, பஸ்ஸினுள் ஏறினாள்.

மவுண்ட் ரோடில் புதிதாக முளைத்தெழுந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் அந்த நகைக் கடை இருந்தது. பலமுறை அவளது நகைகள் அங்குதான் நோட்டுக்களாக மாறி அழிந்து போயின. இப்போது அரசியின் பள்ளிக்கூடச் செலவிற்கு அந்த மோதிரம் பலனளிக்கும்.

வெல்வெட் திண்டின் மீது சாய்ந்திருந்த கடை முதலாளி, அவளைக் கண்டதும், 'வாங்கம்மா, உக்காருங்க' என்று உபசரித்தார்!

கல் போன்ற தங்க நகைகளை அடி விலையில் அவளிடம் வாங்கிய சந்தோஷம் அவருக்கு. "வேற கடைகளுக்குப் போனா சேதாரம், அது இதுன்னு தள்ளிடுவாங்கம்மா. நான் அப்படி இல்லே, அதிலயும் தங்க வியாபாரத்தில் எங்களைப் போல வியாபாரி களுக்கு அநேக தொல்லைங்க. அதனாலதான் கறாரா சொல்லிட்டேன். இவ்வளவுதான் குடுக்க முடியும். இல்லாட்டி நீங்க வேற எடத்துல பார்த்துக் கொள்ளுங்கோ" என்பார்.

கிரிஜாவிற்கு வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்ல பயம் மட்டுமல்ல, அவமானமும்கூட, பிரபலமான நகைக்கடை முத்திரையைக் கண்டு அவளையும்

யாரேனும் இனம் கண்டு கொண்டு விட்டால்.....? இந்தக் கடைக்காரர் புதியவராகத் தென்பட்டார். புது ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் பேசாமல் பேரத்தை முடித்துக் கொண்டாள். பலமுறை அவளைப் பார்த்து அவருக்குப் பழக்கமாகி விட்டிருந்தது.

"உக்காருங்க. இந்த வாட்டி என்ன?"-அருகிலிருந்த நாற்காலியை சுட்டிக் காட்டியவர், அவள் கைப்பையிலிருந்து எடுத்து வைத்த சிகப்புக் காகிதப் பொட்டலத்தைப் பிரித்தார்.

சுற்றுமுற்றும் ஒருமுறை கவனித்தாள் கிரிஜா. பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். நெற்றி மீது துளிர்த்த வேர்வையைச் சேலைத் தலைப்பால் ஒத்தியபடி அவரைப் பார்த்தாள்.

"சின்ன மோதிரம்தான். பெரிசா எதையும் எடுத்திட்டு வரலே."

அருகில் இருந்த கண்ணாடிக் கூண்டுக்குள் தராசு ஒன்று அவளைப் பார்த்து சிரிப்பது போலிருந்தது. 'பெரிசா என்ன பாக்கி வச்சிருக்கே, எடுத்துக் கொண்டு வருவதற்கு?' என்று கேலி செய்வது போலத் தோன்றியது கிரிஜாவிற்கு.

தராசில் லாவகமாக எடை போட்டுவிட்டு, மதிப்பு போட்ட முதலாளி, "ரொம்பத் தேறாதே? அரைப் பவுன்கூட இல்லே...ம்!"என்றபடிஅவளைப் பார்த்தார்.

தலையைக் குனிந்து கொண்ட கிரிஜா, "என்ன கணக்கோ அதைக்குடுங்கோ" என்றாள் முணுமுணுப்பாக.

நான்கு நூறு ரூபாய் நோட்டுக்களும், கொஞ்சம் சில்லரையுமாக கிடைத்த பணத்தை தோள் பைக்குள் இறுக்கிக் கொண்டு புறப்பட்டாள் கிரிஜா.

'இது அரசியின் பள்ளிக்கூடத் தேவைக்குப்

போதுமானது. இனி என்ன வழி....?' -தடுமாற்றத்துடன் வெளியே நடந்தவளுக்கு வாழ்க்கையே ஒரு கேள்விக்குறியாகப் பயமுறுத்தியது.

இது அவளாகத் தேடிக் கொண்ட அவல வாழ்வு. யானை தன் தலையிலேயே மண்ணை அள்ளிப் போட்டுக்கிறாப்போல செய்திடாதே கிரிஜா. நல்லா யோசிச்சுப் பாரு. அம்மா அவளை எவ்வளவு கெஞ்சினாள்? அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள்? அவள் ஏற்கவில்லையே?

மீண்டும் பழைய ஞாபகம் அலை புரண்டது.

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு அவளைக் கண்காணிப்பில் வைத்திருந்தார்கள். 'இவளை வெளியே எங்கேயும் விடாதீங்கம்மா. காலேஜ் போகணும்னா நான் கொண்டுவிட்டு கூட்டி வரேன். அப்பா வந்த பிறகு இதுக்கு ஒரு முடிவு கட்டலாம்' -திட்டவட்டமான முடிவு எடுத்தான் நந்தகுமார்.

மனமே காவலாக இல்லாதபோது மற்றவை காவலாகிவிடுமா? கிரிஜா தன் ஆத்திரத்தையும், படபடப்பையும் அடக்கிக் கொண்டாள். அதிகமாக எதையாவது முயன்றால் அவளை அறைக்குள்ளே வைத்துப் பூட்டி வைக்கவும் அண்ணன் தயங்கமாட்டான் என்பது அவளுக்குத் தெரியும்.

சொன்னபடி கேட்கும் பெண்ணாக அவள் சில நாட்கள் நடந்து கொண்டாள். டைப்ரெட்டிங் இன்ஸ்டிடியூட்டிலும் கடற்கரையிலும் காத்துச் சலித்துப் போன தினகரன் மனம் சலித்துப் போனான். கைக்கெட்டினது வாய்க்கெட்டாது போய்விட்டது போலும் என்ற எண்ணம் அவனைச் சலிப்படையச் செய்திருக்க வேண்டும்.

கல்லூரி வகுப்பிலிருந்து இடைவேளை நேரத்தில் கிரிஜா அதிசாமர்த்தியமாக தினகரனது கடையருகில்

வந்து சேர்ந்தாள். பல நாட்களுக்குப் பின் அவளைக் கண்ட ஆனந்தத்திலே அருகில் இருந்த குளிர்பானக் கடையருகில் இருவரும் சந்தித்தனர்.

"நான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். பணம், பதவி எதுவும் இல்லாதவன்னு நம்ம காதலை உதாசீனம் செய்யறாங்களா? கிரி" என்று தினகரன் குழைவுடன் கேட்டான்.

கண்களில் நீர் பனிக்க, தினகர்! "என் மனசில ஒருத்தனுக்குத்தான் இடம். அப்படி நம்ம கல்யாணம் நடக்காட்டி நான்..." என்று விசும்பினாள்.

இலேசாக அவள் கண்களைத் துடைத்துவிட்டு, "இத பாரு கிரி. 'ஜாதிகள் இல்லையடி பாப்பா'ன்னு பாடிவச்சிட்டு பாரதியார் போய்ட்டார். ஆனா நிச்சயமா அதை வாழ்ந்து காட்டுவோம்; இப்ப சொல்லு, உனக்கு மனசில உறுதி இருக்கா? துணிச்சல் இருக்கா....ம். சொல்லு" என்று தூண்டி விட்டான்.

உலகமே அவன்தான் என்று எண்ணியிருந்தவள் கிரிஜா. பணம், அந்தஸ்த்து யாவுமே காதல் என்ற புனிதமான அன்புக்கு முன் தூசுக்குச் சமம் என்ற உயர்ந்த உணர்வு அவளை உந்தியது. உணர்ச்சி அவள் அறிவைச் சூறையாடிவிட்டது. அப்பா மனம் வைத்தால் தினகரனை உயர்ந்த பதவியில் வைத்து மருமகனாக்கிக் கொள்ள முடியாதா? ஜாதி தான் பெரிது என்றால்...?அவள் மனம் ஒரு கணம் பயத்தால் சில்லிட்டது.

அப்பா செல்வராஜ் மகளிடம் மிகுந்த பாசம் வைத்திருப்பவர். அதே சமயம், அவருக்குப் பழைய கொள்கைகள் மீது பிடிப்பு அதிகம். சஷ்டி விரதம் இருப்பவர். ஆழ்வார்கள், நாயன்மார்கள் சரித்திரங்கள் எல்லாம் அவருக்கு மனப்பாடம்.

பன்னிரு திருமுறைகளை அப்படியே ஒப்புவிப்பவர்.

பொங்கல், கார்த்திகை என்று பண்டிகை நாட்களில் அவரே பூஜையறையில் அமர்ந்து மணிக்கணக்காக பூஜை செய்வார். 'ராஜ் எக்ஸ்போர்ட்ஸ்' நிறுவனத்திற்கு புறப்படும் சமயம் மட்டுமே அவர் கோட்டும் ஷூட்டுமாகக் காட்சி யளிப்பார்.

அவரது அத்யந்த நண்பர் சிவசாமிகூட அப்பாவை அடிக்கடி பரிகசிப்பதுண்டு "ஏம்ப்பா ராஜூ,நீ இன்னமும் பழைய தலைமுறையிலேயே இருக்கே, நினைச்சா ஏரோப்ளேன்ல வெளியூருக்குப் பறக்கறே. ஒண்ணு தெரியுமா, கடல் கடந்துட்டா, பழய நாள்ளே பிராயசித்தம்னு ஒண்ணு செய்வா...."

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடுன்னு பழய காலத்திலயே தமிழன் செஞ்சுகிட்டிருந்தான். ஆனா, உன் பழக்கவழக்கத்தை உதறித் தள்ள வேணாம்னு சொல்லி வச்சிருந்தாங்க. எனக்கென்ன, மீனும், கறியுமா சாப்பிடப் போறேன். ரெண்டு வேளை ரொட்டியிலேயே காலத்தைத் தள்ளிவிட்டுத் திரும்பிடுவேன்."-அப்பா பதிலுக்கு சிரிப்பார்.

அவர் பிரபலமானவர் என்பதால் ஒருமுறை கலப்புத் திருமணம் ஒன்றிற்கு உதவி கேட்டு ஒருத்தர் வந்தார். 'ஏன்யா! உங்க உறவிலே பெண்ணே கெடக்கலியா?" அப்பா கேட்டார் கிண்டலாக.

வந்தவர் மென்று விழுங்கிவிட்டு, "அவங்க ரொம்ப ஏழை. அதனால என் மகன் கட்டிக்கிறதா கூறிட்டு வந்திட்டான். கல்யாணத்தை எடுத்து நடத்த எனக்கு வசதி இல்லே. நாலு எடத்தில உதவி கேட்டு..."

"அவனவன் குடும்பத்திலயே எத்தனையோ ஏழைப் பொண்ணுங்க இருக்குதே. முதல்லே அதுகளை கரையேத்தும். உதவி செய்யறேன். இப்படி இன்

னொரு ஜாதி மேல் உம் மகனுக்கு அக்கறை இருக்குன்னா, அது சீர்திருத்தம் இல்லேய்யா. சுயநலம். பயலுக்கு அவ மேல மோகம் பிறந்திட்டுது. தயவு செயது போய்விட்டுவாரும். இது மாதிரி விஷயங்கள்ளே நான் உதவறதா இல்லே!" கடுமையாகக் கூறி முடித்து விட்டார்.

அப்பாவுடைய, அப்பா கனகசெல்வம் பெரிய ஆசாரசீலராக வாழ்ந்து மடிந்ததாக அப்பா அடிக்கடி பெருமையடித்துக் கொள்வார். "எங்கப்பா சஷ்டி விரதம் இருந்தா ஒரு பொட்டுத் தண்ணி கூட வாயில் ஊத்தமாட்டார். கடும் விரதம் இருப்பார். இத்தனைக்கும் பிரபலமான வக்கீல் அவர், அன்னைக்கின்னு ப்பாத்து பெரிய கேஸ் இருக்கும். பூஜையை முடிச்சுட்டு, பட்டை பட்டையா விபூதியும் நெத்தியுமா டர்பன், கோட்டு சகிதம் கோர்ட்டுக்குப் போய் வாதிப்பார். பிள்ளையார் பூஜைன்னா கேட்கவே வேணாம். வீட்ல எல்லோருமே விரதம் அனுஷ்டிச்சாகணும். பரம்பரை பரம்பரையா மரக்கறி சாப்பிடற வம்சம் எங்களுடையது" என்று பெருமைப் பட்டுக் கொள்வார்.

எத்தனை ஆபீஸ் விருந்துகள் வைத்தாலும் அவர் சாப்பிடுவது ஒரு விஜிடேபிள் கட்லட், ஒரு குளிர்பானம்-அவ்வளவுதான்!

"ஸப்பாரி ஸூட் போடறீங்கப்பா. மனசுல இப்படி ஒரு பிற்போக்கான குணம் உங்களுக்கு. பூஜை, பாராயணம்னு வேட்டியும் சட்டையுமா அலையறீங்க?"-ஒருமுறை கிரிஜா கிண்டினாள்.

"நான்வெஜிடேரியனா இருக்கற வெள்ளைக் காரங்களே நம்மளைப் பார்த்து வெறும் மரக்கறி சாப்பிடப் பாக்கறான். நம்ம வேட்டி, சட்டை எல்லாம் போடறான். இது என் பண்பாடு. இதில்

என்ன தவறு?- ஆபீஸ் வேலைக்கு ஸுட் வேஷம். இதுதான் என் உண்மை உருவம்." கழுத்தில் தரித்த தங்கச்சங்கிலி மீது உருண்டையாகத் தொங்கும் இரு ருத்திராட்சன் ஆட அப்பா சிரிப்பார். அவரைத் தன் வழிக்குக் கொண்டு வருவது என்பது அத்தனை சுலப மான செயல்அல்ல. கிரிஜா உள்ளூரநடுக்கம் கொண் டிருந்தாள். இருப்பினும் காதல் தந்த போதையில் அவள் வெகுவாகக் கிறங்கிப் போயிருந்தாள்.

"யாரும்மா இந்த வெயில்ல.....கிரிஜா!-நீயா? நீ....கிரி....!"-வியப்புடன் வந்த குரலைக் கேட்டு கிரிஜா சட்டென சுயநினைவுக்குத் திரும்பினாள். சிவசாமி மாமா! நெடுஞ்சாலையின் போக்குவரத்துக்களுக் கிடையே புகுந்து ஓடிவிடலாமா என்ற ஆத்திரம் அவளுக்கு ஆவேசமாக வந்தது.

"நில்லும்மா, எல்லாத்துக்கும் அவசரப்பட்டா எப்படி? சிவப்பு விளக்கு மறைஞ்சு பச்சை விளக்கு வந்திருக்கு. காரும், பஸ்ஸுமா ஓடும்போது குறுக்கே போகாதே"-பின்னால் நெருங்கி வந்தவர் அவளை அடிக்குரலில் அதட்டினார்.

அவள் உடல் முழுவதும் அவமானத்தால் குறுகிப் போயிற்று. அப்பாவுடைய அத்யந்த நண்பர், அவர்கள் குடும்ப நலன் கருதுபவர். அவரிடம் கூட கிரிஜா எத்தனை முறை எதிர்த்துப் பேசி வாயாடி இருக்கிறாள்.

"அந்தப் பையனை நீ மறந்துடணும் கிரிஜா! நான் அடிக்கடி உங்க ரெண்டு பேரையும் பாக்கறேன். உங்கப்பனுக்குத் தெரிஞ்சா ஆபத்தும்மா!"

"மாமா! நானும் தினகரும் ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கிறோம். எங்களோட அன்பு, ஜாதி மத பேதத் தைக் கடந்தது. அப்பா ஊரிலிருந்து வந்ததும்

கேட்பேன்."

"அவன் நிச்சயமாக இதை ஒப்புக் கொள்ள மாட்டான்"-சிவசாமி ஆணித்தரமாகப் பதில் கூறினார்.

எத்தகைய புத்திமதியும் அவள் காதுகளில் ஏறவில்லை. அவள் மனம், மூச்சு, தூக்கம் யாவற்றிலும் அவனே நிறைந்திருந்தான். இயல்பான பிடிவாத குணமும் உடன் சேர்ந்து கொண்டது.

"என்னம்மா....எங்கே இந்த பக்கம்?"-நெடுஞ்சாலையின் சிவப்பு விளக்கு பளீரிட்டதும் அவளுடன் நடந்தார் சிவசாமி. பல வருடங்களுக்குப் பிறகு அவரைக் கண்டதும் அவளுக்கு அழுகை வந்தது.

"சுகமா இருக்கியாம்மா? ஏன் முகமெல்லாம் வாடிப் போய்-இதென்னம்மா கிரிஜா! கால் செருப்பு கிழிஞ்சு கெடக்குது. இந்த வெயில்ல எப்படி நடந்து வந்தே?"-சிவசாமியின் குரல் கரகரத்தது. கண்ணீரை அடக்கமுயன்றவளாய், எதிரே நின்று கொண்டிருந்த வாகனங்களைப் பார்த்தாள் கிரிஜா.

"உங்கம்மா உன்னைப் பாத்தா இப்ப எப்படி கலங்கிப் போவா தெரியுமா? ஏம்மா கார்லயே போய் சொகுசா இருந்த பொண்ணு-உனக்கு-அதிலயும் என் ஆத்மதோழன் பொண்ணு-உனக்கா இப்படி ஒரு நிலை"-உணர்ச்சியால் அவர் கண் கலங்கினார்.

"மாமா! நான் ஒரு பாவி மாமா-வாழ்க்கையிலே கீழ விழுந்துட்ட பாவி மாமா....ப்ளீஸ்! என்னைப் போகவிடுங்க!" என்று குமுறலுடன் பாய்ந்து செல்ல முயன்றாள் கிரிஜா.

சிவசாமி அவளை மெல்லத் தொட்டு நிறுத்தினார். "அசடே! நடுரோட்டில் அழக்கூடாது. எங்கூடவா, காரை அந்தப் பக்கம் நிறுத்தி இருக்கேன்," நெட்டித் தள்ளாத குறையாக, அவளைக் கடத்திக்கொண்டு

எதிர்பக்கம் இருந்த தமது காரின் அருகில் சென்றார்.

"முதல்ல கார்ல ஏறு. உன் வீட்டுல கொண்டு விட்டுடறேன்"-வற்புறுத்தி உள்ளே அமரச் செய்தார்.

"ப்ளீஸ்! வேண்டாம் மாமா. நீங்க என்னை இப்பிடியே விட்டுடுங்க." வீறிட்டு அழுதபடி காரினுள் அமர்ந்தாள் கிரிஜா.

அவளது அழுகை அடங்கட்டும் எனச் சிறிது நேரம் பேசாமல் இருந்தார், சிவசாமி. சிறு குழந்தை போலத் தேம்பியழுத அவளைப் பரிதாபமாகப் பார்க்க மட்டுமே அவரால் முடிந்தது.

"கிரிஜா! அழறதினால எந்த பிரச்சினைக்கும் முடிவுகட்டிட முடியாது. நீ ரொம்ப கெட்டிக்காரி. துணிச்சல் இருக்கிறவள்னு கணக்குப் போட்டேனே, இப்ப சின்னக் குழந்தையைவிட மோசமா இருக்கியே" என்றார் சிறிது அதட்டலாக.

கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தாள் கிரிஜா. "மாமா நீங்க அன்னைக்குப் பார்த்த கிரிஜா செத்துப் போயிட்டா. இன்னைக்கி பார்க்கற கிரிஜா—வெறும்—"அழுகை குலுங்க வாயைப் பொத்திக் கொண்டாள் மீண்டும்.

சிவசாமி பெருமூச்செறிந்து விட்டு, "இத்தனை வருசமா நடந்தது என்ன? நீ எங்கே இருக்கே? எல்லாம் சொல்லு, பிறகு நீ பழைய கிரிஜாவா, புது கிரிஜாவான்னு சொல்றேன்" என்றார் நிதானமாக.

கிரிஜாவின் துயரமான நிலையைக் கேட்டு உறைந்து போனவராய் இருந்தார் அவர். எப்படி இருந்த பெண்? புள்ளிமானைப் போலத் துள்ளித் திரிந்து கொண்டிருந்தவள். பணம் வசதி எல்லாம் இருந்தது. அவளுக்குப் படிப்பு, தகுதி இருந்தும், நினைத்ததை அடைய முடியும் நிலை இருந்தும், கீழே

விழுந்துவிட்ட ஓவியம் போல.....ஏன் இந்தக் கீழான நிலை? அவர் மனதினுள் ஆயிரம் எண்ணங்கள் கரை புரண்டன.

# 4

செல்வராஜ் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்ததும் உடனே கிரிஜாவின் காதல் விவகாரத்தை எடுத்துப்போட, எவருக்கும் துணிவிருக்கவில்லை. அலுவலக விஷயத்தில் மும்முரமாகப் போய் வந்தவரிடம் பத்மாவதியும் வாய் திறக்கவில்லை.

தங்கையின் வாழ்க்கையை சீர் செய்துவிட வேண்டும் என்ற துடிப்பு நந்தகுமாருக்கு. அவன் மட்டும் நாலா புறமும், நல்ல மாப்பிள்ளைகளை வேட்டையாடிக் கொண்டிருந்தான்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து, திரும்பியவர் கண்களில் அந்தக் காட்சி தென்பட்டது. மவுண்ட்ரோடு ஸ்போர்ட்ஸ் கடையருகே, அவசரமாக காரை நிறுத்திவிட்டு, எதிர்ப்பக்கமிருந்த புத்தகக் கடைக்குள் நுழைய விரும்பி இறங்கினார்.

கடை வாயிலில், கிரிஜாவும் அந்தப் பையனும்– மிக நெருக்கமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். ஒரு வினாடி சந்தேகம் தீருவதற்குத் திரும்பிப் பார்த்த வர் கண்கள் கோபத்துடன் சிவந்தன. ஏனோ அவருக் குத் தினகரை ஆரம்பம் முதலே பிடிக்கவில்லை.

மறுகணம் அவசரமாக காரைக் கிளப்பிக் கொண்டு நேரே பங்களாவிற்குச் சென்றுவிட்டார்.

மாலையில் வீடு திரும்பிய மகளுக்குப் பயங்கர மான வரவேற்பு காத்திருந்தது. “அப்பா உன்னை முதல்ல மாடிக்கு வரச் சொன்னாரும்மா!”

-பத்மாவதி சிறிது பயம் கலந்த குரலில் மகளை எச்சரித்தாள்.

என்னவாக இருக்கும்? சற்றுக் கிலியுடன் அப்பாவின் அறைக்குள் சென்றவளைப் பயம் பிடித்துக் கொண்டது.

அப்பா, கட்டிலின் மீது கவலையும், கோபமுமாக அமர்ந்திருந்தார். வழக்கம் போல சிரிப்பும் கலகலப்பும் அவரிடம் காணப்படவில்லை.

"அப்பா"-கிரிஜா ஆரம்பிக்குமுன் அவளை ஒரு முறை முறைத்தார்.

"யார் அந்தப் பயல்?"

கிரிஜாவின் தொண்டைக்குள் கிலி அடைத்துக் கொண்டு விட்டது. அண்ணனையும், அம்மாவையும் தூக்கி எறிந்து துணிச்சலுடன் பேசியது போல, அப்பாவிடம் எதிர்க்க முடியவில்லையே.

அவளது அருகில் வந்தவர் அவளைப் பலமாகத் தோளைப் பிடித்து உலுக்கி "யார் அந்த பொறுக்கிப் பையன்? எத்தனை நாளா உனக்கு அவன் சிநேகிதம். சொல்லு.....ம். சொல்லு....."-அதட்டினார் கோபமாக.

கிரிஜா உரத்த குரலில் அழ ஆரம்பித்தாள். அது சமயம் சிவசாமி அவசரமாக உள்ளே வந்தவர், "விடு செல்வம். அவளை விடு. பெண் குழந்தையை ஏதானும் செஞ்சுடாதே!" என்று கத்தினார்.

"இவளை...இவளை என்ன செய்யணும் தெரியுமா? வெட்டி வெட்டிப் போடணும் சிவசாமி. கண்ட பயலோட சிரிச்சுப் பேசிக்கிட்டு, காலேஜுக்கு 'டிமிக்கி' கொடுத்திட்டு.....ஆண்டவா...."

"தினகர் கண்டவன் இல்லேப்பா-அவனை நான் நேசிக்கிறேன். அவன் நம்ம ஜாதி இல்லே. இதையும் தெரிஞ்சு கொள்ளுங்க. அவனைத்தான் கட்டிக்கப்

போறேன்!"-திடீரென ஏற்பட்ட துணிச்சலுடன் வீரிட்டாள் கிரிஜா.

"என்ன சொன்னே? என்ன சொன்னே?"

"தினகர் அனாதை. தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவன். அவனைத்தான் கட்டிக்கப் போறேன். எனக்காக நீங்க மாப்பிள்ளை பாக்கத் தேவையில்லே!" மறுகணம் அவள் கன்னத்தில் படீரென ஓர் இடி இறங்கியது.

"கெட் அவுட்! இங்கே இருந்து ஒழிஞ்சு போயிடு, போ...!"-செல்வராஜ் கூக்குரலிட்டார்.

அடிபட்ட கன்னம் வலித்தது. அதற்குமேல் உள்ளத்தில் ஏற்பட்ட ஊமைக்காயம், அவமானம் யாவும் அவளை அழமுடியாமல் சிலை போல நிற்கச் செய்தது. சிவசாமி தமது கண்களையே நம்பமுடியா தவராய் நிலைகுலைந்து போய்விட்டார்.

நண்பனைப் பார்க்க வந்தவரிடம் பத்மாவதி பயமும் அவசரமுமாகக் கெஞ்சினாள். "சீக்கிரம் போங்க! அவர் கிரிஜா கிட்ட பேசப் போறாராம். எனக்கு ரொம்பப் பயமா இருக்குதுங்க" அதனால் அவர் மாடிப்படிகளை விரைவில் கடந்து உள்ளே ஓடிவந்தார்.

"கிரிஜா! முதல்லே நீ கீழே போம்மா" -அழுது கொண்டிருந்த பெண்ணை, சமாதானப்படுத்தி கீழே அனுப்பி வைத்தார்.

"செல்வம்! என்னப்பா இது? கொஞ்சம் விட்டுப் பிடிக்கணும்பா"-நண்பனை சாந்தப் படுத்தினார். ஆனால் விட்டுப்பிடிக்கவா முடிந்தது?

எவ்வளவு மாற்றங்கள்? தகப்பனும் மகளும், இரு துருவங்களாக மாறி விட்டிருந்தார்கள். வீட்டின் கட்டுதிட்டங்கள் அதிகரிக்க, அதிகரிக்க ஒருநாள் கிரிஜா வீட்டிலிருந்தே மாயமாக மறைந்து போனாள்.

"வீட்டை விட்டு ஓடிட்டாள்" என்ற அவப் பெயரை சம்பாதித்துக் கொடுத்த மகளை அதன் பிறகு செல்வராஜ் தலை முழுகி விட்டிருந்தார்.

சிவசாமி, கிரிஜாவை அனுதாபத்துடன் பார்த்தார். காரும், பங்களாவுமாக செல்வச் சிறப்பில் வசதியுடன் புரண்டு கொண்டிருந்தவள், இன்று காலில் கிழிந்த செருப்புடன் தகிக்கும் வெயிலில், வறுமையின் கோரப் பிடியில்.....? அடிவயிற்றில் வேதனை சுருண்டது.

"உன்னைப் பள்ளிக்கூட வாசல்லயாவது எறக்கி விடட்டுமாம்மா"-வாஞ்சையுடன் அவர் கேட்டதும் அவள் இலேசாக விசும்பினாள்.

கார் 'கிர்'ரென்ற ஒலியுடன் தார்போட்ட சாலை மீது வழுக்கிக் கொண்டு ஓடியது. சாலையைப் பார்த்தபடி காரை செலுத்தியவர் அருகில் அமர்ந்திருந்த கிரிஜாவைத் திரும்பிப் பார்த்தார். கோபத்துடன் தாடை இறுக, "ஏம்மா? இந்தக் கதி உனக்குத் தேவைதானா?" என்றார்.

"எனக்கு இந்தத் தண்டனை போதாது மாமா. காதல் என்று நம்பி மோசம் போன என்னைப் போன்ற பெண்களுக்கு இதுதான் முடிவு..."-கசப்புடன் கூறிவிட்டு வெளியே பார்வையைச் செலுத்தினாள் கிரிஜா.

"அப்படி ஒரேயடியா காதல்ங்கிற உணர்வை பழிசொல்லிடாதே. இதில் வெற்றி காண்பவர்களும் இருக்கிறார்களே. எல்லாத்துக்கும் ஒரு தகுதி, நியதி உண்டு. காதல் கூட அப்படித்தாம்மா. பாத்திரம் அறிந்து பிச்சையிடுன்னுதான் சொல்லி இருக்கு. காதல் பிச்சைக்கும் அதே முடிவுதான்."

கிரிஜா மௌனமானாள். அவள் தகப்பனார் "கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடுக்கும்" பிடி

வாதக்காரர். அவள் பாத்திரம் அறியாமல் காதல் பிச்சை போட்ட பிடிவாதக்காரப் பெண். பெருமூச்செறிந்துவிட்டு "என்னைப் பத்தி எல்லாருமே மறந்து போயிருப்பாங்க இல்லியா மாமா?" என்றாள் துக்கத்துடன்.

"உங்கம்மாவைத் தவிர..." நெடுஞ்சாலையிலிருந்து திரும்பிய வண்டியை ஒரு ஓரமாக நிறுத்தினார் சிவசாமி. உம் மக படிக்கற பள்ளிக்கூடம் வந்தாச்சு. நானும் கூட வரலாமா?"

"வேண்டாம் மாமா, நானே போய்க்கறேன். தாங்க்யூ வெரிமச்!"-உதடுகள் துயருடன் நடுங்க இறங்கிக் கொண்டாள் கிரிஜா.

"அசட்டுப் பெண்ணே! உங்கப்பனுக்கு நான் ரொம்ப சிநேகிதக்காரன்தான். ஆனா, எம்மனசு அவனாட்டம் இரும்பு இல்லே. இதபாரு கிரிஜா! இந்த மாமா உன்னைத் தூக்கிண்டு, மெட்ராஸ் மிருகக் காட்சி சால்லை முழுக்க அலைஞ்சது ஞாபகம் இருக்கோ. அதே மாமாதான் நான்னு நினைச்சுக்கோ" -அவர் கண்கள் கலங்கின.

கண்களில் கசிந்த நீரை அவர் அறியாதபடி துடைக்க முயன்றாள் கிரிஜா.

அம்மா கிரி! என் பிள்ளை, பொண்ணு எல்லாம் நல்லபடியா கல்யாணமாகி, அமெரிக்கா, அபுதாபின்னு புறப்பட்டுப் போயிட்டா. இப்ப இந்த மாமா ஊரை சுத்திண்டிருக்கான். என் கையால தூக்கி வளத்த நீ இப்படி செருப்புத் தேய அலையறதைப் பார்க்க மனசு பொறுக்கலேம்மா. சொல்லு, உனக்கு என்ன உதவி வேணும்னாலும் எங்கிட்டத் தயங்காம கேளும்மா -அவர் குரல் உணர்ச்சி வசத்தால் தடைப்பட்டது.

கிரிஜா பொங்கி வந்த அழுகையுடன், "மாமா

நிச்சயம் உங்களைத் தேடி வருவேன். இப்ப நான் போய்வரேன்" என்றபடி திரும்பி நடந்தாள்.

இதயம் எல்லாம் சுடுவது போன்ற வேதனையுடன் எரியும் வெயிலில், கிரிஜா நடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டே இருந்தார் சிவசாமி.

வீடு திரும்பும்போது பிற்பகல் ஆகிவிட்டிருந்தது. காலையில் எதுவும் சாப்பிடாதது, அலைச்சல், வெயில் எல்லாமாக கிரிஜாவைச் சோர்வடையச் செய்திருந்தன. பஸ்ஸை விட்டிறங்கி, பொடி நடையாக, அவர்களது குடியிருப்புப் பகுதிக்குப் போய்விடலாம். வீட்டில் இருக்கும் பழைய சோற்றைப் பிழிந்து போட்டு வயிற்றுப் பசியைத் தணித்துக் கொள்ளலாம். பள்ளிக்கூட ஃபீஸ் கட்டணம் போக எஞ்சி நின்ற தொகையில் சில நாட்கள் சமாளிக்கலாம். பிறகு....பிறகு? கீறல் விழுந்த இசைத்தட்டாக மனம் ஓலமிட்டது.

"நானொரு ஸிந்து காவடிச்சிந்து, ராகம் புரிய வில்லே-உள்ள சோகம் தெரியவில்லே..."-நறுக்கு மீசை ஒருத்தன் பின்னால் பாடினான். குடியிருப்பின் தெரு முனையில் கூட்டமாக அமர்ந்திருந்த ஒரு கும்பல் 'கொல்'லென்று நகைத்த ஒலி அவள் காதில் தெளிவாக விழுந்தது.

"என்னம்மா கண்ணு சௌக்கியமா? ஆமாம்மா கண்ணு சௌக்கியந்தான்." -மற்றுமோர் லுங்கிபெல்ட் அணிந்த கவிஞன் அரைத் தொண்டையில் உரக்கப் பாடினான்.

"நம்ம ஊட்டாண்டதான் நைனா கீறே. நம்மளை கண்டுக்கறதே இல்லே?"

"தே சும்மாயிரு கண்ணு இப்பத்தான் கட்னவன் போனது மனசுக்கு ஒரே பேஜாரா கீது. கொஞ்சம் போவட்டும்."

"யார் கையில உதார் விட்றே நயினா. ராப்பூரா குடிச்சுக்கினு கெடந்தான். இப்ப பூட்டானேன்னு. ரொம்போ...."

கிரிஜா கால்கள் பின்ன, பயத்துடன் ஓடினாள். அவளைத்தான் அந்த போக்கிரிக் கும்பல் கேலி செய்கின்றனர். அவளை அவர்கள் நிச்சயம் பின்தொடர்ந்து வந்து வம்பு செய்யலாம். வன்முறை செயலில் இறங்கலாம்.

கிரிஜா வேடன் கை அம்பிலிருந்து தப்பிய பறவையைப் போல கிளியுடன் வீட்டை நெருங்கினாள். தேக முழுதும் வியர்வை ஆறாகப் பெருகியது. வீட்டைத் திறந்து உள்ளே செல்லப் பயந்து வெளியே நின்றாள். ஒரு சமயம் அவளைப் பின் தொடர்ந்து எவரேனும் வந்து விட்டால், வீட்டின் வாயிலிலேயே கலாட்டா செய்யலாம். முகத்திலும் கழுத்திலும் பொடிப் பொடியாகத் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

"ஏம்மா! காலையில புறப்பட்டுப் போன பொண்ணு இப்பத்தான் வர்றியா?"-அஞ்சலை கவலையுடன் கேட்ட படி எட்டிப் பார்த்தாள்.

"பாவம்! பசியோட களைச்சி வந்திருக்கே. என்ன சமைச்சிருக்கப் போறே. உள்ளாற வா, ஒரு வாய் சாப்பிட்டுட்டுப் போ." -கருணையுடன் கூறியதைக் கேட்ட கிரிஜா மனம் உருகிப் போனாள்.

இத்தனை ஏழ்மையிலும், பிறருக்கு இட்டு உண்கிற பரந்த மனம் இந்தக் கிழவிக்கு இருக்கிறது. ஒரு வேளை பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல, ஏழைக்குத் தான் ஏழையின் துயரம் புரியுமோ?

"என்னம்மா யோசிக்கறே? என் வீட்ல சாப்பிடக் கூடாதுன்னு பாக்குறியா தாயி? நான் மீன், மாமி சம் எதுவும் சாப்பிடுகிறதில்லேம்மா. வெறும்

காரக்குழம்பும், கத்தரிக்காய் பொறியலும் தான் செய்தேன், ம்! உக்காரு"-வற்புறுத்தினாள் அஞ்சலை.

அலுமினியத் தட்டில், அவள் வடித்த சோற்றையும், காரக்குழம்பையும் கலந்து வாயில் ஒரு கவளம் போட்டதும் நெஞ்சைத் துயரம் கவ்வியது. ஒரு காலத்தில், பளபளப்பான சாப்பாட்டு மேஜை மீது கண்ணைப் பறிக்கும் எவர்ஸில்வர் தட்டில், நெய், பருப்பு, காய்கறி என்று சாப்பிட்டவள், கட்டித் தயிரின் மீது படரும் ஆடை சிறிது கலைந்திருந்தாலும் கூட அதைத் தொடமாட்டேன் என்று அடம் பிடித்தவள், தன்மீதே கழிவிரக்கத்துடன் ஆலோசித்த படி சாப்பிட்டதாகப் பெயர் செய்து எழுந்தாள்.

"பாட்டி! உங்களுக்கு நான் பணம் தர வேண்டியது இருக்கே எவ்வளவுன்னு சொல்ல முடியுமா?" ஆயாசத்துடன், தரைமீது அமர்ந்து அருகிலிருந்த சுவரின்மீது சாய்ந்து கொண்டாள்.

அஞ்சலை விசித்திரமாகப் பார்த்தாள். "ஏம்மா எத்தனை துட்டு கெடச்சிருக்கு உனக்கு?"

"ரொம்ப இல்லே பாட்டி, பள்ளிக்கூட சம்பளம் போக பாக்கி நிக்குது. அதுல, ஏதோ கொஞ்சம் குடுத்து உதவலாமேன்னுதான் கேட்டேன்"-கிரிஜா சோகமாகப் புன்னகைத்தாள்.

"சரி! இன்னிக்கு வாங்கிக்கிடறேன். பிறகு நாளைக்கு என்னா வச்சிருக்கே? கையிருப்பு இல்லாட்டி வாழ்க்கை நடத்தறது ரொம்ப கஷ்டம்மா. இந்த ஒண்டிக்கட்டைக்கு இப்பப் பணம் தேவையில் லேம்மா. சிறுசு நீ வச்சுக்க."-அஞ்சலை மிக உயரத் தில் இருப்பதை கிரிஜாவால் உணர முடிந்தது.

ஒரு மாதத்திற்கு மேல் கிரிஜாவால் நிலைமையை சமாளிக்க முடியாமல் போய்விட்டிருந்தது. வீட்டில் விலை மதிப்பான பொருள் எதுவும் இல்லை. மர

பீரோவில் உறங்கிக் கொண்டிருந்த பட்டுச் சேலைகளையும் விற்றுவிட்டால்....?

பீரோவைத் திறந்து அந்த மாந்துளிர் மேக வர்ண சேலையை நடுங்கும் விரல்களால் தொட்டாள். அவளுக்கு ரொம்ப பிடித்தமான நிறம், அம்மா பத்மாவதி ஆசையுடன் வாங்கித் தந்த நிகழ்ச்சி இன்றும் பசுமை மாறாமல் நெஞ்சை நெருடியது.

கையில் கிடைத்த நகைகளை ஒரு பெட்டியில் வாரிப் போட்டுக்கொண்டு, இரவோடு இரவாக வீட்டை விட்டு வெளியேறிய பிறகு?

பங்களாவின் தெருமுனையில் அவளுக்காகப் படபடப்புடன் காத்திருந்தான் தினகரன். முதல்நாள் கடற்கரையில் இருவரும் ரகசியமாகப் பேசி முடிவு செய்திருந்தார்கள்.

“உங்கப்பாவா முன்வந்து நம்ம கல்யாணத்தை முடிச்சு வக்க மாட்டார்னு தெரிஞ்சிடுச்சு, அவருக்கு அந்தஸ்து, ஜாதி ஆகியு பெருமைங்க முக்கியம். அன்பு முக்கியமில்லே கிரிஜா!”-தினரன் வெறுப்பை உமிழ்ந்தான்.

பித்தம் பிடித்தவளைப் போல ஆகிவிட்டிருந்தாள் கிரிஜா. அம்மாவின் கெஞ்சல், அப்பாவின் மிரட்டல் அண்ணாவின் அதட்டல் எதற்கும் அவள் பிடி கொடுக்கவில்லை. அவள் படித்தவள். ஆனால் பேதைப் பெண். தினகரன் அவளை உய்விக்க வந்த தெய்வம் என்றே கருதிவிட்டாள்.

“உன்னை பண மூட்டை ஒருத்தனுக்குக்கட்டி வைக்கத் திட்டம் தீட்டறாங்க. பணம் பணத்தோட சேரணும். அதுதான் அவங்க தீர்மானம். மத்தபடி மனசு....ஊஹூம். அது அவங்களைப் பொறுத்த மட்டிலே செத்துப்போச்சு. உண்மையான காதலுக்கு உயர்வு தாழ்வே கிடையாதுன்னு நாம புரிய

வைக்கணும்?"-ஆவேசமாகப் பேசினான் தினகரன்.

அவன் சொன்னதெல்லாம் அவளுக்கு வேத வாக்காக இருந்தது.

அண்ணாவும், அப்பாவும், வேறு ஒரு இடத்தில் மாப்பிள்ளை பார்த்து தீர்மானம் செய்ய முயன்று கொண்டிருந்தனர். அதுசமயம், இரவோடு இரவாகத் துணிச்சலுடன் வீட்டை விட்டு வெளியே தலைமறைவாகிப் போனாள் கிரிஜா.

உடல் எல்லாம் கிடுகிடுவென்று நடுங்க பெருமூச்சுடன் தினகரன் கையைப் பற்றியபடி திருச்சி செல்லும் ரயிலில் உட்கார்ந்தாள். உடம்பு முழுக்க குற்ற உணர்வில் படபடத்தபடி இருந்தது.

"அப்பா இந்நேரம் தேடியிருப்பார். ஒரு வேளை அண்ணன் போலீசை ஏவி இருப்பானோ? சே! அது அவர்கள் குடும்ப கௌரவத்தைப் பாதிக்கிற விஷயமாச்சே! இரகசியமாக வலை போட்டுத் தேடிக் கொண்டிருப்பார்கள்..." மனதினுள் எண்ணங்கள் அலைமோதின.

ஆதரவுடன் அவளது கூந்தலைக் கோதி விட்டான் தினகரன். "பயமா இருக்குதா? திரும்பிடலாமா?" காதருகில் கிசுகிசுத்தான்.

ஆதரவுடன் அவன் கரங்களைப் பற்றியபடி, "நீ இருக்கும் போது எனக்கு என்ன பயம் தினகர்?" என்றாள் சிறிது தெம்புடன்.

எதிர்பக்கம் அமர்ந்திருந்த நடுத்தர வயதுப் பெண்மணி, அருகில் இருந்த வயதானவரிடம் "புதுக் கல்யாணமோ, என்ன கண்ராவியோ? நாலு பேர் மத்தியில....இப்படி நடக்கணுமா?" -முகவாய்க் கட்டையை தோளின் மீது இடித்துக் கொண்டாள்.

மறுபுறம் இருந்த வயதானவர், "தம்பீ' எவ்வளவு

தூரம் போறீங்க?" என்று பேச்சுக் கொடுத்தார். தினகரன் கிரிஜாவை ஜாடையாகப் பார்த்தான்-பிறகு தொண்டையை செருமி விட்டு "பெரியவரே! ஒரு வேண்டுதலை, சமயபுரம் போறோம்" என்றான்.

"நல்லது. புதுசா கல்யாணம் கட்டிக்கிட்டாப் பலயா?"

"கட்டிக்கிட்டாப்பலதான்"-கிரிஜாவைப் பார்த்து கண்களைக் குறும்புடன் சிமிட்டினான் தினகரன். அந்த நினைப்பில் சொக்கிப் போனாள் கிரிஜா... பிறகு பிறந்த வீட்டு எண்ணமே மறந்து போய்விட்ட பிரமை.

திருச்சியில் இறங்கி, கிராமப்புற பஸ்ஸில் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி, நீண்ட பயணத்தின் முடிவில் ஒரு கோவிலில் திருமணத்தை முடித்துக் கொண்டனர். தெய்வமே சாட்சியாக நின்றது. திருச்சியில், ஒரு மருந்துக் க்டையில் வேலை தேடிக் கொண்டான் தினகரன்.

காதலுக்காகக் கஷ்டங்களை சகித்துக் கொண்டாள் கிரிஜா. ஸ்டோர் குடித்தனம். பொதுக் கழிவறை-குளியலறை. தனிப்படுக்கையறையில் நுரை ரப்பர் மெத்தை மீது தூங்கியவள், கட்டாந்தரை பாய் மீது தலையணை மீது கண்ணயர்ந்தாள். தினகரனது சம்பளம், பற்றாக்குறை பட்ஜட்டாகத்தான் இருந்து வந்தது. இருப்பினும் அவளாகத் தேடிக் கொண்ட வாழ்க்கை. அதிலிருந்து மீண்டு போக முடியாது.

அந்த சமயம்தான் அரசி பிறக்கப்போகும் அறிகுறிகள். ஒரு பெண் தாயாகும் போது ஏற்படும் உணர்ச்சிகளுக்கு கிரிஜாவும் அடிமையானாள். அம்மாவைப் பார்க்க வேண்டும். இதுபற்றிப் பேச வேண்டும். அநேக கேள்விகள் கேட்க வேண்டும் என்ற ஆவல் தலை தூக்கியது.

மகள் தாய்மையடைந்திருக்கிறாள் என்று

கேட்டால் அம்மா சந்தோஷப்படுவாளா! மாறாக சங்கடப்படுவாளா?

காலை படுக்கையைவிட்டு எழ முடியாதபடி அவளை மசக்கையும் வாந்தியுமாகப் பாடுபடுத்தின. 'அம்மா இருந்தால்...இப்போது எப்படி இருக்கும்?' என்று அடிக்கடி உள்ளூர வேதனை அரிக்கும். தினகரனின் . போக்கிலும் ஒரு சிறு மாற்றத்தை அவளால் உணர முடிந்தது. மிகச் சிறிய வருவாயில், குடும்பத்தை நடத்தவே திணறும் சமயத்தில, ஒரு புது ஜீவனை அவன் வரவேற்கவில்லை. சதா மயக்கமும் வாந்தியும், டாக்டரின் மருந்துமாக மனைவி படும் உபாதைகள் அவனை பாதிக்காத மாதிரி நடந்து கொண்டான்.

பிறக்கப் போகும் குழந்தையைக் கற்பனையில் எண்ணியபடி, இதர துன்பங்களைப் பொறுத்துப் போய்க் கொண்டிருந்தாள் கிரிஜா.

"அம்மாவைப் போய் மெட்ராஸ்ல பாக்கணும் போல இருக்கு தினகர்"-ஆசையுடன் தன் உள்ளக்கிடக்கையை அவள் வெளியிட்டபோது அவன் சீறினான்.

"வாடியம்மான்னு வெத்திலை பாக்கு வச்சு அழைச்சுட்டுப் போவாங்க...உனக்கென்ன பித்து பிடிச்சிருக்கா..."

"என்னவானாலும் நான் அவங்கபெத்த மகளாச்சே. மேலும், நான் ஒரு குழந்தையைப் பெறப் போற தாய்"-கிரிஜா விடாமல் மன்றாடினாள்.

"இருக்கலாம். ஆனா, நீ பெறப் போவது என் குழந்தையை. அவங்க பேரக் குழந்தையை இல்லே..."

கணவனது கடுமையான சொற்கள் அவளை வெகுவாகப் பாதித்தன. நாளுக்கு நாள் வீட்டு வேலைகள் பாரமாகத் தெரிந்தன. அவளால்

எதையுமே செய்ய இயலாத நிலை ஏற்பட்டதும் அவன் ஆத்திரத்துடன் சீறினான்.

"பணம் கொட்டியா கெடக்கு. மெட்ராஸ் போவேன்னு நிக்கறியே பிரசவ செலவு வேற், எங்கே போவேன் நான். எல்லாம் என் தலைவிதி. பேசாம, இந்தக் கல்யாணம் கட்டிக்காமயே இருந்திருக்க லாம்!" கிரிஜா முதல் முதலாக அதிர்ந்து போனாள்.

எவனை நம்பி, சகலமும் உதறிவிட்டு இரவோடு இரவாக ஓடி வந்தாளோ, அவனே அப்படிப் பேசினால்? அவள் தன்னையே நம்ப முடியாதவளைப் போல் அவனைப் பார்த்தாள். "தினகர்? நீதான் பேசறியா?" கோபம் பொங்கியது அவளுக்கு.

"ஆமாம். நானேதான் பேசறேன். இப்ப சுயநினைவோட பேசறேன். இனி கஷ்டம் தாங்காம போனா..." பற்களைக் கடித்தபடி வெளியேறி விட்டான்.

'இல்லாமை வந்துவிட்டால், எல்லோரும் இப்படித்தான் இருப்பார்கள் போலும்'-தன்னையே சமாதானம் செய்து கொண்டாள் கிரிஜா. தன்னிடம் இருந்த நகைகளில் ஒன்றை விற்று ஈடுகட்டி விடலாம் என்று கணவனிடம் கூறி ஆறுதல் செய்து விடவேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கியது.

அவளது ஆறுபவுன் சங்கிலி ஒன்று நகைக்கடைப் பெட்டிக்குள் அடைக்கலமாகி, குடும்பக் கஷ்டத்தைத் தீர்த்தது. கையில் சிறிது பணப் புழக்கம் ஏற்பட்டதும் "கிரிஜா! நீ வேணா உங்கம்மாவைப் போய் பார்த்திட்டு வா" என்றான் தினகரன்.

சென்னை வந்ததும் அவள் நேராக பிறந்த வீட்டுப் பங்களாவிற்குள் நுழையவில்லை. வரவேற்பு இருக்காது என்பதை உணராதவளா என்ன? தெரிந்தவர் வீட்டில்

சென்று இறங்குவதையும் வெறுத்தாள். வேறு என்ன வழி? பொது டெலிபோன் பூத்தினுள் நுழைந்து தொடர்பு கொண்டாள். அவள் பெயரில் சிறிது அதிர்ஷ்டம் ஒட்டியிருந்தது.

பத்மாவதி மறுமுனையிலிருந்து டெலிபோனை எடுத்தாள், "ஹலோ! யார் வேணும்?" பல நாட்கள் கழித்து அம்மாவின் குரல் அவள் காதுகளைத் தழுவியதும், உடல் சிலிர்க்க உள்ளமெல்லாம் உருக, ஊமையாகிப் போனாள். "யார் பேசறது?"—அதட்டல் குரல் கேட்டது மறுமுனையில்.

"அம்மா! நான்...நான் யார் தெரியலே..."

"தெரியலியே?"

"நீங்க பத்மாவதி அம்மாதானே?"...சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்கிற பாவனையில் உணர்ச்சியுடன் தடுமாறினாள் கிரிஜா.

"ஆமாம்! நீங்க..."

"அம்மா! நான்தானம்மா உங்க மக கிரிஜா... கிரிஜாம்மா—அம்மா..."

மறுமுனையில் மௌனம்.

"அம்மா! ஏம்மா உங்க பொண்ணு பேசறேன். பேச மாட்டீங்களா...அம்மா! ப்ளீஸ் ஒரே ஒரு வாட்டி கிரின்னு கூப்பிடுங்கம்மா"-விசும்ப ஆரம்பித்தாள் மகள்.

"அழாதே. எங்கே இருந்து பேசறே...எப்படி இருக்கே?" தடைபட்ட குரலில் ரகசியமாகக் கேட்டாள் அம்மா.

கிரிஜா கூறிய விவரத்தைப் புரிந்து கொண்ட மறு கணம் அம்மா கூறினாள். "உன்னைப் பார்க்க உடனே வரேன். ஆனா வீட்ல இல்லே. மாம்பலம் பனகல் பார்க் பக்கம் நில்லு. நல்லிகடை எதிரே..."

போனை வைத்து விட்டாள்.

ஆட்டோ ஒன்றைப் பிடித்து அம்மா சொன்னபடி கிரிஜா படபடப்பாகக் காத்திருந்தாள். நல்லி கடை வாயிலில் எதிர்ப்புறமாக வந்து நின்ற வெள்ளை நிற பென்ஸ் காரிலிருந்து அம்மா இறங்கினாள்.

பெரிய மனிதர் வீட்டுப் பெண்மணியாக வைர ஆபரணங்கள் ஜொலிக்க, பட்டுப் புடவை மேனியை அலங்கரிக்க...ஒரு விநாடி தயங்கிவிட்டு, சரசரவென எதிர் சாரியிலிருந்த மகளை நோக்கி வந்தாள்.

"வா! அந்தக் காருக்குப் பின்னால் போய் பேசுவோம். டிரைவரை பழம் வாங்கிட்டு வரச்சொல்லி அனுப்பிவச்சிட்டு வரேன் நீ மெதுவா வந்திடு..."அதே வேகத்தில் காரை நோக்கித் திரும்பி விட்டாள்.

காரின் பின் ஆசனத்தில் அமர்ந்த மகளைக் கண்டதும் அதுகாறும் அடக்கி வைத்திருந்த துயரம் தாளாமல், "என் கண்ணம்மா கிரி! எப்படி இருக்கேம்மா? ஐயோ! நான் என்ன செய்யட்டும். வீட்ல வாயைத் திறக்க முடியாதபடி இப்படி ஒரு வேலை செய்திட்டியேம்மா!"-அரற்றினாள் அம்மா.

அம்மாவின் தோளில் முகம் புதைத்த மகள் "மன்னிச்சுக்கோங்க அம்மா. எனக்கு இதைத் தவிர வேற வழியே தென்படலைம்மா, அம்மா? அம்மா!" என்று தேம்பி அழுதாள் கிரிஜா.

அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்ட தாய், "டிரைவர் திரும்பி வந்துடுவான், அதுக்குள்ள பேசி முடிக்கணும்" என்றாள் வேதனையுடன்.

தாய்மையின் பூரிப்பில் இருக்கும் மகளைப் பார்த்ததும் அவள் பெற்ற மனம் பித்தாகிப் போய் விட்டது. "இத வரேன் இரு." சரேலெனக் கதவைத் திறந்து கொண்டு, சிறு பெண்ணைப் போல, எதிரே

இருந்த புடவைக் கடைக்குள் மறைந்தாள். அடுத்த சில நிமிடங்களில், கையில் ஒரு பிளாஸ்டிக் பையுடன் காரினருகில் வந்தாள்.

“இந்தா! உனக்குப் பிடிச்ச மாந்துளிர் மேக வர்ணக் கலர். உன் நிறத்துக்கு நல்லா இருக்கும். எல்லாம் நல்லபடியா நடந்திருந்தா உன் வளைகாப்பு, பிரசவம்னு சீரும்சிறப்புமா செய்திருப்பேன். பணம் காசு இருந்தும், இப்ப-உன் அம்மா ஏழையாகிட்டேன். ஆமா, பாசத்தை ஒளிச்சு வச்சுக் கொண்ட ஏழை அம்மா, இதைப்பிடி” என்றாள் தொண்டை அடைக்கும் குரலில்.

“வேண்டாம்மா-இதை வாங்கிட்டது அப்பாவுக்கோ அண்ணனுக்கோ தெரிஞ்சா...” மகள் அழுகை பொங்க மறுத்தாள்.

“இது என் செலவுக்குன்னு வச்சிருந்த பணத்தில் வாங்கினதும்மா. கிரி! ஒண்ணு மட்டும் நினைப்பு வச்சிக்க. ஒரு தடவை, புழுதியிலே விழுந்துட்ட பூ, பூஜைக்கு உதவறதில்லேம்மா. நீ தகுதியில்லாத எடத்திலே மனசு வச்சிட்டதாலே வந்ததை நீதான் அனுபவிச்சாகனும்மா......!”

“தினகர் தாழ்த்தப்பட்ட ஜாதிங்கறதை குத்திக் காட்டறீங்களா?”-ரோஷத்துடன் கேட்டாள்.

“ஜாதி ஒரு பிரச்சினையாகிடாது. நல்ல குணவானா இருந்திட்டா, அவனும் மனுஷ ஜாதிதான். ஆனா, தினகர் நல்ல பையன் இல்லேம்மா. அதனால்தான் நான் உன்னைப் பத்தி ரொம்பக் கவலைப்படறேன்.

“ஏன் அப்படிச் சொல்றீங்க? அவர் ரொம்ப நல்லவரம்மா. என் மேல உயிரையே வச்சிருக்கார்.”

“சந்தோஷம், அப்படியே இருக்கட்டும்னு ஆண்டவனைப் பிரார்த்திக்கறேன் இந்தா! இந்த

அம்மா உனக்குக் கொடுக்கற பரிசு. நாளக்கி பிரசவ சமயத்திலே நீ வலியால் துடிச்சுகிட்டு, அம்மா, அம்மான்னு கத்தறப்ப, நான் அருகே இருக்க மாட்டேன். அப்ப என்னைக் கற்பனையில நினைக்சுக்கோம்மா. கஷ்டமில்லாம ஒரு குழந்தையைப் பெத்துக்க, நல்லபடியா இரு"- அழுகையுடன் தாயும் மகளும் பிரிந்தனர்.

திருச்சி திரும்பிய மனைவியிடம், "ஒரு சேலையைக் குடுத்து விரட்டி அடிச்சிட்டாங்களா"- ஏளனமாகக் கேட்டான் தினகரன்.

அரசாங்க மருத்துவமனையில், அவள் அம்மா வென்று அலறியபடியே, பெண் குழந்தைக்குத் தாயானாள். பெயர் வைப்பதற்கு, அவள் எத்தனையோ நாமங்களைத் தேர்ந்தெடுத்தாள்.

"எங்க குடும்பத்திலே எங்க அத்தை ஒருத்தி படிச்சிருந்தா, அவ செத்துப் போயிட்டா. அவ ஞாபகமா இவளுக்கு அரசின்னு பெயர் சூட்டப் போறேன்" என்றான் தினகரன்.

"அரசி" அரசன்னு இப்ப ஏது மதிப்பு? வேற நல்ல அழகான பேரா சொல்லு தினகர்" என்று கிரிஜா மறுப்பு தெரிவித்தாள்.

"அதெல்லாம் முடியாது. அரசிதான் வக்கணும். என்னிஷ்டம்" என்று அடம் பிடித்தான் தினகரன். பிறகு குழந்தை வளர வளர வீட்டின் செலவினங்கள் அதிகரித்தன. வறுமையும் வளர்ந்தது. தினகரின் நல்ல குணமும் குறையத் துவங்கியது. ஒருநாள் மருந்துக் கடை வேலையை உதறிவிட்டு வந்து நின்றான்.

"பெரிய பிஸாத்து வேலை. சக்கையா பிழியறான். இத்தனூண்டு சம்பளம். பேசாம மெட்ராஸ் போனா எத்தனையோ வேலை..."

கிரிஜாவின் நகைகள் கரையக் கரைய, சிந்தாதரிப்

பேட்டையிலிருந்து திருவல்லிக்கேணி வாசம் முடிந்து கோட்டூர்புரக் குடியிருப்புக்குள் புகுந்தாகி விட்டது. இதற்கிடையில் பதினைந்து இடங்களில் வேலை பார்த்து விட்டான் தினகரன்.

அன்போடு, வேடிக்கையும் விநோதமுமாகப் பேசிய தினகரன் வேஷம் கலைந்து, சதா குறை காணும் கடின சித்தனாக மாறிப் போனான்.

"பெரிய பணக்காரனாம் ஏன்? பொண்ணுக்குக் கொஞ்சம் பணம் குடுக்கறது? இவன் செத்தா-போறச்சே மண்டையிலயா கட்டிக்கிட்டுப் போகப் போறான்?"-ஏசுவான். தன் துயரை மறக்க போதையில் வருவதும் வழக்கமாகிப் போனது.

நல்ல குடிபோதையில் வரும்போதே, "மூஞ்சியைப் பாரு- பெத்த அப்பன்கிட்டப் போய் சண்டை போட்டுத் துட்டு வாங்கிவரத் தெரியலே? மூதேவி! அழுதுகிட்டே கெடக்கறா" எனக் குத்தலாகப் பேசுவான்.

கிரிஜா தகப்பனாரிடம் சென்று தன் பங்காகப் பணம் பெற்று வருமாறு பலமுறை அவளை இம்சை செய்திருக்கிறான். சுயமாகச் சம்பாதித்த சொத்தில் ஒரு சல்லிக் காசு பெயராது என்பது கிரிஜாவிற்குத் தெரியும். அவளாக ஒரு வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ள முயற்சி செய்யலாம். ஆனால், தினகரன் இதுதான் தருணம் என்று வீட்டிலேயே சோம்பி உட்கார்ந்துவிட்டால் என்ற கிலி...!கிரிஜா அடி உதைகளைத் தாங்கிக் கொண்டாள்.

"அம்மா! நீ சொன்னது ரொம்ப சரிம்மா. தகுதி இல்லதாவனிடம் என் மனதைப் பறிகுடுத்திட்டேன். இப்ப அனுபவிக்கிறேன்.."-அந்தச் சேலை மிருதுவான உடலைத் தொட்டபோது, அம்மாவின் மென்மை யான அன்பு மனத்தில் இழையோடியது.

"ஜாதி ஒரு பிரச்சினை இல்லைன்னு சொன்னியே அம்மா, உண்மை. திருமணம் ஆகிட்ட பிறகு உயர்வு தாழ்வு மறைஞ்சு போகும். ஆனால், குணம் கெட்டுப் போனா, தாழ்வும், உயர்வுமே கெட்டுப் போயிடுதே!" அழுகையுடன் குலுங்கினாள் அவள்.

# 5

"குழந்தை பள்ளிக்கூடம் போயிடுச்சா?"- அஞ்சலையின் குரலைக் கேட்டு சடக்கென நிமிர்ந் தாள். கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டு அலமாரியை மூடினாள்.

"அனுப்பிட்டேன்.. உக்காருங்க பாட்டி" -உபசார மாகக் கூறியபடி அருகே வந்தாள்.

கீழே உட்காராமல், இடுப்பில் கையை வைத்தபடி கிரிஜாவை உறுத்துப் பார்த்தாள் கிழவி.

"ஏம்மா! எங்கிட்டயே மறைக்கப் பார்க்கறே?"- திடுக்கிட்டு தலை நிமிர்ந்தாள் கிரிஜா.

"கையில் துட்டு இல்லே. புருஷன்காரன் செத்துப்போன செலவே தலைக்கு மேல கடனாகக் கிடக்குது, சின்னப் பொண் குழந்தே. இதை வச்சுக்கிட்டு என்ன செய்வோம்னு தவிக்கிறே..."

கிரிஜா மென்று விழுங்கினாள். அஞ்சலை சாமர்த்தியக்காரக் கிழவிதான்.

"படிச்சிருக்கியே. என்னாட்டம் தற்குறியா நீ. பேசாம நாலு கம்பெனியில வேலைக்கு முயற்சி செய். இதுகூட நான் சொல்லியா தெரியணும்? நீ ரொம்பக் கோழைம்மா..."

வீட்டைவிட்டு ஓடி வந்த அவசரத்திலும், அவளது பட்டப்படிப்பு, டைப்ரைட்டிங், ஷார்ட்ஹேண்ட் சர்டிபிகேட்டுகளை எடுத்து வந்திருந்தாள். அதை எடுத்துச் செல்லலாமே! முதன் முதலாக கிரிஜா, ‘இனி அழப்போவதில்லை’ என்ற திடமான தீர்மானத்திற்கு வந்தாள்.

“பாட்டி! நீங்க சொன்னது ரொம்ப சரி. நான் பெரிய கோழையாகத்தான் இத்தனை நாளும் வாழ்ந்து கொண்டிருந்தேன். இனிமே தைரியமா இருக்கேன். கவலைப் படாதீங்க!” என்றாள் திடமான குரலில்.

மறுநாள் காலையிலேயே, அரசியைப் பள்ளிக்கு அனுப்பும் சமயம் அவளும் புறப்பட்டாள். சிவசாமியின் விலாசம் அவளுக்குத் தெரியும். வீடு தேடிப் போனால்... அவர் மனைவி முகத்தில் விழிக்க நேரலாம். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விட்டால்...

அரைமணி நேரத்திற்குள் சிவசாமி அவள் குறிப்பிட்ட தேனாம்பேட்டை தபாலாபீஸ் அருகே காருடன் வந்து சேர்ந்தார்.

“குட்மார்னிங் குழந்தே! சர்டிபிகேட் எல்லாம் வச்சிருக்கியா! நீ ‘போன்’ செய்தது நல்லதாப் போச்சு” என்றார்.

காரில் ஏறி அமர்ந்தவள் பேசாமல் அவரைப் பார்த்து விட்டு, “குட்மார்னிங் மாமா” என்றாள்.

“ரெண்டு நாள் முன்னே என் சினேகிதன் ஒருத்தன் கிண்டி தொழிற்பேட்டைப் பக்கத்தில் சிறுதொழில் ஆரம்பிச்சிருக்கான். நல்ல ஸ்டேனோ வேணும்னு சொன்னான். உன் ஞாபகம் வந்தது, நீதான் அட்ரஸ் குடுக்காமப் போயிட்டியேன்னு தவிச்சேன்?”

“அதான் வந்திட்டேனே?”

"ஒரு விஷயம். அவன் புதுசா ஆரம்பிக்கிற கம்பெனி, சம்பளம் சுமாரா இருக்கும். அப்புறம் போகப் போக நிறையத் தருவான்." கார் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

கிண்டியில் அவர் சொன்ன இடத்தில் சிவசாமி யின் நண்பர் லோகநாதன் அவர்களை வரவேற்றார்.

மத்தியக்கிழக்கு நாடுகளில் சில வருடங்கள் வேலை பார்த்துவிட்டு தாய்நாடு திரும்பி இருந்தவர் லோகநாதன். கிரிஜாவின் அப்பாவை ஒத்த வயதுக் காரர். கார் சாமான்களுக்கு வேண்டிய சிறு உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை சிறிய அளவில் ஆரம்பம் செய்திருந்தார்.

"சிவா! நீ சொல்லிட்டே, எனக்கு 'பாக்ரவுண்ட்' தெரியணும்னே இல்லே. வேலைக்கு வரச் சொல்லிடு" என்றார் லோகநாதன்.

"வேலைக்குப் போறதுன்னு பழகாத பொண்ணு. இப்பதான் அப்படி ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுப் போயிட்டுது. அதனால, கொஞ்சம் டிரெயினிங் குடுத்துடு."

சிவசாமி தன் வாக்கைக் காப்பாற்றிக் கொண்டு விட்டார். கோட்டூர் புரத்திலிருந்து கிண்டிக்குப் போய் வர அவளுக்கு சிரமம் ஏதும் இல்லை என்றாலும், பஸ் பயணம் அவளை மிகுந்த சிரமத்திற்குள்ளாக் கியது.

அதுநாள் வரை, அடியோ, ரகளையோ, பசி, பட்டினி என்று வீட்டினுள் முடங்கிக் கிடந்தவள், இப்போது நன்றாக உடுத்திக் கொண்டு கூட்டமான பஸ்ஸில் நெருக்கிப் பிடித்துப் பயணம் செய்ய வேண்டி இருந்தது. குழந்தையை அவசரமாகப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, அலுவலகத்திற்குப் புறப்படுவாள்.

"அரசி, ஸ்கூல்ல இருந்து திரும்பிட்டா கொஞ்சம் கவனிச்சுக் கொள்ளுங்க பாட்டி" என்று அஞ்சலையிடம் கேட்டுக் கொள்வாள். வீடு திரும்பும் வரை அவளுக்கு ஒருவிதமான குற்ற உணர்வு நெருடிக் கொண்டே இருக்கும். குழந்தையைச் சரிவரக் கவனிக்க முடியவில்லையே என்ற உணர்வுதான் அது.

அஞ்சலைக்கு கிரிஜா வேலை பார்க்கச் செல்வதில் பரமதிருப்தி. "ஏதோ அதும் பாட்டை அது பாத்துக்குது. அத்த விட்டுப்பிட்டு, எப்பப் பாரு அழுதுகிட்டே இருந்தா சோறு வந்து உழுமா தட்டிலே" என்று கூறிக் கொண்டாள்.

ஒருசில நாட்களில் கம்பெனி வேலை அதிகம் இருக்கும். பஸ் பிடித்து வீடு திரும்புவதற்குள் இருட்ட ஆரம்பிக்கும். வழியில் அவளது அசுர கணங்களின் கேலிக்கும் கண்டனப் பேச்சிற்கும் அவள் இலக்காகிக் கொண்டிருந்தாள்.

"பாட்டி! காலிப் பசங்க தொல்லை அதிகமாகிட்டு வருது. இருட்டிப் போய் வீடு திரும்பறச்சே ரொம்ப பயம்மா இருக்குது பாட்டி" என்று ஒருநாள் அவள் வருத்தபட்டுக் கொண்டாள் அஞ்சலையிடம்.

அஞ்சலை பெருமூச்செறிந்தாள். "என்ன செய்யறது தாயீ! நல்ல விஷயங்களை எவனும் எடுத்துக்கற தில்லே. பயாஸ்கோப்பு, பத்திரிகைன்னு பாக்கறாங்க. படிக்கறாங்க. ஆனா, அதில் நல்லதை எவன் எடுத்துக்காரன்? முந்தா நாள் ஒரு பய பாடிக்கிட்டிருக்கான் பாரு–"

கிரிஜாவிற்கு அது தெரியும். என்னடி முனியம்மா, உன் கண்ணுலமையி...."என்று அடிக்குரலில் பாடியபடி அவளைத் தொடர்ந்து வந்தான் ஒரு கிராதகன்.

"போற போக்கைப் பாத்தா, ஒருநாள் தனியா

இருக்கிற பொம்பிளைங்க வீட்டைத் தேடி வந்து கதவைத் தட்டினாலும் அதிசயப்படறதுக்கு இல்லேம்மா" என்று கிழவி அலுத்துக் கொண்டாள்.

பயத்தால் உடல் விறைத்துப் போனாள் கிரிஜா. அஞ்சலை சொன்னது போல, எந்த ரவுடிப் பையனாவது இரவில் கிரிஜா வீட்டுக் கதவைத் தட்டினால்...? அவள் என்ன செய்வாள்?

அவளது பயம் நிஜமாகியது. ஒருநாள் எப்படியோ அவள் குழந்தையுடன் தனியே இருக்கிறவள் என்று தெரிந்து வைத்திருந்த போக்கிரி பின்னாலேயே தொடர்ந்து வந்தான்.

"கண்ணா! தனியா எதுக்கு இருக்கே? நான் வரவா துணைக்கி?"

கிரிஜா பதில் பேசாமல் வேகமாக நடந்தாள். உள்ளம் கிலியால் வெடவெடத்தது.

"பதில் பேசாம போறீயே, இத்தனை அழகையும் வீணாக்கலாமா?"

அஞ்சலைப் பாட்டி ஆபத் சகாயமாக எதிரே வந்தாள். "பாட்டி! பாட்டி!" என்றபடி கிரிஜா அவள் கையைப் பற்றிக் கொண்டாள். அவள் வெகுவாகப் பயந்து போயிருக்கிறாள் என்று நிலைமையை ஊகித்த கிழவி, வந்தவனை கம்பீரமாக முறைத்தாள்.

"யாருடா அவன். முத்துப் பயலா? போடா அப்பாலே..." என்று பெருங்குரலில் அதட்டினாள். அசடு வழிந்த வண்ணம் அவன் தலைமறைவாகிப் போனதும், வீட்டிற்குள் திரும்பிய இருவரும் வெகுநேரம் பேச்சின்றி அமர்ந்திருந்தனர்.

அன்றிரவு உணவிற்குப் பிறகு அஞ்சலை அவளிடம் வந்தாள்.

"வாங்க பாட்டி"-வரவேற்றாள் கிரிஜா. அரசி

பாயின் மீது தூங்கி விட்டிருந்தாள்.

"இன்னைக்கி முதல் இங்கதான் நான் தூங்கப் போறேன்" என்று திடமான குரலில் கூறினாள் கிழவி.

கிரிஜா சிறிது உற்சாகத்துடன், "அப்படியா? ரொம்ப சந்தோஷம்!" என்றாள்.

"ஆனா ஒண்ணு. இது ரொம்ப நாளைக்கி நடக்காது"

"என்ன சொல்றீங்க பாட்டி?"-கிரிஜா கலவரத்துடன் கேட்டபடி அஞ்சலையின் அருகே நெருங்கி அமர்ந்தாள்.

கிழவி சிறிது நேரம் மௌனம் சாதித்தாள். பிறகு மெல்லிய குரலில், நிதானமாகக் கூறினாள். "உன்னைப் பற்றி முழு விவரம் எனக்குத் தெரியாதும்மா. ஆனா நீ நல்ல எடத்துப் பொண்ணுன்னு ஊகிக்கிறேன். நாங்க ஏழைங்க. நல்ல மனசோடத்தான் வாழறோம். ஆனா, எங்க கூட்டத்திலயும் சில போக்கிரி இருக்காங்க. அவங்களால எங்களுக்குக் கெட்ட பேரு வந்திடக்கூடாது பாரு."

"நீங்க சொல்றது எதுவும் விளங்கலே பாட்டி...!"-குழப்பமான குரலில் வினவினாள் கிரிஜா.

"சீக்கிரம் இந்த எடத்தைக் காலி செய்துகிட்டு வேற நல்ல எடம் பார்த்துக்கிட்டு போயிடும்மா."

"உங்களை விட்டுட்டு...வேற எடமா?"-திகைத்தாள் அவள்.

"கோபுரமும், குப்பை மேடும் ஒண்ணாயிடுமா பொண்ணு? நான் இருக்க வேண்டிய எடம் இதுதான், நீ புறப்பட்டுப் போயிடு. அதுதான் உனக்கும், நீ வளத்துக்கிட்டிருக்கிற பொண்ணுக்கும் நல்லது. என்னைப்பத்திக் கவலைப்படாதே. வயசான

கிழவி என்னிக்காச்சும் பயணம் புறப்பட வேண்டிய கிழவி. எவனாச்சும் கோவிந்தாக் கொள்ளி போட்டுட்டுப் போறான். நீ வாழ வேண்டியவ. நல்லபடியா பிழைச்சுக் கொள்ளும்மா!"

கோபுரம் குடிசையிலும் இருக்கும் என்பதை கிரிஜா உணர்ந்து கொண்டாள். இரவு முழுவதும் அவள் உறங்கவே இல்லை.

# 6

புதிய அலுவலகம், புதுமையான சூழ்நிலை. அவளுடன் ஒன்றிரண்டு பெண்களும் வேலை செய்து கொண்டிருந்தனர். நல்லவேளையாக அவர்கள் வேற்று மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். கிரிஜா மனம் ஆறுதல் அடைந்தாள். அவளது பயம் எல்லாம் ஏதேனும் அவளைத் தெரிந்தவர்கள், அவளுடன் படித்தவர்கள், அதே இடத்தில் வேலை செய்து கொண்டிருப்பார்களோ என்ற தயக்கம் பின்னுக்கு இழுத்துக் கொண்டிருந்தது.

கிரிஜாவுடன் ஆறுபேர் பணியாற்றினர். அவர்களில் இருவர் பெண்கள்-ஒருத்தி கல்கத்தாவிலிருந்து வந்த பெண் அல்கா. தகப்பனார் கல்லூரியில் பேராசிரியர். பொழுது போகாமல் வேலைக்கு வந்தவள். மற்றொருத்தி சத்தியவதி, கணவனது வேலையின் சம்பளம் பற்றாக்குறையாக இருப்பதால் அவனுக்குக் கை கொடுக்க வேலை தேடி வந்த ஆந்திரப் பெண்.

அன்று காலை சத்தியவதி முடமுடக்கும் வாயில் சேலையில் அலுவலகத்தில் நுழைந்ததும், அல்கா பரபரப்புடன் கேட்டாள் ஆங்கிலத்தில் "மிக அழகான சேலை. வாவ்! எங்கே வாங்கினது?" என்றாள்.

"நீயெல்லாம் சின்னப் பெண். சம்பாதிக்கிற பணத்தை அப்படியே புடவைக் கடையில் போட்டுவிட முடியும். எங்களைப் போலத் தடுமாறிக் கொண்டிருப்பவர்கள் அபூர்வமாக் வாங்கும் சேலையைப் போய்-அதிசயப்பட்டுப் பேசுகிறாயே!" -சத்தியவதி கிண்டலாகக் கூறிவிட்டுத் தன் இருக்கையில் அமர்ந்தாள்.

டைப் இயந்திரத்தை சரி செய்து கொண்டிருந்த கிரிஜா நிமிர்ந்து பார்த்தாள். சத்தியவதியின் சேலை உண்மையிலேயே அழகாகத்தான் இருந்தது. அவள் கல்லூரி நாட்களில் கடைக்கு விஜயம் செய்த நிகழ்ச்சி நினைப்பில் நின்றது.

ஒரு முறை, பிரபலமான துணிக்கடை வாயிலில் நின்றிருந்த பொம்மையைப் பார்த்து கிரிஜா நின்று விட்டாள். கூடவே காரினின்றும் இறங்கிய அம்மா பத்மாவதி, மகளை உள்ளே கூப்பிட முயன்றும் பலிக்கவில்லை.

"அப்படி என்னதான் அந்த 'ஷோ கேஸ்' பொம்மை மேல மோகம் உனக்கு? உள்ளார வா!" என்று அதட்டினாள். அதற்குள் கடை முதலாளி ஓடோடி வந்து வரவேற்றார்.

"பொமமை மேல போட்டிருக்கிற சேலை மேல மோகம்!"-கிரிஜா வேடிக்கையுடன் கூறியதைக் கேட்ட கடை முதலாளி பெரிதாகச் சிரித்தார்.

"இவ்வளவுதானே? ஒரு சமயம் நீங்க பொம்மையையே விலைக்குக் கேட்டாலும் என்னால் மறுக்க முடியுமா?" பயந்தவர் போல அபிநயித்தார்.

"இதே மாதிரி சேலை ஒண்ணை எடுத்திடுங்கோ..." அம்மா உத்திரவிட்டபடி உள்பக்கம் சென்றாள். ஆனால் கிரிஜாவிற்கு அந்த பொம்மை மீது சுற்றியிருந்த சேலை மீது தான் மோகம் ஏற்பட்டிருந்

தது. ஒரு டஜன் சேலை வியாபாரத்தை இழப்பாரா முதலாளி? திரை போட்டு மறைத்து விட்டு, பொம்மைக்கு மாற்று சேலை உடுத்தி விட்டு, அவள் கேட்டதை அவிழ்த்து எடுத்து வந்தார்.

ஆயிரக்கணக்கில் துணிக்கடையில் வியாபாரம் செய்தவள் திருமணத்திற்குப் பிறகு? ஐம்பது ரூபாய் சேலைக்கு ஆயிரம் முறை யோசிக்க் வேண்டிய நிலை வந்திருந்தது. பலமுறை அதற்காக மனம் வருந்தி அழுதிருக்கிறாள். தன்னையே நொந்து கொண்டிருக் கிறாள். இனி அவள் விதி அந்த நிலைக்கும் கீழே இறங்கி விட்டதே!

"என்ன பார்க்கிறீங்க கிரிஜா?"-சத்தியவதி கேட்டாள். அலுவலக விஷயம் தவிர, சொந்த விஷயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வ தில்லை என்ற கட்டுப்பாட்டை மனதில் வைத்துக் கொண்டிருந்தாள் கிரிஜா, இருப்பினும், சற்று தளர்ந்து, "உங்களுக்கு இந்த சேலை ரொம்ப அழகா இருக்கிறது" என்றாள் மெல்ல.

"தேங்க்யூ. இதை வாங்கவே நான் திணறிப் போனேன். நல்ல வேளையாக, மாதாமாதம் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் வாங்கிக் கொள்கிற சேலை வியாபாரி ஒருத்தன் கிடைத்தான். என் சகோதரி வீட்டிற்கு அடிக்கடி வருபவன். ஏன் உங்கள் வீட்டிற்கு அனுப்பவா" திடீரெனக் கேட்டாள் அவள்.

ஒருகணம் தயங்கினாள் கிரிஜா. உண்மையாகவே அவளுக்கும் உடுத்திக் கொள்ள ஒன்றிரண்டு சேலைகள் வேண்டும். அரசிக்கு பள்ளிச்சீருடை இருப்பதால், இருப்பதை வைத்து சமாளிக்கலாம். அவள்...? அலுவலகத்திற்குக் கிளம்பும் பெண், பகட்டாக இல்லாவிட்டாலும் சுத்தமாக, நாசூக்காக வெளியே வர வேண்டாமா?

"என்ன யோசிக்கிறீர்கள் கிரிஜா? இந்த மனுஷர் வயதானவர். ரொம்ப வருஷமாகவே எங்கள் வீட்டிற்கெல்லாம் சேலை வியாபாரம் செய்பவர்."

அவளது குடியிருப்புப் பகுதிக்கு அந்த சேலைக் காரரை வரச் சொல்வதா?

"ஒண்ணு செய்யுங்களேன். நாளை பக்கத்து ஆபீஸ் வாயிலில் பிற்பகல் அவர் வருவார். எங்கள் ஊர் தோழி ஒருத்திக்கு கொண்டு வர ஏற்பாடு செய்திருக்கிறேன். சாப்பாட்டு இடைவேளையின் போது வருவார். தேவையானதை பொறுக்கி வைத்துக் கொள்ளுங்க. மாத சம்பளம் வரும் அன்று அவரே வந்து பணத்தைப் பெற்றுக் கொள்வார்."

"ஹேய்! என்னை மறந்து விட்டீர்களே..."-அல்கா கூவினாள்.

உன்னை முதலில் விட்டாலும் மோசம். ஏனெனில் உனக்கிருக்கிற துணி ஆசையில், மூட்டை சேலையையும் நீயே எடுத்துக் கொண்டு ஓடிவிடுவாய்!"-கண்களைச் சிமிட்டினாள் சத்தியவதி.

மூட்டைக்காரனிடம் மாத தவணையில் சேலை வாங்கும் அளவுக்கு கிரிஜாவின் நிலை மந்தமாகிப் போனது ஏன்? வாழ்க்கையின் பாதையில் அவள் எங்கே இடறிப் போனாள்?

"பதிலே காணோம்?"-சத்தியவதி தூண்டினாள். "சரி, பார்க்கிறேன்...".-பதிலளித்து விட்டு, வேலையில் கவனம் செலுத்தினாள். அலுவலகத்தின் நேரம் நெருங்கி விட்டதால், மற்றவர்கள் உள்ளே நுழைந்து விடுவார்கள் என்ற பயத்தில் பெண்கள் பேச்சை நிறுத்திக் கொண்டனர்.

**மூ**ன்றாம் நாள் மாலை வீடு திரும்பிய கிரிஜாவைக் கண்டு அஞ்சலை அதிசயித்துப்

போனாள். கையிலிருந்த காகிதப் பொட்டலத்தை அவளிடம் நீட்டி, "இத பாருங்க பாட்டி" என்றாள் சிறிது உற்சாகத்துடன்.

"குழந்தை தூங்குதும்மா, வீட்டில கொண்டு படுக்கவச்சிருக்கேன்..." என்றபடி, பொட்டலத்தைப் பிரித்தாள் அஞ்சலை.

நான்கு சேலைகள், மூன்று வாயில் சேலையுடன் ஒரு நூல் சேலையும் இருந்தன. "இதென்னம்மா? சம்பளம் வாங்கிட்டியா?

"இன்னும் ரெண்டு நாள் இருக்குதே.

"அதுக்குள்ளார எப்படி.....?" -அஞ்சலை முடிக்கும் முன் தவணை முறை பற்றி விளக்கம் சொல்லி முடித்தாள் கிரிஜா.

ஒரு விநாடி அஞ்சலை பதில் கூறவில்லை. "ஏன் பாட்டி! சேலை பிடிக்கலையா? இந்த நூல் சேலை உங்களுக்காக நான் ஆசையா வாங்கினது..."-கிரிஜா கவலையுடன் கேட்டாள்.

கண்கள் பனிக்க கிழவி கூறினாள். அம்மா நீ எனக்குப் பெத்த மகள் இல்லே இருந்தாலும் ஆசையும் பாசமுமா வாங்கிட்டு வந்ததை மறுக்ககூடாது. ஆனா-நீ சம்பளம் கையில வந்த பிறகு வாங்கிட்டு வந்திருந்தா சந்தோஷப்பட்டிருப்பேன். அதைவிட்டு, முன்னையே கடன்ல ஆரம்பிச்சிட்டயே" என்றாள் கவலையுடன்.

"தப்புத்தான் பாட்டி, எனக்கு உடுத்திக்க நல்ல சேலை இல்லே. மாசா மாசம் குடுத்து அடைச்சி டலாம்கிற தைரியம். செய்திட்டேன். இனிமே..."

"இப்படி அவசரப்பட்டு செலவு செய்திடாதேம்மா. பணத்தை சம்பாதிக்கிறது ரொம்ப சிரமம், செலவு செய்யறது ரொம்ப சுலபம்." அஞ்சலை அவளருகில்

வந்து தலையைத் தொட்டாள்.

"நீ யாரோ, நான் யாரோ.... ஆனா, இந்த சாகப் போற கிழவி சொல்றதை நல்லா நினைப்பு வச்சுக்கோம்மா... நீ எத்தனை மறைச்சாலும், உன் முகத்தில பெரிய மனுஷன் வீட்டுப் பொண்ணுன்னு எழுதி ஒட்டி இருக்குது. அதனால இந்த எடத்தை விட்டு சீக்கிரமா கௌம்பிடு" என்றாள் நடுங்கிய குரலில்.

"ஏன் பாட்டி? நான் எப்படி எங்கேன்னு இடம் தேடுவேன்?"-துயரத்துடன் அரற்றினாள் கிரிஜா.

"வேலை தேடிப் பிழைக்கிற சாமர்த்தியம் இருக்கில்ல? அதைப்போல, வீட்டையும் கண்டுபிடிச்சுக்கம்மா, என்னா-" கிழவி தடுமாறினாள்.

ஏன்? என்ன ஆச்சு? யாராச்சும் ஏதானும் சொன்னாங்களா பாட்டி?"-ஆத்திரமாகக் கேட்டாள் கிரிஜா.

"இட்டிலிக் கடை யாண்டை அந்த போக்கிரி பொன்னு ரங்கன் என்னெவெல்லாமோ பேசிப்பிட்டான். இந்த வயதில எதுக்கம்மா இந்தக் கிழவிக்கு வீண் பொல்லாப்பு" கண்களில் கவலை மின்னியது!

கலவரத்துடன் அஞ்சலையின் முகத்தைப் பார்த்தவளுக்கு விஷயம் சொஞ்சம் கொஞ்சமாக விளங்கிவிட்டது.

அவளைப் பின் தொடர்ந்து தொல்லை கொடுக்கும் கோஷ்டியினரில் ஒருத்தனாகத்தான் இருக்க வேண்டும். இனி என்ன செய்வது?

"நீ தன்னந்தனியா, ஆண் பிள்ளைத் துணையும் இல்லாமே இருக்கறேன்னு அந்தப் பாவிப் பசங்களுக்

குத் தெரிஞ்சிருக்குது. உனக்கு மட்டும் தொல்லைன்னு நினைச்சுக் கொள்ளாதே. எனக்கும் இனிமே தொல்லை ஆரம்பம் ஆயிட்டது-" வருத்தத்துடன் அஞ்சலை கூறிமுடித்தாள்.

கிரிஜா மறுபேச்சின்றி எழுந்து தன் வீட்டினுள் சென்றாள். வெறுமையாகக் கிடந்த வீட்டின் அறைகளைப் போல, அவள் மனமும் சட்டென சூன்யமாகிப் போனது. குழந்தை அரசி தூக்கத்தில் புரண்டு "அம்மா! அம்மா" என்று முனகினாள்.

பின்னாலேயே அவளைத் தொடர்ந்து வந்த அஞ்சலை, காகிதப் பொட்டலத்தைக் கீழே வைத்தாள். "என்னைத் தப்பா நினைச்சுக்காதே தாயி, உன்னோட நன்மைக்கின்னு சொல்றேன்."-ஒரு விநாடி நிறுத்தி விட்டு மீண்டும் அழுத்தமான குரலில் கிழவி கூறினாள். "எனக்கு ஒண்ணும் தெரியாது. உலக நடப்பு தெரியாதுன்னு நினைக்காதே. காலத்தை ஒட்டி நாமளும் மாத்திக்கணும். அதனால, பாழ் நெத்தியா வெளியே போகாதே. புருஷன் இல்லாத பொம்பளைன்னாலே, ரொம்ப ஆம்பிள்ளைங்களுக்கு வேலி இல்லாத பயிர்னு நினைப்பு...பேசாம பொட்டு வச்சிக்க-" கிழவி வெளியேறி விட்டாள்.

மறுநாள் காலை. அலுவலகத்திற்குக் கிளம்புமுன் அஞ்சலை பாட்டியிடம் சொல்லிவிட்டுப் போக வந்தாள் கிரிஜா. நெற்றியில் சிறு துளி பொட்டு, இடையில் இருந்த நீலநிற வாயில் சேலை, 'இத்தனை துன்பமும், உன் அழகை உருக்குலைச்சுக்கூட, இன்னமும் பாக்கி நிக்குதேம்மா!'-மனதிற்குள் குமுறினாள் கிழவி.

"வரேன் பாட்டி, இன்னைக்கிக் கொஞ்சம் 'லேட்' ஆகும். சம்பள நாள் நாளைக்கின்னா, இன்னைக்கே குடுத்திடுவாங்கன்னு சொல்லிக்கிட்டாங்க."

"அரசியை நான் பார்த்துக்கறேம்மா. ஆனா நான் சொன்னதெல்லாம் கவனம் இருக்கட்டும்" எச்சரித்தாள் அஞ்சலை.

# 7

குழந்தையை பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டு, மூச்சிறைக்க அலுவலகத்தை அடைந்தவளை அல்கா, வரவேற்றாள். "வாவ்! வெல்! ரொம்ப ஸ்வீட்டா இருக்கிறீர்கள்!"

வெட்கத்துடன் முகம் சிவந்த கிரிஜா 'தாங்க்யூ' என்றபடி இருக்கையில் அமர்ந்தாள். அவளது உடையலங்கார ரஸனையை தினகரன் எப்படி வர்ணிப்பான்?

'அதென்ன கிரி? நீ எந்த டிரஸ் போட்டாலும் அதுக்கு ஒரு அலாதி கவர்ச்சி வந்திடுது?' என்று கேட்பான் உல்லாசமாக.

படிப்படியாக அவன் குடிபோதையில் குணம் மாறிப் போன பிறகு 'யாருக்கு இந்த அலங்காரம் எல்லாம்?'என் எரிந்து விழத் துவங்கினான். இல்லாமை வந்த பிறகு, தலையில் பூ வைத்துக் கொள்வதைக் கூட வாயில் வந்தபடி பேசும் அளவு கீழ்த்தரமாக இறங்கிப் போனான்.

"நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?"-அல்கா முதன் முதலாகக் கேட்டாள்.

கிரிஜா சமாளித்தபடி சிரித்துவிட்டு, "வீடு தேடிக் கொண்டிருக்கிறேன். இப்போதுதானே முதல் சம்பளம் கைக்கு வரப்போகிறது.அடுத்த மாதம் முதல் வீட்டு வேட்டை ஆட வேண்டியதுதான்" என்றாள்.

"உங்களுக்கு எத்தனை வாடகை கொடுக்க முடியும் என்று கூறினீர்களானால், என்னால் ஆன உதவி செய்ய முடியும் என்று நம்புகிறேன்"-அல்கா அக்கறையுடன் கேட்டாள்.

சம்பந்தமே இல்லாதவர்கள் அவளுக்கு வலிய முன் வந்து உதவ நினைக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் விலகி நின்று அவள் படும் துயரை வேடிக்கை பார்க்க நினைக்கிறார்கள்.

"என்ன யோசனை?"

"என்னால் அதிக வாடகை கொடுக்க இயலாது. மேலும், என் கணவர் இறந்து போனதால், நானும் என் மகளும்தான். நல்ல பாதுகாப்பான இடத்தில் ஒரு சிறு பகுதி கிடைத்தாலும் போதும்."

"நிச்சயம் சொல்கிறேன்." அலுவலகம் ஆரம்பமாகும் நேரமாதலால் அவரவர் வேலையில் முழ்கினார்கள்.

அன்று கையில் ஐந்து நூறு ரூபாய் நோட்டுக் களைக் கண்டதும் மகிழ்ச்சி பிடிபடவில்லை கிரிஜாவிற்கு. செல்வந்தர் மகளாக வளைய வந்து கொண்டிருந்த காலத்தில், கைப் பையில் ஆயிரம் ரூபாய்வரை நோட்டுக்களைத் திணித்துக் கொண்டிருந்தவள்தான். இடதுகை விரல் நுனியில் நூறு ரூபாய் நோட்டுக்களை அலட்சியமாக விட்டெறிந்து கொண்டிருந்த காலமும் இருந்தது. நினைத்ததை நினைத்த கடைகளில் புகுந்து வாங்க முடிந்தது. இப்போது...? எண்ணி எண்ணிச் செலவழிக்க வேண்டும். வீட்டு வாடகை, மளிகை, குழந்தைக்கு பால் என்று கணக்குப் பார்த்தாக வேண்டும். அதே சமயம் அவள் மனத்தினுள் நிம்மதியும் மகிழ்ச்சியும் இருந்தன. அவளாகப் பாடுபட்டு சம்பாதித்த பணம். சுய முயற்சியால்

உழைத்துச் சேர்த்த வருமானம்.

முதல் சம்பளம் வாங்கிவிட்ட உற்சாகத்துடன் அண்ணாசாலை செல்லும் பஸ்ஸில் ஏறி அமர்ந்தாள். அரசிக்கு நல்லதொரு கதைப் புத்தகம் வாங்கித்தர வேண்டும். துணி, தின்பண்டம் எல்லாம் எப்போதுமே அவளால் வாங்கித்தர முடியுமே.

அண்ணாசாலையின் போஸ்டாபீஸ் நிறுத்தத்தில் இறங்கி சற்று தூரம் நடந்தாள். மாலை நேரம் ஆதலால் மக்கள் நெரிசல் அதிகமாகவே இருந்தது. எதிரே தெரிந்த திரைப்படங்களின் பெரிய 'கட் அவுட்டு'கள் அவளை அலட்சியமாகப் பார்த்தன.

'எத்தனை காலமாக எங்கள் தியேட்டர்களில், உன் காதலனுடன் உலா வந்திருப்பாய்? இப்போது என்ன செய்கிறாய்? புத்தகக் கடையைத் தேடி ஓடுகிறாயா? காதலின் பலனை அனுபவிக்கிறாயா?'

'என்னுடைய தகுதியற்ற காதல்தான் உலகத்துக்கு அளவுகோலாகி விடுமா? ஒரு பானைக்கு ஒரு சோறு பதம் என்று கூறுவது, இதுபோன்ற விஷயத்தில் மெத்த அறிவீனமல்லவா!'-மனதிற்குள் பதில் கூறியபடி நடந்து சென்று அந்தப் பெரிய புத்தகக் கடையினுள் நுழைந்தாள்.

குழந்தைகளுக்கான புத்தகத்தைப் பொறுக்கி எடுத்து, பில்லைக் கொடுக்க கவுண்டர் அருகில் சென்றாள்.

"உனக்கு இவளைத் தெரியுதோ? அவதான் நம்ம காலேஜ்ல படிச்சாளே...."

முதுகுக்குப் பின்புறம் இருவரின் லேசான கிசுகிசு கேட்டது. முதுகுத் தண்டில் சுரீர் என ஒரு சிலிர்ப்பு. திரும்பிப் பார்க்கத் துணிவு இல்லாமல், சட்டெனப் பணத்தைச் செலுத்தினாள். கையில் கிடைத்த

சில்லறையைக் கூட எண்ணிப் பார்க்க அவகாசம் இல்லை. வேகமாகப் புத்தகத்துடன் வெளியே விரைந்தாள்.

'கிரிஜா! எத்தனை நாளைக்கு இப்படி நீ ஓடி ஒளிய முடியும்? உண்மையை ஒருநாள் முகம் கொடுத்து எதிர்நோக்கும் துணிவு இருக்க வேண்டும் உனக்கு'-மனம் கூக்குரலிட்டது.

'முடியாது, என்னைப்பற்றி யாருமே தெரிந்து கொள்ள வேண்டாம்!'-மனதினுள் அலறியபடி பஸ் நிலையத்திற்கு விரைந்தாள். அவளை நெட்டித் தள்ளிவிடுவது போல் வந்து ஓரமாக நின்றது ஒரு 'பென்ஸ்கார்.'

கண்கள் வியப்பினால் விரிய அப்படியே நின்றாள் கிரிஜா. அவர்கள் வீட்டு வண்டி, அவளைத் தாண்டி ஒரு வாலிபக் கும்பல் இடித்தபடி சென்றது. சட்டென நினைவுக்கு வந்தவள், அருகிலிருந்த பழரச பானக் கடையின் பின்பக்கத்தில் ஓடிச்சென்று நின்று கொண்டாள். இதயம் படீர், படீரென்று அடித்துக் கொண்டது.

காரின் கதவைத் திறந்து டிரைவர் வழிகாட்ட, அம்மா இறங்கினாள். பிறகு அப்பா, அவர்களைத் தொடர்ந்து நளினி அவளுடன் ஒரு வெள்ளைக்கார இளைஞன். கிரிஜா ஆச்சரியம் தாளாதவளாய் உற்றுப் பார்த்தாள்.

வெள்ளைக்கார இளைஞன்-பட்டுக்கரை வேட்டி ஸில்க் ஜிப்பா சகிதம் மிக கம்பீரமாக இருந்தான். நெற்றியில் இலேசான விபூதிக் கீற்று. நடுவே சிறு குங்குமப் பொட்டு மிக அழகாக இருந்தது. கிளிப் பச்சை நிற பெங்கால் ஸில்க் சேலையில் கிளி போல இறங்கி வந்த நளினியின் கையை அவன் பலமாகப் பற்றிக் கொண்டிருந்தான். எல்லோருக்கும் பின்னால்

இறங்கிய அண்ணன் நந்தகுமார், காரை அதற்குண்டான நிறுத்தத்தில் நிறுத்தும்படி கூறி விட்டு வேகமாக அவர்களைப் பின் தொடர்ந்தான். யாவரும் அருகில் இருந்த பனராஸ் பட்டுச்சேலைக் கடைக்குள் நுழைந்ததைக் கண்ட கிரிஜா தன் கண்களையே நம்ப முடியாமல் உறைந்து போய்விட்டிருந்தாள்.

அடுத்த மாதம் முழுதும் வீடு தேடி அலைந்து உடல் சோர்ந்து போனாள் கிரிஜா. கேட்பவர்களிடம் அவளுக்கு பதில் சொல்ல முடியவில்லை. அடையாரிலிருந்து அண்ணா நகர் வரை அலைந்து திரிந்து அலுத்துப் போனாள்.

'ஏம்மா புருஷன் இறந்துட்டார்னு சொல்றே, நீயும் சின்ன குழந்தையும் எப்படி தனியா சமாளிப்பீங்க?'

'புருஷன் போன பிறகுதான் வேலைக்கு முயற்சி செய்தீங்களோ? உங்களுக்காக உத்தரவாதம் சொல்ல இங்கே யாராவது இருக்காங்களா?'

உற்றம், சுற்றம், உறவுமுறை, பின்பலம் எல்லாம் தேவையாக இருந்தன. ஆனால், அவள் எதுவும் சொல்ல முடியாதவளாய் தோல்வியடைந்து கொண்டிருந்தாள்.

வெறுப்பும் கசப்புமாக, கோட்டூர்புரத்திற்குப் புறப்பட்டுச் செல்ல பஸ் நிலையத்தை அடைந்தாள். பின்னால் வந்து அவளருகில் 'சர்'ரென்ற ஒலியுடன் நின்றது சிவசாமியின் கார்.

"எங்கே இந்தப் பக்க முழுசும் அலைஞ்சிண்டி ருக்கே. நேரமாயிட்டுது!"-உரிமையுடன் அதட்டி விட்டுக் காரின் கதவைத் திறந்து விட்டார்.

காரினுள் ஏறி அமர்ந்தவள், களைப்பின் மிகுதி யால் கண்களை மூடியபடி காரின் ஆசனத்தில் சாய்ந்தாள். "தாங்க்யூ மாமா."

கதவை மூடி வண்டியைச் செலுத்திய சிவசாமி வியப்புடனும், கவலையுடனும் அவளைப் பார்த்தார். "ஏம்மா குழந்தே ரொம்ப சோர்ந்து போயிட்டே? ஆபீஸ்ல வேலை ஜாஸ்தியா?"

"இல்லே மாமா, வீடுதேடி களைச்சுப் போயிருக்கேன்."

"வீடா? நீ இருக்கற எடம்?"

"இனிமே தனியா இருக்க அங்கே வசதிப்படாது. நான் மட்டும் தான்னா; பேசாம பெண்கள் ஹாஸ்டலுக்குப் போயிடுவேன். இப்ப அரசி ஒரு பொறுப்பு. அவளை வளக்கறதும், அவள் வருங்காலமும்தான் எனக்கு." முழுவதுமாக அவள் விவரித்தபோது அவர் மனம் கலங்கியது. கோட்டை போன்ற வீடு-ஆட்படைகள் எல்லாம் இருந்தும் இந்தப் பெண் அனாதை போலத் துரத்தித் துரத்தி அடிக்கப்பட்டு, புலியிடமிருந்து தப்பி ஓடுகிற மானைப் போல துடித்துக் கொண்டிருக்கிறாளே? இதென்ன கொடுமை? அவரது இளகிய மனம் பச்சாதாபத்தால் உருகியது.

"குழந்தே கிரிஜா! நீ என் வீட்ல வந்து இருந்திடேன். புறப்படும்மா...ம்!" என்றார் தீவிரமாக.

கிரிஜா நன்றி ததும்ப, கண்களில் நீர் பெருக அவரைப் பார்த்தாள். "மறுபடியும் தாங்க்ஸ் உங்க மனசில இருக்கற ஈரம்கூட எங்கப்பா மனசில கசியமாட்டேங்குது போகட்டும். எனக்கு ஒண்ணும் புரியலே மாமா...." குழப்பத்துடன் ஆரம்பித்தாள்.

"எங்க வீட்ல வந்து தங்கறதைப் பத்தியா?"

"உங்க வீட்ல வந்து தங்கினா, உங்களை அது பாதிக்காட்டாலும். என்னை ரொம்ப பாதிக்கும். உங்க மனுஷங்களுக்கு என் வருகை பிடிக்காமப்

போகலாம். சொந்த மனுஷர்கள் இருக்கும்போது இவளுக்கு இங்கே என்ன வேலைன்னு நினைக்கலாம்."

"கௌரவப் பிரச்சினையா!"

கிரிஜா பெருமூச்செறிந்தாள். "என் சுய கௌரவத்தை நான் என்னைக்கோ இழந்திட்டேன். ஆனா, ஒரு விஷயம்தான் எனக்கு இன்னமும் விளங்கலே."

"எதைச் சொல்றே?"-சிவசாமி அவளைப் பார்த்தார்.

கடைத்தெருவில் அவள் கண்ட நிகழ்ச்சியைக் கூறி முடித்துவிட்டு, "இன்னொருத்தனுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன் என்பதற்கு அன்னைக்கி அப்பா என்னை எப்படி-எப்படி தண்டிச்சார்? அதிலயும் நான் ஒருத்தனைத்தான் விரும்பினேன், பழகினேன், பேசினேன், மறந்தும் கூடத் தொட்டுப் பேசியதில்லே. திருமணம் என்கிற பந்தத்திற்குப் பிறகுதான் நாங்கள் கணவன்-மனைவி என்ற முறையில் பழகினோம், அங்கே"-பேசாமல் நிறுத்தினாள் கிரிஜா. அவள் மனம் அன்று கண்ட காட்சியில் வெகுவாக பாதிக்கப் பட்டிருந்தது.

"உனக்கு விஷயமே தெரியாது-"-சிரிப்புடன் ஆரம்பித்தார் சிவசாமி.

"ஏன்? அப்பா மனசு மாறிப் போய்ட்டாரா? ஜாதி பேதம் பாக்காத அளவு உயர்ந்தவராய்ட்டாரா?" -கிண்டலாகக் கேட்டாள் கிரிஜா.

"இந்த அமெரிக்கப் பையன் 'இல்லினாய்ஸ்' யுனிவர்ஸிடியில நந்தகுமாரோட படிச்சவனாம். அவனுக்கு ஏகப்பட்ட பணம் இருக்காம். இந்தியா, அதன் கலாச்சாரம்னு ஒரே பித்தா அலைஞ்சு இங்கே வந்திருக்கான்."

"ஓஹோ! நந்தகுமாரோட தோழன் என்கிறதாலே நளினியோட கையைப் பிடிச்சு கொஞ்சற அளவுக்கு உரிமை குடுத்திட்டாங்களோ?"-குரோதமாக சிரித்தாள் கிரிஜா.

"அவசரப்படறியே. வியாபார விஷயமா, உங்கப்பாவும் அந்தப் பையன் ராபர்ட் அப்பாவும் ரொம்ப நெருக்கம். ஹரே ராமா, ஹரே கிருஷ்ணாவில இந்தப் பையனும் ஒரு அங்கத்தினராம். இந்தியாவிலதான் எனக்கு இந்திய முறைப்படி கல்யாணம் நடக்கணும்னு சொல்லிட்டானாம். உன் தங்கச்சியை இவனுக்குப் பிடிச்சுப் போச்சு., கல்யாண ஜவுளி வாங்கத்தான் கடைக்கு வந்திருப்பா... அதைத்தான் நீ பாத்திருக்கே" என்றவர் உரக்கச் சிரித்தார்.

"ஒரு வேடிக்கை பார்த்தியா? அன்னைக்கி, வேற ஜாதிக்காரன்னு சொல்லி நீ என் மகளே இல்லைன்னு உன்னை வீட்டைவிட்டே விரட்டும்படி செஞ்சான் செல்வம். இப்ப...அமெரிக்க மாப்பிள்ளையை அட்டகாசமா கல்யாணம் செய்யப் போறான்" என்றார் தொடர்ந்து.

கிரிஜா அவமானத்தால் எரிந்து எரிந்து வெந்தாள். ஏழை, தாழ்ந்த ஜாதி என்றுதான் தினகரனை அவர் ஒதுக்கினார். இந்திய மண்ணிலே பிறந்த இளைஞன், முன்னுக்கு வரக்கூடியவன் என்று அவரே மனமுவந்து தினகரனைக் கைதூக்கி விட்டிருந்தால், ஒருவேளை அவனும் நல்ல கணவனாக, தந்தையாக வாழ்ந்திருக்கக் கூடும். சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஒருத்தனை எப்படியும் திசை திருப்பிவிடலாமே! காதல் என்பதில் ஜாதி பேதம் குறுக்கிடக்கூடாது என்று காந்தி மஹாத்மா கூறியதை, இது போல சுயநல நோக்கில் பிரசாரத்திற்கு எத்தனை பேர் பயன்

படுத்திக் கொள்கிறார்கள். அரசியல், வியாபாரம் என்ற பல சூதாட்டங்களில் ஜாதி இரண்டொழிய வேறில்லாத அந்தஸ்தைப் பெற்றிருக்கிறது. ஆண், பெண் என்ற ஜாதிதான் அங்கு நிலவுகிறது. ஆனால் ஏழை, பணக்காரன் என்று வந்துவிட்டபோது...?

"இல்லே மாமா. எங்கப்பாவுக்கு ரெண்டே ஜாதிதான் இருக்கு அதனால அவர் ஒத்துக் கொண்டிருப்பார்" என்றாள் ஆத்திரத்துடன்.

சிவசாமி அவளை சிந்தனையுடன் பார்த்தார். "அவருக்கு பணக்காரன் ஏழைங்கிற ரெண்டே ஜாதிதான் இருக்குன்னு தெரிஞ்சிடுச்சு. பூஜை, புனஸ்காரம்கிறதெல்லாம் வெறும் வேஷங்கள்தான். நான் நேசிச்சது ஒரு ஏழை தாழ்த்தப்பட்டவனை. இப்ப அவரா மாப்பிள்ளை பாக்கறது அந்நிய தேசத்தானை, நமது கலாச்சார மண்ணிலே புதுசா கால் பாவ நினைக்கிறவனை, முற்றிலும் மாறுபட்ட, மதத்திலே வேறுபட்ட அமெரிக்கனை ஏன்னா, அவன் பெரிய மிலியனர். கோடிக்கணக்கில் பணத்தைக் குவிக்கிற பணக்கார ஜாதி..." பேசிக்கொண்டே போன கிரிஜா, 'ஓ'வென்று விசும்பி அழத் துவங்கினாள்.

"மாமா! நான் கீழே விழுந்திட்டவ. அடிப்பட்ட குழந்தை மாமா. என்னை நீங்களும் வெறுத்து ஒதுக்கிட மாட்டீங்களே ப்ளீஸ்! சொல்லுங்க? நான் மட்டும் அவர் பெத்த பொண்ணு இல்லியா? அவர் ரத்தம் என் உடம்பில ஓடலையா? ப்ளீஸ்!"-உடல் குலுங்க, பொருமிப் பொருமி அழுதாள்.

காரின் 'கிர்'ரென்ற ஒலியைத்தவிரப் பேச்சற்று காரினுள் நிசப்தம் நிலவியது. கிரிஜா அழுதுஓயட்டும் என்று சிறிதுநேரம் பேசாமல் இருந்தார் சிவசாமி.

கிரிஜா! அம்மா குழந்தே! ஐ யாம் ஸாரி! நீ

இப்படி மனசு கலங்கிப் போனா என்னால தாங்க முடியாதும்மா. அழாதே. தைரியம்மா இரு.! -கண்களைத் துடைத்துக் கொண்ட கிரிஜாவைப் பார்த்தார் சிவசாமி.

கோட்டூர்புரத்தருகில் காரை நிறுத்தியவர், "உன் வீடு வரை வந்தா உனக்குப் பிடிக்காது" என்றார்.

"உங்க காலடி படக்கூடிய இடம் அதில்லை மாமா" என்றாள் மனம் கலங்கிப் போன கிரிஜா.

"கிரிஜா! எனக்கு இப்பத்தான் ஞாபகம் வரது. சைதாப்பேட்டையில், மாமி சொந்தக்காரம்மா ஒருத்தி இருக்கா. அவ பிள்ளை அமெரிக்காவில செட்டில் ஆயிட்டானாம். வீட்டில் தனியா இருக்கப் பயந்துண்டு, மாடியில குடித்தனம் வச்சிருக்கா. இன்னொரு பக்கம் கீழே ஒரு 'போர்ஷன்' விடப் போறதா சொன்னா. போய் பாக்கறியா? அட்ரஸ் தரவா? வாடகை அதிகம் இருக்காதுன்னு நினைக்கறேன்"

"மாமிக்குத் தெரிஞ்சுட்டா.....'"கிரிஜா சிறிது கலவரத்துடன் வினவினாள்.

அவளுக்குத் தெரிஞ்சா என்ன? அவ சொந்தக்காரி வீட்டுக்குப்போகும் போதுதானே பாக்கணும்..."

மறு பேச்சின்றி சைதாப்பேட்டை விலாசத்தை வாங்கிக் கொண்டு திரும்பி நடந்தாள் கிரிஜா. இனிமேல் அஞ்சலை பாட்டியை அதிக நாள் தொல்லை கொடுக்க முடியாது. சைதாப்பேட்டை வீடு என்றால், அவளுக்கும் அலுவலகம் செல்ல வசதியாக இருக்கும். ஆனால் வீடு கிடைக்குமா? கவலை அதிகரிக்க பொறுமையின்றி தவித்தாள் அவள். சோதனையாக அலுவலகத்திலும் ஓயாத வேலைகள் இருந்தன. பல நாட்களுக்குப் பிறகுதான்,

சிவசாமி தந்த விலாசத்தைத் தேடிப் பிடித்துச் செல்ல அவளால் முடிந்தது.

## 8

வெளியே இருந்து பார்த்தபோது வீடு கன கச்சிதமாக இருந்தது. முன்புறம் சிறிய தோட்டம். மாடிப் பகுதிக்குச் செல்லத் தனி வழி. வாயிற்பக்கம் குரைத்த வண்ணம் ஓடிவந்த நாய்க்குட்டியை அதட்டியபடி வெளியே வந்தாள் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி. காதும், மூக்கும் மின்ன, செல்வாக்கான தோற்றம்.

"யாரும்மா? என்ன வேணும்!"-இனிமையான குரலில் கேட்டதும் அவளது படபடப்பு அடங்கியது. சிறிது தைரியத்துடன் முன்னால் வந்தவள், "திருமதி, லீலா வீடு இதுதானே?" என்று கேட்டாள்.

"ஆமாம் யார் அனுப்பிச்சது?"

சிவசாமியின் பெயரைச் சொல்ல விரும்பாதவளாய் அவள் வேலை செய்யும் அலுவலகத்தைக் கூறினாள். "எங்க ஆபீஸ்ல சொன்னாங்க இங்கே வீடு குடுக்கறதா."

அந்தம்மாள் அவளை ஏற இறங்கப் பார்த்தாள்.

காண்ட்ராக்ட் போட்டுக் குடுக்கணும். வாடகை அதிகம் வேணாம். நல்ல மனுஷாளா வேணும். ஒரு அறை, சமையல், குளியல், கழிவறைகள்.

"வீட்டுக்குள்ளே உக்காந்து பேசலாமா?" முன்னறைப் பக்கம் போனவள் ஒரு நிமிஷம் ஆடிப்

போய் விட்டாள். சிவசாமியின் மனைவி அங்கு முன்னறை சோபாவில் அமர்ந்திருந்தாள்.

"இல்லே இப்படியே பேசிக்கலாம்" என்றபடி முன் வராந்தாவிலேயே பிடிவாதமாக நின்று விட்டாள். ஐயோ! இதென்ன விபரீதம்! சொல்லி வைத்தாற் போல் இந்தம்மா வந்து உட்கார்ந்திருக்கிறாள். அவளது கடைசி நம்பிக்கையும் தகர்ந்து போய்விடுமா? மனம் பொடிப் பொடியாக உடைய ஆரம்பித்தது.

"இத பாரும்மா. பார்த்தா சின்னப்பெண்ணா தெரியறே. நான் ரொம்பக் கண்டிப்பானவள். விஜிடேரியனுக்குத் தான் நான் வீடு தருவதாக இருக்கேன்-ஏன்னா நான் விஜடேரியன். இரண்டாவது, நீ கண்ட நேரத்துல வரக்கூடாது. இதெல்லாம் உதவாது. மத்தபடி நல்ல குணமா இருந்தா போதும். திடீர் திடீர்னு காலி பண்ணக்கூடாது" என்றபடி படபடப்புடன் பேசி முடித்தாள்.

"நான் திருச்சி பக்கத்தில் இருந்து வரேன். என் சின்ன மகளோட தனியா நான் தங்கியிருக்கிற எடத்துல இருக்க முடியலே. அதனால நீங்க சொல்றதுக்கெல்லாம் கட்டுப்படறேன். இடம் இல்லேன்னு மட்டும் சொல்லிடாதீங்க!" குரல் தழுதழுத்தது அவளுக்கு.

"உனனைப் பார்த்தா ரொம்பத் தெரிஞ்ச முகமா இருக்கு. இங்கே யாராவது சொந்தக்காரரா இருக்காளா!"

"இல்லேம்மா..." என்று கூறி முடிப்பதற்குள், "யாரது லீலா... யாரு வந்திருக்கா!" என்றபடி ஸ்ரீமதி சிவசாமி வெளியே வந்தாள்.

கிலியினால் நாக்கு புரள மறுத்தது கிரிஜாவிற்கு. "அட! இது..." அந்தம்மாள் அவளை அடையாளம்

கூறு முன், சமிக்ஞை செய்தாள் கிரிஜா. அவள் கண்கள் கெஞ்சின.

"இந்தப் பெண்ணுக்கு வீடு வேணுமாம். இங்கே யாரையாவது தெரியுமான்னு கேக்கறேன். இந்தக் காலத்தில யாரையும் நம்ப முடியலையே?" என்றாள் திருமதி லீலா.

"பாவம் லீலா! முகத்தைப் பார்த்தா பரிதாபமா இருக்கு, ஒரு 'டிரயல்' பாரு" என்று தாழ்ந்த குரலில் அவளிடம் சிபாரிசு செய்தாள் திருமதி சிவசாமி.

உள்ளே வந்து உக்காரம்மா. ரொம்பக் களைச்சிப் போய் வந்திருக்கே. சாப்பிட்டுவிட்டு பிறகு பேசலாம். உபசரித்தபடி முன்னறை சோபாவில் அமரச் செய்தாள் திருமதி லீலா.

"இவகிட்டே பேசிண்டிரு. நான் போய் காப்பி எடுத்திண்டு வரேன்." திருமதி லீலா உள்ளே சென்றதும், அவசரமாக திருமதி சிவசாமியின் கைகளைப் பற்றிக் கொண்டு "மாமி! ப்ளீஸ்! என்னைக் காட்டிக் குடுத்திடாதீங்க. நான் இன்னார்னு தெரிஞ்சா எனக்கு வீடு தர மாட்டாங்க!" இலேசாக விசும்பினாள்.

திருமதி சிவசாமி அன்புடன் அவள் கைகளைத் தட்டிக் கொடுத்தாள். கண்கள் கலங்கின. "அசட்டுப் பெண்ணே! என்ன காரியம் செய்துட்டேம்மா. அவசரப்பட்டு உன் வாழ்க்கையையே வீணாக்கிண்டே. இப்பப் பாரு அவதிப் படறியே. மாமா எங்கிட்ட எல்லாம் சொன்னார். என் மனசு எப்படி வேதனைப்பட்டது தெரியுமா?" அழுகையினால் குரல் தடைப்பட்டது அந்தம்மாளுக்கு.

"நானாகத் தேடிக்கிட்டவனை தாழ்ந்த ஜாதிக் காரரைக் கல்யாணம் செய்துகிட்டவள்னு தெரிஞ்சா இந்தம்மா கிட்டயே சேக்க மாட்டாங்க மாமி.

எங்கப்பாவே என்னை வீட்ல சேக்கலியே! எங்கம்மா எட்டிப்பாக்கவே மறுத்திட்டாங்களே. அதனால்"- கண்களை அவசரமாக துடைத்துக் கொண்டாள்.

"நீ கல்யாணம் செஞ்சிண்டதுல தப்பு ஏதும் இல்லேம்மா. இந்தக் காலத்தில இது சகஜம். ஆனா அவன் நல்ல குணவானா இல்லாமல் போனதுக்கு ஜாதி என்ன செய்யும் சொல்லு? உசந்த ஜாதின்னு பேரை வச்சிண்டு அக்கிரமம் பண்றவனும் இருக்கான். தாழ்த்தப்பட்டுவிட்ட குலத்தில் பிறந்து விட்டோமேன்னு நந்தனைப் போல உசந்து போனவனும் இருக்கான். ஆழ்வார்கள்ளயும், நாயன்மார்களிலேயும் தாழ்குலத்தவர்னு குறிப்பிட்டிருக்காளேம்மா. வீணா மனசைப் போட்டு அலட்டிக்காதே. நான் எக்காரணம் கொண்டும் உன்னைக் காட்டிக் குடுக்கமாட்டேன்!" என்றாள் திருமதி சிவசாமி தாழ்ந்த குரலில்.

"மாமி! இப்பத்தான் என் மனசு லேசாயிருக்கு. நான் ரொம்பக் கஷ்டத்தை அனுபவிச்சிட்டேன். அதுவே எனக்குப் போதுமான தண்டனை" தன்னைப் பற்றிய கழிவிரக்கத்தில் அவள் விழிகள் கசிந்தன.

"என்ன ரெண்டு பேரும் ரகசியம் பேசறேள்?" காப்பி தம்ளர்கள் அடங்கிய மரத்தட்டை, அருகில் இருந்த முக்காலி மீது வைத்தபடி கேட்டாள் திருமதி லீலா.

"ஒண்ணுமில்லே லீலா! நீ அமெரிக்கா போய் வருவே இல்லியா? அதைப்பத்தி சொல்லிண்டிருந்தேன். நீ அப்படி வெளியூர்போனா வீட்டைக் கவனிக்கணும்: தோட்டமெல்லாம் சுத்தமாக பாத்துக்கணும். மாடியில குடித்தனம் இருக்கிறவாளும் நல்ல மனுஷாள்னு சொல்லிண்டிருந்தேன். காண்டிராக்ட்

எழுதிக்கறச்சே எல்லாம் படிச்சிக்கோ சரியா. என்ன?" திருமதி சிவசாமி சமாளித்தாள்.

சைதைப்பேட்டை குடித்தனத்திற்கு இடம் பெயர்ந்தபோது அஞ்சலை ஒரு கணம் அழுதாள். "அம்மா தாயி! உன்னைப் பிரியணும்னு நினைச்சாலே மனசு வெடிச்சுப் போகுது. போற எடத்துல நல்லா இரும்மா. இந்தக் கிழவிக்கு அங்கே எல்லாம் வர முடியாது கண்ணு. உன்னால எப்படி முடியுமோ வந்து எட்டிப் பாத்துக்க." அவள் வேண்டாம் எனப் பிடிவாதமாக மறுத்தும் கேளாமல், கிரிஜா மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களைக் கையில் திணித்தாள்.

"சேலை வாங்கிக் குடுத்தியே தாயீ!"-கிழவி குலுங்கக் குலுங்க அழுதாள்.

"இது உங்க கைச் செலவுக்குப் பாட்டி, இதை நான் கூலியா நினைச்சுக் குடுக்கலே. நீங்க செய்த உதவிக்கு ஆசையா தார பரிசு வச்சுக்கொள்ளுங்க." குழந்தை அரசிக்கு கன்னத்தோடு கன்னம்வைத்து முத்தம் கொடுத்து வழியனுப்பி வைத்தாள் அஞ்சலை.

அதிகமான குடித்தன சாமான்கள் இல்லாததும் ஒரு வகையில் கிரிஜாவிற்கு வசதியாகிவிட்டது. கைவண்டி ஒன்றில் அவளது பீரோ, எஞ்சிய தட்டுமுட்டுச் சாமான்களை வாரிப் போட்டுக் கொண்டு புது வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டாள்.

குழந்தை அரசிைப் பார்த்த திருமதி லீலா அசந்து போனாள். "எத்தனை அழகான குழந்தை. என்ன அழகாக ஆங்கிலம் பேசுகிறது!" மூக்கின் மீது விரல் வைக்காத குறை. "ஏம்மா, உம் மக எந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறா?

"ஆங்கிலப் பள்ளியில் படிக்கிறாள்" என்றாள் கிரிஜா அமரிக்கையுடன்.

நான்கைந்து தினங்களில் அவள் வீட்டை சீர்படுத்தி விட்டிருந்தாள். முன்னறையில் படுக்கையும், இரண்டு நாற்காலிகளும் போட்டு வைத்தாள். சமையலறை வெகு சுத்தமாக விளங்கியது. திருமதி லீலாவின் காண்டிராக்ட் பத்திரத்தைப் படித்துப் பார்த்துவிட்டுக் கையெழுத்திட்டாள் கிரிஜா.

ஒரு கணம் அவளது கையெழுத்தையே உற்றுப் பார்த்த அந்த அம்மாள், விந்தையுடன், "முத்துக் கோத்தாப்போல இருக்கேம்மா. எங்க படிச்சே..." என்றாள்.

"நா....நான் ரொம்பப் படிக்கலேம்மா. எங்கம்மா வேலை செஞ்ச எடத்துல, என் மேல இரக்கப்பட்டு 'கான்வென்ட்' பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வச்சாங்க. அவ்வளவுதான். மத்தபடி நாங்க ரொம்ப சாதாரண குடும்பந்தான்" மெல்லிய குரலில் கூறினாள் கிரிஜா.

"சாதாரணமானவங்களும் மனுஷங்கள்னு நினைக்கிறவள் நான். ஏன்னா, நானும் வெளியூர் போய் பல தேசங்களைச் சுத்திப் பாத்தவம்மா. நாலு எடம் சுத்திப்பார்த்து, பல இடத்து மக்களோட பழகினாலே நம்ம மனம்கூட விசாலப் பட்டுப் போறதம்மா."

"அப்படிங்களா? ரொம்ப சந்தோஷமா இருக்கு நீங்க பேசறதைக் கேட்கும்போது" என்றாள் கிரிஜா சிரித்தபடி.

அரசியைப் பள்ளியிலிருந்து திரும்பிக் கூட்டிவர பஸ் வசதி செய்து விட்டிருந்தாள் கிரிஜா. அன்று பள்ளிக்கூட விழாவிற்காக லீவு விட்டிருந்ததால், அரசி வீட்டில் இருக்கிறாள். பக்கத்தில் லீலா அம்மா இருக்கிறார்கள் என்ற நிம்மதியில் கிரிஜா வீடு திரும்பிக் கொண்டிருந்தாள்.

தெருவில் சிவசாமியின் கார் நின்று கொண்டிருந்தது. கிரிஜா ஒரு கணம் ஆடிப்போனாள். "மாமா! நீங்க எங்கே இங்கே?" காரினுள் தலையை நீட்டிப் பார்த்தவளுக்கு மேலும் அதிர்ச்சி. காரில் அவர் இல்லை. கை கால்கள் மரத்துப்போன உணர்வில் மெதுவாக அடிமேல் அடி எடுத்து வைத்து உள்ளே சென்றாள்.

முன்வராந்தாவில் குழந்தை அரசியைத் தூக்கிக் கொஞ்சியபடி சிவசாமி விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தார். திருமதி லீலாவதியும், திருமதி சிவசாமியும் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தனர்.

போயிற்று. இவர்கள் எல்லோருமே ஒன்றுகூடி சேர்ந்து விட்டார்கள். அவளைப் பற்றிய உண்மையை இனி மேலும் ஒளிக்க முடியாது. பல நாள் திருடி ஒரு நாள் அகப்பட்டுக் கொண்ட கதைதான். பலவும் எண்ணியவளாய் உள்ளே வந்து நின்றுவிட்டாள்.

அவளைக் கண்ட சிவசாமி, "வாம்மா குழந்தே கிரிஜா! வீடு எப்படி இருக்கு?" என்றார் மகிழ்ச்சி பொங்கும் குரலில்.

"என் பேத்தியை இப்பத்தான் பார்க்கறேன். அப்பிடியே உன்னாட்டம்-நீ சின்னப்போ இருந்தாப்போல இருக்காம்மா. எனக்கு பழசெல்லாம் ஞாபகம் வந்துடுத்து குழந்தே..."தழதழத்தார்.

"மாமா! நான்...நீங்கள் வந்து...." கிரிஜா குளறினாள். பயத்தால் உடல் சில்லிட்டுப் போயிற்று. மெல்ல லீலா அம்மாவின் முகத்தைப் பார்த்தாள்.

திருமதி லீலா 'கொல்' லென்று சிரித்தார். "நான் உன்னை முதல்ல பார்த்தபோதே சந்தேகப்பட்டேன். உன் பேச்சு, நடை, உடை, பாவனை எல்லாமே எனக்கு ரொம்ப சந்தேகத்தைக் கிளப்பிட்டுது; உம்

மேல வேற தினுசான சந்தேகம் கூட வந்தது. ஆனா, இவர் எல்லாத்தையும் சொல்லிட்டார்."

"அப்ப உங்களுக்கு என்னைப் பத்தி ஆட்சேபனை எதுவும் இல்லியே?"-தயக்கத்துடன் கேட்டாள் கிரிஜா.

"நான் உலகமெல்லாம் சுத்திவந்தவன்னு சொல்லி இருக்கேனில்லையா? உயர்வு, தாழ்வு சொல்லல் பாவம்னு பாரதியாரே பாடி வச்சிட்டாரே. இதுக்கும் மேலே எனக்கு சொல்லத் தெரியலே, ஆனா நீ ஆரம்பத்திலே என்கிட்ட எதுக்காக உங்கப்பாவைப் பத்தி மறைச்சேன்னு லேசா கோபம் வந்தது" என்றார் திருமதி லீலா.

கிரிஜா தலையை நிமிர்ந்தாள். எங்கப்பாவுக்கு குடும்ப கௌரவம் பெரிசுன்னு நினைச்சு என்னையே ஒதுக்கிட்டார். அந்தக் குடும்ப கௌரவத்தை நானும் மதிக்கிறவள்னு காண்பிக்கணும்னு நினைச்சேன். அந்த கௌரவத்தைக் குலைச்சிட்ட பெண் நான்தான்னு சொல்ல விரும்பலைம்மா, சில கௌரவங்கள் காப்பாற்றப் படணும். அதனாலதான் உண்மையைச் சொல்லலே. தன்னை மறந்தவளாய் அழ ஆரம்பித்தாள்.

"சே! நாங்க இல்லே உன்னை மதிக்க"-திருமதி லீலா அதட்டலும், உரிமையுமாய் அவள் கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

# மோகனா, மோகனா!

## 1

"**மோ**கனா! மோகனா!உன்னைத்தானே!"

அவள் மாமியாருக்குப் பீரங்கிக் குரல்.

இரவில் அந்த வேளையில் தெருவிலிருந்த எட்டாவது வீடு வரை எட்டிய மாமியாரின் கூப்பாடு தன் காதில் விழாதது போல் படுக்கைமீது அசையாது கிடந்தாள் மோகனா.

ஆனால் சங்கரி லேசுப்பட்டவள் இல்லை.

உண்மையாக அவள் உறங்கிவிட்டாளா என்று பார்க்கத்தான் தன் பருமனான உடலைத் தூக்கிக் கொண்டு மூச்சுத் திணற அறைக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு வந்து நின்றாள்.

சுர்ர்ர்ர்ர் என்று கோபம் மோகனாவின் உள்ளங் காலில் புறப்பட்டு உச்சந்தலையில் ஓங்கியடித்தது.

இப்பொழுதும் அவள் அசையவில்லை. அட்டை யாக படுக்கைமீது ஒட்டிக் கொண்டிருந்தாள்.

மாதத்திற்கு இரண்டு தடவையாவது அவள் கணவன் கோதண்டம் தான் வேலை பார்த்த கம்பெ னியின் வியாபார காரியமாக வெளியூர்களுக்குப் போய்வர நேர்ந்தது.

இந்த முறை அவன் பம்பாய்க்குப் போய்விட்டிருந்தான். வீடு திரும்ப ஒரு வாரத்திற்கு மேல் ஆகும் என்பது வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியும்.

அவன் மட்டும் ஊரில் இருந்தால் சங்கரி இத்தனை அதட்டல் போடமாட்டாள். கொஞ்சம் குரலைத் தணித்துக் கொண்டுதான் பேசுவாள்.

மூன்று பிள்ளைகளைப் பெற்ற மகாராணி அவள்...ஒரே செல்ல மகனைக் கல்யாணம் செய்து கொடுத்ததும் தம் கடமை முடிந்து போய்விட்டது என்பது போலத் தலையைப் போட்டுவிட்டார் அவள் கணவர். மூத்த இரண்டு பிள்ளைகளும் வெளியூர்களில் வேலை தேடிக் கொண்டு மனைவிகளுடன் தப்பிவிட்டனர்.

கடைசிப் பிள்ளைக்குச் சென்னையிலேயே வேலை கிடைத்தது அவளுக்கு மிகவும் சௌகரியமாகி விட்டிருந்தது.

மூத்த பிள்ளைகளைவிடக் கோதண்டம் அம்மாவின் பேச்சுக்குக் கொஞ்சம் கட்டுப்பட்டுப் போகிறவன்.

அந்த நினைவில் சங்கரிக்கு ரொம்பவும் கர்வம்.

கணவன் விட்டுப்போன அந்த வீடு அவள் பெயரில் இருந்தது. உள்ளூரிலேயே வாழ்க்கைப் பட்டிருந்த மகள் திவ்யா அம்மாவைப் பார்க்க அடிக்கடி பிறந்தகத்துக்கு ஓடிவந்துவிடுவாள்.

சம்பாதித்துப் போட ஒரு பிள்ளையும் உறவு கொண்டாட ஒரு மகளும், வசிக்க ஒரு வீடும் இருந்து விட்டதனால் சங்கரியைக் கையில் பிடிக்க முடியவில்லை.

சுபாவத்திலும் கொஞ்சம் கோபக்காரி. மகனது அரவணைப்பில் கோபம் கொஞ்சம் கூடுதலாகித்

தூக்கியெறிந்து பேசும் பெருத்த திமிராக மாறி விட்டிருந்தது.

விடிவிளக்கின் மங்கலான வெளிச்சத்தில் படுக்கையில் கிடந்தவளை அவளால் ஊன்றிப் பார்க்க முடியவில்லை.

"அதுக்குள்ளே தூங்கப் போயிடுவியா? எத்தனை வேலைகிடக்கு!"அதட்டியபடி குழல் விளக்கைப் பளிச்சென்று எரியவிட்டாள்.

கண்களைக் கூசிய விளக்கொளியில் சட்டென்று பார்க்க முடியாது, கண்களை இடுக்கிக் கொண்டாள் மோகனா.

"என்ன வேணும்?" மெல்லியகுரலில் முனகினாள்.

"எழுந்திரு.....சமையலறையை ஒழுங்கு பண்ணி முடிக்கலை..."

"திவ்யாவுக்கு ஹார்லிக்ஸ் கலக்கித்தர மறந்துட்டே. என் மருந்துகளை எனக்குக் கொடுக்க நினைப்பு இல்லை, மறந்து படுத்துட்டே?" படபடவென்று பொறிந்து தள்ளிக் கொண்டிருந்தாள் சங்கரி.

அதற்குமேல் எழுந்திருக்காவிட்டால் மாமியார் உலுக்கி எழுப்பி உட்கார வைத்து விடுவாள் என்பது அவளுக்குத் தெரியும்.

அவளது அலுவலகத்திலேயே அவளுக்கு அன்று ஏராளமான வேலை. உடம்பு முழுவதும் புண்ணாகத் தெரித்தது. படுக்கையை விட்டு நகரவே மனம் இருக்க வில்லை.

'என்ன சோம்பேறித்தனம் இது' சங்கரி அதட்டிய போது மோகனாவுக்கு ரொம்பவும் கோபம் பொத்துக் கொண்டுதான் வந்தது.

ஆனாலும் என்ன பயன்?

அவர்கள் வீட்டுக்கு மருமகளாக வந்த நாளிலிருந்து

அவள் வாய் பேசாது எதிர்த்து எதையும் சொல்லாத மாமியாரின் ஆர்ப்பாட்டங்களுக்கு அடிபணிந்து நாத்தனாரின் குற்றச் சொற்களை காதில் வாங்காது வீட்டுக்கு வரும் உறவினர்களுக்கு உபசாரம் செய்து சம்பாதித்துப் போட்டு வீட்டை நிர்வகித்து, கணவனைக் கவனித்துக் கொண்டு...

ஓவென்று கத்தவேண்டும் போன்றதொரு எரிச்சலுடன் அவள் எழுந்து நின்றாள்.

கைகளை வேகமாக உதறிவிட்டுப் புடவைத் தலைப்பை இழுத்துக் கட்டிக் கொண்டு மறுபடியும் சமையலறைக்குள் நுழைந்தாள்.

மாலை பஸ் நிலையத்திலிருந்து வேகமாக வீட்டுக்கு ஓட்டமும் நடையுமாக வந்தவள் குளியலறைக்குள் நுழைந்து அவசரமாகப் பச்சைத் தண்ணீரில் குளித்து மாற்றுடை அணிந்து கொண்டு சமையலறைக்குள் புகுந்தவள் இந்த ஒன்பது மணிக்கு மேல்தான் விடுதலை பெற்றாள்.

நாத்தனார் திவ்யா பிறந்த வீட்டுக்குச் சீராட வந்து விட்டால் இரவு சமையல் ரொம்ப சம்பிரதாயமாகத் தான் இருக்க வேண்டும்.

ஒரு ரசம், பொரித்த அப்பளம் என்று செலவைச் சிக்கனப்படுத்த முடியாது.

போதாததற்கு திவ்யாவின் கணவன் கால மெல்லாம் அவளைப் பிரிந்து தவிக்கிறவன் போல காலை வீட்டை விட்டுப் பிறந்தகம் வந்திருக்கும் மனைவியை மாலை அழைத்துப்போக வந்துவிடு வான்.

மாப்பிள்ளை உடனே வீடு திரும்ப சங்கரி அனுமதிக்க மாட்டாள்.

“இருந்து சாப்பிட்டுவிட்டுப் போகலாமே!” வாய்

நிறைய உபசரித்து விடுவாள்.

வேலை செய்துவிட்டு அலுத்து வந்திருக்கிறாள் மருமகள். மாப்பிள்ளை வேறு சாப்பிட உட்கார்ந்து விட்டார். கொஞ்சம் கூடமாட உதவுவோம் என்ற எண்ணமின்றி அவர்களுடன் உட்கார்ந்து டி.வி.பார்க்கத் தொடங்கிவிடுவாள்.

முன்னறையில் அவர்கள் பேச்சும் சிரிப்புமாகக் கலகலத்துக் கொண்டிருக்கும்போது அடுப்படியில் வெந்து கொண்டிருப்பாள் மோகனா.

ஹார்லிக்சைக் கலக்கி ஆற்றிப் பதமான சூட்டில் டம்ளரில் நிறைத்துக் கொண்டு திவ்யா படுத்திருந்த எதிர்ப் பக்கத்து அறைக்குள் சென்று மேசை மேல் வைத்தாள் மோகனா.

"அம்மா என்னை இந்த வார முழுசும் இருக்கச் சொல்றாங்க. தம்பி ஊரிலிருந்து வரவரைக்கும் அம்மாவுக்குக் கொஞ்சம் பயமா இருக்காம்...பொழுது போக மாட்டேங்குதாம்."

தாடை இறுக மௌனமானாள் மோகனா.

இப்படி ஏதாவது சாக்கு பிறந்த வீட்டில் அடிக்கடி டேரா போட்டுவிடுகிறாள் திவ்யா.

இல்லாத சலுகைகளையெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டு ஒரு வார காலத்தில் அம்மாவுடன் அவளும் மோகனாவை ஆட்டிப்படைக்கத் தொடங்கிவிடுவாள்.

அலமாரியைத் திறந்து மாமியார் மூன்று வேலைகளும் சாப்பிட்டுக் கொண்டிருந்த மருந்து பாட்டில்களை வரிசையாக எடுத்து மேசைமேல் வைத்தாள்.

அவள் மருமகளாக இந்த வீட்டிற்குள் வலது காலை எடுத்துவைத்த நாளிலிருந்து சங்கரி ஒருநாள் கூடத் தன் நோய்களைப் பற்றிப் புலம்பாதிருந்த தில்லை.

காலவலி, மூட்டுநோய், தலைவலி, மயக்கம் என்று பலவற்றையும் சொல்லிக் கொண்டு இலை நிறையப் போட்டதைச் சுவைத்துச் சாப்பிட்டுவிட்டு, மூன்று வேளைக்கும் மாத்திரைகளை விழுங்கிக் கொண்டிருந் தாள்.

குடும்பத்தின் வைத்தியச் செலவு கோதண்டம் வேலை செய்த கம்பெனியின் உபயம்.

அதன் பயன்? சங்கரிக்கு ஏகப்பட்ட நோய்கள். மருந்துகள், மருமகளின் பணிவிடைகள்.

சிவப்புக் குழாய் மருந்து. வெள்ளை மாத்திரைகள் இரண்டு, கறுப்புக் குழாய் மருந்து, வெள்ளை மாத்திரைகள் இரண்டு, கறுப்புக் குளிகம் இரண்டு என்று எடுத்து ஒரு சிறு தட்டில் வைத்து சாப்பிடத் தண்ணீர் டம்ளர் ஒன்றை அருகில் கொண்டுவந்து வைத்தாள்.

மாப்பிள்ளைக்கு சாப்பிடக் கொடுத்திருந்த பாயசக் கிண்ணமும் ஸ்பூனும் சமையலறையில் அப்படியே கிடந்தன.

அன்று வெள்ளிக்கிழமை, சம்பளம் வாங்கி வந்த நாள் வேறு. சுவாமிக்கு நிவேதனம் செய்யக் கொஞ் சம் பாயசம் வைத்துவிட்டிருந்தாள் மோகனா.

பண்ணி வைப்பவளுக்குப் பானை என்றபடி அவளுக்கு ஒரு துளிகூடச் சாப்பிட அது கிடைக்க வில்லை.

வேகமாகக் கிண்ணங்களில் ஊற்றி மகளுக்கும் மாப்பிள்ளைக்கும் வினியோகித்து விட்டிருந்தாள்.

சமையலறையை விரைவாகச் சுத்தம் செய்து விளக்கை அணைத்துக் கதவை மூடிவிட்டு வெளி யேறுமுன் சங்கரி அவளைக் கூப்பிட்டாள்.

"அலமாரி மேல் தட்டிலிருக்கிற தென்னை மரத்

தைலத்தை எடுத்துக் கொஞ்சம் கால்களுக்குத் தடவிப் பிடிச்சு விட்டுட்டுப் போ. திவ்யாவுக்கு இதெல்லாம் செய்யத் துப்புக் கிடையாது. நீதான் இதமா நல்லாப் பிடிச்சுவிடறே'' உத்தரவிட்டாள்

'பற்களைக் கடித்துக் கொண்டு கோபத்தைக் கட்டுப் படுத்தியபடி உள்ளங்கையில் தைலத்தை வார்த்துக் கொண்டு படுக்கைமீது கால்களை நீட்டிக்கொண்டு சாய்ந்துவிட்ட மாமியாருக்குக் கால் பிடிக்கும் வேலை அடுத்தபடியாகத் தொடர்ந்தது.

ஆரம்பத்தில் அடித்துப்போட்டது போன்று அவளைத் தழுவிக்கொள்ளக் காத்திருந்த தூக்கம் இப்போது ஓடிச் சென்றுவிட்டது.

உடம்பில் வலியும் நெஞ்சில் வேதனையும்தான் மிஞ்சியிருந்தன. தலைமாட்டிலிருந்த ஸ்விட்சை அமுக்கி விடி விளக்கையும் அணைத்துவிட்டு அறையை இருளாக்கிக் கொண்டாள்.

அப்பொழுது உறக்கம் கண்களை மூட மறுத்தது.

எதிர் அறையில் படுத்திருந்த மாமியாரின் குறட்டை துல்லியமாகக் கேட்டது.

தலைக்கு மேல் சுழன்ற மின்விசிறி எழுப்பின ஒலியைத் தவிரப் பெரிதாக ஆரம்பித்துச் சன்னமாகக் கேட்ட சங்கரியின் குறட்டை ஒலியைத் தவிர எங்கேயோ தெருவில் வேகமாக விரைந்த வாகனம் எழுப்பிய ஓசையைத் தவிர எங்கும் ஒரே அமைதி.

ஆனால் அவள் மனம் உணர்ச்சிக் கொந்தளிப்பில் புயலாகச் சீறிக் கொண்டிருந்தது.

அவளுக்கு இந்தக் கல்யாணத்தில் என்ன சுகம்?

உண்மையைச் சொல்லப் போனால் அவள் திருமணமாகாததற்கு முன்னால் எத்தனையோ நிம்ம தியாக, மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

நகரத்திலிருந்த சிங்காரம் அண்ட் கோ என்ற மருந்து விற்பனை மொத்த வியாபார நிறுவனத்தில் அவள் கணக்கு வழக்குப் பகுதியின் தலைவருக்கு உதவியாளராக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆரம்பத்தில் நானூற்று எண்பது ரூபாய் சம்பளத்தில் அமர்ந்த வேலை, படிப்படியாக உயர்ந்து சம்பளம் ஆயிரத்தை எட்டிவிட்டிருந்தது. ஆனால் ஆரம்பத்தில் அவள் பிறந்த வீட்டில் வேலைக்குப் போய்வரும் பெண்ணாகக் கொண்டாடப் பட்டபோது இருந்த செளகர்யம், அடைந்த போஷணைகள் புகுந்த வீட்டில் துளியும் கிடையாது.

"குளிர்காலம் ஆரம்பிச்சுட்டது. சாயங்கால வேலையில் ரொம்பச் சிலுசிலுப்பாக இருக்கு. வெந்நீர் வச்சிருக்கேன் குளிச்சுட்டு வா. சூடா காப்பி தரேன். பிறகு அப்பாவோட உட்கார்ந்து நிதானமாகச் சாப்பிடலாம்" அம்மா எப்படி உபசரிப்பாள்!

இத்தனைக்கும் ஒரு நூறு ரூபாயைத் தன் சொந்த செலவிற்காக ஒதுக்கிக் கொண்டு முன்னூற்று சொச்சம்தான் அம்மாவின் கையில் கொடுப்பது வழக்கம்.

கை நிறைய மகள் பணத்தைக் கொட்டி நிரப்பி விட்டது போல அம்மா மகிழ்ச்சியில் பொங்கிப் போவாள்.

"வேலை செய்கிற பெண், உடம்பு தெம்பா இருக்கணும். பாலைச் சாப்பிட்டுவிட்டு தூங்கு" மறக்காது ஒவ்வொரு நாள் இரவும் அம்மா பால் டம்ளருடன் வந்து தலைமாட்டில் நிற்பாள்.

ஆயிரம் ரூபாய் சொச்சத்தையும் மாமியார் கையில் கொடுத்துவிட்டுப் பஸ் பயணச் செலவுக்குக் கையேந்தி நின்றாள். ஒரு முழம் பூ வாங்கித் தலையில் வைத்துக் கொள்ளக்கூட உரிமையில்லை. சோப்பு

பவுடர், லிப்ஸ்டிக் செலவு பற்றி ஒழியட்டும் அவள் கணவன் தேவைப்பட்டவைகளை ரகசியமாக ஏதோ கள்ளக்கடத்தல் பொருள்கள் போல யாருக்கும் தெரியாது வாங்கி வந்து கொடுத்து விடுகிறான்.

ஆனால் வீட்டுக்கு வந்ததும் ஒரு வாய்க் காப்பி கொடுக்க அவளுக்கு அங்கே யாரும் இல்லை.

அவளே கலந்து சாப்பிட்டுவிட்டு மாமியாருக்கும் ஒரு டம்ளரில் நிறைத்துத் தர வேண்டும்.

"தலையை வலிக்கிறது. நீ வந்ததும் காப்பி கொடுப்பேன்னு பேசாம படுத்துட்டேன்" என்று கூறிவிட்டு, அந்தி வேளையில் முகம்கூடக் கழுவாது கலைந்த முடியும் கசங்கிய புடவையுமாகப் படுக்கையிலிருந்து எழுந்து வந்து மருமகளுக்குக் கதவைத் திறப்பாள் சங்கரி.

விடியலுக்கு முன்பே எழுந்து சுறுசுறுப்பாக வேலைகளை முடித்துவிட்டுப் பளிச்சென்று காணப்படும் அவளது அம்மாவுக்கு நேர் எதிராகப் படுசோம்பேறி அவள் மாமியார்.

ஆனால் அதிகாரம் செய்வதில் அவளுக்கு நிகர் அவளேதான். ஜாதகப் பொருத்தம் பார்த்துக்கொண்டு அலைந்த அவளது அப்பா ஏன் அந்த வீட்டின் பொருத்தத்தைக் கொஞ்சம் அலசிப் பார்க்கவில்லை. ஆமாம், வேலை செய்து கொண்டிருந்த அவளுக்கு அப்பா கல்யாணம் செய்து வைக்கவேண்டும் என்று ஏன் அப்படி அவசரப் பட்டார்? ஒரு குறிப்பிட்ட வயது வந்ததும் பெண்ணைப் பெற்றவர்கள் ஏன் இப்படிப் பதறிப் போகிறார்கள்?

பெண் என்பவள் பெற்றவர்களுக்குப் பெரும் சுமையா? படித்திருந்தாலும், வேலை செய்தாலும் சரி அவள் ஒரு பெரும் சுமை. அந்தச் சுமையை

இன்னொருவர் தலையில் தள்ளிவிட வேண்டும்.

நமது கடமைவிட்டது என்று மன ஓய்வு அடைய வேண்டும். இப்படித்தான் பெண்ணைப் பெற்றவர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால்....அந்தச் சுமை உண்மையில் அவர்களிட மிருந்து அகன்று விடுகிறதா?

கண்ணை மூடிக்கொண்டு பெண்ணை எவன் கையிலாவது பிடித்துக்கொடுத்து விடுகிறது. பின்னர் கண்களைத் திறந்து பார்க்கும்போது தென்படும் அவஸ்தைகளை நேரில் கண்டு சகிக்க முடியாது தவிப்பது, கலங்குவது. என்ன பயன்?

சில தினங்களுக்கு முன்னர் ஒரு நாள் மாலை அவள் அலுவலகம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது பஸ் நிலையத்தில் அம்மாவைச் சந்திக்க நேர்ந்தது.

“இத்தனை நாழியா ஆகிறது?” அம்மா திகைப்புடன் கேட்டாள்.

“இந்தப் பக்கத்துப். பஸ் ஒண்ணைத் தவற விட்டால் அடுத்தது வர நேரமாகும். ஆபீஸ் நேரங்களில் ரொம்பக் கூட்டம். இப்போ நான் இரண்டு பஸ்களை தவற விட்டு விட்டிருக்கேன்.”

“அடபாவமே! வீட்டுக்கு வந்து ஏதாவது சாப் பிட்டு விட்டுப் போயேன்.”

“நேரம் இல்லை. நான் போய்ச் சமைக்கணுமே?

“சமைக்கணுமா? உன் மாமியார் என்ன செய்யறா?”

“அவளால் எதுவும் முடியறதில்லை. உடம்பு சரியில்லை.”

“குண்டு போல இருக்கா. அவளுக்கு என்ன கேடு?” பெற்றவள் பதட்டமாகக் கேட்டாள்.

“அந்தக் குண்டு மனுஷிக்கு ஒரு கொத்தடிமை

தேவைப்பட்டது. என்னை நீங்க அவள் கையில் பிடிச்சுக் கொடுத்திருக்கீங்க." ஆத்திரமாகக் கேட்கணும் போலத்தான் மோகனாவுக்கு ஒரு படபடப்பு ஏற்பட்டது. அருகில் நின்ற மற்றவர்களை பார்த்துவிட்டு அடக்கிக் கொண்டாள்.

"இளைத்துக் கறுத்துப் போயிருக்கிறாயே! நல்லாச் சாப்பிடறதில்லையா?"

"சாப்பிடறேன் அம்மா, என்னவோ உடம்பு இளைச்சிட்டுப் போறது."

"ஒரு பத்துநாள் லீவு போட்டுவிட்டு நம்ப வீட்டுக்கு வந்து தங்கினால் கொஞ்சம் உடம்பு தேறும்."

"முடியாதே அம்மா, என் மாமியார் ஒப்புக்க மாட்டாள்."

அம்மா அவளைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

அம்மாவைக் கண்டதும் அவளுக்குத் தொண்டை வரைக்கும் துக்கம் அடைத்துக் கொண்டது.

தண்ணீரைக் கண்டால் தாகம். தாயைக் கண்டால் அழுகை வருமாமே? எத்தனை உண்மை!

எங்கேயோ வெளியூரில் வாழ்கிற அம்மாவைப் பல ஆண்டுகளுக்குப்பின் பார்த்து அந்தப் பிரிவின் கொடுமையை நினைத்து குலுங்கி அழுவது போல அவளுக்குத் திடீரென்று அம்மாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு மனம் விட்டு அழ வேண்டும் போல ஒரு ஆவேச உணர்வு ஏற்பட்டது. என்ன செய்வது? பஸ் நிலையம், பொது இடம். சொந்தப் பிரச்சினைகளை அளவளாவ முடியாத இடம். பூட்டி வைத்துக்கொண்டு தவிக்கும் தன் உணர்வுகளைக் கொட்டி அவிழ்த்து அம்மாவிடம் ஆறுதல் பெற முடியவில்லை.

"வரேன் அம்மா" கூறிவிட்டு அவளைத் திரும்பிப்

பார்க்க முடியாது பஸ்ஸின் கூட்டத்தில் மறைந்தாள். பஸ் நகரும்போது பார்த்தாள். அம்மா புடவைத் தலைப்பால் கண்களை ஒற்றிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

பாசமுள்ள தாயைப் பிரிந்து நேசமில்லாத ஒரு குடும்பத்துக்குள் சிக்கி வேலை செய்து சம்பாதித்துப் போட்டு வீட்டில் உழைத்துத் தன்னையே சிறுகச் சிறுக அழித்துக் கொள்ளும் இந்த ஒரு அடிமைத் தனத்திற்குத்தான் திருமண வாழ்க்கை என்று பெயரா?

பொல பொலவென்று கண்ணீர் தலையணைமீது உதிர்ந்தது.

கல்யாணம் ஆண்களுக்கு ஒரு கால் கட்டாம்.

பெண்களுக்கு? ஒரு பெருத்த இரும்பு விலங்கு.

பெருமூச்செறிந்தபடி படுக்கைமீது புரண்டாள். வேதனையுடன் மோகனா.

# 2

விடிந்ததுமே அவளுக்கு ஒரே தலைவலி.

கெய்ஸரைப் போட்டுவிட்டு அவசரமாகப் பல்துலக்கி முகம் கழுவிக் கொண்டாள்.

அதற்குள் இருமுறை மாமியார் சமையலறைக்குள் வந்து எட்டிப் பார்த்து விட்டாள்.

“திவ்யாவுக்கு விடியற்காலை நாலு மணிக்கே காப்பி சாப்பிட்டாக வேண்டும். இல்லாட்டா ஒத்தைத் தலைவலி வந்து விடும்.”

‘எனக்குக் காப்பி சாப்பிடாமலே இப்போ இரட்டைத் தலைவலி வந்திருக்கு. இதுக்கு என்ன

சொல்லப் போறீங்க?'' இரைந்து கத்தவேண்டும் போல அவளுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

கல்யாணமாகிப் புக்ககம் வந்து அவர்களுடன் வாழத் தொடங்கிய இந்த ஓராண்டு காலத்திற்குள் எத்தனை முறை தன் எரிச்சலை அடக்கிக் கொண்டு மரியாதையை உத்தேசித்து, புரண்டு எழுந்த ஆத்திரத்தை அமுக்கிக் கொண்டு போலியானதொரு புன்னகையுடன் அவர்கள் இழுத்த இழுப்புக் கெல்லாம் ஆடியிருக்கிறாள்? தொடர்ந்து அவள் இப்படியே இருக்கச் சாத்தியப்படுமா?

வேலைக்காரி கொண்டு வந்து வீசிய பால் பொட்டலங்களை வாய் திறந்து பாலைப் பாத்திரத்தில் விட்டு அடுப்பில் ஏற்றினாள். இன்னொரு பக்கம் அலுமினியக் கெட்டிலில் நீரை நிறைத்துக் கொதிக்க வைத்தாள். டிகாக்ஷன் இறங்குவதற்குள் சங்கரி ஒரு நடை அடுப்பங்கரைப் பக்கம் வந்து வேவு பார்த்தாள்.

கொதித்த பாலை இறக்கி மூடி வைத்துவிட்டு-பில்டரை ஓங்கி ஆத்திரத்துடன் ஒரு தடவை தட்டி விட்டுக் குளியலறைக்குள் புகுந்து கொண்டு விட்டாள்.

லேசான சூட்டுடன்தான் தண்ணீர் குழாயில் வழிந்தது.

'போதும்...நெஞ்சும், உடம்பும் தினமும் தீயாகச் சுடுகிறதே. அதுவே போதும்', என்று தனக்குள்ளே முணுமுணுத்தபடி குளியலை முடித்துக் கொண்டாள்.

காப்பியைக் கலந்து மாமியாருக்கும் திவ்யாவுக்கும் தந்துவிட்டுத் தனக்கும் வேலைக்காரி பொன்மணிக் கும் டம்ளர்களில் நிறைத்தாள்.

அலமாரியைத் திறந்து மேல் தட்டிலிருந்த பிளாஸ்டிக் டப்பாவிலிருந்து ஒரு சரிகை அட்டையை

இழுத்து உரித்து ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு காப்பியுடன் விழுங்கினாள்.

மீதியை வேகமாகப் பருகிவிட்டு, காலி டம்ளரை யும் காப்பி டம்ளரையும் எடுத்துக்கொண்டு பின் பக்கம் சென்றாள்.

கிணற்று மேடை ஓரத்தில் பாத்திரங்களைப் பரத்திக் கொண்டு தேய்த்துக் கழுவத் தொடங்கிய பொன்மணி அவளைக் கண்டதும் நிமிர்ந்தாள். சாதாரணமாகக் காலை வேளையில் அவள் முகத்திலே கடுகு வெடிக்கும். குடிகாரக் கணவனையும்-வேலையற்றுத் திரியும் பிள்ளையையும் வைத்துச் சோறு போட்டுக் காப்பாற்ற அவள் விடியுமுன்பே எழுந்து நான்கு வீடுகளுக்கு ஓடவேண்டியிருந்தது. அடிக்கடி அதை நினைத்துக் கொண்டு ஆத்திரப்படுவது வழக்கம். எஜமானி எது கேட்டாலும் சீறி விழுவாள். ஒன்றும் பாதியுமாக வேலையை முடித்துவிட்டு ஓடிச் சென்று விடுவாள்.

ஆனால் ஏனோ அவளுக்கு மோகனா மீது பூனைக் குட்டியின் பாசம்.

"என்ன இன்னிக்கு உன் மூஞ்சி என்னமோ போல இருக்கு" கைகளைக் கழுவித் தன் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டு மோகனா நீட்டிய காப்பியை வாங்கிக்கொண்டாள்.

"கொஞ்சம் லேசாத் தலைவலி. வேறே ஒண்ணு மில்லே," என்று முனகிய அவளைப் பொன்மணி பரிதாபமாகப் பார்த்தாள்.

"இந்த வீட்டில் நான் பத்து வருஷத்துக்கு மேலே வேலை பார்க்கிறேன். உன் மாமியார் சங்கதி எனக்கு நல்லாவே தெரியும். நல்ல நாளிலேயே அவங்க படுசோம்பேறி. இப்ப நீ வந்ததும் சும்மா குந்திக்கிட்டு நாள் முழுக்க அதிகாரம் செய்யறாங்க. சே!"

தோளைக் குலுக்கிவிட்டு காப்பியைக் குடித்தாள். "நல்லாக் காப்பி போடறே. நல்லாச் சமைக்கிறே. அதுக்காக நாள் முழுதும் இப்படியா வேலை கொடுத்து வெளுத்து வாங்குவாங்க? தன் பெண்ணை மட்டும் குந்த வச்சுச் சோறு போட்டுக் கொண்டிருக்கிறாங்களே-இது என்ன நியாயம்?"

பதிலளிக்காது மௌனமாக நின்ற மோகனாவின் அருகில் எழுந்து வந்து நின்றாள். குரலைக் கொஞ்சம் தாழ்த்திக் கொண்டாள்.

"நீ என்ன பொண்ணு? படிச்சிருக்கே-ஆனாலும் தில்லே இல்லையே? அந்த மூணாம் வீட்டு மருமக உன்னைப் போல வாயை மூடிகிட்டு இருந்தவதான். இப்ப எப்படி மாறிட்டா தெரியுமா?" அவளைக் கண்டா மாமியார் கதி கலங்கிப் போறாங்க.

சும்மா சொன்னதையெல்லாம் கேட்டுவிட்டு பெருமாள் மாடுமாதிரி தலையாட்டிக்கிட்டிருக்காதே. உன் பெரிய ஓரகத்தி பம்பாயில் இருக்காங்களே.... அவங்க கிட்ட உன் மாமியார் ஜம்பம் சாயறதில்லை தெரியுமா? சின்னவங்க கிட்டேயும் இந்தம்மா தந்திரம் பலிக்காது. ஏமாந்தவ நீன்னு தெரிஞ்சுகிட்டு ஏறி மிதிக்கிறாங்க. என்னது, நான் பேசிகிட்டே போறேன். வாயைத் திறந்து ஒரு வார்த்தை பதில் சொல்ல மாட்டேங்கறியே?"

"நான் என்ன பதில் சொல்லணும்னு எதிர் பார்க்கிறே?"

"உன் மாமியார் நாலு வார்த்தை பேசினா பதிலுக்குச் சூடா ஒண்ணு திருப்பிக் கொடு. தானே அடங்கிப் போய் விடுவாங்க."

வாயிற்படியருகே நிழலாடுவதைக் கண்டு வேகமாகத் திரும்பிப் பார்த்தாள் மோகனா. அவளது மாமியார் சொல்லி வைத்தாற்போல அங்கே ஆஜராகி

விட்டிருந்தாள்.

"காலைலயே இவளோட பேசிக்கொண்டு நின்னா அடுப்பு என்ன கதியாகிறது. இப்போ மணி என்ன தெரியுமா?"

விர்ரென்று உள்ளே சென்றாள் மோகனா.

பரபரப்புடன் அவர்கள் சாப்பிடக் கொஞ்சம் உப்புமா தயாரித்தாள்.

பிரிஜ்ஜிலிருந்த காய்களை ஆராய்ந்து விட்டுத் தேவையானவைகளை எடுத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

பகல் வேளை அவர்களுக்குச் சாப்பிட உணவைத் தயாரித்து ஹாட் கேசில் வைத்துவிட்டுக் கொஞ்சம் தயிர் சாதம் பிசைந்து தன் டிபன் டப்பாவில் அடைத்துத் தயாராக வைத்துவிட்டுக் குளித்துவிட்டுச் சாவகாசமாகச் சாப்பாட்டறையில் உட்கார்ந்தவர் களுக்கு உப்புமா, காப்பி பரிமாறி விட்டு, தன் அறைக்குள் ஓடி அலுவலகத்திற்குக் கிளம்ப ஆயத்தம் செய்து கொண்டாள்.

"உப்புமா ஒரு டிபனா, எனக்குக் கட்டோட பிடிக்கிறதில்லை" என்று முகத்தைச் சுளித்தபடி கை கழுவ எழுந்த திவ்யாவைப் பாராது போல மோகனா தன் தோள் பைக்குள் டிபன் டப்பாவை அடைத்துக் கொண்டாள்.

"நேத்து, நீ பஸ் கட்டணத்துக்குப் பணம் எடுத்துக் காம போனியே எப்படிச் சமாளிச்சே?" கேட்டபடி மாமியார் தன்னுடைய மணிபர்சை மிகவும் யோச னையுடன் திறந்தாள்.

மாத முதல் தேதி அவள் வாங்கிக் கொண்டு வரும் சம்பளக் காசோலையை சட்டென்று வாங்கித் தன் பீரோவுக்குள் வைத்துக் கொள்ளும் சங்கரி அன்றாடம்

அவளுக்குப் பஸ் பயணத்திற்குச் சில்லறை எடுத்துக் கொடுக்க ரொம்பவே கடுத்தும் கொண்டாள்.

பம்பாய் பயணமாகியிருந்த கணவன் போகுமுன் அவளிடம் ஒரு சிறு தொகையைக் கைச்செலவுக்கு மிகவும் ரகசியமாகக் கொடுத்துவிட்டுப் போயிருந்தான்.

அந்தப் பணத்திலிருந்துதான் அவள் தாராளமாகத் தன் பங்குக்கு என்று இருபத்தைந்து ரூபாய்களைத் தலைமைக் கணக்கர் மகள் கல்யாணத்திற்கு அலுவலக ஊழியர்கள் வாங்க உத்தேசித்த பரிசுக்கு வழங்கி விட்டிருந்தாள். அலுவலகத்துத் தோழி சியாமளாவுடன் பகல் உணவு நேரத்தின்போது எதிரே இருந்த கான்டீனுக்குச் சென்று குலாப் ஜாமுனும் ரவா தோசையும் சாப்பிட்டாள். பகல் உணவு நேரத்தில் உட்கார்ந்து படிக்க ஒரு மாத நாவல் ஒன்றை வாங்கினாள். அந்த வார இறுதியில் எப்படியாவது அம்மாவுக்குக் கொடுக்க ஒரு ரவிக்கைத் துண்டு வாங்கிக் கொண்டாள்.

மீதம் அவளிடம் இருந்த சில்லறையில்தான் இரண்டு தினங்கள் அவள் மாமியாரிடம் கை நீட்ட மறந்து பஸ் பயணத்திற்குச் செலவழித்துக் கொண்டிருந்தாள்.

"நீங்க கைச் செலவுக்குக் கொடுப்பதிலே மீதம் பிடிச்சு வச்சிருந்ததைத்தான் உபயோகித்தேன்." சட்டென்று வாயில் வந்ததைச் சொன்னாள்.

சங்கரி அவளைச் சந்தேகமாகப் பார்த்தபடியே அன்று தேவைப்பட்ட சில்லறையை எண்ணி மேஜை மேல் வைத்தாள்.

"ஒரு அரைநாள் உன்னால லீவு போட முடியும்னா கேட்டுப்பார். திவ்யாவும் நானும் நாளை அல்லது மறுநாள் ஒரு சினிமாவுக்குப் போகலாம்னு உத்தேசிக்

கிறோம். வீட்டைப் பார்த்துக் கொண்டு ராத்திரி சமையலையும் கவனிக்க நீ வீட்டில் இருந்தால் சௌகரியமாக இருக்கும்."

"இப்போ லீவு கொடுக்க மாட்டாங்க. ஏற்கனவே இரண்டு பெண்கள் லீவில் இருக்காங்க. இருக்கிறவங்க எல்லா வேலைகளையும் சமாளிக்க முடியாம திணறறாங்க. நான் போய் இது சமயம் லீவு கேட்டால் கிடைக்கிறது சந்தேகம்."

"நான் வாயைத் திறக்கறதுக்கு முந்தி ஏன் முட்டுக் கட்டை போடறே. போய்க் கேட்டுப் பாரேன். உனக்குச் சொன்னால்தான் புத்தியிலே உறைக்கும். தானாச் செய்கிற சாமர்த்தியமே கிடையாது. உன் ஓரகத்தி வனிதா இருக்கிறாளே, அவ ரொம்ப கெட்டிக்காரி, வெட்டிண்டுவான்னா கட்டிண்டு வந்திடுவா." கோபத்துடன் படபடத்தாள்.

"சரி, அப்படியே அசந்து போய் நிக்காதே. வேலைக்குக் கிளம்பு, நேரமாகலை? மாமியார் அதட்டினாள்.

பொன்மணி பாத்திரங்களைக் கழுவிய பின் வராந்தா மேடை மீது கவிழ்த்துவிட்டு ஓடிவிடுவது வழக்கம்.

மோகனாவுக்காக இரக்கப்பட்டு கொஞ்ச நாட்களாக அவள் பாத்திரங்களைக் கழுவினதும் துடைத்து உள்ளே கொண்டு வந்து சமையலறை அலமாரியில் ஒழுங்காக அடுக்கிவிட்டுப் போகத் தொடங்கியிருந்தாள். முன் போல துவைத்த துணிகளை அப்படியே பிளாஸ்டிக் வாளியில் குவித்து வைத்துவிட்டுப் போகாது, உதறி மாடியில் பரத்தலாக உலர வைத்து காற்றில் பறந்தோடி விழா வண்ணம் கிளிப்புகளைச் செருகிவிட்டுப் போனாள்.

அவ்வளவு முன்னதாக மோகனா வேலைக்குப்

போகத் தேவையிருக்கவில்லை. சாதாரண நாட்களில் சங்கரி அவளைப் போகவிடாது வேலைகளைக் கொடுத்துக் கொண்டே இருப்பாள்.

ஒரு கணம் அதற்கு மேல் வீட்டில் தங்கினால் தலை வெடித்து விடும்போல உணர்வுகளின் அழுத்தம் அவள் மண்டையை இறுக்கியது.

தோள் பையை எடுத்து மாட்டிக்கொண்டு காலில் செருப்புகளை வேகமாகத் திணித்துக் கொண்டு மடக்குக் குடையுடன் வெளிப்பட்டாள்.

தெருவைத் தாண்டிச் சாலைக்குள் வந்ததும் பையிலிருந்த கறுப்புக் கண்ணாடியை எடுத்து அணிந்துகொண்டு குடையை விரித்துப் பிடித்தபடி நடந்தாள்.

ஒரு சுற்றுப் பயணத்தின்போது அவள் கணவன் அவளுக்காக வாங்கிக் கொண்டுவந்த கூலிங்கிளாஸ் அது.

திவ்யா கண்களில் பட்டிருந்தால் தனக்கு வேண்டும் என்று பறித்துக் கொண்டிருப்பாள்.

மாமியாருக்குக்கூடக் காட்டாது அவள் அதைத் தன் பைக்குள்ளேயே வைத்திருந்து உபயோகித்துக் கொண்டிருந்தாள்.

இது மாதிரியான சிறு சங்கதிகளுக்குக்கூட அவள் தன் புக்ககத்தாருக்குப் பயப்பட வேண்டிய பரிதாப நிலை.

'சே! இது என்ன வாழ்க்கை' என்று அடிக்கடி சலித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டிருந்தாள்.

கணவன் அருகில் இல்லாதபோது தனிமையின் கொடுமையில அந்தச் சலிப்பு பெருத்த கசப்பாகி வாழ்க்கைமீது ஒரு விரக்தியை உண்டாக்கி விட்டிருந்தது. வேண்டுமென்றே ஒரு பஸ்ஸைத்

தவறவிட்டு அடுத்து வந்ததில் சாவகாசமாக ஏறிக் கண்ணாடி அருகே ஆசனத்தில் அமர்ந்தாள்.

டிக்கட்டை வாங்கிக் கொண்டதும் சாலையை வேடிக்கை பார்க்கலானாள்.

மறுநாள் நடக்கவிருந்த கல்யாணத்திற்கு வண்ண விளக்குத் தோரணங்களையும் வாழை மரத்தையும் கட்டித் தயாராக்கிக் கொண்டிருந்தனர் சில ஆட்கள். அதற்குள் மாப்பிள்ளை வீட்டவர்கள் அங்கு வந்து ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டனர் போலும். புதுப் பாவாடையில் சரசரத்த சில சிறுமிகளும்-வெற்றிலை யைக் குதப்பிக் கொண்டு நடந்த சில மல்ஜிப்பாக் காரர்களும் சில பெண்களும் குறுக்கும் நெடுக்குமாக வளைய வந்து கொண்டிருந்தனர்.

இத்தனை பேரும் சேர்ந்து மறுநாள் வரப்போகிற வர்களுடன் கூடி ஒரு பெண்ணைக் கல்யாணம் என்கிற கிணற்றிலே தள்ள ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றனரோ?

தனக்குள்ளே வெறுப்புடன் சிரித்துக் கொண்டாள். பஸ் நகர்ந்ததும் பெருமூச்சு விட்டுக் கொண்டு ஆசனத்தில் சாய்ந்தாள். கொஞ்ச நேரத்தில் பஸ் கடைத் தெருப்பக்கம் வந்து நின்றது. வரிசையாக அடுத்தடுத்து பட்டுப்புடவைக் கடைகள் அத்தனை யிலும் மனிதக் கூட்டம்.

அவளைப் பெண் பார்க்க சங்கரியும் கோதண்ட மும் வந்தபோது வீடும் சூழ்நிலையும் அத்தனை சுகம் இல்லை என்று சங்கரி வந்த வழியே ஓடிவிடுவாள் என்றுதான் மோகனா நினைத்தாள்.

ஆனால் அப்பா சங்கரி சொன்ன நிபந்தனைக் கெல்லாம் தலையாட்டிக் கொண்டிருக்கவே ஆசாமி ஆணி அடித்துக் கொண்டு அங்கே உட்கார்ந்து விட்டாள்.

அம்மாவும் அவளும் தட்டுகளில் கொண்டு வந்து வைத்த டிபனை வேகமாக விழுங்கி முடித்தனர் வந்தவர்கள்.

காப்பியைக் கொண்டுவந்து விநியோகிக்கும் போது தான் அவள் ஜாடையாக மாப்பிள்ளையைப் பார்த்தாள்.

பரவாயில்லை. ஆள்பார்க்க நன்றாகத்தான் இருக்கிறார் என்று மனம் கணக்கிட்டது. ஆறுதலடைந்தது.

பெண்தானே நமக்கு வேண்டும் தெரு எப்படி அசிங்கமா இருந்தால்தான் நமக்கென்ன என்று சங்கரி எண்ணியது போலவே அவளும் நினைத்தாள்.

மாப்பிள்ளையைப் பற்றித்தானே அவள் கவலைப் பட வேணும். அவளைச் சுற்றியுள்ளவர்களைப்பற்றி ஏன் ஆராய்ச்சி, காலம் முழுவதும் வாழப்போகிற கணவன் கண்களுக்கு நிறைந்தவனாக இருந்து விட்டால் போதுமே.

'பிடிச்சிருக்கா?' அவளைப் பன்னிப் பன்னிக் கேட்ட போது, "பொன் கத்தி பிடிச்சிருக்கு. ஆனால் அதனால் கழுத்தை வெட்டிக்க முடியுமா? பார்த்து யோசிச்சுட்டு முடிவு செய்யுங்க. நான் இந்த வரனை எனக்குப் பேசி முடியுங்கன்னு உங்கிட்டே சொல்லலை" என்றாள்.

ஆனாலும் அவளுக்கு கோதண்டத்தை மிகவும் பிடிக்கத்தான் செய்தது.

அதைக் கண்டதும் காதல் என்று சொல்லிவிட முடியாது. கண்களுக்குக் கவர்ச்சியாக இருந்தான். மிருதுவான குரலில் பேசினான். பார்வைக்கு நல்லவன் போல் தென்பட்டான். இப்போது பழகின காரணத்தால் அவளுக்கு, அவன் மேல் பாசம் ஏற்பட்டிருந்தது உண்மை. இருந்தாலும் தன் தாயின்

அட்டகாசங்களை அறிந்து கொள்ளாது அவள் பேச்சுக்குக் கட்டுப்பட்டு ஏமாந்து கொண்டிருக் கிறாரே என்ற ஆதங்கம்.

பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்தாள். அலுவலகம் ஆரம்பிக்க இன்னும் பதினைந்து நிமிஷங்கள் இருந்தன. லிஃப்ட்டைப் பிடித்துக்கொண்டு மூன்றாவது தளத்தை அடைந்தாள்.

அவளைப் போலவே ரிசப்ஷனிஸ்ட் பெண் முன்னதாக வந்து விட்டிருந்தாள். பவுடர் காம்பாக்டைத் திறந்து லேசாகப் பவுடரைத் தொட்டுப் பஞ்சினால் ஒத்திச் சரி செய்து கொண்டு மூடி அதைப் பையில் வைத்துவிட்டு...அவள் பக்கம் திரும்பி "குட்மார்னிங் மேடம்" என்று பல் வரிசையை காட்டிச் சிரித்தாள்.

"குட்மார்னிங்" என்றபடி மோகனா தங்கள் பகுதிக்குத் திரும்பியபோது ரிசப்ஷனிஸ்ட் அவளைக் கூப்பிட்டாள்.

"சங்கதி தெரியுமா மேடம், நம்ப டிஸ்பாச் செக்ஷனில் இருக்கும் வேதவல்லிக்குக் கல்யாணம் கூடிவிட்டிருக்கு."

"அப்படியா, சந்தோஷம்." என்றாள் மோகனா. ஆனால் மனம் இன்னொரு பெண்ணும் கிணற்றில் தள்ளப்படப் போகிறாள் என்று கூவியது.

"வரதட்சணை வேண்டாம். ஸ்கூட்டர் வாங்கித் தந்தால் போதும்னு மாப்பிள்ளை வீட்டவங்க சொல்லிட்டாங்களாம்.

"முட்டாள், ஸ்கூட்டர் விலை என்ன, அது வரதட்சணைக்கு ஈடுன்னு தெரியாத மக்குப் பெண்ணே" மனதிற்குள் சொல்லிக் கொண்டு புன்னகைத்தபடி தலையை அசைத்து விட்டுத் தன்

ஆசனத்தில் போய் அமர்ந்தாள்.

மேஜை மேலிருந்த ஃபைல்களைத் தட்டித் தூசி போக்கி மறுபடி அடுக்கி வைத்துக் கொண்டாள்.

அப்படித்தான் சங்கரி சொன்னாள் முதலில்.

"வரதட்சணை வாங்கறதில்லைன்னு எங்க குடும்பத்தில் ஒரு முடிவு எடுத்திருக்கோம். என் மூத்த இரண்டு பிள்ளைகளுக்கும் நான் வாங்கலை. பெண்ணுக்கும் கொடுக்கலை. ஆனால் கல்யாணத் தின் போது ஆகப்போற செலவுத் தொகையை நீங்க பொருத்துடணும்."

அப்பா தொண்டையைச் செருமினார்.

"ஒரு அன்பளிப்புன்னு பத்தாயிரம் கொடுத்தால் போதும், வரதட்சணைன்னு வாங்க உத்தேசித்தால் என் பிள்ளைக்கு நான் இருபதுக்கு மேலே கேட்க லாம்." என்று படபடவென மார்க்கெட் நிலவரத்தை விளக்கினாள். அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு அத்தனை பேரும் கல் பொம்மையாக உட்கார்ந்திருப் பதைக் காண மோகனாவுக்கு அதிசயமாக இருந்தது. அவமானமாகவும் இருந்தது.

அம்மாவிடம் ரகசியமாக அப்போதே சொன் னாள். "வேண்டாம்? அம்மா, நான் கல்லூரியில் படிக்கும்போது ஒரு வாக்கு கொடுத்திருக்கிறேன்."

"என்னவாம்?" அம்மா அடிக்குரலில் அதட்டி னாள்.

"பெண் உரிமை என்று ஒரு பெரிய மீட்டிங் போட்டோம். எங்கள் கல்லூரி கூட்டத்தில் வேறு இரண்டு கல்லூரி மாணவிகளும் வந்து கலந்து கொண்டனர். வரதட்சணை ஒழிப்புபற்றி காரசார மாகப் பலர் பேசினார்கள். அப்போது நூற்றுக் கணக்கான மாணவிகள் தலைவியிடம் வாக்கு

கொடுத்தோம். "வரதட்சணை கொடுத்து நாங்கள் கல்யாணம் செய்து கொள்ள மாட்டோம் என சத்தியம் செய்திருக்கோம்."

"பொல்லாத சத்தியம்-உன்னோட படிச்சாளே கிரிஜா-அவளுக்குப் போன மாசம் கல்யாணமாச்சே வரதட்சணை கொடுக்காமலா கல்யாணம் நடந்தது?"

வெடுக்கென்று அம்மா கேட்டபோது, அவள் திடுக்கிட்டுத்தான் போனாள்.

அன்று அந்தக் கூட்டத்தில் ரொம்பப் பிரமாத மாகப் பேசி ஆர்ப்பாட்டம் செய்தவள் கிரிஜா-முதலாக அவள்தான் தன் பெயரைக் கொடுத்துச் சத்தியம் செய்தாள்.

பசி வந்தால் பத்தும் பறந்திடும் என்பார்கள்.

கல்யாணம் கூடினால் காலேஜில் செய்த சத்தியங் கள் கண் மறைவாகி விடுமோ-

"நாம் வரதட்சணையா தரப்போகிறோம். ஏதோ செலவுக்குத் தருகிறோம்."

"இதுவும் வரதட்சணைதான் அம்மா. தங்கள் செலவுக்குப் பெண் வீட்டாரைக் கேட்பானேன்."

"நீ பேசாமல் இரு. இந்த விதண்டா வாதமெல்லாம் உங்கள் கல்லூரி கூட்டங்களுக்கு உதவும். நடைமுறையில் ஒண்ணும் தேறாது." அம்மா அவளை அங்கேயே அடக்கி விட்டாள். "நல்லவேளை வரதட்சணை வாங்காமல் விட்டாங்களே" என்று வேறு சம்பந்தியம்மாளைப் புகழ்ந்தாள்.

"கொஞ்சம் நாங்கள் தனியா பேசணும்" என்று சங்கரி மற்றவர்களிடம் கூறிவிட்டு-அவர்கள் வீட்டிலிருந்த ஒரே படுக்கையறைக்குள்ளே அம்மாவையும் அப்பாவையும் அழைத்துக் கொண்டு புகுந்து விட்டாள்.

பெண் பார்க்க வரப்போகிறார்கள் என்று அன்று காலைதான் வீட்டிலிருந்த வேண்டாத சாமான்களை எல்லாம் அந்த அறைக்குள் அவசரமாக அம்மாவும் அவளும் தூக்கிப்போட்டு விட்டிருந்த்னர். அந்த அறைக்குள்ளேயா பேசப்போய் உட்கார்ந்தார்கள் என்று மோகனாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

மூத்த ஓரகத்தி அது சமயம், மோகனாவிடம் வந்து சொன்னாள். "நாங்கள் போய் காரில் உட்கார்ந்துக் கிறோம். இல்லாட்டா நடையில் கொஞ்ச நேரம் இருக்கோம். கோதண்டம் உன்னிடம் தனியா பேசணுமாம்."

தூக்கிவாரிப் போட்டது மோகனாவுக்கு. என்ன பேசணுமாம்? நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொள்ள கூடத்து ஓரமாக லலிதா நகர்த்திப் போட்ட நாற்காலி ஒன்றில் அவன் எதிரே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உனக்கு என்னவெல்லாம் ரொம்பப் பிடிக்கும்?" முதல் கேள்வியே அசடு வழிந்தது.

என்னவெல்லாம் பிடிக்காது என்று கேட்டிருந் தால் பட்டென்று பதில் சொல்லியிருப்பாள்.

ஐயா, எனக்கு கல்யாணம் என்கிற இந்த புனித ஒப்பந்தத்தில் மாப்பிள்ளை வரதட்சணைக்குத் தன்னை விற்றுக்கொள்வது பிடிக்கவே பிடிக்காது. பெற்றோர்கள் இடைபுகுந்து கல்யாணம் என்கிற இந்த இனிமையான நிகழ்ச்சியில் குட்டை குழப்புவது கட்டோடு பிடிக்காது. படித்திருந்தும் பலவும் தெரிந்திருந்தும் கல்யாணம் என்று வரும்போது ஆண்கள் இப்படித் துணிவை இழந்து அம்மாவின் தலைப்பைப் பிடித்துக் கொண்டு அவள் பேச்சுக்குத் தலையாட்டி பொம்மையாகி விடுகிறது சுத்தமா பிடிக்காது.

ஒரு ஆணும் பெண்ணும் திருமணத்தில் இணையும் போது சுற்றியுள்ள குடும்பம்... இது வழக்கம். அது சம்பிரதாயம் என்று சொல்லிப் பணத்தை வாரி இறைப்பது...கொஞ்சமும் பிடிக்காது. இப்படி பலவும் சொல்லியிருப்பாள்.

அவன் கேட்ட கேள்விக்கு சட்டென்று பதில் சொல்லத் தெரியவில்லை.

"எளிமையான வாழ்க்கைதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"அச்சா! சாப்பாட்டில் எது ரொம்பப் பிடிக்கும்?"

"பிடிக்கும் பிடிக்காதுன்னு எதுவும் கிடையாது. கிடைத்ததைச் சாப்பிடத் தெரிஞ்சு கொண்டிருக் கேன். சைவ உணவுக்காரி. அவ்வளவுதான்.

"பாடத் தெரியுமா? சங்கீதம் கத்துக்கொண்டிருக் கியோ? ஏதாவது வாத்யங்கள் வாசிக்கத் தெரியுமா? என் தங்கைக்கு வீணை வாசிக்க சொல்லி வச்சோம்."

எங்கப்பாவுக்கு அதுக்கெல்லாம் செலவழிக்கக் கட்டுப்படியானதில்லை. கல்லூரிப் படிப்புக் கொடுத்தார். மேலும் கல்யாணத்துக்குப்பின் எத்தனை பெண்கள் வீணையை வைத்துக்கொண்டு புக்ககத்தில் வாசித்து மகிழ்கிறார்கள்? அங்கே காலை வைத்ததும் கரண்டியைக் கையில் கொடுத்து விடுகிறார்களே, பின்னர் அவர்களது வீணை...நலங்கெடப் புழுதியில் அல்லவா கிடக்கப் போகிறது.

வேலைக்குப் போகும் கணவன் வீணை வாசிக்கச் சொல்லியா கேட்கப் போகிறான்?

டிபன் டப்பாவை எங்கே வச்சே? எங்கே என் ப்ரீப் கேஸ் என்று அலறப் போகிறான்.

பலவும் படபடவென்று சொல்லவேண்டும் என்றுதான் ஆவலாக இருந்தது.

முன்பின் தெரியாத மனிதன்.

மூன்று முடிச்சுப்போட்டுச் சொந்தம் கொண்டாடத் துவங்கும்போதேகூட ஒரு அந்நியன். தானே மனத்தை நிலைப்படுத்திக் கொண்டு அவனுடன் சொந்தத்தை உருவாக்கிக் கொள்ள கடமைப்பட்டவள் பெண். இப்படியெல்லாம் இருக்கும்போது... 'புடலங்காய் கூட்டுப் பிடிக்கும். மசாலா தோசை பிடிக்கும்' என்று அசட்டுத்தன மாகப் பேசுவதைத் தவிர வேற என்ன பேச முடியும் அப்போது...

"எந்தவித வாத்யமும் வாசிக்கத் தெரியாது,. சினிமாப் பாட்டுகளை முணுமுணுப்பேன். தோத்திரப் பாடல்கள் சில தெரியும். அவைகள் கடவுளுக்கு மட்டுந்தான் பாடப்படும்.

கடகடவென்று சிரித்தான் அவன். "ரொம்ப ஹாஸ்யமாப் பேசறியே?"

முகம் சிவந்து போனாள். நெஞ்சு படபடத்தது.

அவன் எப்படிப்பட்டவனோ...ஆனால் அப்போது மிருதுவாக, அன்பாகப் பேசினான்.

இப்படித்தான் ஆரம்பத்தில் பேசி... பெண்ணை மயக்கிக் கல்யாணம் செய்துகொண்டு பின்னர் புக்ககத்தில் அவளை ஆட்டிப் படைக்கிறார்கள் சில ஆண்கள்.

கோதண்டம் அந்த வகையைச் சேர்ந்தவனா அல்லது உண்மையில் அன்பான ஒரு நல்ல ஆண் பிள்ளையா?

அந்தச் சில நிமிஷங்களில் அவனை அவளால் கணிப்பு செய்ய முடியவில்லை.

"எனக்குச் சண்டை சச்சரவு எதுவும் பிடிக்காது. நான் அமைதியை ரொம்ப விரும்பறவன். நான்

வேலையிலிருந்து வீட்டுக்கு வந்ததும் அம்மா உரத்துப் பேசமாட்டாங்க.”

‘அமைதி யாருக்குத்தான் பிடிக்காது. எல்லோரும் அதைத் தேடிக்கொண்டுதானே ஓடுகிறார்கள். அது அப்படி லேசாகக் கிடைத்து விடுகிற சமாசார மில்லையே?’

சொல்ல வேண்டும் என்று வார்த்தைகள் தொண்டை வரை எட்டிப் பார்த்தன. ஏனோ அடக்கிக்கொண்டு தலையை ஆட்டினாள்.

“உனக்கு... இந்தப் பச்சை வண்ணப் பட்டுச்சேலை ரொம்பப் பொருத்தமா இருக்கு.”

அவள் மௌனமாக இருந்தாள். ’வேட்டி ஜிப்பாவில் நீங்களும் கொஞ்சம் கச்சிதமா தெரிகிறீங்க...’ என்று புகழுரை சொல்லத் தோன்றவில்லை.

“உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா?”

‘பிடிக்கலைன்னு சொன்னா என்ன பண்ணப் போறீங்க? இந்தப் பெண் பார்க்கும் படலமே ஒரு கேலிக் கூத்து. இந்த விலைவாசியிலே ஒரு சாதாரண குடும்பத்துக்காரர் தன் மகளுக்கு வரன் தேடும்போது, குறைந்தது நாலு தடவையாவது பெண் பார்க்க வரச்செது வந்தவர்களுக்கு காப்பி டிபன் கொடுத்தே கடன்காரராகி விடுவார் போலிருக்கு. இந்தச் சம்பிரதாயங்களை ஒழித்துக் கட்டிவிட்டு நாம் எப்பொழுதுதான் கல்யாணம் என்பது மிகவும் அந்தரங்கமானது. அதை எடுத்து நடத்துவதின் நோக்கம், நாலு பேருக்கு விஷயத்தைச் சொல்லவேதான் ஒழிய... தங்களது வீட்டுப் பெருமைகளை தம்பட்டம் கொட்டிக்க அல்ல’ என்று சொல்ல வேண்டும் போல மனதில் பலவும்

எழுந்தன. என்னத்திற்கு வீண் வம்பு, இந்தப் பெண் பார்க்கும் படலம் கல்யாணத்தில் போய் முடியப் போகிறது என்று யார் சொல்ல முடியும்? ஒரு சமயம் பேச்சு வார்த்தையிலே நின்று போனால்...பொல்லாத பெண் என்று பின்னர் வீணாக அவள் தலை அவர்கள் வீட்டில் உருளுவானேன்.

"நான் கேட்ட கேள்விக்கு பதிலே இல்லையே?" அவன் மறுபடியும் கேட்டான்.

அழகாகப் புன்னகைத்தபடி தலையை ஆட்டினாள்.

கூடத்து அறையைவிட்டு வெளிவந்த அப்பாவின் முகம் அவ்வளவு சுரத்தாக இருக்கவில்லை.

அன்று இரவு சாப்பாட்டின் போதுதான் அவளுக்கு மற்ற விவகாரங்கள் எல்லாம் தெரிந்தது.

சங்கரி அம்மாள் சட்ட திட்டமாகத்தான் பேசிவிட்டுப் போயிருந்தாள்.

கல்யாணத்தின் போது ஏற்படும் செலவுக்கு அவர்கள் கையில் பத்தாயிரம் முன்பணமாகத் தந்துவிட வேண்டும்.

பெண்ணுக்குக் குறைந்தது முப்பது சவரன் நகைபோட வேண்டும்.

அவள் தன் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தபோது... நாற்பத்து ஐந்து சவரன் நகை போட்டாள். இப்போ பவுன் விலை அதிகமாகி விட்டதால்... முப்பதே போதும். வெள்ளித் தட்டு-சந்தனப் பேலா-பன்னீர் செம்பு இத்யாதிகள் மட்டும் வெள்ளியில் இருக்கட்டும். ஆனால் பூஜையறையில் வைக்க ஒரு வெள்ளிக் குத்துவிளக்கு கட்டாயம் தந்துவிட வேண்டும்.

வழக்கமான சீர்களுக்கு மேல் ஒரு துரும்பும்

தேவையில்லை. அவர்கள் உபயோகத்துக்கு ஸ்டீல் சமையல் பாத்திரங்கள், கட்டில், மெத்தை, இரும்பு பீரோ இதுகள் மட்டும் போதும். பிறகு ஆடி, தீபாவளி. கார்த்திகை சீர்கள் இருக்கவே இருக்கு...

அம்மா கேட்டுவிட்டுப் பரக்க விழித்தாள். அவளது நகைகளைச் சேர்த்துக் கணக்கிட்டால்கூட முப்பது பவுன் தேறாத சங்கதி.

அப்பா ஓய்வடைந்தபோது கிடைத்த பிராவிடண்ட் பண்ட் முதலானவற்றைச் சேர்த்தாலும் ஒரு லட்சத்தைத்தான் எட்டிப் பிடித்தது.

அவரது சேமிப்பை யெல்லாம் தந்து, கடன் பட்டுக் கல்யாணத்தை நிறைவேற்ற வேண்டும்.

அவளது அண்ணன் இப்பொழுதுதான் வேலைக்குப் போயிருக்கிறவன். வெளியூர் வாசத்திலே சம்பளம் முழுவதையும் உதறிவுட்டுத் திண்டாடுகிற வன். அவன் எப்படி உதவப் போகிறான்?

பெற்றவர்களை விட அவள் தன் கல்யாணத்தைப் பற்றி அப்பொழுதே கவலைப்பட்டாள்.

“பெண்ணைப் பெற்று விட்டோம். கேட்டதைக் கொடுத்துத்தானே ஆகணும்?” அம்மா முணகினாள்.

வாயில் போட்டுக் கொண்டே சோற்றை அவசரமாக விழுங்கினாள் மோகனா.

‘அன்பே தகளியாக, ஆர்வமே நெய்யாக, இன்புரு சிந்தை இடு திரியா...நன்புருகு ஞானச் சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு....ஞானத் தமிழ் புரிந்த நான்.’

“அடிக்கடி நீங்க அலமாரியிலிருக்கும் தெய்வப் படத்துக்கு முன்னாடி...காலை வேளையிலே... பாடுவீங்களே அப்பா, அந்த நாரணன் வெள்ளிக் குத்து விளக்கையா கேட்கிறான்? அகல் விளக்கு

வைக்கக் கட்டுப்படியாகாட்டியும், மனசிலே விளக்கேத்திக் கொள்ள முடியுமே. இதெல்லாம் ஏன் படிச்சவங்களுக்குக் கூடப் புரியறதில்லை.

"பூஜையறைக்கு வெள்ளிக் குத்துவிளக்காமே எதுக்கு? வெள்ளி விலை தெரியுமில்லையா அப்பா...."மோகனா கோபத்துடன் கேட்டாள்.

"பேசாம இரு. பெரியவங்களோட பேச்சுக்குக் குறுக்கே வராதே." அம்மா அதட்டினாள்.

அவள் பேசாமல்தான் இருந்தாள். அந்த வரனை விட முடியாது அப்பா எல்லாவற்றிற்கும் சம்மதித்தார்.

அவள் கல்யாணம் ஏகப்பட்ட கடனில் துவங்கியது.

திருமணம் நடக்க இருந்த சில நாட்களுக்குமுன் சங்கரி அங்கே வந்து அவளுக்குப் போடப் போகிற நகைகளைப் பெண் அணிந்து கொண்டு கூட வர வேண்டும் என்று கட்டளை இட்டாள்.

கழுத்தில் கிடந்த தாலிச் சரட்டைத் தவிர அம்மா எல்லாவற்றையும் கழற்றி மகளுக்கு அணிவித்து அனுப்பினாள்.

சங்கரி அவளை டாக்சியில் நேரே நகைக் கடையொன்றுக்கு அழைத்துச் சென்றாள்.

கடைக்காரர் அவர்கள் குடும்பத்திற்கு மிகவும் தெரிந்தவர்.

ஒரு பவுன் எடைகுறைகிறதே என்று உதட்டைச் சுளித்தார்.

"வாக்குச் சுத்தம் இல்லாத இடத்திலே சம்பந்தம் செய்து கொள்ளப் போகிறோமேன்னு எனக்கு ரொம்ப மன வேதனையா இருக்கு. பச்சைக் குழந் தையா நான்? என்னை ஏன் இப்படி மோசம் செய்ய ணும்?" படபடவென்று பட்டாசாக வெடித்தாள்.

"முன்பே செய்த நகைகள்... உபயோகத்திலே தேய்ஞ்சு போனதைக் கணக்கிடாமல் சொல்லிட்டேன். மன்னிச்சுக்கோங்க." அம்மா அழாத குறை. தடுமாறினாள்.

"அந்த ஒரு பவுனுக்கு ஏதாவது ஒரு சின்ன நகைவாங்கி சேர்த்திடுங்கோ" உத்தரவிட்டுவிட்டுப் போய்விட்டாள் சம்பந்திக்காரி.

அம்மா உடனே தலைதெறிக்கும் அவசரத்தில் நகைக்கடைக்கு ஓடி ஒரு பவுனுக்கு நெளி மோதிரம் ஒன்றை வாங்கி மகள் கையில் போட்டு அந்தக் குறையை நிவர்த்தி செய்தாள்.

அப்பா, மிகவும் ஜம்பமாக வரப்போகும் மாப்பிள்ளையிடம் சொல்லிவிட்டிருந்தார்.

"கல்யாணமானதும் பெண்ணை வேலையிலிருந்து நிறுத்திவிடணும். வேலை செய்து கொண்டே வீட்டைக் கவனிப்பது ரொம்பக் கஷ்டமாச்சே." அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட சங்கரி பெருத்த ஆர்ப்பாட்டமே செய்து விட்டாள்.

"மோகனா வேலையை விடக்கூடாது. இந்த விலைவாசியில் ஆண் ஒருவன் சம்பாதிக்கிறது மட்டுமே குடும்பத்தை நடத்தப் போதாது-மோகனா வேலை செய்யணும், வேலை செய்கிற மருமகளைத் தான் நான் தேடிக் கொண்டிருந்தேன்."

அந்தச் சங்கதியை சங்கரி அவரது அப்பாவை அடுத்த வீட்டுப்போனில் கூப்பிட்டு அதட்டி அடக்கியதோடு மட்டுமா, காய்கறிக் கடையில் அலசிப் பேசியதைக் கேட்டபோது மோகனா உள்ளம் கொதித்துப் போனாள்.

அன்று அம்மா அவளைக் கடைத் தெருவுக்குக் காய்கள் வாங்கி வர அனுப்பியிருந்தாள்.

கால் கிலோ வெண்டைக்காய் வாங்க, தெரிந்த கடை ஒன்றை அணுகும்போது அவளது அப்பா பெயர் அடிபடுவதைக் கேட்டுத் திகைத்துப் போய் நின்றாள்.

இரண்டு வயதானவர்கள், கையில் ஒரு துணிப்பையுடன் கடைக்கு வந்தவர்கள் அந்தக் காலத்துப் பள்ளிக்கூட நண்பர்கள் போலும். அப்பாவுக்குத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும், காய்கறிக் கடை முன் வாங்க வருகிறவர்களை வழி மறிப்பவர்கள் போல நின்று கொண்டு வம்பு பேசிக் கொண்டிருந்தனர் "வாகீசன் பெண்ணுக்கு... சங்கரி அம்மா பிள்ளை...அதான் லேட் சதானந்தத்தின் கடைசிப் பையனைக் கொடுக்கிறதாக நிச்சயமயாகி விட்டது. மனுஷன் கடைசியிலே ஒரு குண்டைத் தூக்கிப் போடிருக்கான்.

"வாகீசனே ஒரு மாதிரி பேர்வழி. முன்னுக்குப் பின் முரணாகப் பேசுறவன்தானே?"

"முதல்லே சங்கரியும் தீர்மானமா சொல்லாதது பிசகு."

"வேலைக்குப் போற மருமகள் தேவைன்னு நினைச்சுத்தான் அந்த இடத்தில சம்பந்தம் பண்ண வந்திருக்கேன்னு சொல்லியிருக்கணும். கௌரதையா வாயை மூடிக் கொ்ண்டிருந்து விட்டா. இப்போ மனுஷன் தன் பெண்ணை வேலையிலிருந்து நிறுத்திடப் பார்க்கிறான்."

"சங்கரி ஒப்புக் கொண்டாளோ?"

"ஒப்புக் கொள்ளலை, யார்தான் ஒப்புக்குவா -நன்னா கைநிறைய சம்பாதிக்கிற பெண்ணை வீட்டில் உட்கார்த்திவச்சு அழகு பார்க்க...நமக்கெல் லாம் கட்டுப்படியாகுமோ? ஆணும் பெண்ணும் சம்பாதிச்சால்தானே சுகமாக வாழ முடியும்.

மூன்றாவதாக அவர்களது நண்பர் ஒருவர் அதே வயதை ஒத்தவர் பிளாஸ்டிக் கூடையுடன் அங்கே வந்து மூச்சிரைக்க சேர்ந்து கொண்டார்.

"நான் சங்கரி வீட்டைப்பத்தி பேசிண்டு இருக்கேன்." என்றார் ஆரம்பத்தில் முதலாவது பேசியவர்.

மறுபடியும் அவள் வேலைக்குப் போவது போகாதது பற்றிய பிரச்சினை...மூன்றா மனிதர்கள் நின்றுகொண்டு அலச அதைக் கேட்டுக் கொண்டு அவமானத்தில் மனம் கொதிக்க அங்கே நிற்க அவளுக்குப் பிரியமிருக்கவில்லை.

இந்த சங்கரியம்மாள், தன் வீட்டு விவகாரத்தை இப்படியா வீதிக்குக் கொண்டுவர வேண்டும்.

மோகனாவுக்குக் கோபம் வந்தது. அழுகையும் ஆங்காரமும் பற்றிக் கொண்டு வந்தன.

இத்தோடு மட்டுமா...

அலுவலகம் தொடங்கிவிட்ட அடையாளமாகக் கிணுகிணுவென்ற மணி ஓசை அவளை விழிப்புறச் செய்தது.

மேஜை மேல் மலையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஃபைல்களுக்குள் பெருமூச்சுடன் தலையை நுழைத்துக் கொண்டாள்.

# 3

பகல் உணவு நேரம் நெருங்கிக் கொண்டிருந்த சமயம் திடீரென்று அவளுக்கு அந்த யோசனை தோன்றியது.

அரை நாள் லீவு கேட்டுக் கொண்டு ஏன் அம்மாவைப் போய்ப் பார்க்கக் கூடாது?

திருவல்லிக்கேணி மார்க்கண்டன் தெருவுக்குப்

பஸ் பிடித்து போய் வரவே ஒரு மணிநேரம் செலவாகும்.

வேலைக்குப்பின் போய் பார்த்துவிட்டு வீடு திரும்புவது சாத்தியப்படவில்லை. அம்மாவைப் பார்க்கப் போக வேண்டும் போல அவளுக்குள் பரபரப்பானதொரு உணர்வு உந்திக் கொண்டிருந்தது.

திருட்டுத்தனமாக அவள் போய் பார்த்தால் ஒழிய-மாமியார் மனம் உவந்து அவள் பிறந்தகத்திற்கு அனுப்பவே மாட்டாள்.

உள்ளூரிலிருந்த தன் வீட்டுக்கு அவள் போய் வந்து ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டது.

ஒரு நாள் கோதண்டம் அந்தப் பக்கம் ஏதோ காரியமாகப் போக நேர்ந்தது.

சாதாரண நாட்களில் அவன் தன் வேலைக்கு அலுவலக காரில் புறப்பட்டுப் போய் வருவான்.

அவள் எப்பொழுதும் போல பஸ்ஸில்தான் பயணப்படுவது வழக்கம். அன்று திடீரென்று அவளது ஆபீசுக்கு அவளைத் தேடிக்கொண்டு வந்து விட்டிருந்தான்.

அவளுக்கு ரொம்பவும் வெட்கமாகவும் இருந்தது.

வேலை செய்யுமிடத்தில் தன்னைத் தேடிக் கொண்டு அப்பாவோ அம்மாவோ வரக்கூடாது என்று தடை உத்தரவு போட்டிருந்தவள்-கணவனை வரக்கூடாது என்று சொல்ல முடியவில்லை.

“மேடம், உங்கள் ஹஸ்பெண்ட் உங்களைப் பார்க்க வந்திருக்கார்.” இண்டர்காமில் ரிஸப்ஷனிஸ்ட் சொன்னபோது அதிர்ந்து போனாள்.

எழுந்து அவசரமாக வரவேற்பு ஹாலுக்குள் விரைந்து வந்தாள்.

“பயந்து போயிட்டியா? ஒண்ணுமில்லே.

திருவல்லிக்கேணி பக்கம் போக வேண்டியிருக்கு. பகல் சாப்பாட்டு நேரம் நெருங்கிகிட்டு வரது. வேலை ஆரம்பிக்கிறதுக்குள்ளே உன்னைத் திருப்பிக்கொண்டு வந்து விட்டுடுவேன். உன் அம்மாவைப் பார்க்க விருப்பமில்லையா?" புன்னகைத்தான்.

நெஞ்சு மகிழ்ச்சியால் விம்மியது.

கோதண்டம் உண்மையில் மிக அன்பான கணவன்தான். கல்யாணத்தின்போது தன் அம்மா செய்த கலாட்டாக்களை அடக்க முடியாது இருந்துவிட்டான் என்கிற குறையைத் தவிர அவனைப் பொறுத்தவரை அவளிடம் மிகவும் அனுசரணையாக நடந்து கொண்டிருந்தான்.

இன்னும் இரண்டு நிமிஷ காலம் அவன் பொறுமையுடன் வரவேற்பறை ஆசனமொன்றில் அவளுக்காகக் காத்திருந்தான்.

அவனுடன் காரில் புறப்பட்டுப் போகையில் மனதிற்கு மிகவும் தெம்பாகத் தானிருந்தது.

வழியில் பழக்கடை ஒன்றருகே வண்டியை நிறுத்தி ஆறு ஆப்பிள், சில சாத்துக்குடி, ஒரு சீப்பு மலைவாழைப் பழம் முதலியவற்றை வாங்கிக் கொண்டான்.

"உங்கம்மாவை வெறுங்கையோடவா போய்ப் பார்ப்பது?"

அவள் குடும்பத்தின்மீது அவன் காட்டிய மதிப்பு அவள் மனதைப் பூரிக்கச் செய்தது.

அப்பாவும் அதுசமயம் வீட்டில்தான் இருந்தார்.

ஓய்வடைந்தபின் பகல் சாப்பாட்டைப் பன்னிரெண்டு மணிக்கே முடித்துக்கொண்டு தாழ்வாரத்து பெஞ்சியில் உடலை நீட்டிக்கொண்டு பகல் மூன்று மணிவரை நிம்மதியாக உறங்கும்

பழக்கம். லேசுக் குறட்டையுடன் தூங்கிக் கொண்டிருந்தவர் வாசலில் பேச்சுக் குரலைக் கேட்டு விலுக்கென்று விழித்துக் கொண்டார்.

"மாப்பிள்ளை வந்திருக்கார்" அம்மா எச்சரித்ததும் வாகீசன் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றார்.

"வாங்கே! வாங்கோ!" பலத்த வரவேற்பு கொடுத்தார்.

"பகல் சாப்பாடு இனிமேல்தானே?" சற்று இருங்கோ சாப்பிடலாம். அம்மா பரபரப்புடன் சமையலறைக்குள் ஓடினாள்.

பின்னால் உள்ளே புகுந்த மோகனாவுக்கு தங்கள் வீட்டின் நிலைமை தெரியும்.

இரண்டு பேருக்கு மட்டுமே சமைத்திருந்த அம்மா அப்பா சாப்பிட்டதும் மீதியைத் தான் முடித்துவிட்டு பாத்திரங்களைக் கழுவி மேடைமீது அடுக்கி வைத்திருந்தாள்.

"நாங்க கையோட டிபன் கொண்டு வந்திருக்கோம். இல்லாட்டாலும் வழியிலே ஓட்டல் எதிலாவது சாப்பிட்டுக்குவோம்." சொல்லிப் பார்த்தாள்.

அம்மா கேட்பதாக இல்லை. முதல் முதலாக மாப்பிள்ளை இப்பத்தான் வந்திருக்கார். பட்டினியாக அனுப்பறது நல்லா இருக்குமா? "நீ சும்மா இரு. சமைக்க எத்தனை நேரம் ஆகும்?" என்றாள்.

அம்மாவுக்கு இந்த விஷங்களில் ரொம்பவே சாமர்த்தியம் இருந்தது.

மாப்பிள்ளை கோதண்டம் மாமனாருடன் பேசி விட்டுத் தான் வந்த விஷயமாக கவனிக்க காரில் புறப்பட்டுப் போய் விட்டான்.

அவன் திரும்பி வர அரை மணி நேரம்தான் ஆகியது.

அதற்குள் அம்மா சாதம் வடித்து, சாம்பார் செய்து, புடலங்காயைத் துவட்டி, அப்பளம் பொரித்து வைத்துவிட்டாள்.

"சாப்பாடு பிரமாதம். இன்னும் உங்களைப்போல சமைக்கும் திறமை மோகனாவுக்கு வரலை," என்று புகழ்பாடிக் கொண்டு சாப்பிட்டு எழுந்தான் கோதண்டம்.

அவளும் அம்மாவைப்போல நன்றாகத்தான் சமைப்பாள். ஆனால் காலையில் விதரணையாக சமையலைக் கவனிக்க நேரம் ஏது.

மாலையில் திரும்பி வரும்போது உடல் முழுவதும் நொந்து கொண்டிருக்கும்போது பொறுமையாகக் கரண்டியைப் பிடிக்க நாதி கிடையாதே.

வெந்ததும் வேகாததுமாக பொங்கிப் போட்டுவிட்டு வேலைக்குப் போகும் நிர்ப்பந்தம் அவளுக்கு. அதை வெளியில் சொல்லமுடியுமா? கணவன் எதிரில் புக்ககத்து அக்கிரமங்களை எடுத்து அலசத்தான் முடியுமா?

போலியாகச் சிரித்துக்கொண்டு அம்மாவிடம் விடைபெற்று அலுவலகம் திரும்பிவிட்டாள்.

சரியான நேரத்திற்கு அவள் கணவன் அவளைத் திரும்ப வேலை செய்ய அங்கே கொண்டுவந்து விட்டிருந்தான்.

கார் சவாரி-அதனால் சாத்தியப்பட்டது.

பஸ்ஸில் போய்விட்டுத் திரும்புவதென்றால் முடியாத காரியம்.

"என்னம்மா? என்னவோ போலிருக்கீங்களே?" தலைமை அலுவலர் மோகனாவை மிகவும் கனிவோடு கேட்டார்.

வீட்டிலே எத்தனை சிரமங்கள் ஏற்பட்டாலும்

வேலை செய்யுமிடத்தில் அவள் ரொம்பக் கண்டிப்பாகக் கொடுத்ததை ஒழுங்காகச் செய்து முடித்து இதுவரை நல்ல பெயர் வாங்கிக் கொண்டிருந்தாள்.

தலைமை அலுவலருக்கு அவள்மீது ரொம்பவே மதிப்பு.

தாத்தாவுக்குத் திவசம், பாட்டி படுக்கையாகக் கிடக்கிறாள் என்றெல்லாம் லீவு கேட்கும் ஊழியர் அல்ல அவள்.

"இன்று பகல் எனக்கு லீவு வேண்டும்" மென்று விழுங்கினாள்.

"முக்கிய காரியமா அம்மா?" புருவங்களை உயர்த்தி அவளை ஊன்றிப் பார்த்தார்.

"சொந்த விஷயமா நான் என் பிறந்த வீட்டுக்குப் போக வேண்டியிருக்கு."

"சரிம்மா, இந்த வாரம் அதுக்குப் பிறகு உனக்கு நிறைய வேலையிருக்கும். உடனடியாக மறுபடி லீவு எடுக்கப் பார்க்காதே" என்று எச்சரித்தபடி அனுப்பி வைத்தார்.

கையோடு கொண்டு வந்த தயிர் சாதத்தை வாழை இலையோடு சுருட்டி எடுத்து அலுவலகப் பையனிடம் கொடுத்தாள்.

"நானே தயாரித்தது. நல்ல தயிர் விட்டுக் கலந்து எடுத்துக் கொண்டு வந்தது. பிரியப்பட்டா நீ சாப்பிடு, இல்லாட்டி யாராவது பிச்சைக்காரங் களுக்குப் போட்டுடு."

"நீங்க?" பையன் வியப்புடன் கேட்டான்.

"எங்கம்மா வீட்டுக்குப் போறேன். அங்கே சாப்பிட்டுக்குவேன்." பரவசமாகக் கூறிவிட்டு மணி யடித்ததும் ஒரு கணம் தாமதியாது புறப்பட்டாள்.

அம்மா அவளை எதிர்பார்க்கவே இல்லை. நடையில் படுத்துக் கிடந்தவள் சட்டென்று கதவைத் திறந்தபோது மகள் நிற்பதைக் கண்டு ஒரு கணம் பயந்து போய்விட்டாள்.

"என்னம்மா? என்ன நடந்தது?"

"ஏதாவது தப்புத்தண்டா நடந்தால்தான் நான் உங்களைப் பார்க்க வருவேனா? அப்பாவைக் காணலையே?"

"அப்பா அபூர்வமாக அவரது சிநேகிதர் வீட்டுக்கு தண்டையார்பேட்டைக்குப் போயிருக்கார். வர சாயங்காலமாகும்."

"பரவாயில்லை. நான் உங்களைப் பார்த்துப் பேசிவிட்டு போக வந்தேன்."

"உடனே ஆபீசுக்குப் போகணும்னு கிளம்புவியே, இருந்து சாப்பிட்டுப் போக அவகாசம் இருக்கா?"

"அரை நாள் லீவு எடுத்துக்கொண்டு வந்திருக்கேன். நிறையப் பேசணும் அம்மா."

கவலையுடன் மகளைப் பார்த்தாள் நீலா.

கை, கால் கழுவிக்கொண்டு கூடத்துத் தரையில் வந்து உட்கார்ந்தாள் மோகனா.

அவளது கணவன் வீட்டைப்போல முன்னறை என்று தனி இடம் ஏதும் அங்கே கிடையாது.

மிருதுவான மெத்தைகள் கொண்ட சோபாக்களும் கிடையாது.

அந்தத் தெருவிலிருந்த பல வீடுகளில் டி.வி. இருந்தது. அந்த வசதி அவர்கள் வீட்டை இன்னமும் எட்டிப் பார்க்கவில்லை. அவள் கல்யாணத்தால் ஏற்பட்ட கடனை அடைக்க அப்பா திணறிக் கொண்டிருந்தார்.

சமையலறையிலிருந்து எண்ணெய் காயும்

வாசனை மூக்கில் மோதியது. அவளது புக்ககத்தில் அப்பளம் கரி வடகம் பொரித்துப் போட்டுக் கொண்டு சாப்பிட அவளுக்குப் பொழுதே இருந்த தில்லை.

ஏதாவது ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று அது என்னவோ பெரிய தடபுடல் காரியம் போல நடக்கும்.

சங்கரி வடகம் தயாரிப்பதைப் பற்றிக் கவலைப் பட்டவள் அல்ல. தேவைப்பட்டால் அவைகளைக் கடையில் வாங்கிக் கொண்டு வருவாள். மோகனாவுக்கு ரசம் சாதத்துடன் அப்பளத்தை நொறிக்கிப் போட்டுச் சாப்பிட ரொம்பவே ஆசை.

அந்தக் காலத்து மருமகள் எல்லாம் அடுப்பங்கரை யில் ஓர் ஓரமாக உட்கார்ந்து பொறித்த அப்பளத்தை ஓசைப்படாது மெள்ள நொறுக்கித்தான் சாப்பிடுவாங் களாம். மாமியார் காதில் அந்தச் சத்தம் படக் கூடாதாம்! அம்மா சொன்ன கதை.

நல்லவேளை அவள் புக்ககத்தில் அந்தச் சட்டம் அனுசரிக்கப்படவில்லை. சிரித்துக் கொண்டாள் மோகனா.

பின்னாலிருந்த கையகல பூமியில் அம்மா ஒரு வாழையை நட்டு வைத்திருந்தாள். கிணற்றோரத்தில் ஒரு முருங்கை மரம். சின்ன பாத்தியில் கொஞ்சம் கீரை. பின்னறை ஜன்னல்மேல் தாவிக் கொண்டிருந்த நித்யமல்லி இலை தெரியாது கொத்துக் கொத்தாக மொக்குகளுடன் காற்றில் தலையாட்டிக் கொண்டிருந்தது.

அம்மா மிகவும் சிக்கனமாகத் தன் குடும்பத்தை நடத்திக்கொண்டு போனாள். ஆனாலும் சாப்பாட்டிலும் மற்ற சில சுகங்களிலும் அவள் ஒருநாளும் கருமித்தனம் செய்ததில்லை.

புழக்கடையிலிருந்து ஒரு வாழை இலையைப் பறித்துக் கொண்டுவந்து நீர் தெளித்துத் துடைத்து கூடத்துத் தரையில் விரித்தாள்.

சூடாக்கின சாப்பாட்டை எடுத்து வந்து மகளுக்குப் பரிமாறினாள். வத்தல் குழம்பு, மிளகு ரசம், பருப்புத் துவையல், கூட பொரித்த அப்பளம், வடகம்.

சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டாள் மோகனா. அம்மா அவளை உட்கார வைத்து சாதம் படைத்து உபசரித்து எத்தனை நாளாயிற்று?

"என்னத்துக்கு சாதத்துக்கு முன்னாடி கண் கலங்கறே?" அருகில் வந்து உட்கார்ந்து கொண்ட அம்மா பரிவோடு கேட்டாள்.

"என்னத்துக்கு சாதத்துக்கு முன்னாடி கண் கலங்கறே?" அருகில் வந்து உட்கார்ந்து கொண்ட அம்மா பரிவோடு கேட்டாள்.

மோரும் சோறும் கலந்து ஆவக்காய் ஊறுகாயுடன் சாப்பிடத் தொடங்கிய மோகனாவுக்குக் கண்ணீர் கன்னத்தில் கோடிட்டது.

திடுக்கிட்டுப் போனாள் நீலா.

"என்னத்துக்கு அழறே? என்ன நடந்தது?" அம்மா அதட்டலும் அன்புமாகக் கேட்டாள்.

சாதத்தை விழுங்கி முடித்தாள். எச்சில் இலையைத் தானே சுருட்டி எடுத்துச் சென்று தெருவிலிருந்த குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு வந்து கையைக் கழுவிக் கொண்டாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கூடத்தில் சுவர் மேல் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தாள்.

மறுபடி அடக்க முடியாது அழுகை வந்தது.

"மோகனா, என்னத்துக்கு அழறே? ஏன் என்னைப் பார்க்க இந்தப் பதை பதைக்கும் வெயிலில் புறப்பட்டு

வந்தே? உன் மாமியாருக்கு நீ இங்கே வந்தது தெரியு மோ? ஏன்?"அம்மா பல கேள்விகளை கேட்க அவள் மௌனமாகக் கண்ணீர் உகுத்துக் கொண்டி ருந்தாள்.

"உங்களைப் பார்க்கணும்போல இருந்தது வந்தேன். வரக்கூடாதா அம்மா?" தடுமாறிய குரலில் மகள் கேட்டாள்.

"உன் மாமியாருக்கு தெரியாம நீ வந்திருக்கேன்னு தோணுது. அது தப்பில்லையா?"

"என்ன தப்பு? பெற்றவளைப் பார்க்க ஆசை வந்தது. வந்தேன். திவ்யா நினைச்சப்போது அம்மா வைப் பார்க்க வர்ரா. அவ புக்ககத்தில் அதைப் பற்றிக் கேட்க ஆள் இல்லை. பெண் செய்தா தப்பில் லை. மருமகள் அதே காரியத்தைச் செய்தால் தப்பா?"

"அதுக்குத்தான் சொல்வாங்க மாமியார் உடைச்சா மண் கலம், மருமகள் உடைச்சா பொன்கலம். நீ கேட்காம இங்கே வந்தது தப்புதான்."

"போங்கம்மா, கல்யாணம் என்கிற கட்டுப் பாட்டில் என் உரிமைகளை அழிச்சிட்டீங்களே."

"ஒண்ணு ரெண்டு இல்லே. கழுத்து மட்டும் குறை இருக்கு. என் மாமியார் சாது இல்லே. கல்யாணத்தின் போதே ஆர்ப்பாட்டம் பண்ணலையா? அப்பா பாடுபட்டுச் சம்பாதித்த பணம் பத்தாயிரத்தை வாங்கித் தாம்தூம்னு அவள் செலவழிச்சப்போ என் மனம் எப்படி வேதனைப்பட்டது தெரியுமா? அவங்க மகனுக்குக் கல்யாணம், அதைக் கொண்டாடிக்க உறவினர்களுக்கு புடவை வேட்டி வாங்கித் தர ஆசைப்பட்டாங்க. அதுக்கு நம்ப அப்பாதான் அகப்பட்டாரா? ஒவ்வொரு காசா அவர் சேர்த்து வச்ச பணம். அதை அவங்க கையில் கொடுக்க காஞ்சீபுரத்துக்கு ஆபீஸ் காரை எடுத்துக் கொண்டு போய் பத்தாயிரத்தையும் ஜவுளியில் கொட்டி

எல்லாருக்கும் பெருமையாக வழங்கினாங்க. அத்தை உன் கல்யாணத்துக்கு இதை எடுத்துக் கொடுத் தாங்கன்னு அவங்களோட அண்ணன் பெண் காஞ்சீபுரப் பட்டு சேலை ஒன்றைக் கட்டிக்கொண்டு மினுக்கியபடி என்னிடம் காட்டும்போது எனக்கு வயிறு பற்றி எரிகிறதம்மா."

"இதோ பார் மோகனா. இதெல்லாம் சம்பிரதாயம். நீ இதுக்காக மனத்தாங்கல் பட்டுக்கொண்டு கண் கலங்கறது அசட்டுத்தனம், விடு."

"நான் சம்பாதிக்கிற பணம் அத்தனையும் அவங்க கையில் கொடுக்கிறேன்; ஒரு முழம் பூ வாங்கி வைச்சுக்க எனக்கு என் பணத்தில் உரிமை இல்லை. அவங்க மாதத்துக்கு ஒரு தடவையாவது மகளை வீட்டுக்கு கூட்டிவச்சுக் கொண்டாடி பரிசு ஏதாவது ஒண்ணு வாங்கிக் கொடுத்து அனுப்பறாங்க. என் பணத்தைக் கண்டபடி அவங்க செலவழிக்கறதைப் பார்க்கும்போது என் ரத்தம் கொதிக்கிறது."

"அது மாதிரி நிபந்தனை பேரில்தானே உன் கல்யாணம் நடந்தது."

"என்ன நிபந்தனை? அவங்களுக்குச் சம்பாதிச்சுப் போட்டு அடிமையாக இருப்பாள் என்று நீங்க சத்தியம் செய்து என்னைக் கட்டிக் கொடுத்தீர்களா? அம்மா, எனக்கு இந்தக் கல்யாணத்திலிருந்து விடுதலை வேணும். எனக்கு கல்யாணம் செய்து வச்சவங்க நீங்க. இப்போ எனக்கு விவாகரத்து வாங்கித் தந்து என்னைச் சுதந்திரமா வாழவிடுங்க. இதைக் கேட்கத்தான் இங்கே வந்தேன். மூச்சுவிடாது பேசி முடித்துவிட்டு ஓவென்று குலுங்கி அழுதாள் மோகனா.

திக்பிரமையுடன் செயலற்றுப் போனாள் அம்மா நீலா.

# 4

அன்று பிறந்தகம் போய் வந்ததில் எந்தப் பயனும் இருக்கவில்லை. பஸ் நிலையம்வரை அம்மா வந்து வழி அனுப்பிவிட்டுப் போனாள்.

தொணதொணவென்று எத்தனை அறிவுரைகள்? யாருக்கு அவைகள் வேண்டியிருந்தன? இப்படியே பேசி அம்மா அவளை பிரெயின்வாஷ் பண்ணிக் கொண்டிருக்கிறாள்.

படுக்கையில் புரண்டபடி வெகுநேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அன்று மாலை அவள் வீடு திரும்பி யபோது தாயும் மகளும் அவளைப் பார்வையால் துளைத்தார்கள்.

பதில் பேசாது அவள் தன் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தது சங்கரிக்குப் பிடிக்க வில்லை. எரிச்சலாக இருந்தது.

"வரும்போது ஹைதராபாத் திராட்சை கொஞ்சம் வாங்கிக்கொண்டு வரச் சொன்னேனே? மறந்து போயிட்டியா?" அதட்டினாள் மாமியார்.

"மறந்து போயிட்டேன், மன்னிச்சுக்கோங்க."

"நல்லா ஒரு ம்ன்னிச்சுக்கோங்க என்கிறதைக் கத்து வச்சுக் கொண்டிருக்கே."

மௌனமாக அவளை வெறித்துவிட்டு அவள் சமையலறைக்குள் புகுந்தாள்.

பிற்பகல் வேலை ஏதும் இல்லாது பிறந்தகத்தில் உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு வந்த போதிலும் மனம் களைத்துப் போய் வந்திருந்தாள்.

கல்யாணம் செய்து கொடுத்த பின் பெண் பிறந்த வீட்டுக்கு வந்தால் எந்தவிதமான குறைகளோடும்

வரக்கூடாது என்றல்லவா பெற்றோர்கள் எதிர்பார்க்கி றார்கள்.

அம்மா ஏன் அவள் சொல்ல வந்ததைப் பூராக் கேட்க மறுத்து விட்டாள்.

பெற்றவர்கள் அவள் குறையைக் கேட்காவிடில் மற்றவர்களா கேட்டு உதவப் போகிறார்கள்?

"இன்னுமா சமைக்கிறே? நீ வரவர ரொம்ப நேரம் பண்றே." முன்னறையிலிருந்து மாமியார் அதட்டி னாள்.

"அஞ்சு நிமிஷத்திலே தட்டு வச்சுடறேன். எனக்குச் சாயங்காலத்திலிருந்து ஒரே தலைவலி."

"ஒரு மாத்திரை போட்டுத் தொலைச்சுக்கிறது தானே? மருந்துக்கு அடங்காத தலைவலியா இருக்கு. ஒரு சமயம் கண் பார்வை கோளாறோ என்னவோ, அப்போதுதான் அடிக்கடி தலைவலி வரும். கண் டாக்டர்கிட்டே போய்ப் பார்த்துக்கிறதுதானே?

"லீவு கிடைச்சா போகலாம்னு பார்க்கிறேன்."

"கண்ணை முதல்லே கவனி. பிற வேலைக்கே ஆபத்தாயிடப் போறது" மாமியார் முணுமுணுப்பது துல்லியமாகக் கேட்டது.

அவளது ஆரோக்கியத்தைப் பற்றி சங்கரி கவலைப் படவில்லை. அவள் கொண்டு வரும் சம்பளம் நின்று விட்டால் என்ன செய்வது என்ற கவலை.

வீட்டுக்கு வருகிறவர்களிடம் சர்க்கரையாகப் பேசு வாள் சங்கரி. அவர்கள் முன்னிலையில் மருமகள் மீது காட்டும் பரிவு? பெரிய நாடகமே போட்டு விடுவாள்.

அப்படித்தான் ஒரு தடவை அம்மாவும் அப்பா வும் அவளைப் பார்க்க வந்தபோது சங்கரி பெரிய சதிரே ஆடி விட்டாள்.

"நேரத்தோட தூங்கு, நேரத்தோட சாப்பிடு, ஆபீசுக்கு போன்னு நான் கரடியாக் கத்தறேன். இவ ராத்திரி பன்னிரெண்டு மணிவரை கதைப் புத்தகத்தோட உட்கார்ந்துடறா. கொஞ்சம் சொல்லிவிட்டுப் போங்க. உடம்பு இளைச்சுப் போச்சேன்னு ஹார்லிக்ஸ், சாத்துக்குடி, வைட்டமின்னு கோதண்டம் வாங்கிக் கொண்டு வந்து குவிக்கிறான். சாப்பிட்டாதானே! புத்தி சொல்லுங்க" என்று பகட்டாகப் பேசினாள். அம்மா அத்தனையையும் நம்பி விட்டாள்.

'மாமியார் நல்லபடியாகத்தானே நடந்துக்கிறா? நீ ஏன் சொன்னதைக் கேட்கிறதில்லை?"

"பத்து நிமிஷம் பெண்ணைப் பார்த்திட்டுப் போக, இருபது ரூபாய்க்கு அகர்வால் ஸ்வீட்ஸ் வாங்கிண்டு வந்திட்டுப் போறீங்க. மாமியார் உங்களுக்குப் பதிலுக்கு ஸ்வீட்டா பேசறா. அம்மா, என் மாமியார் பொல்லாத ராட்சசி." கத்த வேண்டும்போல் ஆத்திரப்பட்டாள்.

முதல் தடவை அம்மா அவளைப் பார்க்க அங்கே வந்திருக்கிறாள். மன அமைதியோட, போலி சந்தோஷத்தோட திரும்பிப் போகட்டும். ஏன் அவள் மனதைக் கலவரப்படுத்தணும் என்று இரக்கம் காரணமாக மௌனமாக இருந்தாள்.

நேரிடையாகப் பிறந்த வீட்டுக்குப் போய் ஒரு மூச்சுத் தன் கஷ்டங்களைச் சொல்லலாம் என்றாலோ காது கொடுத்து கேட்கமாட்டேன் என்கிறாளே.

"சமையல் ஆயிட்டதில்லையா? திவ்யா பசி தாங்க மாட்டாள்னு தெரியாதா? இன்னும் மசமசன்னு அங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்கே?" மாமியார் அதட்டியபடி எழுந்து வந்துவிட்டாள்.

"தட்டு வச்சுட்டேன், உட்காருங்க" என்று முணு

முணுத்த மருமகளை வெட்டி விடுவதுபோல பார்த்து விட்டு சங்கரி சாப்பாட்டறை மேஜையில் வழக்க மாகத் தான் உட்காருமிடத்தில் அமர்ந்து கொண்டாள்.

அம்மாவும் பெண்ணும் பேசிக் கொண்டே சாப்பாட்டை அளைந்து கொண்டிருந்தனர்.

நின்றுகொண்டே பரிமாறி அவர்களை உபசரிப்ப தற்குள் கால்கள் இற்றுவிடும் போல் நொந்தன.

ஒரு வழியாகக் கை கழுவ எழுந்திருந்த திவ்யா அம்மாளிடம் அவள் காது கேட்க உரத்த குரலில் சொன்னாள்.

"அம்மா, மோகனா இப்பவெல்லாம் நல்லாவே சமைக்க மாட்டேங்கறா. ஏனோ தானோன்னு ஏதோ பொங்கிப்போடறா. இப்படி ஒரு ருசியே இல்லாத ரசம் வச்சிருந்தா, என் கணவர் சாப்பாட்டுத் தட்டை விசிறி அடிச்சிட்டுப் போயிடுவார். கோதண்டம் ரொம்ப சாதுப் பிள்ளைம்மா, எல்லாத்தையும் பொறுத்துக்கிறான்."

"என்ன செய்யறது? அவனோட தங்கமான குணத்துக்கு இன்னும் கொஞ்சம் அரவணைச்சுக் "கொண்டு போற நல்ல பெண் வந்திருக்கலாம். தலையெழுத்து."

பளீர் என்று கன்னத்திலேயே ஓங்கி அடித்தாற் போன்ற வேதனையில் சுருண்டு போனாள் மோகனா.

கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று ஏதாவது தவறு கண்டுபிடித்துக் கொண்டு அலையும் இவளிடம் மோகனாவைத் தவிர வேறு எந்தப் பெண் நீடித்து வாழ்வாள். அதை முதலில் தெரிந்து கொள்ளாமல்....."பற்களைக் கடித்துக் கொண்டு உணவுப் பாத்திரங்களுடன் உள்ளே சென்றாள்.

எல்லாவற்றையும் அள்ளிக் குப்பைத் தொட்டியில் கொட்ட வேண்டும் போல் ஆத்திரம் ஆவேசமாக வந்தது.

பாவம், காலை வேலைக்காரி வருவாளே... அவளுக்குக் கொட்டிக் கொடுப்போம் என்று எண்ணியபடி எல்லாவற்றையும் ஒழித்து சிறு பாத்திரங்களில் வைத்து பிரிஜ்ஜுக்குள் தள்ளினாள்.

சமையலறையைச் சுத்தப்படுத்தி விட்டு மாமி யாருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை முடித்துவிட்டுப் படுக்கச் சென்றுவிட்டாள்.

# 5

அவள் கணவன் பம்பாய் புறப்பட்டுச் சென்று ஒரு வார காலம் ஓடிச்சென்று விட்டிருந்தது. இரவு வேளையில்... ஓய்வாக ஓட்டலில் தங்கியிருக்கும்போது ஒன்று இரண்டு தடவையாவது அவளை டெலி போனில் கூப்பிட்டுப் பேசுவதாகச் சொல்லிப் போயிருந்தான்.

அன்றுவரை அவனிடமிருந்து தகவலே காணவில்லை.

முன்னறையில் தொலைபேசி கிணுகிணுப்பதைக் கேட்டு விடுக்கென்று எழுந்தாள்.

அவள் ஓடிச் சென்று எடுப்பதற்குள் அங்கே அம்மாவும் மகளும் ஆஜராகி விட்டிருந்தனர்.

கோதண்டம் பம்பாயிலிருந்து போன் பண்ணியிருந்தான். அம்மாவும் பெண்ணும் மாற்றி மாற்றி அவனுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

“அப்படியா...”வந்து கூவிய திவ்யா களுக்கென்று சிரித்தாள்.

வாயிற்படி அருகே நின்றுகொண்டு மோகனா அவர்களது வாயைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது.

அலுக்கச் சலிக்க அம்மாவும் பெண்ணும் பேசி முடித்துவிட்டு பின்னர்தான் போனை அவளிடம் கொடுத்தார்கள்.

அவர்கள் முன்னிலையில் அவள் என்னதான் பேச முடியும்? டிரங்க்காலில் கதையா அளக்க முடியும்.

"சௌக்கியம், சரி, அப்படியே," என்று சில வார்த்தைகள் பேசிவிட்டுப் போனை வைத்தாள். பெருத்த ஏமாற்றமாகத்தான் இருந்தது.

அவளுக்கு அந்தரங்கமான வாழ்க்கை என்று ஒரு துளிக்கூடக் கிடையாதா?

மாமியாரின் குறுக்கீடு...ஒன்று இரண்டில் மட்டு மில்லை.

அவளது அன்றாட வாழ்க்கையில் எல்லாவற்றிலும் தலையிட்டுக்கொண்டு சித்திரவதை செய்து கொண்டிருந்தாள்.

"கடுதாசி யாருக்கு வந்திருக்கு? மோகனாவுக்கா? யார் எழுதியிருக்கா? உள்ளூரிலேயே அப்பா அம்மா இருக்கும் போது கடுதாசியா எழுதணும். ஒரு நடை வந்து பார்த்துட்டுப் போறது. சிநேகிதி எழுதியிருக்காளா? என்னவாம். வேலையத்தவ முப்பத்தஞ்சு பைசாவை வீணடிச்சு பொழுதையும் பாழாக்கி என்ன கடிதம் எழுதியிருக்கா. கல்கத்தாவிலே இப்போ மழை பெய்கிறது. புடவை கோடவுனுக்குப் போனேன். அப்படின்னு பைசாபெறாத சங்கதி."

மருமகளுக்கு வந்த கடிதத்தைத் தன் முன்னிலை யில் பிரித்து படிக்கச் சொல்லித் துணிவாகக் கேட்பாள்.

அவளுக்கு எல்லாம் தெரிந்தாக வேண்டும்.

வேறுவிதமாகச் சந்தேகித்துத் தொலைக்கப் போகிறாளே என்று மோகனா தனக்கு வரும் கடிதங்களை அவள் பார்வைக்கு வைத்து விடுவாள். சிநேகிதி யாராவது தொலைபேசியில் கூப்பிட்டால் என்னத்திற்குக் கூப்பிட்டாள் என்று ஒப்பித்து விடுவாள்.

அதெல்லாம் போகட்டும்.

அவள் கணவன் அவளைக் கூப்பிட்டபோது கூடவே மாமியார் இடை புகுந்து இப்படியா தொல்லை கொடுக்க வேண்டும்?

ஊருக்குப் புறப்படும் முதல் நாள் அவளுக்கும் அவனுக்கும் இடையே சிறு மனத்தாங்கல் ஏற்பட்டிருந்தது.

சில தினங்களாக அவள் தனியே இருக்கும்போது அதையே சொல்லிக் கொண்டிருந்தாள்.

"உங்களை வேறு ஊருக்கு மாத்த மாட்டாங்களா?"

"மாற்றுவாங்க. எங்க நிறுவனத்துக்கு வெளி ஊர்களில் கிளை அலுவலகங்கள் இருக்கே."

"மாத்திக்கிட்டு நாம் ஏன் பெங்களூர் டெல்லினு போகக்கூடாது?

"அம்மாவை விட்டுட்டு எப்படிப் போக முடியும்?"

"உங்க அண்ணன்கள் இரண்டு பேரும்போயிடலையா? அவங்களுக்கு மட்டும் அம்மாவைக் காப்பாத்தற பொறுப்பு இல்லையா?"

"அவங்க ரெண்டு பேரும் தப்பு செஞ்சா நானும் அதைச் செய்யனுமா?"

"எனக்கு வெளியூர்களில் வசித்துப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு."

"இப்ப சத்தியா உன் ஆசையைக் கொஞ்சம் மூட்டைகட்டி வை."

இன்னொரு நாள்.... இன்னொன்றைச் சொல்லிப் பார்த்தாள்.

"அலுவலகத்துக்குப் பஸ் பிடிச்சு ஓடிப் போய்ட்டு வர எனக்கு ரொம்ப அலுப்பா இருக்கு."

"ஒரு மாசம் லீவு எடுத்துக்கொண்டு ஓய்வா வீட்டிலே இருந்துட்டுப் பிறகு போய்ப் பார். இந்தச் சலிப்பு மறைஞ்சுடும்."

"என் அலுவலகத்துக் கிட்டே அந்தப் பக்கம் ஃப்ளாட் ஒன்று எடுத்துக் கொண்டு நாம ரெண்டுபேர் மட்டும் இருந்தா சௌகரியமாய் இருக்கும்னு நினைக்கிறேன்."

"தனிக் குடித்தனம் போக ஆசையா இருக்குன்னு சொல்லு."

"ஆமாம். அப்படித்தான்னு வச்சுக்கோங்களேன்."

"அம்மாவை நான் அம்போன்னு விட்டுட்டு எங்கேயும் புறப்பட முடியாது. அம்மா என்னை எப்படி வளர்த்தாங்கன்னு நீ தெரிஞ்சு கொண்டா இது மாதிரியான எண்ணத்துக்கு இடம் கொடுக்க மாட்டே. எங்கப்பா போன பிறகு எங்கம்மா குழந்தைகளைத் தன் உயிரைக் கொடுத்து வளர்த்து ஆளாக்கினாங்க. என்னை வளர்க்க ரொம்பவே பாடுபட்டிருக்காங்க.

"என் தாயார் கூட என்னை வளர்த்து ஆளாக்க ரொம்பத்தான் பாடுபட்டிருக்காங்க. நான் மட்டும் தானே ஆகாசத்திலிருந்து குதித்து வளர்ந்திடலை நான் என் தாயை விட்டுட்டு உங்க வீடே கதின்னு இப்ப இருக்கலையா. கடமைன்னு வரும்போது ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் ஏற்பட்டுடாது. இது என்ன நியாயமோ எனக்குப் புரியவில்லை."

"நீ எத்தனை சுற்றி வளைச்சுப் பேசினாலும் சரி, அம்மாவை விட்டு என்னால் அசையவே முடியாது.

கண்டிப்பாக அவன் பேசியதைக் கேட்டு அவள் கண் கலங்கிப் போனாள்.

இந்த வாழ்வில் அவளுக்கு விடிவு காலம் எப்போது?

# 6

கவலையும் துயரமுமாக அவள் படுக்கையில் திரும்பிப் படுத்துக்கொண்டாள். ஓசைப்படாது அழுதாள். கணவனுடன் இரண்டு நாள் முகம் கொடுத்துப் பேசாமல் இருந்து பார்த்தாள்.

என்ன பயன்? கல் சுவரில் முட்டிக் கொள்ளும் பயன்தான் கிட்டியது.

அவன் ஊருக்குப் புறப்பட இருந்த முதல் நாள் இரவு இப்படித்தான் ஏதோ பேசப் போக கோதண்டத்துக்குக் கோபம் வந்துவிட்டது.

"நான் சில நாள் லீவு போட்டுட்டு எங்கம்மா வீட்டிலே போய் இருக்கப் போறேன். சரிதானே?"

"ஏன் இங்கே ஓய்வு கிடைக்காதா? அந்த வீட்டிலே என்ன வசதி இருக்கு?"

"லீவு போட்டுட்டு வீட்டிலே இங்கே சும்மா இருக்க முடியாது. என் தாய் வீட்டிலே என்னைக் கேட்பார் கிடையாது. நாள் முழுதும் தூங்கிக் கொண்டு இருப்பேன்."

"அந்தக் கொசுக் கடியிலே உனக்குத் தூக்கம் வருமா?"

அவள் பிறந்த வீட்டை அவன் துச்சமாகப் பேசியதைக் கேட்டதும் அவளுக்குச் சுருக்கென்று கோபம் வந்துவிட்டது.

என்ன திமிர்? அவர்கள் வசிக்கும் அந்த வீடு

கொஞ்சம் புது தினுசாகக் கட்டப்பட்டது-மூன்று படுக்கை அறை. ஒவ்வொன்றிலும் உள்ளடங்கிய குளியலறை கொண்டதொரு கச்சிதமாகக் கட்டப்பட்ட மாடி வீடு. கடன் உடன்பட்டு சங்கரி வீட்டை ரொம்பவே அழகுபடுத்தி விட்டிருந்தாள்; ஆனால்; அவைகளைப் பிறகு ஒழுங்காக வைத்துக் கொண்டு வாழத் தெரிந்ததா? இரண்டு வருஷத்துக்குள்ளே சுவரில் அங்குமிங்கும் கை வைத்து ஒரே அழுக்குப் பண்ணி விட்டிருந்தார்கள்.

கம்பெனி கொடுக்கும் வாடகைச் சலுகை மற்ற சலுகைகளில் அடிக்கடி வண்ணத்தை புதுப்பித்துக் கொண்டு சோபாவும் புதுத் திரைச் சீலைகளுமாக அமர்க்களப்படுத்திக் கொள்ள முடிகிறது. பல சலுகைகள் கிடைக்கிறதாலே பிள்ளையைத் தன்னோட கட்டிப்போட்டுக் கொண்டு அசையவிட மாட்டேன் என்கிறாள் காதகி.

அவளுக்குத்தெரியாதா-புக்ககத்து பவிஷு.

அங்கே கோமதி நகர் உருவாவதற்கு முந்தி...

தென்னந்தோப்பும் நடுவே இங்குமங்கும் ஓட்டு வீடுகளும்தான் இருந்ததாம். அவள் அம்மா சொல்லி இருக்காளே? எருமை மாடுகள் கட்டியிருந்த ஒரு சாணிக் குட்டையாம் அந்த இடம். இப்போ குட்டிப் பங்களாக்கள் குபீரென்று தோன்றி விட்டிருக்கு. தாங்கள் பிறந்ததே பங்களாவில் போல அவர்கள் எல்லோரும் அலட்டிக் கொள்கிறாங்களே. பரட்டைத் தலையும் அழுக்குச் சட்டையுமா அந்தச் சாணிக் குட்டையருகே தெருப் பையன்களோட கோலி விளையாடிக் கொண்டிருந்ததை மறந்துவிட்டு பேசுகிறான் அவள் கணவன்.

சே! இந்தக்குடும்பமே வீண் கர்வம் பிடிச்ச கும்பல்.

"என்ன, பதிலைக் காணோம்" செல்லமாக

கணவன் அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

"வீடுங்க... எனக்குத் தூக்கம் வரது. நாளைக்கு எனக்கு ஆபீசிலே கொள்ளை வேலை கிடக்கு" கையை வெடுக்கென்று தள்ளிவிட்டு நகர்ந்து படுத்துக் கொண்டாள்.

அவன் உறங்கி விட்டான் சீக்கிரம்.

அவளுக்குத் தூக்கம் வரவே இல்லை.

அவன் ஏன் இப்படி ஒரு பெருத்த கோழையாக இருக்கிறான்?துணிவாக எதிர்த்து ஏன் பேசக்கூடாது?

துணிவாக ஏன் பேசக்கூடாது? உண்மைகளை வாரி அவர்கள் முகத்தில் எறியக்கூடாது? தன் உரிமைகளைக் காத்துக்கொள்ள ஏன் போராடக் கூடாது? கல்லூரிகளில் அவளது வகுப்பிலே பெருத்த வாயாடின்னு பேர் வாங்கியவளுக்கு இப்போ ஏன் இப்படி வாயடைச்சுப் போயிருக்கு?

பலவும் எண்ணிப் படுக்கையிலே ஓர் ஓரத்தில் ஒன்றிக் கொண்டு கோபத்தில் கொதித்தபடி ரகசியமாகக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள்.

ஊருக்குக் கிளம்பும்போது கோதண்டம் குழைவான குரலில் கொஞ்சிப் பார்த்தான்.

"ரொம்பக் கோவிச்சுக் கொண்டுட்டேன் போலிருக்கு."

"உண்மையைச் சொன்னீங்க. நான் உடம்பெறி வானேன்."

"இந்தா உன் கைச் செலவுக்கு வச்சுக்கோ."

அவளது பிறந்த வீட்டைப் பற்றிக் கேவலமாகப் பேசியது தப்பு என்று மனிதனுக்கு மனம் உறுத்திவிட்டது போலும்.

லஞ்சம் கொடுத்துச் சமாதானம் செய்வது போல அவள் கையில் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து

விட்டு, "பம்பாயிலிருந்து உனக்கு என்ன வாங்கிக் கொண்டு வரட்டும்." செல்லமாகக் கேட்டான்.

"இங்கே என்ன இல்லே? அங்கிருந்து வாங்கணும்." மெல்லிய குரலில் அசட்டையாகக் கேட்டாள்.

"இங்கே கிடைக்காதது எத்தனையோ அங்கே இருக்கலாமே?"

'உரிமை, சுதந்திரம், அந்தரங்கமான வாழ்க்கை இது மூணும் எனக்கு இங்கே கிடைக்கலை. அவைகளை வாங்கிக் கொண்டு வருவீங்களா?' ஏளனமாகக் கேட்கத் தோன்றியது. ஆனால் வாயைத் திறந்தாளா?

மௌனமாகப் புன்னகைத்துவிட்டு "உடம்பைப் பார்த்துக்கோங்க." என்றாள்.

என்ன செய்வாள். இத்தனை போராட்டங்களுக் கிடையே கோதண்டத்தின் மீது கணவன் என்ற தொரு மதிப்பும் சொல்லத் தெரியாத ஒரு பாசமும் பிடிப்பும் ஏற்பட்டு விட்டிருக்கின்றனவே.

"நீயும் வேளைக்கு சாப்பிட்டுத் தூங்கு. சமயம் கிடைச்சா ஓய்வு எடுத்துக்கோ. கொஞ்ச நாளா உன் முகம் வெளுத்துக் காண்றது. நான் வந்ததும் உன்னை டாக்டர் கிட்டே ஒரு தடவை அழைத்துக் கொண்டு போகப் போறேன்."

"எனக்கு ஒண்ணுமில்லை."

"நான் வேடிக்கையாக நேத்து ராத்திரி எதோ சொன்னேன். கோவிச்சுக்கலையே." மறுபடியும் கேட்டபடி அவன் அவள் கையைப் பிடித்துத் தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டான். அருகே காலடிச் சத்தம் கேட்டதும் அவள் வெடுக்கென்று கையை உருவிக் கொண்டு விட்டாள்.

சங்கரி வாயிற்படி அருகே வந்து நின்றாள்.

"காரை நீ ஓட்டிக் கொண்டு போனால் திரும்ப யார் கொண்டு வந்து வைப்பா." அம்மா அதட்டலாகக் கேட்டாள்.

"கம்பெனி டிரைவர் வந்து காரை எடுக்கப் போறான் பிறகு சர்வீசுக்குக் கொடுக்கணும்."

"அப்போ இங்கே கார் இருக்காதா?"

"இருக்காது. நான் இல்லாதபோது காரை ஓட்ட டிரைவர் இலலையே."

"திவ்யா வருவாள் ஒரு சமயம். அவளோட வெளி வாசலுக்குப் போகலாம்னுதான் கேட்டேன்."

'திவ்யா முன்னே ஒரு தடவை காரை ஓட்டி-அடிச்சுகிடிச்சு கொண்டு வந்து வச்சுட்டாளே?' கோதண்டம் கேட்கவில்லை. அவன் முகம் சொல்லியது.

"சர்வீஸ் பண்ணி முடிஞ்சதும் கம்பெனி டிரைவர் காரை கொண்டு வந்து விட்டுடுவார். அப்போ நீங்க வெளியில் போகலாம்."

கராஜில் கார் சும்மா நிற்பது அவளது மாமி யாருக்கு ரொம்ப ஆத்திரமாக இருக்கு. சினிமாவுக்குப் பெண்ணோட கிளம்பப் பார்க்கிறா. வீட்டைப் பூட்டிக்கொண்டு போக பயம். முன்பு ஒரு தடவை அப்படிப் போனபோது ஜன்னலை மூட மறந்து போய் விட்டிருந்தாள்.

ஜன்னல் வழியே கம்பியைப் போட்டு அவளது அறை கட்டில் தலைமாட்டிலே மடித்துப் போட்டிருந்த பட்டுப் புடவையைத் திருடிக்கொண்டு போய் விட்டிருந்தார்கள்.

இன்னொரு சமயம்-தோட்டத்திலே காய்த்துத் தொங்கிய மாங்காய்களை ஒன்று விடாது பறித்து எடுத்துக் கொண்டு போய்விட்டிருந்தார்கள்.

எல்லாம் பட்டப் பகலில் நடந்த களவுகள். அக்கம் பக்கம் நமக்கென்ன என்று இருந்து விட்டார்கள்.

ஓட்டுக் கூரை வீடாக இருந்திருந்தால் அடுத்த வீட்டுக்காரர்களும் எதிர் வீட்டுக்காரர்களும் பாராமல் இருக்க மாட்டார்கள். எதிர் வீட்டுக்காரர் களிடம் இருக்கும் சிநேக பாவம், இதுதான் பங்களாக்கள் நிறைந்த ஒரு நகராகப் போய்விட்டதே.

அடுத்த வீட்டவர்கள் சங்கதியில் தலையிட்டுக் கொள்ளாத ஒரு தனித்தன்மை?

புதுப் பட்டுப் புடவை போனதற்கு சங்கரி மூன்றுநாள் அழுதாள். பங்கனபள்ளி மாங்காய்களைப் பறி கொடுத்து விட்டு அந்த வருஷம் வீட்டு மாம்பழம் ஒன்று கூடச் சாப்பிட வைக்காம எந்தப் பாவியோ அறுத்துக் கொண்டு போய் விட்டானே என்று சொல்லிச் சொல்லி எல்லோரையும் அறுத்தாள்.....புளம்பினாள்.

"வேணும் மாமியாருக்கு" என்று உள்ளூர மகிழ்ச்சியாகத்தான் இருந்தாள்.

பிள்ளை ஊரில் இல்லாதபோது பெண்ணோடு காரில் ஊரைச் சுற்ற ஆசை. அதற்காக மருமகளை லீவு எடுத்துக் கொண்டு வீட்டில் இருக்கச் சொல்லிப் பார்த்தாள்.

இந்த ஒரு வருஷ காலத்திலே அவளுக்கு மாமி யாரின் குணம் நன்றாகவே புரிந்துவிட்டிருந்தது.

சுபாவத்திலே மோகனா நல்ல பெண்.

அன்பும் ஆதரவுமாக சங்கரி அவளை நடத்திக் கொண்டிருந்தால் பெற்ற தாயைப்போல பாசமுடன் ஒட்டிக் கொண்டு விட்டிருப்பாள்.

பேயாகக் கத்தி ஆர்ப்பாட்டங்கள் செய்து, அவளை அடிமை போல நடத்துகிற மாமியார் மேல் அவளுக்

குத் துளியும் பாசம் கிடையாது. நேசமுமில்லை. வெறுப்புத்தான் விஷமாக ஏறிக்கொண்டு வந்தது.

# 7

ஒரு நாள் பகல் உணவு நேரத்தின் போது அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த பெண்கள் எல்லோரும் அவர்களது சாப்பாட்டறையில் கூடியிருந்த சமயம். அன்று காலை பத்திரிகையில் வந்ததொரு சங்கதி அலசிப் பேசப்பட்டது.

சுதா என்கிற இருபத்திரண்டு வயதுப் பெண்ணை அவளது மாமியாரும் நாத்தனாரும் சேர்ந்துகொண்டு மண்ணெண்ணெயில் முழுக்காட்டி உயிருடன் எரிய வைத்துக் கதவை வெளியே சாத்திவிட பெண்ணின் அலறலைக் கேட்டுப் பக்கத்து வீட்டவர்கள் ஓடி வந்து காப்பாற்ற முயன்றும் சுதா ஆஸ்பத்திரியில் படுகாயத்தில் இறந்து போனாள். மாமியாரும் நாத்தனாரும் போலீசாரால் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

"வரதட்சணைக்காக இப்படி ஒரு பயங்கரக் கொலையை செய்வாளோ ஒரு பெண்."

"பெண்ணுக்கு எமன் பெண்ணுதான்னு புரிகிறதா? வீணா நாம ஆண்கள் மேலே குற்றம் சுமத்துகிறோம். பெண்கள் புக்ககத்தில் அனுபவிக்கிற சங்கடங்கள் பலவற்றிற்கு மாமியார்தான் காரணமாகிறாள், வரதட்சணை ஒழியாது நம்மிடையே இருக்கக் காரணம் மாமியார்கள்தான்."

காரமாக ஒருத்தி பேசினாள்.

"இந்தக் கொடூரச் செயலைச் செய்த அந்தப் பாதகிக்கு நீதிபதி கருணை காட்டாது மரண தண்டனை தர வேண்டும்."

"மண்ணெண்ணெயில் முழுக்காட்டா விட்டா என்ன, வார்த்தைகளில் ஈட்டி போலக் குத்தி சித்திரவதை செய்ய முடியுமே. என் சிநேகிதி ஒருத்தி வீட்டில் மாமியார் தொல்லை தாங்க முடியாமல் விவாகரத்துக்கு வழக்குத் தொடர்ந்திருக்கா. கணவன் அடிக்கிறான் உதைக்கிறான்னு புகார் செய்து விடுதலை வாங்கப் பார்க்கிறா."

"வார்த்தைகளால் கொடுமைப்படுத்தற மாமி யார்களை தண்டிக்க வழியே இல்லையா?"

"ஏன் இல்லை? சட்டத்தை நாம் கையில் எடுத்துக்க ணும். தாங்க முடியாமப் படுத்தினா பேசாம கிழவி யை இழுத்து ஒரு தூணில் கட்டி வாட்டு வாட்டுனு சாட்டையால் அடிச்சா...."

"ஐயோ. எத்தனை குரூரமான தண்டனை." கொல்லென்று பெண்கள் சிரித்தார்கள்.

ஆனால் மோகனா சிரிக்கவில்லை.

கற்பனையில் அவள் சங்கரியை அடித்து நொறுக்கி ஆனந்தப்பட்டுக் கொதண்டிருந்தாள்!

யாரோ ஒரு பெண் விவாகரத்துக்கு வழி தேடிக் கொண்டிருக்கிறாள் என்ற செய்தி அவளது மனதிலே ஆழமாகப் பதிந்து விட்டதால்தான் அன்று அவள் அம்மாவிடம் அப்படிப் பேசிவிட்டு வந்தாள்.

உண்மையில் அவள் விவாகரத்தை வேண்டுகி றாளா?

மாமியாருலடன் ஒத்துப்போக முடியவில்லை. புருஷனும் கேட்கமாட்டேன் என்றால் ஒரு பொண் ணுக்கு வேறு வழி தற்கொலை.

சே! அவள் ஏன் சாகணும். வாழ்க்கை வாழ்வதற்கு.

சாவதற்கு அல்ல.

என்னென்னமோ பைத்தியக்கார எண்ணங்கள்,

பழைய நினைவுகள் தொடர் சங்கிலிபோல் ஒன்றுக்குப் பின் ஒன்றாக எழ அவள் தூங்கவேயில்லை.

# 8

சில நாட்களாக அவளுக்கு சரியான தூக்கம் இல்லை, பசியும் கிடையாது. ஓய்வு இல்லாது உடம்பு துவண்டது. எரிச்சலும் கோபமுமாக அவைகளை மனதிற்குள் அடக்க முடியாது தவித்தாள்.

மறு நாள் காலை அவள் அலுவலகத்திற்குப் போன போது மறுபடியும் அந்த அவா.

அப்பாவிடம் பேசிப் பார்த்தால்-

அவருக்கு அவள்மீது அலாதிான அன்பு உண்டே. மகனைவிட மகள் மீதுதானே துளி கூடுதலான பிரியம்.

மறுபடியும் பகல் உணவு நேரத்தின்போது வேலைப் பகுதியின் தலைவர் முன் போய்த் தயங்கி நின்றாள்.

புருவங்களை உயர்த்தியபடி அவளை உற்றுப் பார்த்தார் தலைவர்.

"என் வேலைகளை முடிச்சிட்டு நான் ஒரு மணிநேரம் முன்னதாக வீட்டுக்குப் போக முடியுமா?"

"இன்னிக்கு என்ன காரணம் சொல்லப் போறே."

கேட்டு முடிக்குமுன் அவள் கண் கலங்கிப் போனாள். பேச முடியாது உதடுகள் துடிக்க, உடல் ஆட நின்றாள்.

உட்கார் அம்மா. ஏன் வருத்தப்படறே. என்ன சங்கதி? நான் தெரிஞ்சுக்கலாமா?

பொலபொலவென்று கண்ணீர் கொட்டி விட்டது அவளுக்கே வெட்கமாக இருந்தது.

நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். சட்டென்று புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"என் தந்தையை நான் அவசியம் பார்க்க வேண்டும். நேற்று அவர் வீட்டில் இல்லை."

"நான் என் புக்ககத்திலே சந்தோஷமா இல்லை."

"அடபாவமே...உன் கணவர் நடத்தையில்?"

"அதெல்லாம் இல்லை. பாவம் அவர் ரொம்ப நல்லவர்.

"வரதட்சணை சமாசாரமா, மாமியார் சங்கடம் கொடுக்கிறாளா?"

"கொடுக்க வேண்டியதெல்லாம் வாங்கிக் கொண்டாச்சு. ஆனாலும் அதிகாரம் செய்து ரொம்பத் தொல்லை கொடுக்கிறாங்க."

"நான் சொன்னா கோவிச்சுக்க மாட்டியே...."

தலையை ஆட்டினாள் மோகனா.

"இப்படித்தான் என் பெண்ணும் ஆரம்பத்திலே சங்கடப்பட்டா. இது நீயா கற்பிச்சுக்கிற பிரமை. உங்கம்மா சொன்னா உனக்கு காரமா படாது. மாமி யார் கொஞ்சம் அதட்டினாக் கூடப் பெரிசா குற்றமா தெரியும். வீட்டிலிருக்கிற பெரியவங்களைப் புரிஞ்சிக்கணும். உனக்கும் அவங்களுக்கும் இடையே ஜெனரேஷன் காப். அதுதான் உன் மன வேதனைக்குக் காரணம். ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சு கொண்டா உலகத்திலே ஒரு தொல்லையும் கிடையாது. இப்போ என் பெண் புக்ககத்திலே சுகமா இருக்கா. நோ கம்ப்ளெயிண்ட்ஸ்." சிரித்தார்.

உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

'உங்களுக்கெல்லாம் புரியாது. பெண்கள் படும் கஷ்டங்கள் ஆண்களுக்கு எங்கே புரியப் போகிறது. சொன்னதுதான் மிச்சம்.'

"ஒரு மணி நேரம் அவகாசம் கொடுத்தா நான் அப்பாவைப் பார்த்திட்டு வீட்டுக்குப் போவேன்."

"வீணா அவர் மனசைப் போய் கலவரப்படுத்த ணுமா? பொறுமையா இரும்மா.

பற்களைக் கடித்துக் கொண்டாள் அவள். 'பொறுமை! பெண்ணுக்கு எருமைபோல பொறுமை வேணுமாம். ஏனாம்?'

"அவருக்கு டயாபடிஸ், பிளட்பிரஷர் எல்லாம் இருக்கு. உடம்பைக் கவனிக்கிறதில்லை. அம்மா ரொம்ப வருத்தப்பட்டாங்க. நான் நேரே பார்த்து கேட்டுட்டு வரத்துக்கு..."

"என்னவோ உன் வேலைகளை முடிச்சுட்டா பேஷா ஒரு மணி முன்னதாகக் கிளம்பலாம். ஆனால் இதையே ஒரு பழக்கமா வச்சுக் கொண்டுடாதே" எச்சரித்தார்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னால் அரை மணி நேரம் அவள் குனிந்த தலை நிமிராமல் தன் வேலைகளைப் பொறுப்புடன் செய்து முடித்துவிட்டு ஃபைல்களைப் பையனிடம் கொடுத்துவிட்டுக் கிளம்பினாள்.

"என்ன, சினிமாவுக்கா?" பக்கத்திலிருந்த டைப்பிஸ்ட் கண்களைச் சிமிட்டியபோது ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

'என் வாழ்க்கையே ஒரு திரைப்படமா இருக்கு. வேறே ஏன் வெளியில் போய்ப் பார்க்கணும்' சூடா பதில் சொல்லத்தான் தோன்றியது.

அவளுக்கு எதிர்த்து என்னவெல்லாமோ பேச

வேண்டும் என்று அவ்வப்போது. ஆத்திரம் குமுறிக் கொண்டுதான் வந்தது. ஆனால் அடக்கிக் கொண்டு அவஸ்தைப்பட்டாள்.

# 9

திருவல்லிக்கேணி மார்க்கண்டன் தெருவுக்குள் நடக்கும்போது மணி நான்காகி விட்டிருந்தது.

அந்த வேளையில் அப்பா கடற்கரைக்கு புறப்பட்டிருக்க மாட்டார் என்ற நம்பிக்கை.

வாகீசன்தான் கதவைத் திறந்தார்.

"என்னம்மா? திடீரென்று..." என்று அவர் கேட்டதுமே சுருக்கென்று பட்டது அவளுக்கு.

வாம்மா வா என்று வாய் நிறைய அழைக்கத் தோன்றாமல் பெண்ணைப் பார்த்ததும் புலியைச் சந்தித்து விட்டது போல ஏன் இந்தப் பதட்டம்?

சங்கரி எதையோ பிறந்த வீட்டிலிருந்து வாங்கி வரச் சொல்லி விரட்டியிருக்கிறாள் என்று பயந்து போய் விட்டார் மனிதர். மோகனாவுக்கு உள்ளூரச் சிரிப்புத்தான் வந்தது.

பெண்ணைப் பெற்றவர்கள் தங்கள் பொறுப்பை உதறக் கல்யாணம் என்ற பந்தத்தில் அடங்கிய மகளை ஒப்படைத்து விட்டு பிறகு கால முழுவதும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்களே என்ன முட்டாள்தனம்?

சாஸ்திரங்களில் கூறியபடி திருமணம் ஒரு புனிதமான பிணைப்பாக அமையாது ரொம்ப வியாபார ரீதியாகப் போய் விட்டதின் பலன்.

'உன் பொறுப்பை நான் சுமக்கிறேன். அதுக்கு

அப்போ அப்போ கூலி தந்துடு' என்றுதானே ஓயாம பெண்ணைப் பெற்றவனை பிள்ளை வீட்டவர்கள் துரத்துகிறார்கள். இதுவெல்லாம் சம்பிரதாயம். நான்சென்ஸ்.

குமுறிக்கொண்டே அப்பாவைத் தாண்டிக் கொண்டு உள்ளே புகுந்தாள்.

"யாரு, மோகனாவா, வாம்மா." அம்மா வரவேற்றாள்.

ஆனாலும் அவள் முகத்திலே ஏகக் கலவரம்.

நேற்று வந்துவிட்டுப்போன பெண்-விவாகரத்து அது இது என்று உளறி விட்டுப் போன மகள் மறுபடியும் திடுதிப்பென்று வந்து நிற்கிறாளே என்ற அச்சம்...துல்லியமாக அவள் கண்களில் தெரிந்தது.

"கை கால் கழுவிக்கொண்டு உட்கார். அப்பா காப்பி டிபன் சாப்பிடும் நேரம்! உப்புமா பண்ணியிருக்கேன்." உபசரித்தாள் தாய்.

"உங்களுக்கு ஒரு ரவிக்கை துண்டு வாங்கி எடுத்து வந்தேன். அதைக் கொடுக்க மறந்துட்டு போயிட்டேன்." பையைத் திறந்து காகிதப் பொட்டலத்தை எடுத்து அம்மாவிடம் நீட்டினாள்.

"இதெல்லாம் எனக்கு எதுக்கு? நீ பொறுமையா நல்ல பெண்ணா புக்ககத்திலே வாழ்ந்தா அதுவே போதும்." அம்மாவின் கண்கள் பனித்துப் போயின.

"என்ன மோகனா? எங்கே இப்படி. உன் கணவர் ஊரில்தானே இருக்கார்." கேட்டபடி அப்பா துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கூடத்தில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

காப்பி டிபன் முடியும்வரை அவள் கம்மென்று இருந்தாள்.

"அம்மாவோட கொஞ்ச நேரம் பேசிக் கொண்டி

ருந்து விட்டு நேரத்தோடு வீட்டுக்குக் கிளம்பும்மா. காலம் கெட்டுக்கிடக்கு" என்றபடி அப்பா எழுந்தார்.

"அப்பா, உங்ககிட்ட ஒரு விஷயம் பேச வந்திருக்கேன்."

"பணம் தேவைப்பட்டா இப்போ என்கிட்டே செல்லாத காசு கூட இல்லை. உன் சகோதரன் அனுப்பறது ரொம்ப கொஞ்சமா இருக்கு. குடும்பத்தை நடத்திக் கொண்டு போறதே சிரமமா இருக்கு."

"உங்க ஆலோசனை தேவை. அதுக்காக வந்திருக்கேன்."

"சீக்கிரம் சொல்லு. ஐந்து மணி அளவில் என் சிநேகிதன் கடற்கரைக்குப் போக எனக்காக வீட்டு வாசலில் காத்துக்கொண்டு நிற்பான்" குரலில் அவசரம் தெரிந்தது.

"ஐந்து நிமிஷத்துக்கு மேலே நான் எடுத்துக்க மாட்டேன் அப்பா."

"உன் கணவர் ஏதாவது..."

"எல்லாரும் ஏன் இதே கேள்வியைக் கேட்கவேண்டும். ஒரு பெண்ணுக்கு புக்ககத்தில் பிடித்தம் இல்லை...வாழ சிரமமாக இருக்கிறது என்றால் கணவனது நடவடிக்கை ஒன்றுதான் அதற்குக் காரணமாக இருக்க வேண்டுமா?"

தாடை இறுக அப்பாவை வெறித்துப் பார்த்தாள் மகள்.

"அவர் பேரில் குற்றம் ஏதும் நான் சொல்ல வரலை எனக்கு பொதுவா திருமண வாழ்க்கை பிடிக்கலை."

"என்ன உளர்றே? உனக்குச் சித்த சுவாதீன மில்லாம போயிட்டது. ராஜாவாட்டம் புருஷன்.

கௌரவமான குடும்பம், வசதியான வீடு, கார். இந்தக் காலத்துப் பெண்களுக்கு ஆசைக்கு அளவே கிடையாது. வாழ்க்கையிலே என்னத்தை அவர்கள் எதிர்பார்க்கிறாங்க என்பது தெரியறதில்லை. உன் வீட்டிலே என்ன குறையிருக்கு. பிரிஜ், டி.வி. அது இதுன்னு தேவைப்பட்டதெல்லாம் இருக்கே.

"அப்பா, எனக்கு சந்தோஷம் என்பதே அங்கே இல்லை." தழதழத்தாள் மகள்.

"ஏன் இல்லை?"

"என் மாமியார் ரொம்பப் பொல்லாதவளா இருக்கா. கல்யாணத்தின்போது ஞாபகமிருக்கா?

அவருக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. டெல்லியிலிருந்து வந்த அவளது உறவினர், உயர்மட்டத்து அதிகாரி, பெரிய பணக்காரர், அவரையும் அவர் குடும்பத்தையும் பெண் வீட்டார் நிமிஷத்திற்கு நிமிஷம் ஓடி ஓடிக் கவனிக்க வில்லை என்ற புகார்.

கல்யாண வீடுகளில் ஏற்படும் சில தவிர்க்கமுடியாத தவறுகள். அந்த உயர்மட்டத்து அதிகாரி பந்தலுக்கு வந்தபோது தாலிகட்டும் சமயம்.

சம்பந்தி நேரே வரவேற்று உடனடியாகக் காப்பி டிபன் கொடுத்து உபசரிக்கவில்லை என்ற பெரிய புகார். சங்கரி கண்டபடி பேசிவிட்டாள்.

அப்போது வாகீசனுக்கும் கோபம் பொத்துக்கொண்டுதான் வந்தது.

தாலி கட்ட வேண்டாம். நிறுத்து என்று கல்யாணத்தையே நிறுத்திவிடலாம் என்ற ஒரு ஆவேசம்.

பேசாம இருங்கோ நான் உங்க தங்கச்சி புருஷனை அனுப்பிக் கவனிக்கச் சொல்றேன். கிசுகிசுத்தாள் மனைவி.

எப்படியோ ஆத்திரமும் மனக்கசப்பும் கோபமும் தாபமுமாகக் கல்யாணம் நடந்தேறியது.

முகூர்த்தத்தின்போது ஆர்ப்பாட்டம் செய்த அந்தப் பெரிய மனிதன் பிறகு ரொம்பவே நெருங்கிச் சிநேகமாகி ஊருக்குப் புறப்படும்போது அவரை ஒரு நடை டெல்லிக்கு வந்து தம் வீட்டில் தங்கி ஊரைச் சுற்றிப் பார்த்து மகிழ வேண்டும் என்று பவ்யமாகக் கேட்டுக் கொண்டு கிளம்பியிருந்தார்.

"சங்கரிக்கு ரொம்ப முன் கோபம், அவ்வளவு தானே? அந்தப் பழைய கதை எதுக்கு இப்போ?"

"என் மாமியாரின் குணம் தெரியுமில்லையா? நாளுக்கு நாள் ரொம்பவே என்னை படுத்த ஆரம்பிச்சுட்டாங்க. எனக்கு சகிக்க முடியலை."

"அதனாலே?" அப்பா அவளைக் கடுமையாகப் பார்த்தார்.

"நான் விவாகரத்து வாங்கிடலாம்னு யோசிக் கிறேன்."

வீடே இடிந்து விழுந்துவிடும்போல் அப்பா கூப்பாடு போட்டார்.

"என்ன சொன்னே? விவாகரத்தா? பேஷ், பேஷ். அதுக்காகத்தான் நான் கடனாளியாகி மொட்டை யடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கேனா?"

"நீங்க அவசரப்பட்டுக் கொண்டு தவறான இடத்திலே கொண்டு என்னைக் கொடுத்திருக்கீங்க."

"என்ன உளறல் இது? இப்படியெல்லாம் பேசிக் கொண்டு இங்கே வந்து நிற்கவேண்டாம். இதை நான் அனுமதிக்கமாட்டேன்."

"நான் சொல்றதைப் பொறுமையா கேளுங்க அப்பா-எனக்கு மட்டுந்தான் பொறுமை தேவையா?"

"பரவாயில்லையே, கல்யாணமானதும் உனக்கு

ரொம்பவே வாய் பெருகிப் போயிருக்கு. இப்போ எனக்குப் புரிகிறது. சுபாவத்திலே உன் மாமியார் கோபக்காரி....அவங்க கிட்டே நைசா நடந்துக்கத் தெரியாம எடுத்தெறிஞ்சு பேசறே. கோபிச்சுக்கிறாங்க. அது சரிதானே...ஒரு சின்ன சங்கதிக்கெல்லாம் விவாகரத்துன்னு ஆரம்பிச்சா உருப்பட்டாப்பலதான்.

"உங்க ஆலோசனையை கேட்கறதுக்கு வந்தேன். காதிலேயே போட்டுக்க மாட்டேன்னா என்ன அர்த்தம்?" கொஞ்சம் குரலை உயர்த்திக் கேட்டு விட்டாள்.

அப்பாவின் முகம் சிவந்துபோனது. கையை ஓங்கி அடிக்காத குறை. கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கமாக வளைய வந்தார்.

என் ஆலோசனையெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். பொறுமையா பெரியவங்களுக்குக் கட்டுப்பட்டு, மான மரியாதையோடு புருஷனோட வாழு, அவ்வளவுதான். வேறே எதையாவது சொல்லிக்கொண்டு இந்த வீட்டு வாசற்படியை மிதிக்கக்கூடாது.

கண்களில் நீர் பெருக அவள் தன் தந்தையை வெறித்துப் பார்த்தாள். "தாங்க்யூ அப்பா. ஏதாவது உதவி செய்வீங்கன்னு உங்களைத் தேடி வந்தேன். நேத்திக்கு அம்மாவும் இதேதான் சொன்னாங்க."

"நேத்திக்கு வேறே இங்கே வந்தியா? எனக்கு நீலா சொல்லலையே? எப்படிச் சொல்வா, அவளுக்கு மானம் சிந்திப்போயிருக்கும். உனக்குப் படிச்சுட்ட திமிர். இந்த மாதிரி கன்னா பின்னான்னு பேசத் தோணுறது. நான் கிளம்பறேன் பீச்சுக்கு-நீ ஒழுங்கா வீடு போய்ச் சேர்." அப்பா காலில் செருப்புகளைத் திணித்துக்கொண்டார்.

"கொஞ்சம் காப்பி சூடா மறுபடியும் போட்டுத்

தரேன், சாப்பிட்டுவிட்டுப் போகலாம் இரு. நித்தியமல்லி மொக்குகளைக் கட்டிவச்சிருக்கேன். துளி சாமி படத்துக்கு போட்டுட்டு மீதியை தலையில் வச்சுக்கோ" அம்மா தாஜா செய்தாள்.

"காப்பி வேண்டாம், போதும் கிளம்பறேன். அந்த மீதிப் பூவை நீங்க தலையில் வச்சுக்குங்கோ. பூவைப் பார்த்தவுடனேயே என் மாமியார் விஷயத்தைப் புரிஞ்சுக்குவாங்க. வீண் சண்டை ஏற்படும். பிறந்த வீட்டுக்கு சொல்லாம கொள்ளாமப் போறது என் மாமியார் அகராதியிலே பெரிய குற்றம், வரேன்." பட்டென்று சொல்லி விட்டு, திரும்பிப் பார்க்காமல் வெளியே நடந்தாள்.

கண்ணீர் கன்னங்களில் கோடிட அவள் வேக மாகத் தெருவைக் கடந்து சாலைக்குள் நுழைந்தாள். வானம் வேகமாகக் கருத்துக் கொண்டு வந்தது. திடீரென்று எங்கிருந்தோ சில்லென்ற காற்று பலமாக வீசியது. ஒரு சில -நிமிடங்கள் படபடவென்று மழைத்தூறல். இடையே கண்ணைப் பறிக்கும் மின் னல்கள், பூமியைக் கிடுகிடுக்க வைத்த இடியோசை.

மேனி பதறி, நெஞ்சு தீவிரமாகத் துடிக்க, பஸ் நிலையத்திற்கு நடக்க முடியாது ஓட்டமும் நடையுமாகத் தன் பிறந்த வீட்டு வாயிற் கதவைப் படபடவென்று தட்டினாள்.

"அம்மா! அம்மா!" உரக்கக் கூவினாள்.

கதவைத் திறந்ததும் அம்மாவின் மேல் விழுந்து கொண்டு காதுகளைப் பொத்தியபடி கூடத்துத் தரைமீது தொப்பென்று விழுந்தாள்.

"இடி இடிக்கறதும்மா. பயமா இருக்கு!

சே! சின்னக் குழந்தையா நீ. இடிக்குப் பயந்து கொண்டு," அம்மா செல்லமாக அதட்டினாள்.

சிறு வயதிலிருந்தே ம்களுக்கு இடியோசையைக் கேட்டால் ரொம்ப அச்சம் என்பது அவளுக்குத் தெரியும்.

"அர்ச்சுனா, அர்ச்சுனான்னு சொல். பயப்படாதே". மகளின் முதுகை மெல்லத் தடவிக் கொடுத்த தாய் புன்னகைத்தாள்.

வீட்டுக்கு அவள் திரும்பும்போது நனைந்துவிட்டி ருந்தாள். நேரமும் அதிகமாகி விட்டிருந்தது.

"இடி இடிச்சதுன்னு வழியிலே அப்படியே எங்கேயாவது ஒண்டிக்கொண்டு நின்னுட்டியா. நல்ல பொண்ணு நீ. வானத்துக்கடியிலே வாழ்கிறவங்க இடிக்கு பயப்படலாமோ? இது மழை காலம். தினம் சாயந்திரமானா இடியும் மழையும்தான் இருக்கும். இந்த வருஷமாவது நல்லா மழை பொழிஞ்சு தொலைக்கட்டும். தண்ணீர் கஷ்டமில்லாம இருக்கலாம். போ, முதல்ல சீக்கிரம் குளிச்சிட்டு, பூரி, உருளைக்கிழங்கு செய்துடு. ராத்திரிக்கு அது போதும்.

குளிரில் உடம்பு வெடவெடவென்று நடுங்க, மனம் கோபத்திலே பதற அவள் தோள்பையைத் தொப்பென்று மேஜைமேல் போட்டுவிட்டுக் குளியலறைக்குள் புகுந்தாள். குழாயை ஹோவென்று திறந்து விட்டாள். அவளது கண்களும் திறந்து கொள்ள...அழுதுகொண்டே குளித்தாள்.

அன்று இரவு கோதண்டம் போன் பண்ணியிருந்தான்...வழக்கம்போல சங்கரிதான் ஓடிச்சென்று போனை எடுத்தாள். இரண்டு தினங்களில் அவன் ஊருக்குத் திரும்பிவிடப் போவதாகச் சொன்னான்.

கடைசியாகப் போனில் பேச அவளுக்குக் கொஞ்சம் வாய்ப்புக் கிடைத்தது.

"என்ன குரல் ஒரு மாதிரி இருக்கு, அழுதியா?" ஆதரவாகக் கேட்டான் கோதண்டம்.

"இல்லை எனக்கு கொஞ்ச நாளா தினம் காலை மாலை இரண்டு வேளையிலும் தலைவலி வரது."

"மருந்து ஏதாவது சாப்பிடு. நான் வந்ததும் டாக்டர் கிட்டே கூட்டிப் போறேன்." ஆறுதலாகச் சொன்னான்...

'டாக்டர்கிட்டே வேண்டாம். என்னை இந்த வீட்டிலிருந்து எங்கேயாவது கூட்டிக்கொண்டு போக மாட்டீங்களா....' அழவேண்டும் போல் துக்கம் நெஞ்சை அடைத்தது.?

"சரி வச்சுடட்டா" எனறபடி போனை வைத்தாள். தன்னையே மாமியாரும் திவ்யாவும் பார்த்துக் கொண்டு நிற்பதை உணர்ந்து கூச்சப்பட்டாள்.

வீட்டில் சிறிது நேரம் நிம்மதியாகக்கூட வளையவர முடியாதபடி இதென்ன சங்கடம்.

மனம் முரண்டு செய்தது. வேலைகளை சீக்கிரம் முடித்துக் கொண்டு படுக்கைமீது சாய்ந்தபோது.... சட்டென்று இன்னொரு யோசனை தோன்றியது.

# 10

அவளது தந்தையின் ஒன்றுவிட்ட சகோதரி கமலம் சொஞ்சம் வசதியாக வாழ்கிறவள். விதவையாகி தன்னந்தனியே அடையாறில் வாழ்ந்து கொண்டிருக்கிறவள். உலக அனுபவம் உடையவள். அந்த அத்தை கமலத்தைப் போய்ப் பார்த்துப் பேசினால்?

மறுநாள் மாலை, அலுவலக வேலை முடிந்ததும், ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொண்டு கிளம்பினாள்.

கையில் மீதமுள்ள பணம் போக்குவரத்துக்குச் செலவழிந்தாலும் சரி. மனதுக்கு அமைதி தரும் ஆலோசனையை அவள் அத்தையிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பஸ் நிலையத்துக்கு அருகே சாலையினின்று உள்ளே ஓடிய ஒரு குடியிருப்புப் பகுதியில் புத்தம்புதியதொரு அழகான வீட்டில் அத்தை தன்னந்தனியாக வசித்துக் கொண்டிருந்தாள். துணைக்கு ஒரு நாய், உயர்ந்த ரகம் இல்லை கலப்படம். ஆனால் அது போட்ட சத்தம்...வீடு கிடுகிடுத்துப் போனது.

"யார் மோகனாவா...அட அதிசயமா இருக்கே... இந்தப் பக்கம்," என்று புன்னகையுடன் வந்து கேட்டைத் திறந்தாள். "பயப்படாதே. கட்டிப்போட்டு வச்சிருக்கேன். குலைக்குமே தவிர கடிக்காது."

"நமக்குத் தெரியும் அத்தை. நாய்க்கு அந்த உண்மை தெரியுமா?" சிரித்தாள் மோகனா.

"ஜோக் அடிக்கிறே, நிறையத் துண்டு துணுக்குகளை பத்திரிகைகளிலே படிக்கிறேன்னு தெரியுது. வாம்மா வா," அத்தை பரிவோடு அழைத்தாள்.

தன்னந் தனியாக வசிப்பதால் அத்தையின் வாழ்க்கையில் ரொம்பக் கட்டுப்பாடு. அவளது புக்ககத்தைப் போல நினைத்த நேரத்தில் காப்பி தயாரிக்கும் பழக்கம் கமலாவுக்குக் கிடையாது.

ஒரே வேளை காலையில் காப்பி, மாலையில் தேநீர், இடையே வருகிற விருந்தினருக்கு மோர் அல்லது ஜூஸ்.

குளிர்பானத்தைக் கண்ணாடி டம்ளரில் நிறைத்து மேஜைமீது கொண்டு வந்து வைத்தாள்.

காலணிகளைக் கழற்றி நடையில் விட்டுவிட்டு, மிகவும் பதவிசாகத்தான் உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டாள் அவள்.

குளிர்பானத்தை முதலில் குடித்து முடித்தாள். "தாங்க்யூ அத்தை" என்று கூறிவிட்டு டம்ளரைத் தானே கழுவி மேஜை மேல் ஒரு பக்கம் வைத்தாள்.

சுருக்கமாக வாழ்க்கையைப் பற்றி சொல்லி முடித்தாள்.

"அத்தை நான் விவாகரத்து செய்துக்கலாமான்னு யோசிக்கிறேன்."

அந்தப் பகுதி மாதர் சங்கத்துச் செயலாளர், மேடைப் பிரசங்கி, பெண் உரிமைக்குப் போர்க் கொடி தூக்கும் வீராங்கனை! அப்படியிருந்தும் அத்தையின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது.

"இது டிராஸ்டிக் முடிவு. மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்துவது என்கிற கதை."

"மூட்டைப்பூச்சி ரொம்ப இர்ரிட்டேட் பண்ணினா வீட்டைக் கொளுத்தித்தானே ஆகணும்..."

"ஸ்டுப்பிட்கேர்ள். உன் கணவர் உன் பக்கந் தானே?"

"டியூவல் லாயல்ட்டி. அதனாலே தவிக்கிறார். கொள்ளவும் முடியாம கொடுக்கவும் முடியாம என்கிற நிலை!"

"உன் பக்கமா அவரைத் திருப்ப முயலு, படிச்ச பெண்தானே! உன் மாமியாரிடம் எடுத்துச் சொல்லி வேலை செய்துட்டு வீட்டுக்கு வந்து ஓடாய் உழைக்க முடியலை, என் ஆரோக்கியம் கெட்டுப் போறதுன்னு படித்துச் சொல்."

"பயமா இருக்கு அத்தை!

"பயம் என்னத்துக்கு. மனதை விட்டுத் திறந்து பேசினா, பிரச்சினை தீரும்."

"என் மாமியார் கேட்கிற ஆசாமியில்லை அத்தை."

"உன் கணவனிடம் பேசு."

"அவரும் காதில் போட்டுக்கமாட்டேன் என்கிறாரே?"

"உன் பெற்றோர்களை விட்டுச் சொல்லச் சொல்.

"ஐயோ! அவர்கள் என் வீட்டுப்பக்கம் தலை வைக்க மறுக்கிறார்கள்"

"அப்படின்னா உன் பிரச்சினைக்கு நான் மட்டும் சுலபமாகத் தீர்வு சொல்ல முடியுமா?"

"அத்தை, உங்க யோசனையைக் கேட்கத்தான் வந்தேன்."

"விவாகரத்து பற்றித்தானே-முதல்ல அதை மனதை விட்டு ஒழி."

"என் வாழ்க்கையிலே இதை விட்டு வேறே வழி அத்தை?"

"விவாகரத்துச் செய்துகொண்டு....பிறகு என்ன பண்ணலாம்னு உத்தேசம்?"

"தனியா வாழலாம்னு தீர்மானம்"

"பைத்தியம்! அது ரொம்பச் சிரமமானது. வயசான எனக்கே இந்தத் தனி வாழ்க்கை கஷ்டமா இருக்கு. நாம் செய்கிற காரியங்களுக்குக் கை கொடுக்க ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு துணை அவசியம்."

"மற்றச் சாட்சிகளை விடு. பேச்சுத் துணைக்காவது கூட ஒருத்தர் வேணும். இளம்வயசில் நீ தன்னந் தனியா வாழறது சாத்யப்படுமா? உன்னைச் சுற்றி உள்ளவர்கள் வேடிக்கையாகப் பார்ப்பார்கள்.

வேலையற்ற சில முரடர்கள் உன்னிடம் நெருங்கப் பார்ப்பார்கள். வேலியில்லாத் தோட்டம்னு நினைச்சு...உன்னைத் துச்சமாப் பேசுவார்கள்."

"நீங்களா அத்தை பேசுறீங்க!"

"நானேதான் பேசறேன். அடிச்சு உதைச்சு உன் கண்வன் உன்னை இம்சை பண்ணினா நானே முன் நின்னு உனக்கு விவாகரத்து வாங்கிக் கொடுத்து, வேற இடத்திலே கல்யாணமும் செய்து வைப்பேன்."

"போதும் அத்தை, ஒருத்தருக்குக் கழுத்தை நீட்டிட்டு நான் படற அவஸ்தை. விவாகரத்தை நான் விரும்பற காரணம் எனக்கு விடுதலை வேணும்னு. இந்த மாமியாரின் அதிகாரத்திலிருந்து விடுதலை...."

"அதுக்கு எத்தனையோ வழிகள் இருக்கு. அவசரப் படாதே. ஒரு வருஷந்தானே புக்ககத்தில் வாழ்ந் திருக்கே. அதுக்குள்ளே ஆயிரம் பிரச்சனைகளா?"

"கடைசியா ஒண்ணு சொல்றேன் கேட்பியா?"

"சொல்லுங்கோ அத்தை கட்டாயம் கேட்கிறேன்."

"கொஞ்சம் பொறுமையை அனுசரி. விஷயத்தை நாசுக்காக உன் கணவனிடம் சொல்."

மறுபடியும் அந்தப் பொறுமை சங்கதிதானே. மோகனாவின் நெஞ்சு படபடத்தது. காது மடல்கள் குப்பென்று சிவந்து போயின. எங்கே திரும்பினாலும் கல் சுவர்.

"முற்போக்குச் சிந்தனை உடையவள், புரட்சி மனப்பான்மையுடையவள் இந்த அத்தை! என்றதெல்லாம் மேடையோடு சரி."

தங்கள் குடும்பத்திற்கு என்று வந்துவிட்டால் பேச்சே வேறு.

வாகீசன் அண்ணன் மகள் விவாகரத்து செய்து கொண்டு தனியாக வாழ்வது அத்தையின் கௌரவப்

பிரச்னையாகி விடுமோ, அந்தக் கவலையோ? ஆட்டோவுக்குச் செலவழித்தது வீண்.

"தாங்க்யூ அத்தை, உங்க ஆலோசனைக்கு நன்றி."

"அசட்டு பிசட்டுன்னு ஏதாவது செய்யாதே. பிறகு நம்ம குடும்ப கௌரவம் மண்ணாகிவிடும். கூடப் பிறந்த அண்ணன் மகள் இல்லை. ஆனாலும் குடும்பத்தை சேர்ந்தவள் என்கிற கட்டுப்பெட்டித் தனம். வெளிப் பகட்டுக்கு பெரிய சமூக சேவகி என்கிற வேஷம்." பற்களைக் கடித்துக்கொண்டு... கோபத்தை அடக்கிய வளாக புன்னகையுடன் விடைபெற்றாள்.

குடையை இழுத்துக்கொண்டு அவளையும் தூக்கிக் கொண்டு பறந்து விடும்போல காற்று கடுமையாக வீசியது.

பஸ் நிலையத்திற்குப் பதட்டமாக நடந்தாள்.

அதற்குள் வானத்தைப் பொத்துக்கொண்டு மழை.

அவளது மாமியார் சொன்னது எதெல்லாம் பலித்ததோ தெரியாது, அவளது வானிலை அறிக்கை சரியாகவே இருந்தது!

பளீர் என்று மின்னல் கண்களைப் பிடுங்குவது போல் பளிச்சிட்டது.

தடாபுடாவென்று வானம் தொடர்ந்து மேளம் கொட்டியது. நடுங்கிப் போய்விட்டாள் அவள்.

குடை கிழிந்துகொண்டு மடங்கிக்கொள்ள. மழையில் அவள் தெப்பலாக நனைந்து போக... அதற்குள் தெருவில் வெள்ளமாக ஓடத் துவங்கிய தண்ணீரில் கால்கள் தள்ளாட நடந்து அருகிலிருந்த வீட்டின் வாசலில் ஒதுங்கிக் கொண்டாள். தலையிலேயே விழுந்துவிடும்போல தொடர்ந்து வானம் இடித்தது. மழை கொட்டியது. சுவற்றோரமாக நனைந்த குருவியாக ஒட்டிக் கொண்டு நின்றாள்:

# 11

"இன்னிக்கும் மழையிலே நனைஞ்சி கொண்டு வந்தியா? இடி இடிச்சதைக் கேட்டு பயந்து கொண்டு எங்கேயாவது ஒண்டிக் கொண்டு நின்னியா?" மாமியார் கேட்டாள்.

"அர்ச்சுனனைக் கூப்பிட்டியா? அவன் பெண்ணின் அபயக் குரலைக் கேட்டதுமே ஓடி வந்திருப்பானே" களுக் கென்று சிரித்தாள் திவ்யா.

அவளுக்கு விஞ்ஞான அறிவு கிடையாதா என்ன? சிறு வயதிலே ஏற்பட்ட பயம். அம்மா அவளைத் தனியே வீட்டில் விட்டு விட்டுக் கோவிலுக்குப் போயிருந்த போது-சின்னஞ்சிறு குழந்தையான அவள் கோடையிடியின் பயங்கரத்தில் ஆடிப்போய்-அடுத்த வீட்டில் பாட்டியிடம் போய் அடைக்கலம் அடைய-அர்ச்சுனா-அர்ச்சுனான்னு சொல்லு. இடி இடிக்கிறது நின்னுடும் என்று பாட்டி சொன்னது-படித்த பின்பும், விஞ்ஞானப் பூர்வமாகத் தெரிந்து கொண்டும், அவளையுமறியாது இன்னமும் பயத்தினால் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அவள் கணவன் கூட ஒரு தடவை சொன்னானே? உன்னை ஒரு சைக்கிரிஸ்ட்கிட்டே அழைச்சுக் கொண்டு போகணும். ரொம்ப பச்சைக் குழந்தையா இடி ஓசை கேட்டு பயப்படறே என்று.

திவ்யா வேடிக்கை செய்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. அவளது இயலாமை, பலகீனம் இவைகளை யார் சுட்டிக் காட்டினாலும் அவளுக்குப் பிடிக்காது.

பச்சைத் தண்ணீரில் தலை முழுகிவிட்டு, ஈரத் தலை காயுமுன்பே சுருட்டி கொண்டையிட்டுக் கொண்டு சமையலறைக்குள் புக நேர்ந்தது.

அன்று இரவு அவளுக்குத் தலைவலி தாங்க முடியவில்லை.

ஒரே தாகம். இருமுறை எழுந்து, தண்ணீர் பாட்டிலை பிரிஜ்ஜிலிருந்து எடுத்துக் குடித்தாள்.

மறுநாள் காலை. பால் பொட்டலத்துடன் வந்த பொன்மணி அழைப்பு மணியை ஆங்காரமாக ஒலிக்க விட்டாள்.

வழக்கமாக விரைந்து வந்து கதவைத் திறக்கும் மோகனாவைக் காணவில்லை.

தூக்கம் கலந்த எரிச்சலோடு எழுந்து வந்தாள் சங்கரி.

"இந்தப் பொண்ணுக்கு என்ன வந்துவிட்டது? காது கேட்கலையா? பெருத்த தூக்கமா?

மறுபடியும் பொன்மணி வாயில் அழைப்பு மணியை அலற விட்டாள்.

வேறு வழியின்றி எழுந்து சென்று கதவைத் திறந்தாள் சங்கரி.

"இந்தாங்க, பால் பொட்டலம்" என்று நடையில் வைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் கூடைக்குள் வீசி விட்டு, அவள் மற்ற இடங்களுக்கு விநியோகிக்க ஓடிவிட்டாள்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு, பிளாஸ்டிக் கூடையை சாப்பாட்டறை மேஜை மேல் வைத்தாள் சங்கரி.

அவளுக்கு ரொம்பவும் அதிசயமாக இருந்தது.

இததனை நேரம் எழுந்து காப்பி டிகாக்ஷனைத் தயாரித்துவிடும் மருமகள் இன்னமுமா தூங்குகிறாள்?

மெல்லக் கதவை லேசாகத் தட்டினாள்.

சாத்தாது மூடியிருந்த கதவைத் தள்ளித் திறந்து குழல் விளக்கைப் போட்டாள்.

படுக்கையில் முனகிக் கொண்டு கிடந்தாள் மோகனா.

“நல்ல காய்ச்சல், எழுந்திருக்க முடியவில்லை” அரற்றினாள் மோகனா.

சங்கரிக்கு ஒரே கவலை. மருமகள் காய்ச்சல் வந்து படுத்துக் கிடக்கிறாள் என்றால்...

வீட்டு வேலைகள் என்னாவது? அன்று காலை பம்பாயிலிருந்து மகன் திரும்பப் போகிறான்.

கூடவே பெரிய மகன் குமரேசனும் மருமகள் லலிதாவும் வரப்போவதாக போன் செய்தி வந்திருந்தது.

திருப்பதிக்குப் போய் வர வேண்டுதலையாம். பேரன் சந்துவுக்கு மொட்டையடிக்கக் கூட்டிவரப் போகிறார்களாமே?

இத்தனை பேருக்கும் சமைத்துப் போட்டு... எப்படிச் சமாளிக்கப்போகிறாள்? பேரன் சந்து மூணு வயது சிறுவன். படு பொல்லாதவன். அவனைச் சமாளிக்கவே ஒரு தனி ஆள் வேண்டியிருக்கும். மோகனாவைப் பத்து நாள் லீவு எடுத்துக் கொண்டு வீட்டோடு இருக்கச் சொல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருந்த சமயம்.... அவள் காய்ச்சலில் படுத்துவிட்டாள்.

“ரொம்பவா காய்ச்சல்?” மெல்ல அருகில் வந்து மருமகள் நெற்றி மீது கைவைத்துப் பார்த்தாள்.

“அடக் கடவுளே! உடம்பு கொதிக்கிறதே?” திகில் தாங்க முடியாது தன் அறையில் கட்டிலின் மீது உறங்கிக் கொண்டிருந்த மகளைக் குலுக்கி எழுப்பினாள்.

"என்னை என்ன செய்யச் சொல்றீங்க. நான் இங்கே ஓய்வா இருக்க வந்திருக்கேன். இத்தனைப் பேருக்கும் சமைச்சுக் கொட்ட என்னால் ஆகுமா? ஒரு சமையல் ஆளைச் சீக்கிரம் தேடிப் பிடியுங்கோ" உறுமிக்கொண்டு எழுந்தாள் மகள்.

"எழுந்து வா, காப்பி பலகாரம் தயாரிக்கக் கொஞ்சம் கைகொடு. பிறகு யோசிப்போம்." சங்கரி அழாத குறையாக மகளைக் கெஞ்சினாள்.

இந்த ஒரு வருஷ காலத்தில் சிறிய மருமகள், காய்ச்சல் என்று ஒரு நாள் கூடப் படுத்ததில்லை. சமீபகாலமாக தலைவலி என்று முறையிட்டாள். ஆனாலும் வேலைக்குப் போகாதிருந்ததில்லை. வீட்டு வேலைகளைப் போட்டுவிட்டுப் படுத்துவிடவில்லை. இப்போது படுத்து விட்டாளே. என்ன காய்ச்சலாக இருக்கும்? இரண்டு நாளில் சரியாகிவிடாதோ.... பலவாறு எண்ணியபடி பல் துலக்கி விட்டு அடுப்பை எரிய விட்டாள்.

அம்மாவும்-பெண்ணும் அடுப்படியில் பெருமூச்சு விட்டனர். இட்டிலியை வார்த்து எடுத்து சட்டினியை மிக்ஸியில் அரைத்து, காப்பியைக் கலந்து கொண்டுவந்து மேஜை மேல் வைத்துக் கொள்வதற் குள் இருவரும் ரொம்பவும் பாடுபட்டுப் போயினர். "என் காப்பியை இப்படி எடுத்து வச்சுடுங்கோ. வீடு கூட்டி முடிச்சதும் நான் அடுத்த வீட்டுக்கு வேலைக்கு ஓடணும்" சிடுசிடுத்தாள் பொன்மணி.

அந்தச் சமயம் பார்த்து வாசலில் நின்ற டாக்சியிலிருந்து கோதண்டமும் அவன் அண்ணனும் மனைவியும் குழந்தை சுந்துவோடு இறங்கினார்கள்.

சங்கரிக்குப் பயம் வயிற்றைப் பிசைந்தது. இத்தனை பேருக்கும் காப்பி கொடுத்து உபசரிக்க வேண்டுமே?

கூச்சலும் சிரிப்புமாக வந்து இறங்கியவர்களினால் வீடு அமர்க்களப்பட்டது. திவ்யா முகத்தைக் கடுத்துக் கொண்டாள். "நிலைமை இப்படியாகும்னு தெரிஞ்சிருந்தா நான் நேத்தே வீட்டுக்குப் போயிருப் பேன். இப்போ மட்டும் என்ன? என் கணவருக்கு போன் செய்து காரை வர வழைச்சு நான் போகப் போறேன்."

"திடீர்னு நீயும் கிளம்பிடாதே! என்னால் இவர்களை எல்லாம் எப்படிக் கவனிக்க முடியும்?" அம்மா கெஞ்சினாள்.

மோகனாவுக்குப் ஃப்ளூ காய்ச்சலோ என்னவோ... இப்போ ஊரில் எங்கே பார்த்தாலும் இந்தக் காய்ச்சல் பரவலா இருக்கு. எனக்கு வந்து தொத்திக் கொண்டா நான் இங்கே தங்க முடியாது. பிடிவாதமாகச் சொன்னாள். அவசரமாகத் தன் பெட்டியை எடுத்துத் துணிகளை உதறி மடித்து வைத்துக் கொண்டு தயாரானாள்.

ஒப்புக்காக வந்த்வர்களுககு ஹலோ சொல்லக் கொஞ்ச நேரம் மட்டும் இருக்க ஒப்புக் கொண்டாள்.

குளித்து முடித்து, மாற்றுப் புடவை அணிந்து கொண்டு வருவதற்குள் எல்லோரும் வந்துவிடவே செய்வது தெரியாது இங்குமங்கும் நடமாடினாள் சங்கரி.

பல் துலக்கிவிட்டு, முகத்தைக் கழுவிக்கொண்டு, முடியை சீராக்கிக் கொள்ள அலங்கார மேஜை முன் கண்ணாடி எதிரே உட்கார்ந்தாள் மோகனா.

கூந்தலை வாராது முதுகில் பரவப் போட்டுக்கொண்டு கண்ணாடியை வெறித்தபடி உட்கார்ந்தாள்.

திடுக்கிட்டுப் போனாள்.

# 12

கண்ணாடியில் இரண்டு உருவங்கள் தெரிந்தன. அவளது உருவத்திற்குப் பக்கத்தில் அதே போல இன்னொரு உருவம். ஆனால் கொஞ்சம் வித்தியாச மாகக் காணப்பட்டாள் கண்ணாடியில் தெரிந்த இன்னொரு பெண்.

அவளைப் போல் கூந்தலை விரித்துப் போட்டுக் கொள்ளாது அழகாக வாரி முடிந்துகொண்டிருந்தாள்.

மோகனாவின் நெற்றியில் குங்குமப்பொட்டு மட்டுந்தான் இருந்தது.

அந்த மற்றொரு பெண் நெற்றியில் பொட்டும், கண்களில் மையும் உதட்டில் சாயமும் தெரிந்தன.

இதென்ன கனவு...உடம்பைச் சிலிர்த்துக் கொண்டாள் அவள். என் உருவம் போல் தெரிகிற இந்தப் பெண் யார்? இதென்ன வேடிக்கை? என் பீரோவிலிருந்த பிரிண்டெட் புடவையை இவள் எப்படி எடுத்துக் கட்டிக்கொண்டாள். சட்டென்று திருப்பிப் பின்னால் பார்த்தாள். யாரையும் காணவில்லை. மறுபடி கண்ணாடியைப் பார்த்தபோது அவள் தெரிந்தாள். ஐயோ பயமா இருக்கே-யார் இவள்? காய்ச்சல் வேகத்தில் அரற்றினாள்.

“ஏன் பயப்படறே? நான்தான் நீ, நீதான் நான். நான் உன்னுள் இருக்கும் துணிச்சலான மோகனா. என் பக்கத்தில் தெரிகிறவள் பயந்தாங்கொள்ளி கோழை மோகனா” களுக்கென்று சிரித்தாள் அவள்.

மோகனாவுக்குத் தலை சுற்றியது நெஞ்சு படபடப்பு அதிகமாகியது விருக்கென்று எழுந்து கட்டிலின்மீது சுருண்டு கொண்டாள்? கண்களில் நீர் புரண்டது.

"அம்மா... பயமா இருக்கே" அரற்றினாள். "பயம் என்னத்துக்கு? உன்னையே நீ பார்த்து ஏன் மிரண்டு கொள்றே?" கண்ணாடியில் தெரிந்த அவள் காதருகே ரகசியமாகச் சொன்னாள். "நீயும் நானும் ஒண்ணு? ஆமாம் ஒவ்வொருத்தர்கிட்டேயும் இரண்டு பேர்கள் இருக்காங்க. ஒருத்தர் ரொம்ப நல்லவங்க. இன்னொருத்தர் ரொம்பத் துணிவானவங்க."

"டாக்டர் ஜெக்கில் அண்ட் மிஸ்டர் ஹைட் என்பாங்களே அதுபோலவா?"

"ஆமாம், உன் வரைக்கும் அதில் ஒரு வித்தியாசம்."

"துணிவில்லாத மோகனாதான் கட்டிலில் காய்ச்சலோடு படுத்திருக்கா. அவளுக்குள்ளேயிருக்கும் துணிவான மோகனா நான் பக்கத்தில் நிற்கிறேன். பயப்படாதே, உனக்குத் துணையாக நான் இருப்பேன்."

"என் தலை சுத்துகிறதே குழப்பமா இருக்கே." குலுங்கி அழுது கொண்டிருந்தாள் அவள்.

"அசட்டுப் பெண்ணே, அழாதே! என்னைப் பார். நான் எப்பவும் சிரித்துக்கொண்டே இருப்பேன். இனி நீ துணிவா சிரிச்சுக்கொண்டு யாருக்கும் பயப்படாம நடத்துக்கணும்."

"எனக்கு அப்படி பழக்கமேயில்லை. பொறுமையா இருக்கணும்னு அம்மா அடி நாளிலிருந்து சொல்லிக் கொடுத்த பாடம்..."

"பொறுமை, பெண்களுக்கு அவசியம்தான். ஆனால் அநியாயமாக நாம் நடத்தப்படும்போது, நீதி

பிசகும் போது பொறுமை எதுக்கு? கோழைகளுக்குத் தான் அது வேண்டும். அந்தச் சமயம் நாம் கொதித்து எழ வேண்டாமா?"

"ஐயோ எனக்கு கோவிச்சுக்கொண்டு கூப்பாடு போடத் தெரியவே தெரியாது."

"உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு போலியாக பொறுமையுடன் இருந்தே? நிறையச் சாமான்களைப் போட்டு டப்பாவை மூடினால் என்னாகும்?"

"மூடி திறந்து கொண்டு விழுந்துரும். சாமான்கள் வழியும்."

"அப்படித்தான் உன்னுள் இருக்கிற என்னை அடைச்சு வச்சே. நான் மூடியைத் தள்ளிவிட்டு முன்னால் வந்து விட்டேன், பயப்படாதே மோகனா! நானிருக்கேன் கூட. இனி அஞ்சாதே."

"சரி. நான் பயப்படமாட்டேன்." என்று விக்கி விக்கி அழுது கொண்டிருந்தாள்.

வீட்டுக்குள் நுழைந்த கோதண்டத்தின் கண்கள் மனைவியைத் தேடின.

வழக்கமா வாசல் அருகேயே வந்து நிற்பவள், இந்த வேளையில் எங்கே போயிருப்பாள்?

"மோகனாவுக்குக் காய்ச்சல், படுத்துக் கொண்டிருக்காள்-முதலில் காப்பியைச் சாப்பிடு." அம்மா சங்கரி டம்ளரை மேஜை மேல் வைத்தாள்.

கோதண்டம் அதைக் கையால் கூடத் தொடவில்லை. வேகமாகத் தங்கள் படுக்கையறையை நோக்கி நடந்தான்.

காய்ந்த மலர் மாலையைப் போல் படுக்கையிலேயே சுருண்டு கொண்டிருந்த மனைவியைக் கண்டதும் கலவரமடைந்து போனான். அந்த ஓராண்டு தாம்பத்ய வாழ்வில் அவள் ஒரு நாள்

கூடக் காய்ச்சல் என்று படுத்தவள் இல்லை. தலை வலிக்கிறது என்று அவனிடம் முறையிட்டவள் அல்ல.

நேரத்திற்கு எழுந்து-எண்ணெயிட்ட யந்திரமாக வேலைகளைக் கவனிப்பாளே?

நாள் முழுவதும் ஒழுங்காக வேலை செய்யும் யந்திரத்தை பற்றி யாவரும் கவலைப்பட்டதில்லை.

அது திடீரென்று நின்றுவிட்டால்தான் என்ன கோளாறு ஏன் நின்றது என்று கவலைப்படுவது சகஜம்.

"மோகனாவுக்கு என்ன காய்ச்சல்?" பதறியபடி அருகில் வந்து கன்னத்தில் கையை வைத்தான்.

நெருப்பாக உடல் தகிப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

"மோகனா, எப்போ பிடிச்சு காய்ச்சலடிக்கிறது? ஏதாவது மருந்து சாப்பிட்டியா?" பரிவுடன் கேட்டபடி கட்டிலின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு கலைந்து கிடந்த அவளது முடியை ஒதுக்கி விட்டான்.

"வந்துட்டீங்களா...என்கிட்டேயே இருங்கோ. எனக்குப் பயமா இருக்கு" விக்கி அழுதாள் மோகனா.

"எதுக்கு பயம். டாக்டரைக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்றேன். மருந்து சாப்பிட்டாக் காய்ச்சல் குறைஞ்சுடும். பயப்படாதே மோகனா" அன்புடன் கூறியபடி அவள் முதுகை மெல்லத் தடவினான்.

"இவள் என்னை ரொம்ப அதட்டறா. இவளைப் போகச் சொல்லுங்கோ" விக்கினாள்.

"எவ உன்னை அதட்டறா?"

"பக்கத்திலே நிக்கிறாளே, என்னைப் போலப் பார்க்கிறதுக்கு இருக்காளே-அவ பேரும்

மோகனாதான். ரொம்பத் துணிச்சல்காரி. என்னை மிரட்டிக் கொண்டே நிக்கறா."

"உளறாதே மோகனா. இங்கே யாரும் கிடையாது. காய்ச்சல் வேகம் என்னென்னவோ கனவு."

"என்னைக் கெட்டியாப் பிடிச்சுக்கோங்க. பயமா இருக்கு" உரத்து அழுதாள்.

"பேசாம இரு, நான் இருக்கேன்." என்றபடி அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான் கணவன். கெட்டியாகக் கணவனது கரங்களைப் பற்றிக் கொண்டிருந்தவள் உடல் முழுவதும் நடுங்கியது.

"அசட்டுப் பெண்ணே! உன்னையே நீ காப்பாத்திக்க தெரிஞ்சக்கணும். உடம்பை அலட்டிக்கிறே." அந்த இரண்டாவது மோகனா அருகில் வந்து காதுகளில் உரத்துச் சொன்னாள்.

"ஐயோ, வேண்டாம். நீ போய்விடு. எனக்குப் பயமா இருக்கு." முனகினாள் மோகனா. கண்ணீர் மாலைகளாகக் கன்னத்தில் வழிந்தது.

காய்ச்சல் வேகம் உடம்பைத் தூக்கிப் போட்டது. "உடனே போய் நான் டாக்டரைக் கூப்பிடறேன். கவலைப் படாதே." என்று ஆறுதலாகக் கூறிவிட்டு வெளியே விரைந்தான் கோதண்டம்.

சிறிது நேரத்தில் வீடு இரண்டு பட்டுப் போனது.

"காப்பி கலந்தாச்சா...?" என்று குரல் கொடுத்தான் குமரேசன்.

"அம்மா, எனக்குப் பசிக்குது." அழுது கொண்டே முன்னறைக்கும் வாசலுக்கும் ஓடிக் கொண்டிருந் தான் சுந்து.

"நான் குளிச்சிட்டு வரேன். பிறகு டிபன் சாப்பிட லாம்" என்று பெரிய மருமகள் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள். அவள் எப்பொழுதும் சீக்கிரம்

வெளியே வருவதில்லை. வெகுநேரம் ஜலக்கிரீடை செய்து கொண்டிருப்பது வழக்கம்.

மகள், மருமகள், பெரிய மகன் என்று மாறி மாறிக் குளியலறையைப் படையெடுக்க, "அம்மா கீரை" என்று வாசலில் கூவியழைக்க "நான் அடுத்த வீட்டுக்குப் போய்ட்டு அப்பாலவரேன்" என்று பொன்மணி நடையைக் கட்ட, "ஏம்மா! யாருக்கு உடம்பு சரியில்லை. உங்க மருமகளுக்கா" என்றபடி மருந்துப் பெட்டியுடன் குடும்ப டாக்டர் வந்து உள்ளே நின்றார்.

கலங்கிய கூந்தலும், நசுங்கிய புடவையுமாகத் தான் நிற்பதை உணர்ந்த சங்கரிக்கு, மிகவும் வெட்கமாத் தானிருந்தது. "வாங்கோ, மோகனாவுக்குத்தான் காய்ச்சல். அவள் அறையிலேயே படுத்துக் கொண்டிருக்கா." என்றபடி புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

# 13

டாக்டர் மோகனாவைப் பரிசோதித்துவிட்டு, மருந்து எழுதிக் கொடுத்தார். "ஒண்ணுமில்லை. சாதாரண ஜுரம். நகரத்திலே வைரஸ் காய்ச்சல் நிறையப் பரவியிருக்கு- காய்ச்சல் விட்டபிறகு ரொம்ப அசதியா இருக்கும்-ஓய்வு எடுத்துக் கொண்டா சரியாப் போய்விடும்."

"ஓய்வு எத்தனை நாள் எடுக்கணும்," சங்கரி கவலையோடு கேட்டாள்.

"ஒருவாரம் வேலைக்குப் போகாம வீட்டோட

இருக்கட்டும், பிறகு, ரத்தத்தைப் பரிசோதனை செய்து பார்த்துட்டு வேறே என்ன சிகிச்சை செய்யலாம்னு சொல்றேன்..."என்றபடி அவர் நகர்ந்தார்.

ஒருவாரமா? அதுவரை யார் வீட்டு வேலைகளை கவனிப்பது? திகிலுடன் குளியலறைக்கு விரைந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் வராததுமாக அடுப்படியில் அவதிப்பட வேண்டியிருக்கிறதே என்று மூத்த மருமகளின் முகம் சோர்ந்து போனது.

"நிம்மதியா இருக்க வந்த இடத்திலே காய்ச்சல், டாக்டர்னு ஒரே குழப்பம்!" என்று குமரேசன் எரிச்சல் பட்டான்.

"அம்மா, எனக்குக் கார் வந்துவிட்டது. நான் கிளம்பறேன். பின்னால் பத்து நாள் கழிச்சு வரேன்..." என்று கூறிய திவ்யா தலையை நீட்டி "மோகனா, உடம்பைக் கவனிச்சுக்கோ" என்று சொல்லிவிட்டுப் பெட்டியுடன் வாசலில் நின்றிருந்த காரில் ஏறிக் கொண்டு விட்டாள்.

குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து வந்த சங்கரியின் உடம்பு ஆடியது.

இத்தனை நாளும் மெல்லத் தூங்கி எழுந்து நகத்தில் அழுக்குப்படாது வாழ்ந்து விட்டவள்.

இப்போ எல்லாப் பொறுப்பும் தன் தலையில் என்றால்?

"இங்கே வந்து பாருங்கோ, அரிசி இத்தனை போதுமா, பருப்பு எடுத்து வச்சிருக்கேன். எனக்கு இத்தனை பேருக்கு எவ்வளவு வேணுங்கிற நிதானம் இல்லே..." என்று மூத்த மருமகள் குரல் கொடுத்தாள்.

"நாங்க காப்பி பலகாரத்துக்குப் பிறகு அண்ணாநகர் வரை போய் வரணும். தம்பியோட காரை எடுத்துக் கொண்டு கிளம்பறோம். பகல் சாப்பாட்டுக்கு வந்து

விடுவோம்." என்றதொரு குண்டைத் தூக்கிப் போட்டான் குமரேசன்.

தலையைப் பிய்த்துக்கொள்ள வேண்டும் போன்ற ஆத்திரம் சங்கரிக்கு 'எல்லோரும் போய்த் தொலையுங்கள். நான் காய்ச்சல்காரியோட மாரடிக்கறேன்.' என்று உள்ளூர வெகுண்டு சமையலறைக்குள் தஞ்சமாகினாள்.

அன்று கோதண்டம் வேலைக்கு லீவு போட்டுவிட்டான். மருந்துக் கடைக்கு ஓடி டாக்டர் எழுதிக் கொடுத்தவைகளை வாங்கி வந்தான்.

"அம்மா, கொஞ்சம் ஹார்லிக்ஸ் கரைச்சுக் கொடுங்கோ."

"அம்மா பிளாஸ்கிலே வெந்நீர் நிறைச்சுக் கொடுங்கோ."

"அம்மா, மோகனாவுக்கு வெஜிடபிள் சூப் கொடுக்கச் சொன்னார் டாக்டர். அதைச் சீக்கிரம் தயார் பண்ணிக் கொடுத்தால் நல்லா இருக்கும்."

மகன் நிமிஷத்துக்கு நிமிஷம் போட்ட உத்தரவுகளைக் கேட்டு அதிர்ந்து போனாள் தாய்.

துணிகளைத் துவைச்சு வச்சுட்டேன். நீ எடுத்துக் காயப் போட்டுக்கோ. என்று சொல்லிவிட்டு பொன்மணி மெல்ல அறைக்குள் புகுந்து மோகனாவைத் தொட்டுப் பார்த்தாள்.

பாவிப் பொண்ணே, காய்ச்சல் நெருப்பா அடிக்குதே. மழையிலே வேலைக்குப்போயிட்டு வந்தது ஆகலை. நல்லாச் சளிப்புப் பிடிச்சுக்கிட்டிருக்கு. அம்மாடி, டாக்டர் கொடுத்த மருந்தைச் சாப்பிடும்மா. நீ இல்லாம வீடு அமர்க்களப்படுது. என்று கூறிபடி அவளை மெல்லத் தடவினாள்.

மோகனா கண்களை விழித்துக் கொண்டு பார்த்து

முறுவலித்தாள். "என் ராஜாத்தி, இதுவரை ஒரு நாள் கூட நீ படுக்கலையே அம்மாடி. உனக்கு என்ன வந்து விட்டது. நானும் பிள்ளை குட்டி பெத்தவதான் நாலு வீட்டு வேலை ஏத்திக்காதிருந்தா நான் இங்கேயே விழுந்து கிடப்பேன். உன்னைக் கவனிச்சுப்பேன்." என்றாள்.

மோகனா மறுபடியும் முறுவலித்தாள்.

"சாயங்காலம் வந்து பார்க்கறேன். நீ எழுந்திருக் காதே. நல்லா தூங்கு" என்று கூறிவிட்டு போர்வையை இழுத்துப் போர்த்தி விட்டு நகர்ந்தாள்.

கோதண்டம் அன்று முழுவதும் மனைவியைக் கவனிப்பதிலேயே பொழுதைக் கழித்தான்.

சங்கரிக்குத் தாங்க முடியாத கோபம்.

"வெறும் காய்ச்சல் . என்ன அப்படி தடபுடல் படுத்தறே..." மகனைக் கடிந்து கொண்டாள்.

பகல் உணவுக்கு மூத்தவனும் மனைவியும் வந்து விட்டிருந்தனர். பேரன் சுந்து அனாவசியமாக அழுது தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான்.

எல்லோரையும் உட்கார வைத்துச் சாப்பாடு பரிமாறி உடல் அலண்டு விட்டிருந்தாள் சங்கரி.

ஒப்புக்குக்கூட பெரிய மருமகள், நீங்க உட்காருங்க நான் காரியத்தைக் கவனிக்கறேன் என்று சொல்ல வில்லை என்ற மனத்தாங்கல். சமையலறைக்கும் சாப்பாட்டறைக்கும் இடையே ஓடி அவள் களைத்துப் போய் விட்டிருந்தாள்.

இடையே மகன் தன் மனைவிக்கு வெஜிடபிள் சூப் வேணும் என்று குறிப்பிட்டபோது அவளுக்குத் தாங்க முடியவில்லை. "இப்பத்தானே ஹார்லிக்ஸ் கொடுத்தே. அதுக்குள்ள என்ன அவசரம். கொஞ்சம் பொறு. தூங்கட்டும்" என்று எரிந்து விழுந்தாள்.

"ஏம்மா, இப்படி அலுத்துக்கறீங்க. உடம்பு நன்னா இருந்தப்போ உங்களுக்கு அவ உழைச்சுப் போடலையா?" மகன் மற்றவர்கள் முன்னே தூக்கி எறிந்து பேசியதைக் கேட்டு அவள் அதிர்ந்து போனாள்.

"இரு, வச்சுத் தரேன்," என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

"என் தலையெழுத்து வசமா மாட்டிக் கொண்டிருக்கேன். காய்ச்சல்னு படுத்துக் கொண்டு இவள் தன் புருஷனுக்கு வேப்பிலை அடிச்சி ருக்காளே? வாயைத் திறக்காத பிள்ளை இப்படிக் கத்துகிறானே?" முணு முணுத்தபடி உள்ளே சென்றாள்.

இரண்டு தினங்கள் சென்றன.

மோகனாவுககுக் காய்ச்சல் இறங்கி விட்டிருந்தது.

டாக்டர் வந்து போவதை நிறுத்தி விட்டிருந்தார்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து சீக்கிரம் திரும்பி விட்டிருந்தான் கோதண்டம்.

கடைகளுக்குப் போய்விட்டு... துணிப் பார்சல் களுடன் உற்சாகமாக உள்ளே நுழைந்தாள் லலிதா.

"ஒரே பசி, என்ன டிபன் வச்சிருக்கீங்க...." கேட்டபடி குமரேசன் சாப்பாட்டறையில் வந்து நின்றான்.

அம்மா, எனக்கு ஐஸ் வாட்டர் வேணும்," வரும் பொழுதே கூக்குரலிட்டு அழுது கொண்டு வந்தான் சுந்து.

நாள் முழுவதும் நிற்காது வேலை செய்து களைத்து விட்டிருந்த சங்கரிக்கு தாங்க முடியாத கோபம்.

எல்லோரையும் உட்கார வைத்து பஜ்ஜியும் காப்பியும் வழங்கினாள்.

ஏம்மா, மோகனாவுக்குச் சாப்பிட ஏதாச்சும் தர வேண்டாமா நினைப்புக் கூட்டினான் மகன்.

அடிக்கடி மனைவிக்காக மகன் பரிந்து பேசியது அவளுக்குப் பிடிக்கவேயில்லை.

'இதுவரை சொன்னதைக் கேட்டு அடிமையாக அடிபணிந்து கொண்டிருந்தவளுக்கு இப்போது அவள் உபச்சாரம் செய்ய வேண்டும்?' என்ற ஆத்திரம்.

“வரச்சொல். வந்து உட்காரட்டும் கொஞ்சம் பார்லி கஞ்சி கொண்டு வந்து வைக்கிறேன் முகத்தைச் சுணங்கியபடி சொன்னாள்.

“மோகனா, இப்படி உட்கார்” என்று கோதண்டம் அவளைக் கைத் தாங்கலாகக் கொண்டு வந்து தங்களுடன் சாப்பாட்டறை மேஜை அருகே இருத்தினான்.

இரண்டே நாளில் அவள் வாடி வதங்கி விட்டிருந் தாள். முகம் வெளுத்துக் கண்களின் ஒளி குறைந்து பெருத்த நோயாளி போலக் காணப்பட்டாள்.

மௌனமாக எங்கேயோ வெறித்துக்கொண்டு உட்கார்ந்தவள் முன் மாமியார் கஞ்சிப் பாத்திரத்தை டக்கென்று கொண்டு வந்து வைத்தாள்.

“காய்ச்சல் இறங்கிட்டதில்லையா? நாளைக்கு தலைக்கு ஊத்திக்கொண்டு எனக்கு வீட்டிலே கொஞ்சம் கைகொடு. ஆபீசுக்கு ஒரு வாரம் லீவு போட்டுவிட்டு தங்கியிரு. இவங்கள்ளாம் வந்திருக் காங்க. என்னால ஒண்ணும் செய்ய முடியலை.”

மாமியாரை நிமிர்ந்து பார்த்தாள் மோகனா. அவள் கண்களில் லேசான வெறுப்புத் தெரிந்தது.

“என்ன அப்படிப் பார்க்கிறே?” சங்கரி அதட்டினாள்.

"நான் நாளைக்கு ஒரு சமயம் திருப்பதிக்குக் கிளம்பினாலும் கிளம்பிடுவேன். அத்தைக்குத் தானே எல்லாத்தையும் கவனிக்கிறதுன்னா முடியலை. இப்போ காய்ச்சல் நல்லா இறங்கிட்டதில்லையா? வெறும் ஃபுளு. இதுக்கெல்லாம் ரொம்பப் பயப்படக் கூடாது. லலிதா தோள்களைக் குலுக்கினாள்.

"சாப்பிடு கஞ்சியை. ராத்திரிகூட வேண்டாம்னு திருப்பி அனுப்பிட்டே. கோதண்டம் வேலையைக் கவனிப்பானா, உன்னைக் கவனிப்பானா?"

"உடம்பைத் தேத்திக்கணும்னா அத்தை, மோகனாவை சில நாள் அவ பிறந்த வீட்டுக்கு அனுப்பி வச்சால்....

"அதெப்படி முடியும்? இங்கே வீட்டை யார் கவனிக்கிறது?" மோகனாவின் தோளை யாரோ தொடுவது போன்ற உணர்வில் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"நீ பேசாம இரு. இவங்களுக்கு நான் பதில் சொல்றேன்" என்றபடி அந்த இன்னொரு மோகனா அருகில் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

என்ன அதிசயம் அவள் பிறந்த வீட்டில் அவளுக்குப் போட்ட சிவப்புக் கல் நெக்லஸையும் சிவப்புக் கல் வளையலையும் அணிந்து கொண்டிருக் கிறாளே? இவைகளை எப்படி எடுத்தாள்? மாமியார் சங்கரி அவளது நகைகளை வாங்கித் தன் பீரோ லாக்கரில் பூட்டி வைத்து விட்டிருந்தாளே?

எங்கேயாவது வெளியே போக வேண்டுமானால் சட்டென்று எடுத்துத் தரமாட்டாளே?

"தாலிச்சரடு போட்டுக் கொண்டு போனால் கூட ஆபத்தாகி விட்டிருக்கும் காலம். நகைகள் எல்லாம் என் கிட்டயே இருக்கட்டும்" என்று புக்ககத்திற்கு

அவள் வந்த சில நாளிலேயே எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு விட்டிருந்தாள்.

விசேஷ நாளில் போட்டுக்கொள்ள அவள் ஆசைப்படடாலும் மாமியார் சட்டென்று எடுத்துத் தந்ததில்லை.

'புதுப்புடவை கட்டிக்கொண்டு நகைகள் போட்டு மிணுக்கவா இப்போ நேரம் இருக்கு? பலகாரங்களைச் சுட்டு எடுக்க வேண்டாமா? வந்தவர்களுக்குக் கொடுத்து உபசரிக்க வேண்டாமா?' என்று பல தடவைகள் மறுத்திருக்கிறாள்.

விசேஷ நாட்களில் வீட்டுக்கு வரும் திவ்யா பட்டுப் புடவை சரசரக்க நகைகள் மேனியில் பளிச்சிட சிரிப்பும் கும்மாளமுமாகத் தன் புக்ககத்து உறவினர்களுடன் வ்ந்து நிற்கும்போது அவள் மட்டும் ஸ்நானம் செய்த கூந்தல் காய வைக்க நேரமின்றி அள்ளி முடித்துக் கொண்டு சாதாரணமானதொரு நூல் சேலையில் கழுத்தில் மஞ்சள் சரடும் கைகளில் கண்ணாடி வளைகளுமாக வீட்டு வேலைக்காரிபோல வளைய வந்திருக்கிறாள்.

ஒரு சமயம் திவ்யா தன் சிநேகிதி அமெரிக்கா விலிருந்து வந்தவளை அங்கே அழைத்து வந்திருந்தாள்.

அன்று மோகனாவின் அலுவலகத்தின் விடுமுறை நாள்.

அந்த அமெரிக்க விருந்தாளிக்கு வீட்டில் விருந்து தடபுடல் பட்டது. காப்பி டிபனுக்குப் பிறகு கிளம்புமுன் அந்தச் சிநேகிதி திவ்யாவிடம் சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனாள் மோகனா.

"எத்தனை சம்பாதித்து என்ன? நாங்கள் எல்லாம் அமெரிக்காவில் வீட்டு வேலை முழுவதையும் சமாளிக்க வேண்டியிருக்கு. இங்கே வாழ்க்கை

ரொம்பவே சுகம். உதாரணத்துக்குப் பாரேன். இந்த வீட்டில் உங்களுக்கு ஒரு இளம் வேலைக்காரி சமையலுக்கும் மற்ற வேலைகளுக்கும் கிடைச்சிருக் காளே நீங்கள்ளாம் கொடுத்து வச்சவங்க."

திகைத்துப் போனாள் மோகனா.

வந்தவள் அவளை வேலைக்காரி என்றல்லவா கணக்கிட்டு விட்டாள். அவமானத்தில் உடல் குறுகிப்போனாள்.

"இவள் என் சகோதரன் மனைவி" என்று மென்று விழுங்கினாள் முடிவில் திவ்யா.

"வெரி ஸாரி, ஐயாம் வெரி ஸாரி என்று பல ஸாரிகளைப் போட்டுவிட்டுப் போனாள் அமெரிக்கக் காரி.

ஆனாலும் அந்த வேதனை மனதிற்குள்ளேயே முள்ளாகி நெருடிக் கொண்டுதானிருந்தது.

'என்ன யோசிக்கிறே? தோளைத் தொட்டாள் இரண்டாவது மோகனா.

இடுப்பிலே அவளது காஞ்சீபுர சிவப்புப்பட்டுச் சேலையும் தலை கொள்ளா மல்லிகைப்பூவுமாக அவள் பார்க்க எத்தனை அழகாக இருக்கிறாள்.

"அசடே, நீ அழகான பெண்தான். ஆனால் இந்த வீட்டில் உன் அழகு பளிச்சிட்டதே இல்லை. இந்த ராட்சசி எல்லாவற்றையும் போட்டு அமுக்கி வச்சிருக்கா. நகரு, நான் பேசிக்கிறேன்."

திடீரென்று மோகனாவுக்கு ஒரு அலாதி துணிவு நெஞ்சில் ஏற்பட்டுவிட்ட உணர்வு.

மாமியாரை அவள் உறுத்துப் பார்த்தாள்.

"என்ன அப்படி முழிக்கறே? கஞ்சியைச் சாப்பிடு, உடம்பில் தெம்பு வேண்டாமா? வேலைக்குப்

போகாம வீட்டோட இருக்க முடியுமா?"

சங்கரி பேசி முடிப்பதற்குள் மேஜை மேலிருந்து கஞ்சிப் பாத்திரம் தடால் என்று அறையின் மூலையில் போய் விழுந்தது.

# 14

"உனக்கு என்ன வந்து விட்டது?" திடுக்கிட்டுப் போன ஓரகத்தி கேட்டதும் பற்களைக் கடித்துக் கொண்டு அவளை முறைத்தாள் மோகனா.

"ஷட்அப். வாயை மூடிக்கொண்டு உன் வேலை யைக் கவனிச்சுக் கொண்டு போகாட்டா என்ன நடக்கும் தெரியுமா?"

கோதண்டம் திகைத்துப் போனான். "மோகனா என்ன பேசறே? என்ன உனக்கு வந்துட்டது?" கேட்டபடி எழுந்து சென்று அருகில் நின்றபடி அவள் முகத்தில் பரந்த முடியைத் தள்ளி விட்டான்.

"எனக்கு ஒண்ணும் வரலை. இங்கே இருக்கிற பிசாசுகளை முதலில் கேளுங்கள். இவங்கள்ளாம் என்னை என்ன நினைச்சுக் கொண்டிருக்காங்கன்னு நல்லா விசாரியுங்கோ" உரக்கக் கத்திவிட்டு சிரித்தாள். மேஜை மேலிருந்த கண்ணாடி டம்ளர் ஒன்றை எடுத்து சுவரின் மீது ஓங்கி அடித்தாள்.

எல்லோரும் திக்பிரமையடைந்து போனார்கள். ஓயாது ஞொய் ஞொய் என்று ஓலமிட்ட சுந்து கூட வாயை மூடிக்கொண்டான். வாராது தொங்கும் தலை முடியும் வெறித்த கண்களுமாக மோகனா எழுந்து நின்ற போது சங்கரி பின்னோக்கிப் பயந்தபடி சுவரோரமாக ஒண்டிக் கொண்டாள்.

கைத்தாங்கலாக மனைவியை அழைத்துக் கொண்டு அறையில் கொண்டு படுக்க வைத்தான் கோதண்டம்.

மனதிலே ஏகப்பட்ட மிரட்சி. இருந்தபோதிலும் கனிவுடன் அவளைக் கேட்டான்.

"மோகனா, உனக்கு என்ன நேர்ந்துட்டது. ஏன் இப்படி நடந்துக்கிறே?"

சிவப்புப் பட்டுப் புடவையில் சிங்காரமாக நடந்து அறையைவிட்டு இரண்டாவது மோகனா போய்விட்டதைக் கண்டாள் அவள்.

"எனக்கு ஒன்றும் தெரியலை. ஒரே குழப்பமா இருக்கு. என்னை நீங்கதான் காப்பாத்தணும். இந்த வீட்டில் எனக்கு ஆறுதல் சொல்ல உங்களைத் தவிர யாரும் இல்லை." படபடவென்று பேசின மோகனா துயரம் தாளாது அவனது மடியில் படுத்துக்கொணடு குமுறி அழுதாள். கோதண்டம் நெஞ்சுருகிப் போனான்.

பொறுமையின் இருப்பிடமாக இதுவரை இருந்தவள் இப்படிக் கொதித்து எழுந்து கத்தி ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டுமென்றால்?

கட்டாயம் டாக்டரை அழைத்துக் காட்ட வேண்டிய கேஸ். குழப்பமும் துயரமுமாக அவள் தலையை மெல்ல வருடினான்.

"பயப்படாதே மோகனா. கட்டாயம் உன்னைக் காப்பாத்துவேன். உன்னாலே வேலைக்குப் போய் வரது கஷ்டமா இருந்தா வேண்டாம். வீட்டோட ஓய்வா இருந்துக்கோ, நான் வற்புறுத்தமாட்டேன். பயப்படாதே" குழைவாகப் பேசினான்.

"நாம் ரெண்டு பேரும் சந்தோஷமா வாழ முடியும். ஆனால் வாழக் கொடுத்து வைக்கலை." மறுபடியும் விசும்பினாள் மோகனா.

"என்ன பேத்தறே மோகனா? உன் உடம்புக்கு இப்ப என்ன வந்துடுத்து?"

"என்னவோ வந்துடுத்து, பயமா இருக்கு."

"ஊரிலே இருக்கிற அத்தனை டாக்டர்களைப் பார்க்கணும்னாலும் சரி. உன்னைக் கவனிக்காம விட்டுட மாட்டேன் பயப்படாதே. நானே போய்க் கொஞ்சம் பாலை காய்ச்சி எடுத்துண்டு வரேன் சாப்பிடு. பட்டினி கிடக்கக் கூடாது." மிக்க ஆறுதலாக அன்பாகக் கனிவாகப் பேசினான்.

"எனக்கு ஒண்ணும் வேணாம்" என்றபடி அவனது இடுப்பை இறுக்க அணைத்துக் கொண்டாள். மேலும் மேலும் விம்மி அழுதாள்.

அதற்குப் பின்னர் அந்த வீட்டில் வேறு ஒரு தினுசு அமர்க்களம் ஆரம்பமாகியது.

குடும்ப வைத்தியர் சுந்தரமூர்த்தி விரைந்து வந்து மோகனாவைப் பரிசோதித்தார். உடனடியாகப் பெண் மருத்துவர் ரேவதி தருவிக்கப்பட்டாள். ஸ்பெஷலிஸ்டுகள் ஒருவர் பின் ஒருவராக வந்து போயினர்.

"பார்த்தியா சங்கதியை. பெரிய வேஷம் போட்டு எத்தனை டாக்டர்களை வரவழைச்சுட்டா இந்தப் பொண்ணு" சங்கரி மோவாயில் கையை வைத்துக் கொண்டு முணுமுணுத்தாள்.

வேலைக்காரி பொன்மணிக்கு மிக்க கவலை ஏற்பட்டுவிட்டது. ஒரு வாரத்துக்கு முன் நன்றாக இருந்த சின்ன எஜமானிக்குத் திடீரென்று என்ன வந்துவிட்டது. காலையில் காய்ச்சல் இறங்கியும் உடம்பு ஏன் குணமாகலை. மாலையும் வேலைக்கு வந்தவள், வீட்டில் உள்ளவர்கள் ஏதோ கிசுகிசு எனப் பேசுவதைக் கேட்டுக் கலங்கி விட்டிருந்தாள்.

வஞ்சனை செய்யாது நல்ல காப்பியும் சூடான இட்லியும் தந்து உபசரிக்கும் அந்த மகராஜிக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படக் கூடாது என உள்ளூர பிரார்த்தித்துக் கொண்டாள்.

டாக்டர் ரேவதி கோதண்டத்தை அன்று தன் கிளினிக்குக்கு வரச் சொல்லியிருந்தாள்.

மறுபடியும் கோதண்டம் அலுவலகத்துக்கு லீவு போட்டு விட்டு மனைவியின் அருகிலேயே இரண்டு நாட்களாகக் கட்டிக் காத்துக் கொண்டிருந்தான்.

அவன் பக்கத்தில் இருந்தால் மௌனமாக அடங்கியிருந்தாள்.

அவன் எழுந்து அப்பால் போனதும் ஓரகத்தியோ மாமியாரோ அறைக்குள் எட்டிப் பார்த்தால் கூடப் போதும் ஓங்கிக் கூச்சலிட்டு அவர்களைத் துரத்தினாள்.

சங்கரிக்கு ஓரே க்லவரம். வெளியே ஏதும் சொல்ல முடியாது கவலையும் குழப்பமுமாக வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தாள். இதுதான் சமயமென்று மூத்த மகனும் மருமகளும் குழந்தையுடன் திருப்பதிக்குப் புறப்பட்டு விட்டனர்.

தன்னந்தனியாக விடப்பட்ட சங்கரி உண்மையில் மிரண்டு போனாள்.

மகன் இல்லாதபோது மறந்துகூட மோகனாவைப் பார்க்க அருகில் செல்ல அவளுக்குத் துணிச்சல் இருக்கவில்லை. மகளும் மூத்தமருமகளும் அவளை வேண்டு மென்றே கை விட்டுட்டு வேடிக்கை பார்க்கிறார்கள் போல் தோன்றவே, அவளுக்கு அழுகை வந்தது. ஆங்காரப் பட்டாள். ஆனால் யாரிடமும் தன் கோபத்தைக் காட்டிக் கொள்ள முடியவில்லை.

"கொஞ்சம் மோகனாவைக் கவனிச்சுக்கோங்க. நான் டாக்டர் கிளினிக்குவரை போய் வரேன்" என்று புறப்பட்டுப் போய்விட்டான் கோதண்டம்.

தனியே மருமகளுடன் அந்த வீட்டில் இருட்டிக் கொண்டு வரும் அந்திப் பொழுதில் இருக்க அவளுக்கு அச்சமாக இருந்தது.

நேற்று வரை உருட்டி மிரட்டிக் கொண்டிருந்தாள். இப்போது அவளைப் பார்க்க அத்தனை கிலியாக இருந்தது. கஞ்சிப் பாத்திரத்தைத் தூக்கி எறிந்தவள் எழுந்து வந்து கன்னத்தில் அடித்து விட்டால்?

"கொஞ்சம் கூட வந்து துணை இரு. எனக்கு ரொம்பப் பயமாக இருக்கு என்று அம்மா போனில் அழுவதைக் கேட்டு காரை எடுத்துக் கொண்டு வந்துவிட்டாள் திவ்யா.

அம்மாவுக்கு உதவியாக இருப்பதைவிட அவளுக்கு அங்கே நடப்பதை வேடிக்கை பார்க்க ஆவலாக இருந்தது.

மோகனா ஒரு மாதிரி நடந்துகொள்கிறாளாமே -இது என்ன கூத்து, பார்க்கலாம் என்றுதான் புறப்பட்டு வந்திருந்தாள்.

# 15

**டா**க்டர் ரேவதியின் கிளினிக்கில் அன்று ஒரே கூட்டம். தன் முறைக்காக அவன் பொறுமையுடன் காத்திருந்தான்.

நர்ஸ் வந்து அழைத்தபோது மிகவும் கலவரத்துடன் தான் உள்ளே சென்றாள். மோகனா இரண்டு

தினங்களாக நடந்து கொண்ட விதத்தைப் பார்த்து அவனே பல கற்பனைகளை செய்து கொண்டிருந்தான்.

டாக்டர் அவனை அழைத்தபோது உள்ளூர ஒரே திகில். ஏதாவது பயங்கரமான வியாதி என்று சொல்லி விட்டால்?

முகத்தில் பூத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

டாக்டர் காட்டிய ஆசனத்தில் அமர்ந்து கலவரத்துடன் அவரைப் பார்த்தான்.

"முதலில் உங்களுக்கு ஒரு சந்தோஷமான சங்கதி சொல்ல வேண்டியிருக்கு" ரேவதி தொண்டையைச் செருமிக்கொண்டாள்.

மௌனமாக மேஜை மேலிருந்ததொரு அட்டையை நெருடினான்.

"மோகனா தாயாகப் போகிறாள்-இரண்டு மாதக் கர்ப்பம்."

குபுக்கென்று ரத்தம் முழுவதும் முகத்தில் பரவிவிட்டது போன்ற ஒரு உணர்வு.

"அப்படியா?" என்றான் மகிழ்ச்சியுடன்.

"உங்களுக்குக்கூட மோகனா தெரிவிக்கவில்லையா?"

"ஆமாம், தெரிவிக்கவில்லை."

"மகிழ்ச்சியான சங்கதியை உங்களிடம் சொல்லியிருக்க வேண்டும். அவள் சொல்லாததற்குக் காரணம் பயம்."

"பயமா? ஏன் பயப்படனும்?" வியப்பாகக் கேட்டான் கோதண்டம்.

"ஒரு நாள் உங்கள் தாயார் தன் மகளிடம் பேசிக்

கொண்டிருந்ததைக் கேட்டு பயந்து விட்டிருக்கிறாள்."

கோதண்டம் குழப்பத்துடன் பார்த்தான்.

"குழந்தை ஒன்று பிறந்தால் மோகனா வேலையிலிருந்து நிற்க நேரும். குழந்தை வளர்ந்து பள்ளிக்கூடம் போகும் வயது வரை வேலைக்குப் போகாது வீட்டில் இருக்க நேரும். அதனால் குறைந்தது நான்கு வருஷங்களுக்காவது அவள் பிள்ளை பெற்றுக் கொள்ளாதிருப்பது நல்லது. அப்படி கர்ப்பமாகி விட்டால் அதைத் தொடரவிடக் கூடாது."

"என் அம்மாவா அப்படிச் சொன்னாங்களாம்?"

"மருமகள் தாய்மையே அடையக்கூடாது" என்று சொன்னார்களாம் உங்கள் தாய்.

"உங்கள் சகோதரி 'அப்படித் தாய்மை அடைந்து விட்டால் கருச் சிதைவுக்கு ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்றாளாம். இதைக் கேட்டு மோகனா மிகவும் மனம் அதிர்ந்து போய் விட்டிருக்கிறாள்.

அதிகக் குழந்தை பெற்றுக்கொள்வது நல்லதல்ல. நம் குடும்பத்திற்கு ஒரே குழந்தை போதும் என்று நானும் மோகனாவும் ஆரம்பத்திலேயே பேசித் தீர்மானித்த சங்கதி. இளவயதிலேயே பெற்றோர் ஆகிவிடுவது நல்லது. பின்னர் காலம் தாழ்ந்து குழந்தையைப் பெற்றுக்கொண்டால் வளர்த்து ஆளாக்குவது சிரமமாக இருக்கலாம் என்று நான் தான் சொன்னேன்" கோதண்டம் முணுமுணுத்தான்.

"நீங்கள் எல்லாம் படித்தவர்கள், புத்திசாலிகள், பொறுப்பு தெரிந்தவர்கள். பெரிய குடும்பத்திற்கு ஆசைப்பட மாட்டீர்கள். இப்பவே குழந்தை நலனுக்கு பெற்றோர் ஆகிவிடுவது நல்லதுதான். ஆனால் அதை வெளியே சொல்லப் பயந்து தனக்குள் ரகசியமாக வைத்துக் கொண்டிருந்தாள் மோகனா. குழந்தையைப் பெறமுடியாது போய் விடுமோ என்றதொரு பயம்,

தன் உணர்வுகளை வெளியே சொல்லிக் கொள்ள முடியாத ஒரு சிரமம், அதனால் ஏற்பட்ட உணர்வுகளின் அழுத்தம். தாய்மையின்போது பெண்களுடைய மனம் மிகவும் மென்மையாகி விடுகிறது. உணர்வுகளின் அழுத்தத்தைத் தாங்க முடியாது போகிறது. அது சமயம் உடம்புக்குச் சுக மில்லாது போய் விட்டால் சில சமயம் எல்லாம் சேர்ந்து கொண்டு ஒருவித மனக்குழப்பத்தைத் தூண்டிவிட்டு விடுகிறது."

திடுக்கிட்டுப் போனான் கோதண்டம்.

"என் மனைவிக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்றா சொல்றீங்க?" கேட்பதற்குள் அவனுக்குக் கலக்கத்தில் தொண்டை காய்ந்து போனது.

"ஒட்டு மொத்தமாக வெளி மனிதர்கள் அப்படி சொல்லி விடுவார்கள். வைத்தியர்கள் அப்படி நினைப்பதில்லை. மனதிலே ஏற்படும் கோளாறுகள் பல வகைப்பட்டன. அவைகளைத் தீவிரமாக ஆராய்ந்து முடிவுக்கு வரோம். உங்கள் மனைவிக்கு பர்ஸனாலிட்டி டிஸ்ஸார்டர் எனும் மனக்கலவரம் ஏற்பட்டிருக்கு."

"அப்படின்னா"

"விரைவில் குணமடையலாம். தக்க சிகிச்சையும் அரவணைப்பும் இல்லாவிட்டால் இதிலிருந்து வேறு சில குழப்பமான நோய்களும் ஆரம்பிக்கலாம்."

"டாக்டர், அவளுக்கு என்ன விதமான சிகிச்சைகள் தேவையோ எல்லாம் தர நான் தயார். உங்க கையிலே அவளை ஒப்படைக்கிறேன். டாக்டர், என் மனைவியைக் குணப்படுத்திக் கொடுத்தால்..." மேலே பேச முடியாது தடுமாறினான்.

புத்திசாலியான அடக்கமான மனைவிக்கா இப்படிப் பட்ட நோய்? அட கடவுளே!

"முதலில் அவளை உங்க வீட்டிலிருந்து அப்புறப் படுத்தணும்.

"ஆஸ்பத்திரியில் அனுமதிக்கச் சொல்றீங்க?"

"தேவையில்லை, அவளது பிறந்த வீட்டில் இருக்கட்டும். நான் கவனிச்சுக்கிறேன்."

"அங்கே வீட்டிலே சௌகரியம் ரொம்பக் குறைவு டாக்டர். அவள் பெற்றோர்கள் நெருக்கமானதொரு தெருவிலே வசிக்கிறாங்க. எங்க வீட்டைப்போல வசதிகள் ஏதும் கிடையாது."

"மிஸ்டர் கோதண்டம், ஒண்ணு நீங்க மறந்துடறீங்க. ஒரு பெண்ணுக்கு வசிக்க அரண்மனை தேவை யில்லை. அரவணைக்க அன்பானவங்க இருந்தா போதும். குடிசை கூடக் குபேரப் பட்டணமாகத் தெரியும்."

"நான் அவளை அன்பாகத்தானே கவனிச்சுக் கொண்டிருக்கிறேன்?"

"மனசுக்குள்ள நீங்க அன்பை மூடி வச்சிருந்து பயன்... வெளிப்படையா சொல்லிச் செயலில் காட்டியிருக்கணும்... அவளுக்குத் தன் சூழ்நிலையில் நம்பிக்கை கிடையாது. நீங்க எல்லோரும் அந்நியமாக அவள் கண்களுக்குப் படறீங்க. உங்க அம்மா கொஞ்சம் இனிமையாக நடந்து கொண்டிருக்கலாம். மாமியார் என்கிற தர்பார் அவங்க ரொம்பக் காட்டியிருக்காங்க. யாரிடமும் மனம்விட்டுப் பேச முடியாது. யாரையும் நம்ப முடியாமல் தன் உறவினர்களை அமுக்கிக் கொண்டு வாழ முயன்ற பயன் இந்த மனக் குழப்பம்."

"சரியாக ரொம்ப நாள் பிடிக்குமா?"

"நீங்கள்ளாம் நடந்துக்கிறதைப் பொறுத்து இருக்கு."

"நான் இப்பவே அவளைப் பிறந்த வீட்டுக்கு

அனுப்ப ஏற்பாடு செய்துடறேன் நன்றி" தொண்டையை அடைக்க தடுமாறி விட்டு எழுந்தான்.

பேயறைந்தவன் போல வீடு திரும்பிய மகனைப் பார்த்து அதிர்ந்து போனாள் சங்கரி.

விடியுமுன்பே திருப்பதிக்குக் காரில் புறப்பட்டுப் போயிருந்த மூத்த மகனும் மருமகளும் அப்பொழுது தான் வீடு திரும்பியிருந்தனர்.

மொட்டையடிக்கப்பட்ட தன் தலையைத் தடவிக் கொண்டு ரகளை செய்து எல்லோருக்கும் எரிச்சலூட்டிக் கொண்டிருந்தான் சுந்து.

"நீ வரணும்னு காத்திருந்தேன். மோகனாவுக்கு உடம்பு எப்படியிருக்குனு பார்க்க திவ்யா வந்திருக்கா. நாங்க ரெண்டு பேரும் அவ இருக்கிற அறைக்குப் போகப் பயப்படுகிறோம். எட்டிப் பார்த்தேன், அவ்வளவுதான், மோகனா படுக்கையிலிருந்து எழுந்து வந்து என்னை ஒரு பார்வை பார்த்தாளே என் குடல் புரண்டு போச்சு" அம்மா சங்கரி அரற்றினாள்.

"டாக்டர் கிட்டே போனியே என்ன சொன்னார்." அண்ணா குமரேசன் ஆவலுடன் கேட்டான்.

திவ்யா குரலைத் தாழ்த்திக் கொண்டு தன் அண்ணனிடம் கிசுகிசுத்தாள்.

"டாக்டர் என்ன சொல்லணும். நமக்கே தெரிகிறதே? மோகனா கர்ப்பமாக இருக்காளாம்."

"என்ன?" ஏகக் குரலில் எல்லோரும் கேட்டனர்.

"எத்தனை மாசம்? எனக்கு ஒரு வார்த்தை சொல்லலையே" சங்கரி கடுகடுத்தாள்.

"கர்ப்பம், காய்ச்சல், இன்னும் சங்கதிகள் சேர்ந்து கொண்டதில் மோகனாவுக்குக் கொஞ்சம் மனக் குழப்பம் ஏற்பட்டிருக்காம்."

"பைத்தியம் பிடிச்சிருக்குன்னு சொல்றதை விட்டு

இதென்ன மனக்குழப்பம், மண்ணாங்கட்டிக் குழப்பம்னு..." அம்மா சங்கரி அரற்றினாள்.

கோதண்டத்திற்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

"அப்படித்தான் வச்சுக்கோங்க"

"மோகனாவுக்கு சித்தசுவாதீனம்னா வீட்டிலே வச்சுக் கொண்டு பாடுபட முடியுமோ" சங்கரி பதறினாள்.

"வேண்டாம், அவளை நான் இங்கே வைக்கப் போவதில்லை."

"அதுதான் சரி. ஆஸ்பத்திரியிலேயே அட்மிட் பண்ணிடப் போறீயா? குமரேசன் ஆவலுடன் கேட்டார்.

"அவளுடைய பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிடப் போறேன். குழந்தை பெறும் வரை அங்கேயே இருக்கட்டும்.

"குழந்தையா? நல்லா யோசிச்சுப் பாத்தியா கோதண்டம்? மோகனாவுக்கு இந்தச் சமயத்தில் பிறக்கும் குழந்தை ஆரோக்கியமாக இருக்கும்னு நம்பறியா? ஒரு பைத்தியக்காரப் பெண்ணைக் கொண்டு வந்து உன் தலையில் கட்டிவிட்டான் அந்தப் பாவி மனுஷன். இது திடீர்னு வந்திருக்கும் நோய் இல்லை. அவள் குடும்பத்திலே யாருக்காவது..."

"அம்மா, கொஞ்சம் பேசாமல் இருக்கீங்களா? அவங்க குடும்பத்திலே யாருக்கும் மனநோய் கிடையாது. இப்போ யோசிச்சுப் பார்த்தா நம்ப எல்லோருக்கும்தான் பைத்தியம் பிடிச்சிருக்கு."

"ஏடா கூடமாப் பேசாதே. நான் இப்போது என்ன சொல்லிட்டேன், இப்படி எரிச்சல் படறே. நீ படிச்சவன்தானே. நாலும் தெரிஞ்சவன். மன ஆரோக்

கியமில்லாதவளுக்குச் சித்த சுவாதீனமில்லாத குழந்தை பிறந்து தொலைச்சா யார் அதை வச்சுட்டுப் பாடுபடறது. இப்பவே அந்த டாக்டர் கிட்டே கூட்டிக் கொண்டு போய் அழிச்சுட்டா எல்லோருக்கும் நல்லது.'' அம்மா உரக்க, அண்ணன் அண்ணி, சகோதரி எல்லார் முன்னிலையிலும் சொன்னதைக் கேட்டு முகம் சிவந்து போனான்.

அவனது வாரிசை அழிக்க அம்மாவுக்கு இத்தனை அவசரமா?

பிறக்காத அந்தக் குழந்தை மேல் பாசம் பொங்கிப் புரள அவன் தாயைச் சீற்றத்துடன் பார்த்தான்.

“அதை அனுபவிக்கப் போகிறவன் நான். நீங்க கவலைப்படாதீங்க.'' என்று கடுமையாகக் கூறிவிட்டு உள்ளே சென்றான்.

தாயின் உதவியை நாடாது தானே அடுப்பை ஏற்றிப் பாலைச் சுட வைத்து டம்ளரில் ஊற்றி எடுத்து வந்தான்.

# 16

ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த மோகனாவை மெல்லத் தட்டி எழுப்பினான். அமைதியாக எழுந்து உட்கார்ந்து கொண்டாள். அவளிடம் காலையில் காணப்பட்ட பரபரப்பு இருக்கவில்லை.

“நீங்களா இந்த வேலையெல்லாம் செய்யறீங்க?'' வியப்பும் வேதனையுமாகக் கேட்டாள்.

“எனக்கு நீ செய்யறதில்லையா? இப்போ உனக்கு நான் செய்யறது என் கடமை. பேசாம நல்ல பொண்ணா இருந்து கொண்டு இதைச் சாப்பிட்டு

முடிக்கணும்" கொஞ்சலாகப் பேசி அவளிடம் டம்ளரைக் கொடுத்தான்.

மௌனமாகப் பாலைச் சாப்பிட்டாள். "உடம்பு அடிச்சுப் போட்டாப்பல இருக்கு, அடிக்கடி பயம் வரது" என்று முனகினாள்.

"சீக்கிரம் உன் உடம்பு தேறிவிடப் போகிறது. டாக்டர் சொன்னாங்க. நாளைக்கு நீ உன் அம்மா வீட்டுக்குப் போகப் போறே. அங்கே குழந்தை பிறக்கிறவரை நீ இருக்கணும், சரிதானே?"

"டாக்டரம்மா சொல்லிட்டாங்களா?" வெட்கத்துடன் சிரித்தாள்.

"எத்தனை நாளைக்கு மூடிவைக்க முடியும்னு நினைச்சே? நீ ரொம்ப அசடு. வேலைக்கு லீவு போட்டுட்டுப் பிறகு உரிய காலத்தில ராஜினாமா செய்துடலாம்."

"பிறகு நாம் என்ன பண்ணுவோம்?

"உனக்குக் குழந்தையைப் பார்க்கற பெரிய வேலை இருக்கும்."

தலையை அசைத்துப் புன்னகைத்தபடி அவன் தோள்மீது சாய்ந்து கொண்டாள். "எங்கம்மா வீட்டுக்குப் போகப் போகிறோம்னா சந்தோஷமாக இருக்கு!"

"நீ மகிழ்ச்சியா இருக்கணும்னுதான் நான் விரும்பறேன்."

"ஏன் அப்படி?"

"ஏன்னா நான் உன்னை ரொம்ப நேசிக்கிறேன்."

"நிஜமாகவா?"

"உண்மையா நேசிக்கிறேன்."

"இதைக் கேட்டா எனக்கு அழுகையே வரது."

"காதல் என்பது ஒரு துயரமான அனுபவம்தானே? நானும் உன்னை நேசிக்கிறேன். அதனாலே..."

"சே! அழக்கூடாது." என்று அவளது கண்ணைத் துடைத்துவிட்டு, தன் மடியில் அவளைப் படுக்கவைத்துக் குழந்தையைப் போல முதுகைத் தட்டித் தூங்க வைத்தான் கோதண்டம்.

# 17

கடையிலிருந்து மளிகை சாமான்களுடன் உள்ளே நுழைய முற்பட்ட நீலா, பின்னாலேயே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டுத் திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள்.

அலுவலகம் போகும் நேரத்தில் மாப்பிள்ளையும் பெண்ணும் அங்கே எதற்கு வந்திருக்கிறார்கள்?

"வாங்க! வாங்க" என்று வரவேற்றபடி வாயிற் கதவைத் திறந்துகொண்டு முன்னால் அவள் விரைந் தாள். கையில் கனமாகத் தூக்கிவந்த சாமான்கள், திறந்த பிளாஸ்டிக் கூடையை ஒரு பக்கம்வைத்து விட்டு கால்களை முற்றத்தில் கழுவிக்கொண்டு தாழ்வாரத்தில் வந்து நின்றாள்.

"மோகனாவுக்கு உடம்பு சுகமில்லை. இங்கே இருந் தால் குணமடையலாம்னு டாக்டர் சொன்னார்."

"உடம்புக்கு என்னவாம்? சில நாட்களுக்கு முன்னர் அவள் அங்கே வந்தபோது நன்றாகத்தானே இருந்தாள்?" தன்னுள் எண்ணிபடி, "அதுக்கென்ன இங்கே இருக்கட்டுமே. இரண்டு வீட்டிலும் அவளுக்குத் தங்க சொந்தமிருக்கு" என்றாள்.

"மோகனா, பெட்டியைக் கொண்டு உள்ளே வை."

என்று கூறிவிட்டு மனைவி அப்பால் போனதும் தாழ்ந்த குரலில் நீலாவிடம் சொன்னான் கோதண்டம்.

"இரண்டு நாள் காய்ச்சல்தான் காரணம். மோகனாவுக்கு ஒருவிதமான மனக்குழப்பம் வந்திருக்கு. கொஞ்சம் தாறுமாறா நடந்துகிட்டதால் இங்கே வீட்டிலே தங்க வச்சால் குணமடையலாம்னு சொன்னாங்க."

பகீர் என்ற உணர்வில் ஆடிப்போனாள் பெற்றவள்.

"அப்படியென்றால் மோகனாவுக்கு சித்தம் கலங்கி விட்டிருக்கு. நாசூக்காக மாப்பிள்ளை சொல்கிறார்."

மணிபர்சைத் திறந்து சில நூறு ரூபாய் நோட்டுக் களை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"பால், ஹார்லிக்ஸ், பழம் இதுகளைத் தாராளமாக வாங்கிக்கோங்க. வாரத்துக்கு இரண்டு முறையாவது டாக்டர் ரேவதி வந்து பார்ப்பாங்க...பணம் தேவைப் பட்டால் என் அலுவலகத்துக்குப் போன் பண்ணுங்க.

பணத்தைப் பெற்றுக் கொண்ட அவளது கரங்கள் நடுங்கின. "நீங்களும் வந்து பார்ப்பீங்க இல்லையா மாப்பிள்ளை!" துக்கம் நெஞ்சை அடைக்க மெல்லக் கேட்டாள்.

"கட்டாயம் தினம் ஒரு வேளையாவது வந்து பார்ப்பேன். ஏன் கேட்கறீங்க?"

"இது மாதிரியான பெருத்த கஷ்டம் வந்திருக்கே. நான் என்ன சொல்ல முடியும்?

"மோகனாவுக்கு குழந்தை பிறக்கும்வரை இங்கேயே இருக்கட்டும். பிரசவ சமயத்திலே ஆஸ்பத்திரியில் அனுமதித்தால் போதும்னு டாக்டர் சொன்னாங்க. நான் அலுவலகத்திற்குப் போய்க்கொண்டிருக்கேன். பிறகு வந்து பார்க்கிறேன். மோகனா வரேன்."

கூறிவிட்டு வெளியே நடந்தான்.

வாசல் வரை வந்து வழிவிட்ட நீலா, தயங்கியபடி, கேட்டாள், "மாப்பிள்ளை! குழந்தை பிறந்த பிறகு மோகனாவை அழைச்சிட்டுப் போயிடுவீங்க இல்லையா?"

"ஏன் அப்படிக் கேட்கறீங்க?"

"சின்ன காரணத்துக்கெல்லாம் இந்தக் காலத்திலே பிரிஞ்சுட நினைக்கிறாங்க பலர். மோகனாவுக்குச் சித்த பிரமை ஏற்பட்டிருக்கு. வாழ்நாள் முழுவதும் புத்தி சுவாதீனமில்லாத என் பொண்ணை வச்சு வாழணும்னு நான் கேட்டுக்க முடியாதே. அது நியாயமும் இல்லையே. மாப்பிள்ளை! கடவுள் புண்ணியத்தில் அவள் குணமாகி பழைய மோகனாவாகிவிட்டால் அவளை அழைச்சுக் கொண்டு போய் அவளுக்கு வாழ்வு தருவீங்களா?" கேட்டு முடிக்குமுன் கண்கலங்கி விம்மி விட்டாள் நீலா.

"உங்க அரவணைப்பிலே அவள் தேறிடுவாள்னு நம்பிக்கையிலே கொண்டு வந்து விட்டிருக்கேன். கவலைப்படாதீங்க." சொல்லிவிட்டு அவன் காரில் ஏறிக் கொண்டான்.

# 18

அன்று மாலை வேலைக்கு வந்த பொன்மணி சுற்று முற்றும் பார்த்து விழித்தாள்.

மூத்த மருமகள் லலிதாவும் குழந்தையும் பின்னறையில் தூங்கிக் கொண்டிருந்தனர்.

"முட்டி வலிக்கிறது. மூக்கு வலிக்கிறது" என்று முணுமுணுத்தபடி சங்கரி தேய்க்க வேண்டிய

பாத்திரங்களை எடுத்துப் பின் கட்டில் கொண்டு வந்து வைத்தாள்.

சங்கரியிடம் அதிகம் பேச்சுக் கொடுக்க விரும்பாதவள் பொன்மணி. ஆனாலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

"சின்னம்மாவைக் காணலியே? ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்களா?" மெல்லக் கேட்டுவிட்டாள்.

"பிறந்த வீட்டுக்குக் கொண்டு விட்டுவிட்டான் கோதண்டம். பைத்தியம் பிடிச்சவளை யார் வச்சுக் காப்பாத்தறது? பெத்தவள் பாடுபடட்டும்னு நான்தான் அனுப்பிவச்சேன்."

திகைப்புடன் நிமிர்ந்தாள் பொன்மணி; "பைத்தியமா?"

"உனக்குச் சங்கதி தெரியாதா? கஞ்சிப் பாத்திரத்தை தூக்கி அடிச்சு, கத்தி ரகளை பண்ணினாள். இங்கே வச்சிக் கொண்டால் முதல்லே நம் உயிருக்கு ஆபத்து. அண்டை அசலுக்குத் தெரிஞ்சு போனா வெட்கம்.

விழித்துக் கொண்டு முகம் கழுவ வந்த ஓரகத்தி லலிதா ஏளனமாக முறுவலித்தாள்!

"உறவுக்காரங்களுக்குத் தெரிஞ்சா வெட்கமாச்சே! பெண்ணுக்குக் கொஞ்சம் புத்தி குழப்பம் என்கிறதை ஒளிச்சு வைச்சுக் கோதண்டத்துக்குக் கட்டி வச்சுட்டாங்க பாவம் தம்பி" என்றாள்.

"இதுலே என்னம்மா வெட்கம்? கை கால்களுக்கு நோவுவராப்பல மூளைக்கு நோவு வந்தால்தானே பைத்தியம் பிடிச்சிருக்குன்னு சொல்றோம். அதுக்கு ஏன் வெட்கப் படணும்? உலகத்தைப் பார்த்துப் பயப்படணும்?"

"அவளுக்குப் பெரிசா நீ வக்காலத்து வாங்கிட்டு.

வந்திட்டியா சங்கரி" அதட்டினாள்.

அந்தம்மாளும் நம்மைப் போல ஒரு பெண்தானே? அவங்க வாழ்வை நாம் பாழ் செய்யலாமா?

சங்கரிக்கு மிகவும் கோபம் ஏற்பட்டது.

பொன்மணிக்கு என்ன தைரியம்?

"சரி, உன் வேலையைப் பார்த்துக்கிட்டுக் கிளம்பு. எங்க வீட்டு சங்கதியிலே தலையிட உனக்கு என்ன அதிகாரம்?"

முகத்தைச் சுளித்துக் கொண்டு பொன்மணி தன் வேலையில் துரிதமானாள். மோகனா அம்மாவுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாக அவள் நம்பவில்லை.

'இது ஏதோ காத்துக் கோளாறு. விபூதி மந்திரிச்சு பூசினால் சரியாகிவிடும். இந்தம்மா அதை விட்டுட்டு ஏதோ சூது செய்ய இப்படியொரு பழி போட்டிருக் காங்க' என்று எண்ணி வெகுண்டாள்.

வெளியில் போய்விட்டு வந்த வாகீசன் வீட்டில் மகள் வந்து தங்கியிருப்பதாகக் கேட்டதும் திடுக்கிட்டுப் போனார்.

மனைவி சொன்ன விவரத்தைக் கேட்டு அப்படியே இடிந்து போனார். மோகனாவின் கல்யாணத்தினால் ஏற்பட்ட கடன் கால்வாசி கூட அடைந்தபாடில்லை.

அதற்குள் வீட்டுக்கு மகள் திரும்பி விட்டால்?

விவாகரத்து செய்து கொண்டு வந்திருந்தால் கூடத் தேவலை. போலீசுக்கு பைத்தியக்காரியாக அல்லவா வந்து உட்கார்ந்திருக்கிறாள். ஐயோ! இதென்ன கொடுமை! இந்தப் பெண்ணை இனி மாப்பிள்ளை கூட வச்சு வாழ்வார்னு என்ன நிச்சயம்?

"அப்பா வந்துட்டீங்களா? உங்களோட சேர்ந்து

உட்கார்ந்து சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு.''

“வரேன் அம்மா உட்கார்ந்து கொள்'' என்று கூறிவிட்டுப் பின்பக்கம் சென்றார்.

“கொஞ்சம் அவள் போன வழியில் விட்டுப் பிடியுங்க. அதட்டினால் உட்கார்ந்து கொண்டு குமுறி அழறாள். கர்ப்பிணிப் பெண்ணைக் கண் கலங்க விடறது மகா பாவம்!'' அம்மா தழுதழுத்தாள்.

“ஏழைக் குடும்பம், ராஜவைத்தியம். இந்த மாதிரி சங்கடம் நமக்குத்தான் வரணுமா? அன்னிக்கு இங்கே வந்து ஏதோ உளறினப்போ நான் கடுமையாப் பேசினேன். இப்போ மாப்பிள்ளையே இவளைக் கொண்டு வந்து விட்டுட்டார். அவரை அதுக்காக நான் கடுமையாப் பேச முடியுமா? திரும்ப அழைச்சுக்கங்கன்னுதான் கேட்க முடியுமா? பொல பொல வென்று கணணீர் வழியச் சிறு குழந்தை மாதிரி அழுதார்.

புடவைத் தலைப்பால் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டாள் நீலா. “மனசு தளர்ந்து போகாதீங்க. பகவான் கிருபையாலே மோகனா குணமாகிட்டால் மாப்பிள்ளை காலில் விழுந்து அழுதாவது அவளுக்கு வாழ்வு கேட்கலாம். வாங்க உள்ளே. குழந்தை காத்திட்டிருக்காள்'' என்றாள் நீலா.

அப்பாவின் அருகே கூடத்தின் தரைமீது சாப்பிட உட்கார்ந்தாள் மோகனா.

“அப்பா! என் பக்கத்திலே உட்கார்ந்திருக்காளே அவளுக்கும் ஒரு தட்டு வைக்கச் சொல்லுங்கோ.

திடுக்கிட்டுப் போய் மகளின் முகத்தைப் பார்த்தார். பிள்ளையைவிட தமது பெண்தான் புத்திசாலி. படிப்பில் அக்கறை உடையவள் என்று அவருக்கு மிக்க பெருமையாக இருந்தது.

அந்தப் புத்திசாலிப் பெண் இப்போ புத்தி கலங்கி...ஒரு பேதையாக இருக்காளே...

"யாரம்மா அவள்? அவளுக்கு இங்கே என்ன வேலை" மெல்லக் கேட்டார் அப்பா.

"அவன்தான் நான். நான்தான் அவள். ரொம்ப நாள் ஒளிஞ்சிட்டிருந்தாள். திடீர்னு ஒரு நாள் வந்து எனக்கு ரொம்பத் துணிவைக் கொடுத்தாப்பா."

"நீ சாப்பிடு அவளுக்கும் தட்டு வைக்கச் சொல்றேன்" என்று சமாதானப்படுத்தினார்.

"வேண்டாம். அவள் சொல்றாள், நான் சாப்பிட்டால் அவள் சாப்பிட்ட மாதிரியாம். அப்பா, உங்க தட்டிலே போட்டிருக்கிற வறுவலில் கொஞ்சம் நான் எடுத்துக் கொள்ளட்டுமா?"

"வேண்டாம். அது எச்சில்?"

"இல்லேப்பா. நான் உங்க குழந்தை. உங்க இரத்தம் என் உடம்பிலே ஓடுது. அது எச்சில் இல்லையா?"

"எடுத்துக்கோம்மா. நல்லா சாப்பிடு ‹புது போதும்" தழுதழுத்தார்.

கையைக் கழுவிக் கொண்டு உள்ளே வந்து எட்டிப் பார்த்தார் ஓசைப்படாது, அழுது கொண்டு நின்ற மனைவியிடம் வந்தார். "நாம் இரண்டு பேரும் இனி அழவேண்டியவர்கள்தான். கொஞ்சம் கொஞ்சமா அழுவோம். கண்ணைத் துடைச்சுக்கோ" ஆறுதல் கூறினார் மனைவிக்கு.

# 19

நாட்கள் பல நகர்ந்தன.

காலையிலும் மாலையிலும் கோதண்டம் தன் மனைவியைப் பார்த்து பேசிவிட்டு வந்து கொண்டிருந்தான்.

அவன் வரவிற்காகத் தினமும் இரு வேளை அவள் வாசலில் நின்று காத்திருந்து வரவேற்றாள்.

இந்தச் சில தினங்களில் அவள் முகம் தெளிந்து உற்சாகமாகக் காணப்பட்டாள். ஆனால் குழப்பத்திலிருந்து மனம் தெளிவடையாத நிலையில்தான் இருந்தாள்.

"அத்தான், பக்கத்தில் நிற்கிறாளே இன்னொரு மோகனா, அவளைப் பார்த்தீர்களா?"

மௌனமாக அவளைப் பார்த்துத் தலையாட்டு வதைத் தவிர கோதண்டத்திற்கு எதுவும் பேசத் தோன்றவில்லை.

டாக்டர் ரேவதி சொல்லியிருந்தாள் 'உணர்வு குழப்பத்திலே அவளை இரண்டாக்கி விட்டிருக்கு பிரமை.'

சாதுவான ஒரு மோகனா, ரொம்பத் துணிச்ச லான இன்னொரு மோகனா என்று தன்னையே இருவராக அவள் பார்க்கிறாள்.

இந்தக் குழப்பம் மெல்ல மறைந்து போனதும் படிப்படியாக குணமாகிவிடுவாள்.

வரும்போது புயல் போல எந்தக் கஷ்டமும் வந்து விடுகிறது! போகும்போது எத்தனை மெதுவாகப் போகத் துவங்குகிறது.

"எனக்கு என்ன வாங்கிக்கொண்டு வந்தீங்க

அத்தான்? அந்த மோகனாவுக்கும் வாங்கிக்கிட்டு வந்திருக்கீங்களா?"

"பாதியை வேணுமானால் அவளுக்குப் பிரிச்சுக் கொடு. அவளும் சாப்பிடட்டும்."

மெல்லக் காதருகில் குனிந்து குழந்தையாகக் குழைந்தாள். "அவள் சொல்கிறாள் நீயும் நானும் ஒண்ணு. நீ சாப்பிட்டால் நான் சாப்பிட்டது போல என்கிறாள்."

"அப்படியா மகிழ்ச்சி!"

"அத்தான்! இந்த மோகனாவைப் பார்த்த பிறகுதான் எனக்குத் தெம்பே வந்திருக்கு. எங்க வீட்டுக்கு வந்ததும் அந்த பயம் போய்விட்டது."

"மகிழ்ச்சி பயப்படாமல் அம்மா சொன்னதைக் கேட்டு நீ நடந்து கொள்ளணும்."

"ஓ.கே. அத்தான்!"

அறிவு மிக்க அவன் மனைவியா இப்படிப் புத்தி குழம்பி பச்சைக் குழந்தையின் நிலைக்கு வரவேண்டும்?

ஒரு சமயம் குணமடையாது இன்னும் குழப்பத்தில் தன்னை மறந்து பேசுவதையும் நிறுத்திக் கொண்டு ஜடமாகி விட்டால்?

அவன் என்ன செய்வான்? அடிக்கடி எண்ணி மிகவும் கலங்கிப் போனான்.

அன்று மாலை அவன் வீடு திரும்பும்போது இருட்டிவிட்டிருந்தது. காரை காலேஜில் வைத்துவிட்டுத் திரும்பியவன் வேலைக்காரி பொன்மணி அவன் வரவிற்காகக் காத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

"அம்மா இப்போ எப்படி இருக்காங்க?" கவலையுடன் விசாரித்தான்.

"அப்படியேதான் இருக்காள்."

"கவலைப்படாதீங்க. இது காத்து செய்கிற வேலை. எங்க வீட்டுக்குப் பக்கத்திலே அருள்மொழி அம்மன்கோயில் இருக்கு. ஆத்தாளுக்குப் பொங்க வச்சு பாவாடை சாத்தினால் வந்த கஷ்டமெல்லாம் வந்த வழியே போயிடும்னு சொல்வாங்க. நேத்து வெள்ளிக் கிழமையில்லையா? நான் அம்மனுக்குப் பொங்கல் வச்சு வேண்டிக்கிட்டேன். இந்தாங்க பிரசாதம், குங்குமப் பொட்டலம்" என்று ஒரு பொட்டலத்தை அவன் முன் நீட்டினாள்.

தினமும் ஊர்க்கதை எல்லாம் அவனிடம் விசாரிப்பாள் தாய் சங்கரி.

ஒரு நாளாவது மோகனா எப்படி இருக்கிறாள் என்று கேட்டதேயில்லை. மருமகளை ஒரேயடியாக மறந்துவிட நினைத்தவள் போல மிகவும் அசட்டையாக இருந்தாள்.

தாயின் போக்கு அவனது நெஞ்சை மிகவும் உறுத்திக் கொண்டுதான் இருந்தது.

வீட்டில் வேலை செய்கிறவள்-அவளுக்கு இருக்கும் பிடிமானம் அம்மாவுக்கு இல்லையே!

"இந்தக் குங்குமத்தை மோகனா அம்மாவுக்கு உங்க கையாலேயே தொட்டு வையுங்க. ஆத்தா சீக்கிரம் குணப்படுத்திடுவா. பெரியம்மா கிட்டே கொடுத்திட்டுப் போயிருப்பேன். அவங்க ஒரு சமயம் மறந்துவிட்டால்?" நாசூக்காகச் சொன்னாள் பொன்மணி.

நெஞ்சு நெகிழ்ந்து போனான்.

"ரொம்ப சந்தோஷம் பொன்மணி! கட்டாயம் மோகனாவுக்குக் குங்குமத்தை தொட்டு வைக்கிறேன்."

"குழந்தை பிறக்கிறதுக்கு இன்னும் எத்தனை மாசமி

ருக்குன்னு டாக்டர் சொன்னார்?"

"ரொம்ப அவசரப்படறீயே பொன்மணி. இன்னும் சில மாசங்கள் இருக்கு."

"எப்போ குழந்தை பிறக்கப் போகுது. நான் தூக்கி மடியிலே எப்போ வச்சுக்கப் போறேன்னு ஆசையாயிருக்கு. நான் மோகனா அம்மாகிட்டே சொல்லியிருந்தேன். கவலைப் படாதேயம்மா. குழந்தையைப் பெத்து நீ போட்டுடு. நீ பாட்டிலே வேலைக்குப் போயிட்டு வா. நான் ஒரு வீடு கூட்டறதை நிறுத்திட்டு உன் குழந்தையை மார் மேலும் தோள் மேலும் போட்டு வளர்த்து கொடுக்கிறேன்னு சொல்லியிருந்தேன்..." கண்கள் பனிக்க அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

தொண்டையை அடைத்துக் கொண்ட உணர்வு களை விழுங்கினான் அவன். இவளுக்கு இருக்கும் அன்பில், ஆசையில் ஒரு துளியளவு ஏன் அம்மாவுக்கு இருக்கவில்லை?

உள்ளே நுழைந்தவனிடம் அம்மா ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

# 20

**ப**ம்பாயிலிருந்து குமரேசன் எழுதியிருந்தான்.

அம்மா கொண்டு வந்து வைத்த காப்பியைப் பருகியபடியே கடிதத்தைப் பிரித்துப் படித்தான். "நாங்கள் புறப்பட்டு வந்து சில மாதங்கள் ஆகியும் மோகனாவைப் பற்றிய நல்ல செய்தி எதுவும் இதுவரை இல்லை என்பதை நினைக்க மிக்க வருத்தமாக இருக்கிறது. என் டாக்டர் நண்பர்

ஒருவருடன் மோகனாவின் உடல் நிலையைப் பற்றிக் கலந்து ஆலோசித்தேன். குணமாவதும் ஆகாததும் ஐம்பது சதவிகிதம் என்றார்.

அம்மாவுக்கு வயதாகிவிட்டதால் தள்ளாமை அதிகரித்து விட்டிருக்கிறது. அத்தனை பெரிய வீட்டில் அவர்களால் தனியாக இருக்க முடியுமா? அதனால் எல்லாவற்றையும் நேரில் கலந்து ஆலோசிக்க நானும் என் மனைவியும் தம்பி ரவீந்திரனும் நர்மதாவும் அடுத்த வாரம் சென்னைக்கு வரத் தீர்மானித் திருக்கிறோம். நீ நன்றாக யோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்பது எங்கள் அவா.

இங்ஙனம்,
குமரேசன்.

"அண்ணன் என்ன எழுதியிருக்கு தம்பி?" ஆவலுடன் கேட்டாள்.

"அடுத்த வாரம் அவர்கள்ளாம் இங்கே வராங்க ளாம்." சுருக்கமாகக் கோதண்டம் பதிலளித்தான்.

சங்கரிக்குத் தனியே பெரிய மகன் விவரமாகக் கடிதம் போட்டிருந்தான். ஆனாலும் தெரியாதது போலத்தான் விசாரித்துக் கொண்டாள்.

அவளுக்குச் சில நாட்களாக மிக்க மனத்தாங்கல். தன்னந்தனியா வீட்டைக் கட்டிக் கொண்டு அம்மா பாடு படுகிறாளே என்ற நினைப்பே கோதண்டத்திற்கு இருக்கவில்லை.

மாதம் முன்போல கணிசமாகப் பணத்தைத் தருவதில்லை.

வீட்டை விட்டு வெகுசீக்கிரம் கிளம்பி விடுகிறான்.

திரும்பிவர இரவு சில சமயம் வெகு நேரமாகிவிடு கிறது.

பைத்தியக்கார மனைவிக்காகப் படும் கவலையில் சிறிதளவு கூடத் தாயைப் பற்றி இல்லை.

இதற்கெல்லாம் ஒரு முடிவு காணவேண்டும். பெரிய மகனுக்கும் இரண்டாவது பிள்ளைக்கும் அவள்தான் கடிதங்கள் எழுதி உசுப்பி விட்டிருந்தாள்.

அதன் பயன்தான் பெரியவன் யோசித்து ஒரு முடிவுக்கு வந்து தம்பிக்கும் தாய்க்கும் கடிதம் போட்டு புறப்படத் தயாராக இருந்தான்.

# 21

கடிதத்தில் குறித்தபடியே சகோதரர்கள் இரண்டு பேரும் ஒரே நாளில் முன் பின் மனைவி குழந்தைகளுடன் வந்து இறங்கிவிட்டனர்.

அண்ணன்மார்கள் வந்து விட்டார்கள் என்று அறிந்ததும் நடக்கப் போவதில் தானும் பங்கு கொள்ள வேண்டுமென்ற ஆசையில் திவ்யா அன்று காலையே வீட்டிலிருந்து வந்து விட்டாள்.

பெரிய மருமகளைப்போல் சின்னவள் நர்மதா சோம்பேறியல்ல. வந்ததும் வராததுமாக அவள் பயணக் களைப்புப் போகக் குளித்து முடித்துவிட்டு சமையல் வேலையை மேற்கொண்டு விட்டாள்.

அவளது பெண் குழந்தை சர்மிளாவும் சிரித்த முகத்துடன் அத்தை திவ்யாவிடம் ஒட்டிக்கொண்டது பாட்டிக்கு நிம்மதியாக இருந்தது. பேரன் சுந்துவின் அழுகை ஆர்ப்பாட்டங்களைப் பாட்டி கண்டு கொள்ளவில்லை. பற்களைக் கடித்துக் கொண்டு வீட்டை நிறைத்த கூட்டத்தைப் பொறுத்துக் கொண்டிருந்தாள்.

அன்று மாலை வேலையினின்று சீக்கிரம் திரும்பி வர கோதண்டம் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தான்.

பகல் உணவு நேரத்தின்போது ஒருமுறை மோகனாவைச் சென்று பார்த்துவிட்டுத்தான் வந்திருந்தான்.

மாலை தனக்கு வரமுடியாது என்று சொன்னதை அவள் புரிந்து கொள்ளாமல் வாசலில் வந்து நிற்பாளோ, அவனைக் காணாது அழுது அடம்பிடிப் பாளோ என்ற ஆதங்கத்தில் தளர்ந்தபடிதான் வீடு திரும்பினான்.

குளித்துவிட்டு லுங்கி பனியன் அணிந்து அவன் முன்னறைக்கு வரும்வரை எல்லோரும் காத்திருந் தனர்.

"கடிதத்திலிருந்து நீ ஒருவிதமா ஊகிச்சுக் கொண்டிருப்பேன்னு நினைக்கிறேன்." அண்ணன் குமரேசன் ஆரம்பித்தான்.

"நான் வீணா கற்பனை செய்ய விரும்பலை. ஆனால் இங்கே எல்லோரும் வந்து கூடியிருக்கிற நோக்கம் என் வருங்காலத்தைப் பத்தி தீர்மானிக்கத் தான்னு மட்டும் புரியறது" கோதண்டம் மெல்லிய குரலில் சொன்னான்.

பெரிய அண்ணி தன் கைப்பையிலிருக்கிற ஒரு புகைப்படத்தை எடுத்து அவன் பக்கம் நீட்டினாள்.

"தம்பி, இந்தப் படத்திலிருக்கிற பெண்ணைப் பார். உனக்குப் பிடிக்கும்னு நினைக்கிறேன். இவள் ஒரு வழியிலே நமக்குத் தூரத்து உறவு முறைகூட. இவள் அப்பா பம்பாயிலே பெரிய கம்பெனியிலே உயர்மட்டத்து அதிகாரியாக இருக்கார்."

"இந்த விவரமெல்லாம் எதுக்கு அண்ணி?" படத்தைப் பாராது மேஜை மேல் வைத்தான்.

"உனக்குக் கல்யாணம் செய்து வைக்கத்தான்"

"பலதார மணத்துக்கு சட்டத்திலே இடம் இல்லையே அண்ணி."

"சட்டத்துக்குப் புறம்பா காரியம் பண்ணுவோமா? இப்பவே பிடிச்சு ஆரம்பிச்சாத்தானே சீக்கிரம் முடிக்க முடியும்?"

"பெண்ணை நிச்சயம் பண்ணி வச்சுக்கறது. உரிய காலத்திலே மோகனாவை டைவர்ஸ் பண்ணிடறது. இந்தப் பெண்ணைக் கட்டிக்கிறது."

"மோகனாவை நான் ஏன் விவாகரத்து செய்யணும்?"

"பைத்தியக்காரியைக் கட்டிக்கிட்டு எத்தனை காலம் தவிப்பே?

"படத்திலே பெண் ரொம்ப நல்லா இருக்கா. பி.ஏ.படிச்சவள். சிறப்பாகக் கல்யாணம் செய்ய ஒப்புக்குவாங்களாம். சீர் ஏகப்பட்டது செய்வாங்களாம்." திவ்யா குறுக்கிட்டாள்.

"எனக்கு இதுகள் எதுவும் தேவையில்லை. மோகனா குணமாகிவிட்டால் அது போதும்."

"கோதண்டம் உன் அம்மா பேச்சைக்கூடவா கேட்க மாட்டே? மோகனாவை வச்சிக்கிட்டு இனி குடித்தனம் பண்ண முடியுமா?"

"உன் நன்மைக்குத்தான் நாங்க சொல்றோம். உனக்கு ஏற்பட்ட இந்தத் துயரத்தைத் தீர்த்து வைக்கத்தானே இங்கே வந்திருக்கோம்."

"நீங்க இங்கே ஒண்ணுகூடி சிலநாள் தங்கியிருப் பதைப் பத்தி எனக்கு மறுப்பு இல்லே. இந்த வீடு எல்லோருக்கும் பொது. ஆனால் என் விஷயத்திலே யாரும் தலையிடக் கூடாதுன்னுதான் சொல்றேன்."

"என்ன அப்படி விட்டேத்தியா பேசறே, என்

பேச்சைக் கேளு ஒரு நல்ல பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நீ குழந்தையும் குடித்தனமுமா இருக்கணும்னு நான் ஆசைப்படறேன்" அம்மா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அம்மா உங்க பேச்சைக் கேட்டு நான் பல வழியிலும் மோகனாவுக்குத் துரோகம் செய்திருக்கேன்னு குற்ற உணர்வில் தவிக்கிறேன்."

"என் பேச்சைக் கேட்டு என்ன அப்படி செஞ்சுட்டே?" சங்கரி மனத்தாங்கலுடன் அதட்டினாள்.

"பெண் பார்க்கப் போனபோதே எனக்கு மோகனாவை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. செலவுக்குன்னு சம்பந்திகிட்டே நீங்களா கேட்ட பத்தாயிரம் ரூபாய் எனக்குப் பிடிக்கவேயில்லை. அதைப் பத்தி நான் பேசிக் குறுக்கிட்டா கல்யாணம் நின்னுடுமோன்னு பயந்துதான் நான் மௌனமாக இருந்தேன். இது முதல் தப்பு."

"கல்யாணத்தின்போது நீங்க சில கலாட்டாக்கள் பண்ணினீங்க. அதையெல்லாம் நான் கண்டுக்காமல் இருந்தது அடுத்த தப்பு."

"மோகனாவோட பிறந்த வீட்டில் போட்ட நகைகளை வாங்கி நீங்க பீரோவில வச்சிட்டீங்க. அதை நான் கேட்காதது அடுத்த தவறு."

"நான் போட்டுக்கவா எடுத்து வச்சுக்கிட்டேன். இப்பவே எடுத்துக் கொடுக்கறேன். கொண்டுபோய் அந்தப் பித்துப் பிடிச்சவகிட்டே கொடு."

"நாளைக்குக் கேட்டு வாங்கிக்கிட்டுப் போய் அவள் பிறந்த வீட்டிலே கொடுக்கப்போறேன். இனி என் காது பட அவளைப் பித்து, பைத்தியம்னு சொல்லாதீங்க அம்மா. உங்களுக்குத்தான் பணப் பைத்தியம் பிடிச்சிருக்கு."

"என்ன சொன்னே? அம்மா அலறினாள்."

"உண்மையைச் சொன்னேன், மறுபடியும் என்னைக் கல்யாணச் சந்தையிலே தள்ளிக் கை செல வுக்குன்னு பெண் வீட்டார்கிட்டே ஏதாவது வாங்கிக் கலாம்னு திட்டம்."

"பாத்தியா குமரேசா! இவன் எப்படி கன்னா பின்னான்னு பேசறான்?"

"நீ அம்மாவை ரொம்ப இன்சல்ட் பண்றே. நாங்க கேட்டுக்கிட்டு இருக்கமாட்டோம்" குமரேசன் உறுமி னான்."

"மோகனாவைப் படுத்தினது போல உங்க மனைவிகளை அம்மா ஆட்டிப்படைச்சிருந்தா நீங்க நடந்துக்கறதே பேறுவிதமா இருக்கும். மோகனாவை வேலைக்கு அனுப்பினபோது நான் தடுத்திருக்கணும். அம்மாவுக்கு அடங்கி ஒப்புக்கொண்டது என் அடுத்த பிசகு."

"வீட்டிற்கு வந்ததும் வேலை செய்யறாளே பாவம்னு யோசிக்க நேரமில்லாமல் நான் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தேனே, அது பெரிய முட்டாள்தனம்."

"மோகனாவுக்கு வந்திருக்கும் இந்த அதிர்ச்சிக்குக் காரணம் நீங்கதான்."

"அப்படி அவ உளறினாளா?"

"டாக்டர் சொன்னார். சைக்கியாட்ரிஸ்ட் சொன்னார்.

"டாக்டர்கள் ஏதேதோ சொல்லுவாங்க. அவள் உடம்புக்குக் காரணம் நான்தான்னு பழியை என் மேலே போடாதே." அம்மா கோபத்தில் கூவினாள்.

"வேண்டாம். என் மேலே போட்டுக்கறேன். பிராயச் சித்தம் செய்ய வேண்டியது என் கடமை."

“மறு கல்யாணம் பண்ணிக்காமல் காலமுச்சுடும் இருக்கப் போறியா?”

“என் மோகனாவை எக்காரணம் கொண்டும் நான் விவாகரத்து செய்ய மாட்டேன். நோய் குணமானால் அவளோட கூடி வாழ்வேன். இல்லாட்டா அவளை வைத்துக் காப்பாத்துவேன். துன்பத்திலும் இன்பத் திலும் அவளுக்குத் துணையாக இருப்பதாக மந்திரங்க ளிலே சொல்லிட்டு இப்போ நான் மீறுவானேன்?”

“நீ ஏகபத்னி விரதன்னு எங்களுக்குத் தெரியாமப் போச்சு.”

“சீர் நகை... அது இதுன்னு அவள் பெற்றோர்கள் கேட்டதெல்லாம் கொடுத்தார்களே! என்ன குறை வச்சாங்க?” கோதண்டம் கேட்டான்.

“அதுகளை வேணும்னா திருப்பிக் கொடுத்திடறது.”

சின்ன அண்ணன் ஏளனமாக முறுவலித்தான்.

“அதுகளையெல்லாம் கொடுத்திட முடியும். அவள் இந்த ஒரு வருஷ காலத்திலே மனைவியா என்னிடம் வாழ்ந்து எனக்குத் தந்த அன்பை எப்படித் திருப்பித் தர முடியும்?”

“நீ ரொம்ப சினிமா டயலாக் பேசறே. உன்னோடு விவாதிக்க எங்களுக்குப் பொறுமை இல்லை. நீ மறுவிவாகம் செய்துக்காமல் இரு. அது உன் பிரியம். எனக்கு இன்னும் இரண்டு மாசத்திலே சென்னைக்கு மாற்றலாகப் போகிறது. நான் இந்த வீட்டில் வந்து தங்கப் போவதாக உத்தேசம்.”

“நான் வேறே எங்காவது இடம் பார்த்துக்கொண்டு போய்விடறேன், இவ்வளவுதானே?”

““இங்கே நாங்க கூடியிருக்கிறதுக்கு இன்னொரு காரணம் இருக்கு” ஆரம்பித்தான் ரவீந்திரன்.

“இந்த வீட்டை விலைக்கு மதிப்பிடச் செய்து,

ஐந்து பாகங்களாகப் போட்டு, அந்த தொகைகளை உங்களுக்குக் கட்டிவிட்டு நான் வீட்டை என் பெயருக்கு எடுத்துக்கொள்ள விரும்பறேன்."

"அம்மா ஒப்புக்கொண்டாங்களா?"

"அம்மாவை யார் தன் கூட வச்சுக்கறாங்களோ அவங்களுக்கு அம்மாவோட பங்கு பணம் சேரணும்."

"என் நகைகளில் பாதியைக்கூட அந்தப் பிள்ளைக்குத் தான் தரப்போகிறேன்."சங்கரி கலவரத் துடன் கோதண்டத்தின் முகத்தைப் பார்த்தாள்.

"அப்பா வாங்கின வீடு, உங்க பேரில் இருக்கு. இப்போ அண்ணன் தன் பெயருக்கு மாத்திக்க ஆசைப்படறார். எனக்கு மறுப்பு இல்லை. நான் வெளியே வேறே இடத்துக்குப் போய் தங்கும்போது நானும் என் மோகனாவும்தான் வாழப் போறோம். என் பங்குக்கு நான் அம்மாவோட வாழ்ந்துட் டேனே? இனி உங்கள் முறை. எனக்கு அம்மா பண மும் வேண்டாம். என் மனைவிக்கு நகைகளும் வேண் டாம்."

"கோதண்டம் ஏன் இப்படி வெறுப்பா பேசறே?

"ஏமாந்த பெண் ஒருத்தி கிடைச்சாள்னு ஏறி மிதிச்சீங்க. சாது மிரண்டா காடு கொள்ளாதும்பாங் களே. அப்படி ஆயிடுச்சு நிலைமை நீங்க மோகனா வை அன்போடு அனுசரிச்சிட்டுப் போயிருந்தால் இந்த நிலையே ஏற்பட்டிருக்காது."

"மோகனாவுக்குச் சித்தம் கலங்கினதுககு நானா காரணம்?" அம்மா விசும்பினாள்.

"வீட்டின் சூழ்நிலையில் ஏற்பட்ட உணர்வுகளின் இறுக்கம்னு டாக்டர்கள் சொன்னாங்க. நான் அவங்களைத்தானே இப்போ நம்பணும். எல்லோருக்கும் சொல்றேன். கேட்டுக்குங்க. நான்

சீக்கிரம் தனியா இடம் பார்த்துட்டுப் போயடறேன். எனக்கு இந்த வீடு தேவையில்லை. என் பங்குப் பணத்தைத் தர மறுப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை. எனக்கு அடுத்த மாசத்திலிருந்து சம்பள உயர்வும் அதிக சலுகைகளும் கிடைக்கிறது. நானும் மோகனாவும்குழந்தையும் அதில் வசதியாக வாழ முடியும். அது போதும். என்னிடம்யாரும் மறு பேச்சுப் பேசத் தேவையில்லை. என் வாழ்க்கைக்குள் புகுந்து குட்டையைக்குழப்ப உங்க யாருக்கும் உரிமை இல்லை." மிகக் கண்டிப்பாக அழுத்தமாக சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு விட்டான்.

திவ்யாவும் மற்றவர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

# 22

கோதண்டத்தின் வாழ்க்கையில் அதற்குப் பின் பல மாற்றங்கள். முன் போல அவன் அடிக்கடி வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளத் தேவையிருக்க வில்லை. அவனது கம்பெனியின் உற்பத்திப் பகுதி அவன் தலைமையில் இயங்க நேரிட்டதால் சென்னையிலேயே வசிக்க வாய்ப்பும் கூடச் சில சலுகைகளும் கிடைத்து விட்டிருந்தன. போக்குவரத்துக்கு எளிதாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தன் சாமான்களைக் கொண்டு வந்து நிறைத்துக் கொண்டான். சமையலுக்கு ஓர் ஆளை நியமித்துக் கொண்டு தன்னந்தனியாக வாழத் தலைப்பட்டான்.

வழக்கம்போல அன்றாடம் மோகனாவை இருமுறை பார்த்துவிட்டு வந்தான்.

பிரசவ சமயம் நெருங்கிக் கொண்டு வந்தது. அத்துடன் அவளிடம் சில மாறுதல்களும் துல்லியமாகத் தெரிந்தன.

முன்னைவிட முகம் தெளிவாகவும் கண்கள் பிரகாசமாகவும் காணப்பட்டன.

குழந்தைத்தனமாகப் பேசுவதை விட்டு அவள் மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் காணப் பட்டாள்.

அவன் கையில் சுமந்து வரும் சாமான்களைச் சட்டென்று முன் வந்து வாங்கிக் கொண்டாள்.

"அம்மா இவர் வந்திருக்கார். சீக்கிரம் காப்பி கொண்டு வர்றீங்களா?" கரிசனமாக உபசரித்தாள்.

நாளடைவில் அவளிடம் கண்ட மாறுதலைக் கண்டு அவனுக்கு உள்ளூர மகிழ்ச்சி.

ஆனாலும் பூரண குணமடைய நாளாகும் என்று டாக்டர் சொல்லியிருந்ததை எண்ணிக் கவலைப் பட்டான்.

அந்த நிலையில் வசதியாகத்தான் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டில் கொண்டு தங்க வைக்க அவனுக்குச் சிறிது அச்சமாகத்தான் இருந்தது.

ஒரு மழை நாளின் முன்னிரவில் மோகனா பிரசவ வேதனையுடன் டாக்டர் ரேவதியின் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டாள். வேதனையுடன் நர்ஸின் கைத்தாங்கலுடன் அவள் பிரசவ அறைக்குள் போகு முன் கணவனைப் பார்த்து லேசாக முறுவலித்து விட்டு மறைந்தாள்.

# 23

கோதண்டத்தின் நெஞ்சைப் பல்வேறு உணர்வுகள் அடைத்துக் கொண்டன. முன்னறையில் உறக்கமின்றித் தந்தையாகப்போகும் தவிப்போடு வாகீசனுடன் உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று மின்னல்கள் பளிச்சிட காது செவிடாகும் போல இடியுடன் மழை சோவென்று கொட்டத் தொடங்கியது. ஒவ்வொரு முறையும் வானம் இடிந்தபோது அவன் மனம் வேதனையில் இடிந்தது.

இந்தச் சமயமா மழையும் இடியும் வரவேண்டும்?

மோகனா இடியென்றாலே ரொம்பப் பயப்படுவாளே!

கவலையுடன் எழுந்து முன்னும் பின்னுமாய் உலாவினான் வாகீசன். கையுடன் கொண்டு வந்திருந்த பிளாஸ்கிலிருந்து காப்பியைக் கொஞ்சம் ஊற்றிக் குடித்தான்.

பிரசவ அறைக்கு முன் நாற்காலியில் கவலையோடு அமர்ந்திருந்த தன் மாமியார் பக்கம் அடிக்கடி திரும்பிப் பார்த்தான்.

விடியும் தறுவாயில் அறையை விட்டு வெளியே வந்த ரேவதியின் முகத்தில் சிரிப்பு பரவியிருந்ததைக் கண்டதும் எத்தனை ஆறுதல்.

விடுக்கென்று எழுந்து நின்றவனிடம் டாக்டர் ரேவதி வந்தாள்.

“பாராட்டுதல்கள்! ஆரோக்கியமான ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கு, தாயும் சேயும் சுகம்.

"நான் போய்ப் பார்க்கலாமா டாக்டர்?" பதறினான் கோதண்டம்.

"ஒருத்தர் ஒருத்தராப் போய்ப் பாருங்க. ரொம்ப நேரம் பேசக்கூடாது."

டாக்டரின் தோரணையில் சொல்லிட்டு தயாராக வாசலில் காத்திருந்த காரில் ஏறிக் கொண்டு போய் விட்டாள்.

"முதலில் மாப்பிள்ளை போய்ப் பார்க்கட்டும்." ஜாடை செய்தாள் நீலா தன் கணவருக்கு.

வாகீசன் நகர்ந்து கொள்ள பாபரப்புடன் கதவை லேசாக தள்ளிக் கொண்டு அறைக்குள் நுழைந்தான் கோதண்டம்.

குப்பென்று மருந்து நெடி முகத்தில் மோத நெஞ்சு முழுவதையும் மகிழ்ச்சி நிறைக்க மெல்லக் கட்டில் அருகே வந்து நின்றான் அவள் கணவன்.

தாயின் அருகே விரலைச் சப்பிக்கொண்டு கிடந்த சிறிய உருவத்தைக் காணக் கட்டுக் கொள்ளா மகிழ்ச்சி.

மெல்லப் பூப்போன்ற அந்தக் கன்னங்களைத் தொட்டுப் பார்த்துப் புல்லரித்துப் போனான்.

கலைந்து கிடந்த மோகனாவின் கூந்தலை ஒதுக்கிவிட்டான். உடம்பு எப்படி இருக்கு? முடிவில் மெல்லக் கேட்டான்.

மெலிதாக புன்முறுவல் பூத்தாள் மோகனா.

"நீங்க இங்கேயா ராத்திரிபூரா உட்கார்ந்திருந்தீங்க."

"ஆமாம்" எனத் தலையை அசைத்தான் அவன்.

"அடப்பாவமே!" என்றபடி அவனது கரத்தைப் பற்றிக் கொண்டு தன் கன்னத்தில் பொருத்திக் கொண்டாள்.

"இடியும் மின்னலுமா இருக்கறப்போ உன்னைத் தனியா விட்டுட்டு நான் போக விரும்பலே."

நறுக்கென்று சிரித்தாள் மோகனா. "ஒரு அதிசயம் சொல்லட்டுமா? பிரசவ வேதனையிலே எனக்கு இடிச்சத்தமே கேட்கலை. குழந்தைபிறந்த சந்தோஷத்திலே என் பயமெல்லாம் மறைஞ்சு போச்சு. இன்னொரு சங்கதியும் சொல்ல விரும்பறேன். கொஞ்ச நாளா என்னோடு கூட நிழலாத் தொடர்ந்து வந்தாளே அந்த மோகனா, திடீர்னு என் உடலுக்குள்ளே மறைஞ்சு போயிட்டாப்போல ஒரு பிரமை ஏற்பட்டது.

"இனி வரமாட்டாள். அவ வரவே மாட்டாள். நீ தான் அவள். அவள்தான் நீ என்கிறதாலே உன்னோடு ஐக்கியமாயிட்டா. கவலைப்படாதே.

"எனக்கு அதையெல்லாம் பத்திதான் ஒரு கவலை."

என்ன கவலை சொல்லு மோகனா. கோதண்டம் அவளது கைவிரல்களுடன் தன் விரல்களைப் பின்னிக் கொண்டான்.

"என் மனக் குழப்பம் எல்லாம் குறைஞ்சு போயிட்டாப்பல எனக்கே ஒரு உணர்வு ஏற்பட்டிருக்கு. ஒரு சமயம் நான் பழையபடியா மாறாம போயிடுவேனோன்னு கவலை."

"அதெல்லாம் பத்தி இப்போ எதுக்கு மோகனா?"

"என் மனசை லேசா இன்னமும் நெருடிக்கொண்டிருக்கிற குழப்பம் முழுவதும் போக எனக்கு நீங்க உதவி செய்விங்களா?"

"கட்டாயம் செய்வேன். இது என்ன கேள்வி. இப்ப நீ சாதாரணமாகத்தான் இருக்கே. வீணா அலட்டிக் காதே."

"இந்தக் கிறுக்குப் பெண் ஒரு பாரம்னு என்னை

ஒதுக்கிட மாட்டீங்களே?

"சே! ஒருநாளும் அப்படிச் செய்ய மாட்டேன். வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் நீ என்னோட மோகனா. நான் உன்னை என் உயிருக்கு மேலே நேசிக்கிறேன். ஆனால் அதிலே ஒரு பங்குக்கு வந்துவிட்டானே இந்தக்குட்டிப் பயல். அதுக்கு என்ன செய்வே!" சிரித்தான் கோதண்டம்.

மோகனா பல மாதங்களுக்குப் பின்னர் முதன் முதலாக மனம் விட்டுச் சிரித்தாள்.

"மோகனா! மோகனா!" மெல்லிய குரலில் அழைத்த வண்ணம் அம்மா நீலா, கதவைத் திறந்து மெல்ல எட்டிப் பார்த்தாள்.

"வாங்க, வந்து உங்க பேரனைப் பாருங்க!" மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டு வெளியே வந்தான் கோதண்டம்.

பளிச்சென்று வெளியே சூரிய வெளிச்சம் பரவியிருந்தது. அவன் மனத்திலே நம்பிக்கை பளிச்சிட்டது.